உ

# தங்கத் தமிழ்



## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
## நூற்றாண்டு விழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் தமிழ்

சிவத்தமிழ்ச்செல்வி துர்க்கா துரந்தரி பண்டிதை
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
நூற்றாண்டு விழா மலர்

வெளியீடு :
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
2025.01.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : தங்கத் தமிழ்
சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
நூற்றாண்டுவிழா மலர்

பதிப்புரிமை : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

நூலாசிரியர் : செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

பதிப்பாசிரியர் : பா. துவாரகன்
யாழ். போதனா வைத்தியசாலை

பிரதிமை
ஓவியம் : யோகி (தவ தஜேந்திரன்)
பிறிஸ்ரல் அட்டையின் மீது உலர்பசை வர்ணம், 64cm X40 cm, 2024.

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

அச்சுப் பதிப்பு : நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேற் ) லிமிட்டெட்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893

**Book Title** : **Thangath Thamil**
Sivathamilchelvi Dr. Thangammah Appacuddy
Centenary Edition

**Copyright** : **Sri Durgadevi Devasthanam,**
Tellippalallai

**Author's Name** : **Chenchotselvar Dr. Aru. Thirumurugan**
President, Sri Durgadevi Devasthanam, Tellippalalai.

**Editor** : **B. Dhuvarahan**
Teaching Hospital, Jaffna.

**Portrait Painting by** : **Yohie (Thava Thajendran)**
Pastel on Bristal Board, 64cm x 40cm, 2024.

**Printed by** : **New Evergreen Printers (Pvt). Ltd.**
693, K.K.S Road, Jaffna. 021 221 9893

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அந்தணப் பெருமக்கள் - 2024

சிவஸ்ரீ சுந்தர. செந்தில்ராஜக்குருக்கள்
(பிரதம சிவாச்சாரியார்)

சிவஸ்ரீ இ. பிரசன்னவதனக்குருக்கள்

பிரம்மஸ்ரீ செ. சுகந்தன் சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை தர்மகர்த்தா சபை - 2024

திரு. த. சித்தார்த்தன் - தலைவர்
(பாராளுமன்ற உறுப்பினர், மேனாள்)

வைத்திய கலாநிதி தி. திவாகரன் - பொதுச்செயலாளர்
(நரம்பியல் வைத்திய நிபுணர்)

திரு. நா. திருநாவுக்கரசு* - உப தலைவர்
(சமாதான நீதவான்)

திரு.சி. சண்முகானந்தன் -இணைச்செயலாளர்
(ஓய்வு நிலை கிராம சேவை அதிகாரி)

திரு.சி. கனகசிங்கம் - சட்ட ஆலோசகர்
(சட்டத்தரணி)

திரு. பா. பாலகாங்கேயன்
(ஐக்கிய அமெரிக்கா)

திரு. க. ஜனநாயகம்
(ஐக்கிய இராச்சியம்)

வைத்திய கலாநிதி ந. புவனேந்திரன்
(ஐக்கிய இராச்சியம்)

* - இறைபதம் அடைந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

துர்க்காதேவி துணை

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை**
**(நிர்வாகசபை - 2022 இல் தெரிவு செய்யப்பட்டு**
**செயற்பட்டு வரும் நிர்வாக சபை)**

*01.* செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் - தலைவர்

*02.* நரம்பியல் வைத்திய நிபுணர் தி. திவாகரன் - பொதுச்செயலாளர்

*03.* திரு. சி. அருளானந்தசிவம் - உப தலைவர்

*04.* லயன் ச. ஆறுமுகநாதன்* - உபதலைவர்

*05.* திரு. நா. தவநாதன் - நிர்வாகச் செயலாளர்

*06.* திரு. இ.இராதாகிருஷ்ணா - உப செயலாளர்

*07.* திரு. அ. சண்முகநாதன் - பொருளாளர்

*08.* திரு. ப. சேயோன் - உபபொருளாளர்

*09.* திரு. நா. திருநாவுக்கரசு*

*10.* திரு. சு. முருகையா

*11.* திருமதி. கலாதேவி பொன்னம்பலம்

*12.* திரு. ச. உமாசுதன்

*13.* திரு. வி. பாக்கியநாதன்*

*14.* திரு. சி. சண்முகானந்தன்

*15.* திரு. செ. பரந்தாமன்

*16.* பேராசிரியர் வைத்திய கலாநிதி. சு. ரவிராஜ்

*17.* திரு. செ. தில்லைநாதன்

*18.* திருமதி. சிவமலர் அனந்தசயனன்

* - இறைபதம் அடைந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



## நூற்றாண்டு விழா மலர்க் குழு

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்
திருமதி சி. அனந்தசயனன்
திரு. பா. துவராகன்
எந்திரி ச. சந்தோஷன்
பேராசிரியர் சி. சிவேசன்
சிரேஷ்ட விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா
சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சு. கபிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
நூற்றாண்டு விழா மலரை அலங்கரிக்கும்
ஆசியுரைகள், வாழ்த்துரைகள்,
வாழ்த்துப்பாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச்செல்விக்கு
# மாவை ஆதீனம் வழங்கும் கௌரவம்
# "சிவத்தமிழ் அரசி"

ஈழத்தமிழ் மக்களின் உள்ளங்களில் பசுமையாக நிறைந்திருக்கும் பெருமதிப்புக் குரிய பண்டிதை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (கௌரவ கலாநிதி, யாழ். பல்கலைக்கழகம்) அம்மையாரின் நூற்றாண்டு ஜெயந்தியை முன்னிட்டு, தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கா தேவஸ்தானம் வெளிக் கொணரும், நூற்றாண்டு விழா மலருக்கு மாவை ஆதீனம் ஆசிச்செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகிறது.

பாரத தேசம் என்னும் புண்ணிய பூமியாகிய இந்திய திருநாட்டின் ஒரு பகுதி யாகவே ஈழவளநாடு இருந்து வந்துள்ளது என்பது ஆன்றோர் முடிவு. இந்நாட்டு ஆதி மக்களின் வாழ்வியல் சிவநெறியின் பாற்பட்டது என்பது வரலாற்று அறிஞர்களின் ஆதாரபூர்வமான முடிவு. எமது மக்களின் கலாசாரமும் வழிபாட்டு முறைகளும் ஐரோப்பியர்களின் படையெடுப்பினால் கி.பி.16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிதைந்து போக நேரிட்டது. எவ்வாறாயினும், ஞானிகளும் சித்தர்களும் வாழ்ந்த இம்மண், 19ஆம் நூற்றாண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்ற விடிவெள்ளியை எமக்களித்தமை பெரும் பாக்கியமே. சைவநெறியும் செந்தமிழ் மொழியும் இந்நாட்டில் மாத்திரமன்றி சனாதன தர்மத்தின் ஊற்றாக விளங்கும் தமிழகத்திலும் செழித்தோங்க ஆரம்பித்து விட்டன. சைவநெறி தழைத்தோங்கிற்று.

ஆறுமுகநாவலர் பெருமான் காட்டிய வழியில் பல அறிஞர்களும் கல்விமான் களும் சைவநெறியின் மகத்துவத்தை நிலை நிறுத்தினர். அப்பெருமான் வழியில் எம்மிடையே வாழ்ந்து கற்றோரும் மற்றோரும் பயன்பெற்று சிவப்பற்றுடன் வாழ வழிவகுத்த அம்மையார் சிவத்தமிழ்ச் செல்வி என அறுதியிட்டு கூறு கின்றோம். அப்பெருமாட்டியின் ஆழ்ந்த புலமையும், அபாரமான பேச்சாற்ற லும் இந்நாட்டில் மாத்திரமன்றி தமிழகம், மலேசியா ஆகிய நாடுகளிலும் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வியந்து போற்றப்பட்டு வருவதை இன்றும் காணலாம்.

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும் ஈழத்தின் பழம் பெரும் ஆதீனமாகிய மாவை ஆதீனத்திற்கும் நீண்ட காலமாக இருந்துவரும் நெருங்கிய தொடர்புகள் அனைவரும் அறிந்தவை. எமது பெருமதிப்புக்குரிய பாட்டனார் மஹாராஜஸ்ரீ துரைசாமி குருக்கள், எமது குருவும் தந்தையாரு மாகிய மஹாராஜஸ்ரீ து.ஷ.சண்முகநாத குருக்கள் ஆகியோர் காலத்தில் மாவைக் கந்தவேள் பெருமானுக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவிக்கும் இடையேயான அந்நியோன்னியமான பரிவர்த்தனைகள் மேன்மேலும் விருத்தியடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கை அம்பாளின் கும்பாபிஷேகங்கள் எமது வழிகாட்டலில் நடைபெற்று வருவது நினைகூரத்தக்கது.

**தங்கம்மாவுக்கு மாவை ஆதீனம் வழங்கும் கௌரவம்**

ஈழவளநாட்டின் வடகோடியில் 25 நூற்றாண்டுகளுக்கும் மேலாக கோயில் கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமியாரின் திவ்விய கருணையினாலும், அனுக்கிரகத்தினாலும் சிவத்தமிழ்ச்செல்விக்கு **"சிவத்தமிழ் அரசி"** என்ற உயரிய கௌரவத்தை 07.01.2025 செவ்வாய்கிழமை மாவை ஆதீனம் வழங்கி மகிழ்வுறுகின்றது.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
மாவைக் கந்தா போற்றி.

**மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதி குருக்கள்**
மாவை ஆதீன பேரரசு,
மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில்,
மாவிட்டபுரம்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



# துர்க்காதேவியின் அருட்கடாட்சம் பாரெங்கும் பரவச் செய்த "சிவத்தமிழ்ச்செல்வி"

1925 ஜனவரி 7ஆம் திகதி யாழ்ப்பாணம், தெல்லிப்பழையில் அப்பாக்குட்டி - தையற்பிள்ளை தம்பதிக்கு மகளாக பிறந்து தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக செயற்பட்டவரும், சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளருமான, ஈழத்தின் அரும் சைவ நற்பணிச் செம்மல், "சிவத் தமிழ்ச் செல்வி", "பண்டிதர்" அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூற்றாண்டு சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தனது பதவிக்காலத்தில் ஆலயங்கள் தனித்து வழிபாட்டு நிலையமாக இல்லாமல் அறப்பணியாற்றுகின்ற சேவை நிலையமாகவும் பணியாற்ற முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியதுடன் எமது ஆலயத்தின் இராஜ கோபுரம், சித்திரத் தேர், மண்டபங்கள், அறச்சாலைகள், நந்தவனம், தீர்த்தத் தடாகம் போன்ற அமைப்புகளை மிக நேர்த்தியாக கட்டுவித்து, அதனூடாக மக்கள் பணி செய்து வந்தார்.

அத்தோடு, ஆலய வளாகத்தில் "துர்க்காபுரம் மகளிர் இல்லம்" என்ற சிறுவர் இல்லமொன்றை நிறுவி, அதனூடாக ஆதரவற்ற குழந்தைகளை பராமரித்தார். அத்தோடு, ஏழைகளின் பசியை போக்க "அன்னபூரணி அன்னதான மண்டபமும் திருமண சுப காரியங்கள் நிகழ கல்யாண மண்டபமும் அமைத்தார். அது மட்டுமன்றி, "சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்", நல்லூரில் துர்க்கா தேவி மணிமண்டபம் என்பனவற்றை ஆரம்பித்து சமய சமூகத் தொண்டுகள் பலவற்றை நிறைவேற்றினார்.

உலகம் முழுவதும் சிறந்த உத்தமியாக போற்றப்படும் எங்கள் அன்னை சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்வும் வரலாறும் நமது சமூகத்திற்கு பெரும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. சைவமும் தமிழும் வாழும் வரை சிவத்தமிழ்ச்செல்வி ஆன்மிக உலகுக்கு ஆற்றிய திருப்பணியும் அவரின் திருநாமமும் என்றும் வாழும் என்று பெருமையுடன் இந்த உலகம் சொல்லும் வகையில் ஆன்மிகத்திலும் அறப்பணியிலும் சிறந்து விளங்கிய எங்கள் அன்னையின் நினைவில் நின்றவாறு அன்னையின் நூற்றாண்டு சிறப்பு மலரும் நூற்றாண்டு நிகழ்வும் எவ்வித குறைகளுமின்றி பெருமையுடனும் புகழுடனும் நடைபெற எங்கள் கருணைத்தாயாம் எம்பெருமாட்டியினை மனதில் வேண்டி எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**சிவஸ்ரீ சுந்தர. செந்தில்ராஜ சிவாச்சாரியார்**
பிரதம சிவாச்சாரியார்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

**செஞ்சொற்செல்வர்**

# கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

## அன்னையின் நூற்றாண்டு விழா மலருக்கு வழங்கும் செய்தி

எங்கள் தேவஸ்தானத்தின் பெருந்தலைவராகவும், சைவ உலகம் போற்றும் ஆன்மிக அன்னையாகவும் விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அம்மை யாரின் நூற்றாண்டு விழா குறித்து, தாயாரின் திருவடிகளை நீள நினைந்து பிரார்த்திக்கிறேன்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை தேசம் போற்றும் திருக்கோயிலாக மிளிரச் செய்த பெருமை அன்னையைச்சாரும். தன் தூய வாழ்வை அல்லும் பகலும் சைவசமய வளர்ச்சிக்காக அர்ப்பணித்த தாயை சைவ உலகம் என்றும் மறக்க முடியாது. ஆலயங்கள் சமூகத்தை நேசிக்க வேண்டும் என்ற சிந்தனையை செயல் வடிவம் கொடுத்துக் காத்தவர். ஆதரவற்ற பெண் சிறுமிகளுக்காக துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை ஆரம்பித்து பலரது வாழ்வைக் காத்த பெரும் தாய். அன்னையின் அறப்பணிகள் எல்லையற்றவை. தன் நாவவன்மையால் அவர் சாதித்த சாதனைகள் எண்ணில் அடங்காதவை.

உலகம் போற்றும் உத்தம அன்னை, என்னையும் அழைத்து அறவழிகாட்டி ஆற்றுப்படுத்திய நாட்கள் மறக்க முடியாதவை. 1993ஆம் ஆண்டு தனது பிறந்தநாள் அறநிதியத்தில் இணைத்து 1995ஆம் ஆண்டு பிற்பகுதியில் தேவஸ் தான நிர்வாக சபையில் இணைத்து வழிநடத்தினார்கள். பின்னர் இணைச் செய லாளராக நியமித்து பல கடமைகளைச் செய்ய வைத்தார்கள். தேவஸ்தானத்தின் தலைவராகக் கடந்த பதினைந்து ஆண்டுகள் யான் பணியாற்ற அம்மையார் காட்டிய வழிகாட்டலே காரணம் எனலாம். என் மீது அன்னையார் காட்டிய அன்பை ஓர் உன்னதப்பேறாகக் கருதுகிறேன்.

அன்னையின் நூற்றாண்டு விழாத் தொடர்பாக பூரண ஒத்துழைப்பு நல்கும் தர்மகர்த்தாசபை, நிர்வாகசபை உறுப்பினர்களுக்கு நன்றியுடையேன். அன்னை யின் பிறந்தநாள் அறநிதியச்சபை, இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் மகளிர் இல்லம் சார்ந்த அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக. நூற்றாண்டு விழா மலர் சிறக்க மலர்க்குழுவில் அங்கம் வகிக்கும் திரு. பா. துவாரகன் (யாழ்போதனா வைத்தியசாலை), யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இ. சர்வேஸ்வரா, சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சு. கபிலன், எந்திரி ச. சந்தோஷன் திருமதி சி. அனந்தசயனன், பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி மற்றும் துணை நின்ற சிரேஷ்ட மாணவிகளுக்கும் நன்றி கூறுகின்றேன். துர்க்கை அம்பாளின் திருவருளும், விண்ணில் இருந்து அன்னையின் ஆசியும் என்றும் சிறியேனை வழிநடத்த வேண்டி அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தாவின் ஆசி மொழிகள்

அகிலம் போற்றும் அன்னையாக விளங்குகின்ற சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். அம்மை யார் அவர்கள் தாம் வாழும் காலத்தில் சைவப் பணிகளையும் அறப்பணிகளையும் ஆற்றுவதையே வாழ்நாள் குறிக்கோளாக கொண்டவர்.

எமது தந்தையாரோடு நகுலேஸ்வர ஆலயம் பற்றியும், தெல்லிப்பழை துர்க்கை யம்மன் ஆலயம் பற்றியும் அவற்றின் வளர்ச்சிப் பணிகள் பற்றியும் அடிக்கடி கலந்தாலோசிப்பதை வழக்கமாக கொண்டவர். அம்மையாரின் அர்ப்பணிப் பான வாழ்க்கை பற்றி தந்தையார் பெருமைப்பட கூறிக் கேள்விப்பட்டிருக் கிறோம்.

சமூகத்தில் பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் இருந்த அந்தக் காலத்தில் பெண்ணாக இருந்து சைவசமய வளர்ச்சிப் பணிகளுக்கு ஈழத்தில் பல்வேறு பணிகளை ஆற்றியதோடு தனது நாவன்மையால் உலக அளவில் மரியாதை மிக்கவராக வணங்கப்படுகிறார். மிகச் சிறந்த பேச்சாளராக சைவ சமயக் கருத்துக்களை மக்கள் மனங்களில் விதைத்தார். ஆலயமாக மட்டும் இருந்த தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் ஊடாக பல மக்கள் பணிகளை ஆற்றிய மக்கள் சேவையாளராகவும் உள்ளார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட சைவப் பெண் பிள்ளைகளுக்கான மகளிர் இல்லம் அவர் செய்த அறப்பணிகளின் மணிமகுடம் ஆகும். அம்மையாரால் இனங்காணப்பட்ட கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் அம்மையாரின் காரியங்களைத் தொடர்ந்து செய்து வருவது அம்மையாரின் எதிர்காலம் குறித்த சிந்தனைகளுக்கும் நல்ல உதாரணமாகும். அம்மையாரின் சிவப்பேறுக்கு பின்னரும் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளையொட்டி மூத்த அந்தணச் சிவாச்சாரியார்கள் கௌரவிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சிவத்தமிழ்ச்செல்வியின் நூற்றாண்டு விழாவும் அதனையொட்டி வெளியிடப் படும் மலரும் சிறப்புற வெளிவர எல்லாம் வல்ல நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானின் திருவருளை வேண்டி பிரார்த்தித்து, எமது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை"

**பிரம்மஸ்ரீ ஸ்ரீ இரங்கநாதசர்மா**
ஆதீன கர்த்தா
கீரிமலை நகுலேஸ்வர ஆலயம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# அறப்பணிகள் ஆற்றிய ஆன்மிக அன்னை!

ஈழத்திருநாட்டில் கோயில்கள் வெறும் வழிபாட்டு நிலையங்களாக மட்டும் செயற்பட்டு வந்த காலத்தில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை சமூகப் பணிகள் ஆற்றும் அற நிலையமாக மாற்றியதுடன், ஈழத்து சைவ சமய வளர்ச்சியில் புதியதோர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து சைவசமய வளர்ச்சியில் ஒரு வரலாற்று நாயகியாக அம்மையார் திகழ்கிறார். 19 ஆம் நூற்றாண்டில் நல்லை நகர் நாவலர் பெருமான் அன்னியரால் அழிக்கப்பட்ட சைவசமயத்தை நிலை நாட்ட அரும்பணியாற்றியவர். அன்னை சிவத்தமிழ்ச்செல்வியும் நாவலர் பெருமான் வழியில் தன்வாழ்வை அர்ப்பணித்து அரும் பணியாற்றினார்.

1961 ஆம் ஆண்டு ஆலயத் திருப்பணிச் சபையில் உறுப்பினராக இணைந்த அம்மையார், ஆலயத்தின் வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அம்மையார் ஆலய நிர்வாகத் தலைவர் பொறுப்பேற்ற பின், ஆலயத்தில் பல முக்கியமான கட்டமைப்புப் பணிகள் நடைபெற்றன. 1978 ஆம் ஆண்டு புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. 1979 ஆம் ஆண்டு இராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஆலய முன்றலில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாடு, ஆலயத்தின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. சைவ மாநாடு முடிந்த பின்னர், வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் சிவத்தமிழ்ச்செல்வியை பாராட்டி எழுதிய கடிதத்தில் ஆதரவற்றவர்களை காக்கும் அறச்சாலை உருவாகட்டும் என வாழ்த்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து, 1982 ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற இல்லத்தைத் தோற்றுவித்து, ஆலயத்தின் சமூகப் பணிகளுக்கு ஒரு புதிய அத்தியாயத்தை எழுதினார். அம்பாளுக்கு கிடைக்கும் காணிக்கைகளை ஆதர வற்ற குழந்தைகளின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்ற அவரது தீர்க்கமான முடிவு, பல நூறு பெண் பிள்ளைகளுக்கு நல்வாழ்வைத் தந்தது. இன்று துர்க்காபுரம் மகளிர் இல்லம் 42 ஆண்டுகளை பூர்த்தி செய்து பலரை வாழ்வித்து வரலாற்றுப் பெருமையோடு தொடர்கிறது.

அம்மையார் அவர்கள் "ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு, "நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடக் கோயில் பகவற்கு ஆறு ஆமே" என்ற திருமந்திர வாக்கைச் செயலில் நடைமுறைப்படுத்தியும் வந்தவர். அன்னை அவர்களின் முயற்சியினால் தேவஸ்தானத்தில் சைவசமயம் சார்பான பல நூல்கள் வெளியிடப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990இல் சிவத்தமிழ்ச் செல்வி பிறந்த நாள் அறநிதியம் ஆரம்பிக்கப் பெற்றதனை அடுத்து, ஒவ்வோர் ஆண்டும் பல அறக்கொடைகள் செய்யப்பெற்று, அறிஞர்கள் கௌரவிக்கப்படுவதும். வறுமைக் கோட்டின் கீழ் இருக்கும் மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்புகளுக்கான உபகரணங்கள் அளிக்கப்படுவதும், யாழ் வைத்தியசாலை, யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கும் தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலைக்கும் அறக்கொடை நிதி அளிக்கப்படுவதும் என பல அறப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அன்னையின் சிவப்பேறுக்கு பிறகும் கூட அன்னையின் நினைவாக இப்பாரிய பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

தமக்குப் பின்னராக கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்களை தர்மகர்த்தா சபைக்கு அடையாளம் காட்டி, ஆலயத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு தொலை நோக்காக சிந்தித்தவர் சிவத்தமிழ்ச் செல்வி. அவரால் அடையாளம் காணப்பட்ட கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்கள் அன்னை வழி நின்று அறப்பணிகள் பலவற்றை ஆன்மீகப் பணியோடு முன்னெடுத்து வருகின்றமையை உலகறியும். அதன் மணிமகுடமாக நான்கு புறமும் கோபுரம் கண்டு ஐந்தாவதாக தலைவாசல் கோபுரத்தோடு எங்கள் ஆலயம் மிளிர்கிறது. மிகப் பிரமாண்டமாக கோயில் மீள் நிர்மாணிக்கப்பட்டு ஆறே மாதங்களில் கும்பாபிஷேகம் கண்ட மகிமையும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட தெய்வ காரியங்கள்.

அன்னை அவர்கள் சைவத் தமிழுலகு செய்த புண்ணியப் பயனாய்த் தோன்றிய திருவருட் செல்வி. அன்னை ஆற்றிய, பன்முகத் தொண்டுகளை சைவ உலகம் பாராட்டிப் போற்றுகின்றது. அவர் சிறந்த அருளாளராக வாழ்ந்து காட்டிய வழிகளைப் பின்பற்ற வேண்டியது எம் தலையாய கடமை. அம்மையாரது நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல துர்க்கையம்மனை பிரார்த்தித்து, தர்மகர்த்தா சபை சார்பாக எமது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறோம். அவர்களது சைவசமய, தமிழ்ப் பணிகளையும், மனிதநேய சமுதாயப் பணிகளையும் இதயபூர்வமாக வணங்கி, அவை முற்றின்றி தொடர இறைவனை வழிபட்டு, நற் கருமங்கள் ஆற்றுவோமாக.

**திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்**
தலைவர்
தர்மகர்த்தா சபை
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
குருபாதம் துணை
நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய ஆசிச்செய்தி

நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப் பித்தொழுது
தேத்து மடியார்கட் கில்லை யிடர்தானே!

- சம்பந்தர்

தெய்வத் திருமகளாக விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அவர்களை யாம் சிறு பராயம் முதல் நன்கு அறிவேன். எங்கள் ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் அவர்களின் பெரு மதிப்பைப் பெற்ற அம்மையார் அவர்கள் ஆதீன விழாக்களில் தவறாது கலந்து கொள்வார். துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சகல வைபவங்களிலும் யாம் கலந்து கொள்வோம். அம்மையாரின் உன்னத சேவையை அறியாதவர்களில்லை. அம்மையாரின் நூற்றாண்டு ஜனன விழாச் சிறப்பாக நடைபெற இறைவனை வேண்டுகின்றேன். அம்மையாரின் பணிகளை அவரிடம் நன்கு பயிற்சி பெற்ற கலாநிதி ஆறு. திருமுருகன் தொடர்கிறார். இதுவும் தெய்வத்திருவருளே. தனது சொல்லாலும் செயலாலும் சிறப்புற்ற அன்னை என்றும் சைவ உலகால் போற்றப்படுவார். அம்மையாரின் வழியில் எதிர்காலத்தில் பலர் தோன்ற வேண்டும்.

இரண்டாவது குருமகா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
நல்லை ஆதீனம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை

# அம்மையாரது பணி தொடரப் பிரார்த்திப்போம்



உலகம் போற்றும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் நூறாவது ஜனன தினத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றினை ஒரு மலராக வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஈழத்து சைவசமய வரலாற்றில் ஒரு தனிப் பெண்மணியாக ஒரு பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் எங்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள். அவரின் மறைவுக்குப்பின்பும் அவரது ஆற்றுப்படுத்தலில் வந்த செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களும் தேவஸ்தான நிர்வாக சபையினரும் அம்மையார் ஆரம்பித்த சமய சமூகப் பணிகளை மேலும் பன்மடங்கு விரிவாக்கி தொடர்வது போற்றுதலுக்குரியது.

அம்மையாரின் ஆன்மீகப் பணிகளைப் பராட்டி அடியேன் சார்ந்த அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் மிகப்பெரிய விருதினை அம்மையார் வாழும்போது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. விருதினை அம்மையாரிடம் நேரில் கையளிக்கும் பாக்கியமும் அமையாரின் அஸ்தியை காசியிலுள்ள கங்கையில் கரைக்கும் வாய்ப்பும் அடியேனுக்கு கிடைத்தது. திருவருளால் கிடைத்த இத்தகைய சந்தர்ப்பங்களை நினைத்து உள்ளம் உவகை கொள்கிறது.

அம்மையாரின் வாழ்வு என்பது எதிர்காலச் சந்ததிக்கு வழிகாட்டும் பாதை அவரது வழியில் பலர் பயணிப்பதற்கு இம்மலர் வழிசெய்யும் என்பதில் ஐயமில்லை.

**ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்**
முதல்வர்
சுப்பிரமுனிய கோட்டம்
கோப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். மறை மாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணத்தில் இருந்து சைவசமயம் சார்ந்த விழுமியங்களை உலகெங்கும் சென்று பரப்பி வர வேண்டும் என்று எண்ணித் துணிந்த முதற் பெண்மணியாக இருந்தவர் என பாராட்டுப்பெற்ற சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரது நூற்றாண்டு மலருக்கு ஆசிச் செய்தி தருவதை யிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை உலகறியச் செய்த பெருந்தகையாக இருக்கின்றார். இவரை பின்பற்றி வருகின்ற தெல்லிப்பழை துர்க்கா ஆலயத்தின் தற்போதைய தலைவராகிய கலாநிதி ஆறு திருமுருகனை நன்கு அறிவேன். இவ் ஆலயத்தினூடாக அறப்பணிகளையும், சமூகப் பணிகளையும் தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

வறிய பிள்ளைகளின் கல்வியிலே அக்கறை கொண்டு, அவர்கள் கல்வியில் முன் னேறுவதற்குரிய வழிவகைகளை செய்து கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதும், அவர்களிற்குரிய வேலை வாய்ப்புக்களை தேடிப் பெற்றுக் கொடுப்பதும், கல்விச் சாதனையாளர்களை கௌரவித்தும் மற்றவர்களை ஊக்குவித்தும், முதியோர் இல்லத்தை நடத்தி அவர்களை பராமரித்து வருகின்றதுமாகிய இவர்களின் பணிகள் வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும். இதற்காக உழைக் கின்ற உங்கள் எல்லோருக்கும் பாராட்டுக்கள். தொடர்கின்ற காலங்களிலும் உங்கள் பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள் கூறி, ஆசித்து நிற்கின்றேன்.

**இறைவனின் ஆசி என்றும் உங்களோடு இருப்பதாக !**

**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
யாழ். மறைமாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
# ஆற்றலும் நற்பண்பும் நிறைந்த மாதரசி

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க நல்லார் சொற்கேட்பதும் நன்றே நல்லார் குணங்களை உரைப்பதும் நன்றே அவரோடு இணைந்திருப்பதுவும் நன்றே"

இந்த வார்த்தைகளை உதித்தவர் தமிழ் மக்களின் தலைசிறந்த பெண்பாற் புலவராகிய ஔவையார்.

இன்று நம்மிடையே ஔவைப்பிராட்டி போல் நடமாடி மறைந்து போன துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய 100வது பிறந்ததினம் தமிழ்பேசும் இடமெல்லாம் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

நல்லவர்கள் கெட்டிக்காரராக இருந்தாலோ! கெட்டிக்காரர் நல்லவர்களாக இருந்தாலோ! என்று ஆங்கிலத்தில் ஒரு பொன்மொழி உண்டு.

**If only good were clever**
**If only the clever were good**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆற்றலும் நற்பண்பும் நிறைந்த மாதரசி. இவருடைய நற்பண்புகளையும் பேச்சாற்றலையும் கண்டு நான் பிரமிப் படைந்தேன்.

நான் பேராயராக இருந்த பொழுது இவருடன் பழகுகின்ற வாய்ப்புக்கிட்டியது. அவர் நடாத்திய நிகழ்வுகள் பலவற்றில் நான் பேசியுள்ளேன்.

கிறிஸ்தவ சமயத்தில் எள்ளளவேனும் காழ்ப்பு இல்லாத திருத்தொண்டராக நமது நாட்டில் பணியாற்றியவர்.

யூனியன் கல்லூரியின் மரபும் கட்டுப்பாடும், தன்னை உருவாக்குவதில் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளன என்று பல இடங்களில் கூறிவந்த பெருந் தகையாளர்.

இவருடைய கோட்பாடுகளை இன்று தொடர்ந்து காப்பாற்றிவரும் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள் கின்றேன்.

**பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன்**
இளைப்பாறிய பேராயர்
தென் இந்தியத் திருச்சபை
வட்டுக்கோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# அகில இலங்கை இந்துமாமன்றத்தின் வாழ்த்துமடல்

தெல்லிப்பழையில் துர்க்கை அம்மனின் கோயிலை வளர்த்து, பத்தகோடிகளை பரவசத்தில் மெய்யுணர வைத்தவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் பெருந்தகை. அத்தோடு நின்றுவிடாமல் எண்ணற்ற சமூகப்பணிகளையும் மேற்கொண்டவர்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வாழும்போதே வாழ்த்துவோம் எனும் எண்ணக்கருவிற்கு ஏற்றாற்போல் சீர்மிகு செல்விக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிச் சிறப்பு செய்தது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். அகில இலங்கை இந்து மாமன்றம் அதன் வைரவிழாவின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையின் வழிகாட்டலின் கீழ் "இலங்கையின் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் ஓர் ஆய்வு" என்னும் அரிய நூலை வெளியிட்டது என்பது பெருமைக்குரியது. ஆசிரியராகப் பணியை ஆரம்பித்துப் பெரும் சேவை ஆற்றியவர்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பற்றிய புகழுரைகள் இந்து மாமன்றத்தின் மணி விழா மலர், பவள விழா மலர், உள்ளிட்ட சிறப்பு நிறைந்த நூல்கள் பலவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.. கோகிலா மகேந்திரன் அவர்களின் தங்கத்தலைவி, மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் காலம் தந்த கைவிளக்கு, சம்பந்தன் அவர்களின் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற்பணிகள் எனும் நூல்களுடன் ஆய்வுப்புலத்தில் சிரேஸ்ட பேராசிரியர் கலாநிதி நா. சண்முகலிங்கன் அவர்களின் **A New Face of Dhurga Religious and Social Change in Sri Lanka** என்னும் நூல் அரிய வகையைச் சேர்ந்தது.

இந்நூற்றாண்டு விழாப் பணியில் ஈடுபட்ட சகலருக்கும் நன்றி கூறி, இறையருள் ஆசி வேண்டி அகில இலங்கை இந்துமாமன்றம் பெருமைகொள்கிறது.

**திருமதி. அபிராமி கைலாசபிள்ளை**
தலைவர்
அகில இலங்கை இந்துமாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# "அன்பே சிவம்" என்ற திருமந்திரத்துக்கு இலக்கணமாகத் திகழ்ந்த அன்னை

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூற்றாண்டு நிறைவினை சிறப்பாகக் கொண்டாடும் இவ்வேளையில், சிட்னி வாழ்மக்கள் சார்பாகவும் சிட்னி முருகன் ஆலயத்தின் சைவ மன்றத்தின் சார்பாகவும் இவ்வாழ்த்துச் செய்தியினை முருகனருளால் அனுப்பவதில் பெருமையடைகிறேன்.

தமிழ்மொழி மீதும், சைவ சமயத்தின் மீதும் பற்றுக்கொண்ட காரைக்காலம்மையார், திலகவதியார் வரிசையில், ஈழ மண்ணில் தமிழ்ப்பணி, சைவப்பணி, சமூகப் பணி, அறப்பணி ஆகியவற்றைத் தனது வாணாட் பணியாக ஏற்று எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர். எம் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என்றால் மிகையாகது.

அவரது சைவப்பிரசங்கங்கள், அங்கே கணீரெனக் கேட்கும் அவரது குரல், கூறப்படும் நல்வாழ்வியல் நெறிகள், பண்பாட்டு வழிமுறைகள், சைவத்தமிழ் கலாசாரம் தழுவிய கருத்துக்கள் யாவும் இன்றும் எம்மோடு இணைந்து நிற்பவை. எமது வாழ்வியலுக்கு வழிகாட்டி உயர்விப்பவை. நம்மவர்கள், புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், அவர் காட்டிய ஆன்மிக நெறிகள், எமை என்றும் நல்வழிப்படுத்தி உயர்விக்கின்றன.

"அன்பே சிவம்" என்ற திருமூலரின் சிந்தனைக்கு செயல் வடிவம் அளித்தவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், எத்தனையோ ஆதரவற்ற பெண் பிள்ளைகளை துர்க்காபுரத்தில் அரவணைத்து நின்றவர். அவர்களுக்கு, உணவு, உறைவிடம், கல்வி, வாழ்வியலுக்குத் தேவையான திறன்கள் எனப் பலவற்றைக் கற்பித்து, ஆளுமையுடையவர்களாக்கி, அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியவர் அன்னையவர்கள்.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு, சமூகம் மனமகிழ்ந்து பல பல பட்டங்களை வழங்கி கௌரவித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் "கௌரவ கலாநிதி பட்டம்" வழங்கி மேன்மை கொண்டது. இத்தகைய பணியாற்றிய அம்மாவின் நாமமும், அவரது நற்சிந்தனைகளும் சைவத்தமிழர்களின் மனதில் என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

**அன்பே சிவம்! வாழ்க அவரது நாமம் என்றும்!**

**திரு. கணபதிப்பிள்ளை ஜெகநாதன்**
தலைவர்
சைவ மன்றம், சிட்னி முருகன் கோயில்
அவுஸ்ரேலியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# இறையானாள் அவள் புகழை ஏற்றி நிற்போம்!

உலகமெலாம் யாழ்மண்ணின் பெருமை தன்னை,
ஒப்பற்ற தனி வாழ்வால் உயர்த்திக் காட்டி,
பலர்புகழத் தேவதையாய், மண்ணில் வாழ்ந்து,
பரிவுடனே கதியிழந்த மக்கட்கெல்லாம்,
வளம்மிகுந்த வாழ்வதனை ஆக்கித்தந்தே,
வணங்குகிற தெய்வமதாய் வாழ்ந்து நின்ற,
நலமிகுந்த சிவத்தமிழின் செல்வி தன்னை
நானிலத்தோர் இன்றளவும் போற்றி நின்றார்.

அன்னையவள் பிறந்திந்த மண்ணைச் சேர்ந்து
ஆண்டுகள் நூறாயிற்றாம் அரிய நல்ல
பொன்னெனவே நம்மக்கள் அவளைப் போற்றி
புகழ்ந்தேதான் வருகின்றார் இன்றுமட்டும்
விண்ணளவு விரிந்த பெரும் பணிகள் செய்து
வீறான சைவத்தின் பெருமை காத்தாள்
கண்ணெனவே நொந்தவரைக் காத்து நின்ற
கருணையினை என் சொல்வோம்? கடவுட் பெண்ணாம்.

மங்கையருக்கு அரசியென நிமிர்ந்தே வாழ்ந்து,
மண்ணெல்லாம் சொற்பொழிவால் நிரம்பச் செய்தார்.
இங்குள்ள ஆலயங்கள் அனைத்தும் சென்று,
ஏற்றமிகு நற்கருத்தை விதைத்து வந்தார்.
பங்கமிலாச் சொல் தேர்ந்து, பொருளும் கோர்த்து,
பக்தியினில் அதைத் தோய்த்து, அமிர்தமாக்கி,
எங்கள் இனம் உயர்ந்திடவே பொழிந்து நின்று,
இறையானாள் அவள் புகழை ஏற்றி நிற்போம்!

ஊர் எல்லாம், உரையாற்றிப் புகழைச் சேர்த்து,
ஒழுக்கத்தால் தனைத்தீட்டி உயர்ந்து நின்றாள்.
சீர்மிகுந்த துர்க்கையவள் அதனைக் கண்டு,
சிறப்பாயத் தன் பணிகளைச் செய்க! என்றே,
ஆர்வமுடன் அன்னையினை அணைத்துக் கொண்டாள்.
அன்றுமுதல் தாய் இவளின் பெருமை தானும்,
வேர் விரித்து விண்ணதனைத் தொட்டதம்மா.
வேற்றுமைகள் பாராது உலகம் காத்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் தொடங்கி யாழ் மண்ணும் பொசுங்கிப் போக
போமிடமே இல்லாது காப்பார் இன்றி
சோர்ந்திருந்த அனைவரையும் ஏற்று நின்று,
சோதனைகள் பலதாண்டிக் காத்து வந்தாள்.
ஊர் அதனின் எல்லையிலே காவற்தெய்வம்,
உட்கார்ந்து அருள் செய்யும் பாங்கைப்போல,
வீறுடனே தனித்தேதான் அச்சமின்றி,
விளைத்ததுவாம் வீரத்தின் பெருமை என்னே!

பாவியரின் கொடும் செயலால் பலரும் வாட,
பக்கத்தில் வீழ்ந்த பெரும் குண்டாலன்று,
தாய்யெனவே நீ வளர்த்த மழலை சாய,
தவித்தேதான் மனம்வாடி வருந்திச் சோர்ந்து,
“சா” அதனின் துயர்தாங்கி தனித்துநின்றாய்.
சகத்தோர் உன் கால் பிடித்துக் கதறி நின்றார்,
பார் அதிரத் தேர் நிகழ்வை அடுத்தநாளே,
பலர்முன்னே நடத்திட்டாய் இரும்புப் பெண்ணாய்.

உன் பெருமை அறியாத “உழுத்தர்” சேர்ந்து,
ஓர் இரவில் உட்புகுந்து களவைச் செய்ய
மண்கலந்த மக்களெல்லாம் வருந்தி நின்றார்.
மாதரசி கலங்காமல் அமைதி காத்தாய்.
அன்னையவள் துர்க்கைதனின் அருளும் பாய,
அவர் எடுத்த பொருள்களெலாம் தேடிவந்து,
கண் எதிரே கிடந்ததனைக் கண்டு மக்கள்,
களிப்புற்றார். அப்போதும் அமைதி காத்தாய்.

புத்தியினால் தமிழ் வளர்த்தாய். பலரும் போற்ற,
புண்ணியங்கள் பல செய்தாய் தனித்து நின்று,
பக்தியினால் அறம் வளர்த்தாய். பாரில் நல்ல,
பண்பதனை ஊர் எல்லாம் விதைத்துப் போனாய்.
சத்தியத்தின் பெருமைதனைச் சாற்றி நின்றாய்.
சகத்துள்ளோர் உயர்விற்காய் உந்தன் வாழ்வை,
வித்தெனவே தந்தேதான் விளங்கி நின்றாய்.
வேறெவர்க்கும் இல்லாத பெருமை கொண்டாய்.

நிற்காது நீ வளர்த்த அறங்கள் ஓங்க,
நிலையாக உழைத்து வரும் அன்பன், வாழ்வில்
சிக்காது உலகுக்காய் பணிகள் ஆற்றும்,
சீர்மிகுந்த ஆறுதிருமுருகன் தானும்,
தக்கராய் உனைக் காட்டி, தர்மம் காத்து,
தரணியிலே பணிகள் பல செய்து நின்றான்.
அக்காலம் நீ இட்ட விதைதான் இன்று
அவனிதனைக் காத்தே நல் அருளைப் பெய்யும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆறுமுக நாவலர் தான் மீண்டு வந்து*
*அருமையுடன் தமிழ் சைவப் பணிகள் ஏற்று*
*வீறுடனே மக்களையும் காத்து நின்றார்.*
*விளம்பினராம் அறிஞரெலாம் உன்னைக் கண்டு*
*சீர் மிகுந்த கருணையினால் பேதமின்றிச்*
*செகமனைத்தும் தழுவித்தான் நீயும் காத்தாய்*
*யார் இதனைச் செய்திடுவார்? அன்பால் செய்த*
*அரிய பணி அனைத்திலுமே நிலைத்து நின்றாய்.*

*நீ வளர்த்த அறங்கலெல்லாம் நின்று இன்றும்,*
*நின்னைத்தான் நினைவூட்டி நெகிழச் செய்யும்.*
*"பா" வளர்த்த பெரும் புலவன் கம்பன் தன்னின்,*
*பாதமலர் தொட்டதனால் நாமும் உந்தன்,*
*ஊர் வளர்த்த அன்பினிற்கு உரித்தாய் ஆகி*
*உரிமையுடன் உனைஅணுகும் வாய்ப்பைப் பெற்றோம்*
*தாய் வளர்த்த பிள்ளைகளாய் எம்மை ஆக்கி*
*தரணியிலே தலை நிமிரச் செய்தாய் அம்மா!*

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**
*தலைவர்*
*அகில இலங்கை கம்பன் கழகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# ஆன்மிக வாழ்வு என்பது மக்கள் பணியென வாழ்ந்து காட்டிய சிவத்தமிழ்ச் செல்வி

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரது நூற்றாண்டு தினத்தையொட்டி வெளியிடப்படும். நூற்றாண்டு மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மன மகிழ்வு கொள்கின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது இளவயதில் ஆசிரியராகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் பொதுவாழ்விலே இணைந்து தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்திலும் இந்து சமய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவராவார். இவர் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தை மையப் புள்ளியாக தகவமைத்துக் கொண்டு, தனது பேச்சாற்றல் மற்றும் கலை இலக்கிய ஆளுமையுடன் கூடிய அர்ப்பணிப்பு நிறைந்த சேவை மனப்பாங்குடன் உழைத்து இருபதாம் நூற்றாண்டில் மக்கள் மத்தியில் சமூக மற்றும் சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தியராவார்.

ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள இந்த ஆலயங்கள் தோறும் அம்மையாரின் பிரசங்கத்தினைக் கேட்பதற்காக ஒன்று கூடும் மக்களின் தொகை ஏராளம். அவரது பேச்சாற்றல் அனைவரையும் கவர்ந்திருந்தது. குறிப்பாக அவர் **1965**ம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற சைவச் சித்தாந்த சமாஜ வைர விழாவில், "மணிக்கவாசகரின் ஞான உள்ளம்" பற்றி ஆற்றிய உரையும், **1966**இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "இளங்கோ போற்றிய பெருமை" பற்றிய இலக்கியச் சொற்பொழிவும் பெருமளவு மக்களின் பாராட்டைப் பெற்றது. **1977**இல் திருவிடை மருதூரில் நடைபெற்ற திருவாசக விழாவில் இவர் ஆற்றிய உரை பலரது நெஞ்சங்களையும் உருக்கியது.

அம்மையார் அவர்கள் ஆலயங்கள் அனைத்தும் மக்களுக்கு அறப்பணியாற்ற வேண்டும் என்ற நோக்கில் மகளிர் இல்லத்தை அமைத்து அவற்றின் மூலம் ஏழைச் சிறார்களை பராமரித்ததோடல்லாமல் அவர்களுக்கு கல்வி வசதிகளை உருவாக்கி அவர்களை பல்கலைக்கழகம் வரை படிக்க வைத்து அவர்களின் வாழ்வு சிறக்க வழி வகுத்தவர். அப்பணி இன்றும் தொடர்வது அம்மையாரின் சிந்தனையின் வெளிப்பாடே என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மையார் அறப்பணிகளுக்கு அப்பால் சமூகத்தில் பெண்களின் நிலை பற்றிய தெளிவையும் கொண்டிருந்தார். இனம், மொழி, சமயம், சாதி என்பவற்றுக்கப் பால், பெண்கள் கல்வி, அரசியல், பொருளாதாரம், கலை என்பவற்றிலும் முன்னிலை வகிக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இன்னும் பல ஆளுமைமிக்க செயற்பாடுகள் மூலம் தமிழினத்தின் கலை, கலாசார, பண்பாடுகளை உலகறியச் செய்த பெருமை அம்மையாரைச் சாரும். அவர் ஆற்றிய அறப்பணிகள் சொல்லில் அடங்கா. இந்நிலையில் அம்மையாரின் அறப்பணிகளை நினைவுகூர்ந்து வெளியிடப்படும் நூற்றாண்டு விழாவுக்கான மலர் சிறப்புற வெளிவர வேண்டும் என வாழ்த்துவதோடு, அம்மையாரின் வழிநின்று சைவமும், தமிழும் தழைத்தோங்க அனைவரும் பாடுபடுவோமாக!

**திரு. நா. வேதநாயகன்**
ஆளுநர்
வட மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# நெருக்கடியான காலத்தில் சமூகம் நிலைகுலைந்து போகாமற் காத்து

## சமூகத்தைத் தூக்கி நிறுத்தியவர் துர்க்கா துரந்தரி

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கூற்றிற்கேற்ப இறைவனால் அருளப் பட்ட வாழ்க்கையின் நோக்கத்தினை சகல மக்களின் மனங்களிலும் விதைத்துச் சென்ற சமூகப் பணியாளர்களுள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவைக்கு ஒப்பாக, ஈடாக எவருமே இல்லை. தனது வாணாளை சமூகப் பணிக்கும் சைவப் பணிக்கும் அர்ப்பணித்து வாய்மை குன்றாது, நேர்மை தவறாது, மனசுத்தியோடு சமய, சமூகப் பணிகளைச் செவ்வனே ஆற்றியவர்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத் தமிழர் வரலாற்றில் குறிப் பிடத்தக்க பெண்மணியாக, சமூகப் போராட்டச் செயற்பாட்டாளராகத் திகழ்ந் தவர். பொதுமக்களின் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுகின்ற சைவபக்தி யும் தமிழ்ப்பற்றும் நிறைந்த பெற்றோருக்கு மகளாகப் பிறந்ததால் சிறுவயதி லிருந்தே சமூகப் பிரச்சினைகள் குறித்ததான விழிப்புணர்வு உள்ளவராக வளர்ந்த தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பெண்களுக்கான கல்வியின்மை, பழமை வாதம், பெண் அடிமைத்தனம் போன்ற பெண்களை முடக்கிப் போடுகின்ற கொள்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டு தன் வயதொத்த பெண்பிள்ளைகளுக் கான சமத்துவத்தினை சுயநிலை வாழ்வின் முக்கியத்துவத்தினை நிலைநாட்டு வதில் ஒரு முன்னுதாரணமான பெண்விடுதலைப் போராளியாகத் திகழ்ந்தவர்.

எவ்வளவு தூரம் சமூக சிந்தனையாளராகத் திகழ்ந்தாரோ அதேயளவிற்கு இறைவன்பால் பத்தியும் நம்பிக்கையும் கொண்டவராக வாழ்ந்தார் என்பதற்குச் சான்றாக வானுயர உயர்ந்து நிற்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் கோபுரமும் மற்றும் அவர் கோவில்களில் ஆற்றிய தொண்டும் சைவசமய மேன்மை தொடர்பான சொற்பொழிவுகளும் இன்றும் சாட்சி பகருகின்றன. சைவ சித்தாந்தங்கள், சமய அறநெறிப் பாடங்கள், இனிய தமிழின் தொன்மைகள் பற்றிய அறிவினை நன்கே கற்று அறிந்ததற்கு அடையாளமாக பல கோவில்களில் பொதுமேடைகளில் அவர் ஆற்றிய சைவசமயம், முத்தமிழ் தொடர்பான சொற் பொழிவுகள் இன்றும் எல்லோர் மனங்களிலும் பசுமரத்தாணி போல் உள்ளன.

ஏழைக் குழந்தைகள், திக்கற்ற பெண்கள், விதவைகள், ஒடுக்கப்பட்டவர்கள் என பலதரப்பட்ட மக்களின் தேவைகள் அறிந்து அதற்கான தீர்வுகளைச் சொல்லிலன்றிச் செயலில் கைங்கரியங்களூடாக நிறைவேற்றியுள்ளார் என்பதற்கு சான்றுகளாக அன்னையர் இல்லங்கள், சிறுவர் காப்பகங்கள் இன்றும் செவ்வனே செயற்பட்டு வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச்செல்வியின் எண்ணக்கருவினையும் உள்ளத்தின் விருப்பத்தினையும் நேர்த்தியாகத் தொடர்ந்து ஆற்றுவதற்காக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஐயா அவர்களைத் தனக்குப் பின்னராக சேவையாளராகத் தெரிந்தெடுத்திருக்கும் அவரின் தூரநோக்கான செயல் மிகவும் பாராட்டுதற்குரிய விடயமாகும்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நெருக்கடியான, அசாதாரண சூழ்நிலைகள் மற்றும் இயற்கையின் இடையூறுகள் ஏற்பட்ட காலங்களில் ஒரு தேனீயைப் போலச் செயற்பட்டு சமூகமும் மக்களும் நிலைகுலைந்து போகாமல் காத்து, தூக்கி நிறுத்திய ஒரு பெண்மணியாவார். ஏழைகளின் பசி போக்கும் அன்னபூரணியாக அவர் அமைத்த அன்னதான மண்டபம் இன்றும் பசி போக்கும் நிவாரணியாக தெல்லிப்பழையில் செயற்பட்டுக் கொண்டுள்ளதனை யாவரும் அறிவர்.

அவர் ஆற்றிய சமயப் பணிகளுக்காக, சமூகசேவைகளுக்காக சிவத்தமிழ்ச் செல்வி, செஞ்சொற் செம்மணி, சிவஞானவித்தகி, துர்க்காதுரந்தரி என பல பட்டப்பெயர்களால் புகழப்படுகின்ற, பல கௌரவ விருதுகளை பெற்றுக் கொண்ட இம் மாமனிதப் பெண்மணி மண்ணுலக வாழ்வை விட்டுக் கடந்து சென்றாலும் சைவமும் தமிழும் உலகில் உள்ளவரை அவர் ஆற்றிய பணிகளும் அவர் திருநாமமும் உலகில் வாழும் அனைத்து சைவசமய அன்பர்கள் நல்லுள்ளங்களிலும், சமூகத் தொண்டர்கள் மத்தியிலும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமேயில்லை.

**இ. இளங்கோவன்**
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# சிவத்தமிழ்ச்செல்வி ஈழத்தமிழ் சைவ வரலாற்றின் ஒரு புலமைத்துவத் தியாக அத்தியாயம்

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறப்பின் நூற்றாண்டுடன் 2025ஆம் வருடம் ஆரம்பித்திருப்பது மகத்துவத்துக்குரியது. சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் எங்கள் ஈழத்தமிழ் சைவ வரலாற்றின் ஒரு தனி அடையாளம். புலமைத்துவம் தியாகம் இந்த இரண்டும் இணைந்த மனிதர்களினால் தான் இந்த உலகம் இயக்கப்படுகின்றது. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒன்றிணைக்கப்பட்டவை. தியாகத்தின் மூலம் தான் புலமைத்துவத்தினை எய்த முடியும். உலகம் முழுவதும் உள்ள புலமையாளர் களின் வரலாறுகளைப் புரட்டிப்பார்த்தால் இந்த உண்மை புலப்படும். தனிப் பட்ட வாழ்வின் நலன்கள், லௌகீக வாழ்வின் சுகங்கள் என்பவற்றைத் தியாகம் செய்துதான் அவர்கள் தங்கள் புலமைத்துவத்தின் உயர்வைக் காண்கின்றார்கள். அதன்பின் புலமைத்துவ உச்சத்தின் விளைவாக விளையும் தியாகத்தை பிரதிபலிப்பவர்கள் மிகச்சிலர். அத்தகைய மனிதர்கள் தம்மை ஒறுத்து மற்றவர் களை வாழ வைப்பவர்கள். தமது புலமைத்துவத்தின் வழியாக கிடைக்கும் நன்மைகளை தனக்கென வைத்திராது அவற்றை பிறர்க்கென கொடுக்கும் பெருமக்கள். அதனால் தான் அத்தகையவர்கள் நூறாண்டுகள் கடந்தும் நினைக்கப்படுகின்றார்கள். அத்தகைய மகோன்னதமானவர் எங்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள்.

அம்மையார் அவர்கள் தமிழ்த்துறை சார்ந்த விற்பன்னம் மிக்க பண்டிதர். சைவசித்தாந்த அறிவில் துறைதோய்ந்தவர். தான் கற்ற அறிவையும் பெற்ற அறிவனுபவங்களையும் சமூகத்துக்காக அறிவுப்பரவலாக்கம் செய்த வாண்மைத்துவமிக்க உரையாளர். அவரது சொற்பொழிவுகள் பலவற்றை நான் நேரில் கேட்டிருக்கின்றேன். ஆற்றொழுக்குப் போல அழகுத் தமிழில் இலகு தமிழில் இலக்கணச் சுத்தமாகப் பேசுவார். அவர் ஆற்றிய ஒரு உரையை அச்சரம் பிசகாது அப்படியே எழுதினால் நல்லதொரு கட்டுரை கிடைக்கும். அந்தளவுக்கு பேச்சிலக்கியத்திலும் எள்ளவேனும் இலக்கணம் வழுவாது பேசும் திறன் எங்கள் சூழலில் அவருக்கு மட்டுமே வாய்த்திருந்த கொடை. அவரது சொற்பொழிவுகள் நூலுருப்பெற்றன. அவரது சொற்பொழிவு ஆற்றலின் திறனை மெச்சி காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் வழங்கப்பெற்ற பட்டம் தான் சிவத்தமிழ்ச் செல்வி. அது அவரது இயல்புநாமமாகவே நிலைபெற்றுவிட்டது.

அம்மையார் அவர்கள் ஒரு சிறந்த தமிழாசிரியர். யாழ்ப்பாணத்தில் அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை மற்றும் யூனியன் கல்லூரியில் நீண்ட காலமாகக் கற்பித்து தனக்கென ஒரு மாணவப் பரம்பரையை உருவாக்கியவர். பண்டிதர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவாளர், ஆசிரியர் என்பவற்றைத் தாண்டி ஒரு தெய்வத்தாயாக தன்னை உருமாற்றிக்கொண்ட தருணத்தில் தான் அவரது வியாபகம் மேல் எழுந்தது. சிந்தித்துப் பாருங்கள் இற்றைக்கு ஒரு அறுபது எழுபது வருடங் களுக்கு முன்னர் எமது மண்ணில் பெண்களின் சமூக அந்தஸ்து அல்லது அவர்கள் குறித்த சமூகப் பார்வை எப்படியிருந்தது. சமூக நியமங்களாலும் கலாசார வரம்புகளாலும் அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார்கள். பண் பாட்டியல் அடிப்படைக் கோட்பாடுகளின் பிரகாரம் அவர்களது வீச்செல்லை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்தப் பின்னணிமிக்க காலச்சூழலில் இருந்து வெளிக்கிளம்பிய புரட்சிப் பெண்ணாகவே நான் சிவத்தமிழ்ச் செல்வியைக் காண்கின்றேன்.

ஆன்மிக நெறிப்பட்ட வாழ்வு, தன் வாழ்வை தியாகம் செய்து மற்றவர் வாழ்வை உயர்த்தும் பண்பு என்பன அவரை தெய்வத்தாயாக மாற்றியது. அவர் சாதாரண மனிதர்களைப் போல் ஒரு இல்லற வாழ்வுக்குள் நுழைந்திருந்தால் ஒன்றிரண்டு பிள்ளைகளின் தாயாக இருந்திருப்பார். ஆனால் இயற்கை அவரை ஆயிரம் பிள்ளைகளின் தாயாக மாற்றியது. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தை மையப்படுத்தி கோவிலைத் தழுவிய குடிகள் குடிகளைத் தழுவிய கோயில் எனும் புனிதப் பண்பாட்டின் அடையாளத்தை அவர் தோற்றுவித்துக் காட்டினார். தன் நாவன்மையால் திரளும் நிதி முழுமையையும் ஆலய வளர்ச்சிக்காகவும் தனது இல்லப் பிள்ளைகளின் நலனுக்காகவும் தர்ம காரியங்களுக்காகவும் செல வழித்தார். எமது மண்ணில் மகளிர் இல்லங்கள் எனும் மரபை சைவத் தமிழ் பாரம்பரியத்தில் தோற்றுவித்தவர் அவரே. அந்த இல்லத்தின் பிள்ளைகள் பலர் இன்று பல்வேறு மட்டங்களிலும் உயர்ந்து நிற்கின்றார்கள்.

எனது மனக்கண்ணில் இப்போது ஒரு தெய்வீகக் காட்சி நினைவுக்கு வருகின்றது. செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கை அம்மன் ஆலயத்தில் அந்த பிள்ளைகள் சூழ்ந்திருக்க அம்மையார் நிகழ்த்தும் கூட்டுவழிபாடும் அதன் பின்னான சொற் பொழிவும் வேறெங்கும் காணமுடியாத தனித்துவச்சிறப்புமிக்கவை. ஆன்மிகம் என்பதன் உண்மை வரைவிலக்கணத்தை தன் வாழ்வின் மூலமான நமக்கு உணர்த்தியவர் சிவத்தமிழ்ச் செல்வி. தனது ஆன்மாவை மற்றவர் நலனுக் கான ஈகம் செய்த பெருமகள்.

அவரது பணிகள் வெறுமனே தெல்லிப்பளைக்குள் மட்டுப்படவில்லை. தனது அறப்பணிகளை அவர் எல்லைகள் கடந்து விரித்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் குறிப்பாக மருத்துவபீடம், புற்றுநோயாளர் காப்பகம் என பல மையங்களுக்கு அவரது அறப்பணி அவர் இருக்கும் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை அவரது பெயரினால் தொடரப்படுகின்றது. எமது பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் அவரது பெயரில் ஒரு புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. கற்றலில் திறமை காண்பிக்கும் பொருளாதாரப் பின்னடைவுள்ள பிள்ளைகளுக்கு அப் புலமைப் பரிசில் பெரும் உதவியாகவுள்ளது. எமது பல்கலைக்கழகம் அன்னையின் பன்முகப்பட்ட ஆளுமையையும் அர்ப்பணிப்பையும் கௌரவித்து அவருக்கு கௌரவ கலாநிதிப்பட்டத்தை வழங்கிக்கௌரவித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திலும் சேர்.பொன்.இராமநாதன் காண்பிய மற்றும் ஆற்றுகைக் கலைகள் பீடத்திலும் கற்று அவரது பிள்ளைகள் பலர் தம் தம் துறைகளில் திறமையானவர்களாக வெளியேறியிருக்கின்றார்கள். அண்மையில் அவர்கள் வாழ்ந்த இல்லத்துக்கு ஒரு நெருக்கடி வந்தபோது அவர்கள் அனைவரும் திரண்டு வந்து குரல்கொடுத்து தம் மாண்பைப் பிரதி பலித்தார்கள். அன்னையின் பெயரால் இன்று பல நல்ல காரியங்கள் நிறைவேறு கின்றன. தான் வாழ்ந்தபோதே தனக்குப் பின் தன் தர்ம காரியங்களை முன் கொண்டு செல்லவென செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர் களை தன் ஞானப்புதல்வனாகத் தத்தெடுத்துக்கொண்டார். இன்று அன்னையின் வழியில் அவர் அறப்பணிகளை அடுத்ததளத்துக்கு விரித்துச் செல்கின்றார். அவருடன் இணைந்து தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாகத்தினரும் தர்மகாரியங்களுக்கு துணை நிற்கின்றனர்.

இன்று நாம் அன்னையின் நூற்றாண்டைக் கொண்டாடுகின்றோம். அவரது தியாக வாழ்வின் பக்கங்களை மீளப் புரட்டிப் பார்க்கின்றோம். புலமைத்துவ செழுமையைப் புகழ்ந்து பேசுகின்றறோம். இது வெறுமனே அவரது புகழைத் துதிப்பதற்கான தருணம் அல்ல. அவரது வாழ்வு நமக்குச் சொல்லித்தரும் பாடத்தை கற்றுக்கொள்வதற்கான தருணம். அவரது சிந்தனைகள் அதன் வழி செயலுருப்பெற்ற விடயங்கள் என்பன சாதித்த அறுவடைகளில் இருந்து நாம் பயனைப் பெறுவதைத் தாண்டி மீண்டும் மீண்டும் விதைக்க எம்மை ஊக்கப்படுத்தும் தருணமாக அவரது நூற்றாண்டை நான் தரிசிக்கின்றேன்.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் நாமம் அகிலம் உள்ளவரையும் நிலைக் கட்டும். அவரால் தோற்றுவிக்கப்பட்ட அறப்பணிகள் இடையறாது தொட ரட்டும். அவரது அன்புப் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் ஆற்றல் அறிவில் மேம்பட்டு திளைக்கட்டும். அவரது சிந்தனைகளும் புகழும் நூற்றாண்டு கடந்தும் நிலைக்க எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.


**பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா**

துணைவேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# சைவத் தமிழ் மக்களின் வழிகாட்டியாக விளங்கும் அன்னை!

ஈழமணித் திருநாட்டின் சென்னியெனத் திகழும் யாழ்ப்பாண மண்ணில் சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய "சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி" அம்மையார் அவர்களின் "நூற்றாண்டு மலருக்கு" வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

" தோன்றின் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் அமுத வார்த்தைக்கு வரைவிலக்கணமாக வாழ்ந்த ஒருவராக அம்மையாரைக் குறிப்பிடலாம்.

சைவத்திற்கும், சமூகத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றிய இவர் தனது 30 ஆண்டுகளுக்கு மேலான ஆசிரியப் பணி மற்றும் சமயப் பணி, சமூகப்பணி ஊடாக சைவத்தையும், தமிழையும் வளர்த்த பெருமாட்டி என்பதனை யாரும் மறந்து விட முடியாது. உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்று சைவசமயச் சொற்பொழிவுகளை ஆற்றி சைவம் வளர்த்த பெருமை இவரைச் சாரும். அத்துடன் மட்டுமல்லாது உலக நாடுகளில் நிதியைத் திரட்டி தான் ஆதரிக்கும் ஆதரவு இல்லங்களுக்கு வழங்கிய மனிதநேய மாது இவர் என்றால் அது மிகையாகாது.

ஏதோ பிறந்தோம், எப்படியோ வாழ்ந்தோம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டுமென்ற வார்த்தைக்கு உதாரணமான பெண்மணியாக தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திகழ்ந்திருக்கின்றார். அம்மையாரின் கந்தபுராண சொற்பொழிவு நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை குறிப்பிடத் தக்கது. சிவத்தமிழ்ச்செல்வி, சிவஞான வித்தகி, துர்க்கா துரந்தரி, தெய்வத் திருமகள் போன்ற மேலும் பல பட்டங்கள் சைவப் புலவர் பட்டத்தைப் பெற்ற இவரின் தன்னலமற்ற சைவப் பணிக்குக் கிடைத்த அணிகலன்களாகும்.

சிறிய ஆலயமாக இருந்த தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை உலகறியச் செய்த பெருமை இவருக்குண்டு. இவ் ஆலயத்தின் அறப்பணி களையும், பழம் பெரும் சைவத் தொண்டரும், சமூக சேவகியுமான தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையும் பற்றிய பயனுள்ள ஆக்கங்களும், அர்த்தமுள்ள அழகிய அட்டைப் படமும் இம்மலரை அலங்கரிக்கின்றமை வரவேற்கத்தக்கது.

உலகத்தார் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்த "சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி" அம்மையார் அவர்களின் நூற்றாண்டு மலரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிட சகல வழிகளிலும் பாடுபட்ட அனைத்து உள்ளங்களுக்கும், நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர்க்கும், எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் பகிர்வதுடன், இம் மலர் அனைவர்க்கும் வாசனை பரப்பிட எனது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**திரு. மருதலிங்கம் பிரதீபன்**
*அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்*
*யாழ்ப்பாண மாவட்டம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை

# ஆதுலர்க்குச் சாலையும் அறுசமயத்துவர்க்கு உணவும் வழங்கிய அன்னை



நான் மருத்துவ மாணவனாக வருவதற்கு முன்பே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரையும் அவர் ஆற்றி வரும் அறப்பணிகளையும் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றைய காலகட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காகத் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் உதவிகளை வழங்கி இருக்கின்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவனாக இருந்த காலத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை மேலும் அறியும் வாய்ப்புக் கிடைத்தது. பல்கலைக் கழக மாணவர்களது கல்விக்காகத் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வழிகாட்டலில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் தொடர்ச்சியாக உதவி வருவதை அறிந்து கொண்டேன்.

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது மறைவை அடுத்து, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வருடந்தோறும் சனவரி 7 ஆம் திகதி அம்மையாரின் பிறந்த நாள் நினைவாக யாழ். போதனா வைத்திய சாலைக் கும் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் நன்கொடைகளை வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வழிகாட்டலில் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களது வேண்டுகோளை ஏற்று இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சத்திரசிகிச்சைக் கூடத்துடன் இணைந்த கண் சிகிச்சை விடுதி 2001.03.20 அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

மருத்துவ சேவைக்கும் சமூகத்தில் நலிவுற்றோருக்கும் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் ஆரம்பித்து வைத்த பணியானது அவரது மறைவின் பின்னரும் தொடர்கின்றது. அம்மையாரின் மறைவை அடுத்து கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவராக இருந்து ஆலய தேவஸ்தான நிர்வாக சபையின் ஒத்துழைப்புடன் அம்மையார் ஆற்றிய சமுதாயப் பணிகளை சிறந்த முறையில் முன்னெடுத்து வருகின்றமை நம் அனைவருக்கும் முன்னுதாரணமாகும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டவேளையில் வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்ட போது எமது வேண்டு கோளை ஏற்று அவசர சத்திர சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்துகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்ய துர்க்காதேவி தேவஸ்தானமும் வேறு பல நிறுவனங்களும் தனி நபர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமக்கு உதவி இருக்கிறார்கள்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் இன்று அறம் வளர்க்கும் ஆலயமாக விளங்க வித்திட்டவர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களே. அம்மையார் ஆரம்பித்த அறப்பணி இன்று பெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் வண்ணம் சமூகத்துடன் இணைத்து சிறந்த முறையில் பரிபாலனம் செய்து, எமது சமுதாயத்தில் மறு மலர்ச்சியை ஏற்படுத்திய சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்களது நூற்றாண்டில் அம்மையார் ஆற்றிய அறப்பணிகளை நினைவுகூர்ந்து வெளி வரும் நூற்றாண்டு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உளம் மகிழ்கின்றேன்.

**மருத்துவக் கலாநிதி த. சத்தியமூர்த்தி**
பணிப்பாளர்
போதனா மருத்துவமனை
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



# தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூற்றாண்டு விழா நினைவுகள்

சிவத்தமிழ்ச் செல்வி என எல்லோராலும் விழிக்கப்படும் அம்மா அவர்கள் எம் எல்லோருக்கும் ஒரு உன்னத வழிகாட்டி சமூகத்தலைவர். அவருடைய வாழ்க்கை நம் எல்லோருக்கும் எமது வாழ்க்கையை திட்டமிட்டு வாழ்வதற்கு ஒரு முன்னுதாரணம். இன்றைய உலகில் எமது சமூகம் மட்டுமில்லாது உலக சமூகமும் சிறந்த சமூகத் தலைவர்களின் வழிகாட்டுதல் கிடைக்கப் பெறாமல் தட்டுத் தடுமாறுவதை அவதானிக்க முடிகிறது.

நாம் எல்லோரும் இவ்வையகத்தில் பிறப்பதற்கும் எமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதற்கும் பல வழிகாட்டுதல்கள் தேவைப்படுகின்றன. அம்மாவின் வாழ்க்கை பலருக்கும் சமூகவாழ்வியலிற்கான வழிகாட்டுதலாக அமைகின்றது. தொழில்களில் எல்லாம் புனிதமான ஆசிரியத் தொழிலை ஆரம்பமாக கொண்ட அம்மையார் தன்னை வளப்படுத்தியது மட்டுமின்றி சமூகத்தை கட்டியெழுப்ப உதவிசெயும் தூணாக தன்னை விருத்தி செய்தது மட்டுமின்றி சமூகத்தலைவராக வளர்ந்து பலரின் வாழ்க்கைக்கு ஒளியூட்டியவர். அது மட்டுமின்றி தனக்குப் பின்னர் தனது பணிகளை திறம்பட செயற்படுத்தக் கூடிய தலைவர்களை உருவாக்கிவிட்டுள்ளார். இச்செயற்பாடானது அவரின் சமூகம் பற்றிய தெளிவான பார்வையையும் தலைமைத்துவ பண்பையும் எடுத் துக்காட்டுகிறது. தற்காலத்தில் எமது தலைவர்கள் எல்லோரும் அவருடைய முன்னுதாரணத்தை பின்பற்றினால் எமது சமுகத்தின் வளர்ச்சி உன்னதமாக அமையும்.

அம்மையாரின் வாழ்கை காலத்தில் எமது சமூகமானது பல்வேறு எதிர்பாராத சொல்லொணா துன்பங்களை எதிர்கொள்ளவேண்டிஏற்பட்டது. இதன்போது அம்மையார் அவர்கள் பலபுதிய செயல்திட்டங்களை உருவாக்கி சமூகம் அவற்றை எதிர்கொண்டு கரைசேர உறுதுணையாக இருந்தார். அவரின் சிந்தனையின்பாங்காக ஆலயங்களை சமூகப்பணியில் ஈடுபடுத்தும் கருப்பொருளை செயலாக்கம் செய்ததன் ஊடாக ஆலயங்களின் உண்மையான வகிபாகத்தை நம் எல்லோருக்கும் ஏற்படுத்தினார்.

சைவசமயப் பாரம்பரியத்தில் பல மாற்றங்கள் பத்தொன்பதாம் இருபதாம் நூறாண்டுகளில் ஏற்பட்டன. இதில் ஆறுமுகநாவலர் தொடக்கம் பல தலைவர்கள் சமூக கலாசார வளர்ச்சியுடன் கூடிய சைவசமய விருத்தியை மக்களிடம் எடுத்து செல்வதை சமூக ஈடேற்றத்திற்கான வழியாகக் கொண்ட செயற்பாட்டு வழிமுறைகளை ஏற்படுத்தினார்கள். அவ்வழியை தொடர்ந்து எடுத்துச்செல்லும் பெண்தலைவராக அம்மையார் செயற்பட்டார். பெண்கள் பற்றிய பல தவறான கருத்தியல் புரையோடிப்போய் இருந்தகாலத்தில் அம்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரின் முன்மாதிரி பல பெண்களின் வாழ்விற்கு ஒளியூட்டியது மட்டுமின்றி பலரின் வாழ்வுக்கு வழிகாட்டுதலாக அமைந்தது.

இவ்வாறான உன்னத மனிதநேயம்முள்ள அம்மையாருடன் சேர்ந்து வேலை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது எனது வாழ்நாளில் எனக்கு கிடைத்த பல பாக்கியங்களில் உன்னத பாக்கியமாக கருதுகிறேன். நான் 1999 ஆம் ஆண்டு மருத்துவ பீட மாணவர் ஒன்றியத் தலைவராக செயற்பட்ட காலத்தில், அப்போதைய யுத்தகாலத்தில் பல மருத்துவ மாணவர்கள் தமது கல்வியை சொல்லொணாத் துன்பத்தில் கற்கவேண்டி இருந்தது.


முக்கியமாக வன்னி மற்றும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்களுக்கு தமது பெற்றோரிடம் தொடர்பை ஏற்படுத்தி தமக்கு தேவையான உதவியை பெற்றுக் கொள்வது மிகவும் சிரமமானது. இவர்களின் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்து உதவிசெய்யுமாறு கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களிடம் சென்று கேட்டபொழுது அவர் அம்மையாரிடம் அழைத்துச்சென்று கதைத்தபொழுது அம்மையார் உடனடியாக முன்வந்து முதல் 10 மாணவர்களுக்குத் தேவையான நிதி மற்றும் பொருள் உதவிசெய்ய முன்வந்தார். இச்செயற்பாடானது மருத்துவ பீட மாணவர்களிற்கு பேருதவியாக அமைந்தது மட்டுமல்லாது இது பின்னாளில் பலர் இவ்வாறான பணிகளை செய்வதற்கான முன்மாதிரியாக அமைந்தது. இதன் பின்னர் அம்மையாரின் அறக்கட்டளை ஊடாகப் பல உதவிகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அக்காலகட்டத்தில் நான் யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் சேர்ந்து செயற்பட்டபோது, அம்மையார் ஒரு பெண் சமய சமூகத் தலைவராக மாவட்ட குழுவின் அங்கத்தவராக செயற்பட்டு எம்மை சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக வழிகாட்டியதுடன் சிறுவர் துஸ்பிரயோகத்துக்கு உட்பட்டவர்கள் வாழ்வை புனருத்தாரணம் அளித்து மற்றவர்கள் போல் வாழ வழிவகை செய்தார். இவருடைய கண்டிப்புடன் கூடிய அன்பும் கருணையும் எம்மை சமூகப்பணியில் வளர்த்துக்கொள்ள பேருதவியாக அமைந்தன. அம்மா அவர்கள் ஒரு சிறந்த ஆசானாக, சமயச்சொற்பொழிவாளராக, சைவக் கோயில் பரிபாலகராக, சமூகத் தொண்டுகளின் தலைவியாக, பெண்களுக்கு முன்னுதாரணமாக, இளையவர்களுக்கான வழிகாட்டியாக தனது உன்னத வாழ்வினூடாக எம்மெல்லோருக்கும் முன்னுதாரணத்தை ஏற்படுத்தி சென்றுள்ளார்.

இவரை பற்றிய சில ஆய்வுகள் மக்களிற்கு கிடைக்கூடிய வகையில் உள்ளன. இவற்றை நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் முழு உலகிற்கும் தெரியப் படுத்தக்கூடிய ஆவணப்படுத்தல் மற்றும் இவரின் பணிகளை ஒட்டிய பணிகளினை பற்றிய கிரமமான அறிவுசார் கலந்துரையாடல்கள் எதிர்கால சந்ததிகளை வழிபடுத்தி அவர் தடங்களை பின்பற்றி நல்வழி வாழ வழிசமைத்தல் சால சிறந்தது.

**பேராசிரியர் இராசேந்திரா சுரேந்திரகுமாரன்**
பீடாதிபதி
சமூகமருத்துவத்துறை பேராசிரியர்
மருத்துவப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# மரபுநிலை மாறாத சைவப்பெண்ணாக நின்று

## புதிய சிந்தனைகளைச் செயற்படுத்தியவர்

வேதங்கள் என்றும் நினைவு கூரும் ஒரு மனிதனது வாழ்வை "நூறாண்டு காலம் சதா ஆயுள் உடையவனாகவும், எல்லா இந்திரியங்களும் போற்றும் வகையினும், உணர்வுகள் தோறும் வாழ்பவனாக இருப்பானாக!" எனப் போற்றும் வகையில் நூற்றாண்டு விழாக்காணும் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டி அவர்களது நினைவு நாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி எனும் நிலையில் ஆசிச்செய்திகளை வழங்குவதனையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது மரபில் சைவமும் தமிழும் மறுமலர்ச்சி கண்டது. மறுமலர்ச்சி கண்ட சைவத்தமிழ் மரபிற்கு புதிய பல முகங்களை மலரச் செய்த பெருமை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு உண்டு. சிறந்த கல்விப் புலமையாளராக, மரபுநிலை மாறாக சைவப்பெண்ணாக, சைவத்தின் காவலராக, சைவப் பெண்களின் குலவிளக்காக, சைவத் திருக்கோயிலின் காவலனாக, சைவத்தின் கலங்கரை விளக்கமாக எனப் பல்வேறு முகங்களூடாகச் சைவசமூகத்தை புதிய சிந்தனை முகிழ்பிற்கு வித்திட்டு வழிவகுத்த பெருந்தகை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை நிலைக்களனாகக் கொண்டு சிறந்த தலைமைத்துவப் பொறுப்பை அலங்கரித்த சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, திருக்கோவில் நிர்வாகம் சைவ சமுதாயத்தை வளம் குன்றாது தாங்கிக் கொள்வதற்கு இத்தகைய சேவைகளையெல்லாம் முன்னெடுக்க வேண்டும் என, புதிய புதிய சிந்தனைகளை பழமையான மரபு வழுவாது செயற்படுத்தி வெற்றிகண்டவர். செயத்திறன் மிக்க செயற்பாடுகளை ஒழுங்கமைத்ததுடன் உலகம் போற்றும் வகையில் ஒழுங்கமைக்கப் பெற்ற அவரது நெறிமுறை போற்றுதற்குரியது.

தேவிமகாத்மியம் போற்றுகின்ற தேவியின் பேதங்கள் காலந்தோறும் காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய பரிமாணங்களைப் பெற்றுக் கொள்ளும் என்பதற்கு, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவியின் மகிமை குன்றாத பேரருளும், தெய்விக அருளும் பெருகும் வகையில் தகுந்த அத்திவாரத்தையிட்ட சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் மங்காப்புகழ் என்றும் நிலைக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலை கொண்டுள்ள ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரனை வேண்டி, நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**திரு. சர்வேஸ்வரன் குருக்கள் பத்மநாபன்**
பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# தமிழ்ச் சமூகத்தில் சமய, சமூகப்பணியில் சரித்திரம் படைத்த ஒரு தாயும் தாய்த்தெய்வமும்

எங்கள் சமய, சமூக வரலாறு கண்ட உன்னத ஆளுமையான துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அம்மா நூற்றாண்டினைக் கொண்டாடும் இவ்வேளை பெறுமதியானது.

தாய்த்தலைமைக் கோயில் என்ற புதிய வரலாற்றுடன் தாயன்பின் கனிவாக, யாருமற்ற பிள்ளைகளின் தாயாக, எங்கள் தாய்த்தெய்வக் கோயிலை சமூகக் கோயிலாக்கிய அவரின் பணி நீள நினைந்து போற்றப்படுகின்றது. இந்த வகையில் 'சமூகப்பணியில் ஒரு தாயும் தாய்த்தெய்வமும்' (**A Mother and A Mother Goddess in Social Work** )என்ற தலைப்பில் தஞ்சைப்பல்கலைக்கழக ஆய்வரங்கு ஒன்றில் நான் வழங்கிய கட்டுரையே பின்னர் 'துர்க்கையின் புது முகம் ' (யு நேற குயஉந ழக னுரசபய )என்ற தலைப்பிலான எனது கலாநிதிபட்ட ஆய்வாக விரிவு கண்டமை இவ்வேளை நெஞ்சிலே மேலெழுகின்றது.

அன்னையின் சமூகப்பணியின் மகத்துவத்தினை உலகுக்கு எடுத்துக் கூறும் வண்ணம் எங்கள் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவம் பெற்றது. நாவலர் பெருமான் வழியிலான ஆழ்ந்த சமய, மொழிப் புலமை மிக்க சமூகத் தொடர்பாடல், அர்ப்பணிப்பான சமூக உணர்திறனான தலைமைத்துவம் எனும் வல்லமையின் வரமாக தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயமானது எங்கள் பண்பாட்டின் பெருங்கோயிலாக நிமிர்ந்துள்ளது.

அன்னையின் அடிச்சுவட்டில் அவரது பணிகளை மென்மேலும் அழகாக்கும் அவர் வாரிசான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் தலைமையில் அன்னையின் நூற்றாண்டு விழாவும் மலரும் வசப்படுகின்றமை பெருமகிழ்ச்சி தருகின்றது.

தமிழ்ச் சமூகத்தில் சமய சமூகப்பணியில் சரித்திரம் படைத்த ஒரு தாயையும் தாய்த்தெய்வத்தையும் நினைவு கூரும் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியீட்டுக் குழுவினரையும் அன்னையின் மேலான நினைவுகளைக்காக்கும் அனைவரையும் எல்லையிலா அன்புடன் வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் கலாநிதி என் .சண்முகலிங்கன்**
முன்னாள் துணை வேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# அன்னை சிவத்தமிழ்ச் செல்வி காத்த அறங்கள் ஓங்கி வளர வேண்டும்

தெல்லிப்பழை எனது தந்தையின் பரம்பரை வாழ்ந்தவூர். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களை யான் மகாஜனாக் கல்லூரி மாணவனாக விளங்கிய காலத்தில் நன்கு அறிவேன். அன்னாரின் தூய ஆத்மீகப் பணி, அறப் பணிகள் பற்றி சர்வதேசமும் நன்கு அறியும். அவுஸ்திரேலியாவில் அம்மையாரின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் பலர் வாழ்கிறார்கள். ஆண்டுதோறும் துர்க்கா புரம் மகளிர் இல்லத்திற்காக அபயகரம் அறக்கட்டளை நடாத்தும் விழாக்களில் தொடர்ந்து நாம் பங்குபற்றி வருகின்றோம். அன்னையின் சமூகப் பணிகள் ஏனையோருக்கு முன்மாதிரியானவை. அவர்களின் நூற்றாண்டு ஜனன விழா குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

அம்மையாரின் பணிகளைத் தொடர்ந்து சிறப்பாக முன்னெடுத்து வரும் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் நிர்வாக சபையினர் அனைவரும் நன்றிக்குரியவர்கள். நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற சிட்னி முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.

**மருத்துவர் வி. மனோமோகன்**
இருதய வைத்திய நிபுணர்
சிட்னி
அவுஸ்திரேலியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# தேயத்தோடொழுகிச் சைவச் சேவைக்கு முன்னுதாரண மாகினை - தங்கம் நீ அன்னையே!

வானுயர்ந்த கோபுரம் போலாம்
வையகத்தில் உயர்ந்து நிமிர்ந்தனை
தேனுடன் பால்கலந்து தித்திக்கத்
தெய்விகப் பிரசங்கம் செய்தனை
நானெனும் அற்ப தன்முனைப்பின்றியே
வானகத்திலே நின்று ஒளிதரும்
வாழ்வு பெற்றனை வாழி எம் தங்கம்மா!

தூயசிந்தையும் துணிவும் தொடரநீ
சூழ்ந்து பற்பல தொண்டுகள் செய்தனை
நேயத்தோடு நீ நிறுவிய யாவுமே
நீண்டு நின்று நிலைத்திடல் காண்கிறோம்.
தேயத்தோடொழுகிச் சைவச் சேவைக்கு
சேரும் முன் உதாரணம் ஆகினை
தாயவள் தங்கம்மாவின் தருமங்கள்
தரணி மீதனில் நின்று நிலைக்குமாம்.

நீறுபூத்த நெற்றியி னோடுநீ
நின்றகோலம் எம்நெஞ்சில் நிலைக்குமே
சோறளித்து ஏழைகள் வாழ்ந்திடச்
சோர்விலாது அரும்பணி ஆற்றிநற்
பேறுபெற்ற அடியவர் உமைத்தொழ
ஆறுநற் திருமுகனைத் தந்துநீ
அன்னை பாதம் அமர்ந்திருக்கின்றனை

ஆளுமைக் கொரு தங்கம்மா அன்பில்
ஆளுகைக் கொரு தங்கம்மா அறம்
சூழுகைக் கொரு தங்கம்மா பக்தி
வாழுகைக் கொரு தங்கம்மா அதர்மம்
வீழுகைக் கொரு தங்கம்மா சைவம்
வாழுகைக் கொரு தங்கம்மா என
வாழுகின்ற தங்கம் நீ அன்னையே

**பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா**
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# தெய்வத் திருமகள் அம்மா

தெய்வத் திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் நூற்றாண்டு விழா மலரிலே அவரைப்பற்றி எனது நினைவு வங்கியில் நிரந்தர வைப்பில் இடம்கொண்ட சிலவற்றை மீட்டுப் பதிவிட இறையருள் கூடிநிற்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

அம்மா அவர்கள் நாவலர் வழியில் தமது சமயப் பிரசங்கங்களை வழங்கிய காலத்திலிருந்து அவர்மீது பக்தி நிறைந்த அன்புக்குரியவனாக வணங்கி வந்துள்ளேன். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பிக்க முன் ஏற்பாடுகளை நான் செய்துவந்தவேளை, அவரிடம் ஆசீர்வாதம் வேண்டி அவரை நாடிச் சென்றேன். வேறு ஏதோ பணியில் ஈடுபட்டிருந்த அவர் அதை இடைநிறுத்தி என்னை அழைத்து ஆசீர்வதித்து, அம்பாளிடம் அழைத்துச் சென்று விஷேட அர்ச்சனை செய்து முழு ஆசீர்வாதம் பெற வழி தந்தார்.

“எல்லாம் நல்லபடியாக நடக்கும். கல்வியியற்கல்லூரி எமக்கு மிக அவசிய மானது. உங்கள் முயற்சி அனைத்தையும் நானறிவேன். வெற்றி கிடைக்கும். சென்றுவாருங்கள்.” என்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். அங்கே அவர் கண்களில் தெரிந்த ஒளியும், முகத்தில் காணப்பட்ட மலர்ச்சியும், தேன் அமுதமான வார்த்தைகளும் எனக்கு உற்சாகத்தைத் தந்தன.

அவர் வாழ்த்துப்படி கல்லூரி அமைந்தது. பின்நாளில் ஒரு நாள் கல்லூரிக்கு நேரடியாக வருகை தந்து எல்லோரையும் வாழ்த்தி மகிழ்ந்தார். நாமும் மகிழ்ந்தோம். கல்வியின் சிறப்புணர்ந்தவர் அவர். அவர் பாதம் எம்மண் தொட்டதால் உயர்வடைந்தோம். சிறிது காலத்துள்ளே கல்லூரி நிலம் முழுவதும் கட்டடங்களால் நிறைந்தன. முழு நிறை வளாகமாயிற்று.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில், அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் அம்மாவுக்கு “தெய்வத் திருமகள்” எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்கள். பெருமிதம் கொண்டோம். அம்மா தமிழ்மொழியையும் சைவ சமயத்தையும் தமது இரு கண்களாக நேசித்தவர். ஆலய வழிபாட்டில் பெறுமதியான ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வழிகாட்டி நின்றார்.

முதல் பெண்மணியாக கோவிலொன்றை நிர்வகித்து, அவரால் நிர்வகிக்கப்பட்ட தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் அந்த ஒழுங்குகளை இறுக்கமாகவும் அதே நேரம் இசைவாகவும் பின்பற்ற வைத்தார். அவற்றின் பெறுமதி உயர்வாகி பரவலாயிற்று. சைவத்தின் மேன்மை சிறப்புற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப் பிரசங்கங்கள் செய்ததிலும் முதல் பெண்மணி என்ற இடம் கொண்டவர் இவரே. இவர் சொற்பொழிவுகளால் சமூகத்தில் நல்விழுமியங்கள் செறிய வாய்ப்புக்கள் கிடைத்தன.

தமிழர் பண்பாட்டினைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் அம்மா காட்டிய ஆர்வம் அலாதியானது. ஆலயங்கள் சமூக நிறுவனம் என்ற வகையில் மனிதாபிமான சமூகப் பணிகளை ஆற்றவேண்டும் என்ற உணர்வை வளர்த்து அதற்கு முன்மாதிரியாகவும் இருந்தவர் அம்மா அவர்களாகும். இத்தகு சமூக நல நோக்குடைய அம்மா அவர்களின் நூறாவது ஆண்டு அகவைத் திருநாளை நினைவு கொள்வது சாலச் சிறந்த செயலாகும். எமது சமூகம் நன்றி மறவாக் குணம் கொண்டது என்பதை மீண்டும் நிரூபித்துக் கொள்கின்றது.

இந்தச் செயற்பாடுகளுக்கு காரணமான அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன். சமூகத்தை நேசித்தவர்களும், சமூக சேவையாளர்களும், புனிதமான வழிகாட்டிகளும் என்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர்களே. அந்த வரிசையில் அம்மாவும் எம்முள் இருப்பார், எம்முடன் இருப்பார்.

**ஓம் சாந்தி.**

**முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்**
அவுஸ்திரேலியா,
ஸ்தாபகப் பீடாதிபதி
கோப்பாய் கல்வியியற்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# முன்னுதாரணமான உயர் பெண்ணாளுமை அன்னை சிவத்தமிழ்ச் செல்வி

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அகவை நூற்றாண்டு காலத்தில் அவர் பற்றிச் சிந்திக்க கிடைத்த இந்த வாய்ப்பு மிகப் பெறுமதியானது. இலங்கையின் கல்விப் புலத்திலும் சமூகப் புலத்திலும் ஆளுமை செய்த பல தமிழ்ப் பெண்ணாளுமைகளில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முதன்மையானவர். அவர்களது வாழ்வும் வழியும் பலருக்கு முன்னுதாரணமாகவிருந்தது. குறிப்பாக ஒரு பண்பாட்டு இறுக்கம் கொண்ட சமூகத்தில் இருந்து தலைமை ஏற்கும் சத்தியாக ஒரு பெண் நிமிர்ந்து வருவது என்பது இலகுவில் சாத்தியமற்றதொன்று. ஆனால் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் அதனைச் சாதித்துக் காட்டினார்.

அவரது தலைமைத்துவப்பாங்கும் சவால்களைத் தாண்டும் தைரியமும் அவருக்குப் பின்னேயும் அவரது காலத்தில் சமாந்தரமாயும் சமூகப் புலத்திலும் கல்விப் புலத்திலும் தலைமை வகித்த என்னைப் போன்ற நம் தமிழ்ப் பெண்களுக்கு மிகப் பெரும் முன்னுதாரணமாகவிருந்தது. போர்நெருக்கடியான காலப்பகுதிகளில் அவருடன் இணைந்து செயற்பட எனக்கும் வாய்ப்புக் கிட்டியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் பீடாதிபதியாக நான் பணியாற்றிய 2000ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் மிகுந்த நெருக்கடிகளைப் பல்வேறு வழிகளிலும் சந்தித்தோம். குறிப்பாக வளப்பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடிகள், ஊரடங்கு நடைமுறைகள் எனப் பல வழிகளிலும் சவால்கள் எம்மைத் தொடர்ந்து அழுத்திய வண்ணமிருந்தன.

சவால்களைச் சந்தித்தபோதும் மருத்துவ மாணவர்களின் கல்வி இடையறுந்து போய்விடக்கூடாது என்பதில் நாம் அதிக கரிசனையுடன் இருந்தோம். அந்தத் தருணங்களில் எமது சவால்களில் சிலவற்றைத் தீர்த்துவைத்த பெருமை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கும் அவர் சார்ந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கும் சேரும். குறிப்பாக பொருளாதார நெருக் கடிக்கு முகம் கொடுத்த மாணவர்களுக்கு மாதாந்த நிதியுதவி வழங்குவதில் அவரது பங்களிப்பு இருந்தது. அத்துடன் அவரது பெயரால் ஒரு புலமைப்பரிசிலும் மருத்துவப் பீடத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் மரியாதைக்கும் அன்புக்கும் பாத்திரமான வர்களுள் ஒருவராக நான் இருந்திருக்கின்றேன் என நினைக்கும் போது மனம் பெருமையுறுகின்றது. அவரது அழைப்பின் பெயரிலும் அவரது மறைவுக்குப் பின்னர் அவர் சார்ந்த நினைவு நிகழ்வுகளிலும் பல தடவைகள் விருந்தினராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கொண்டிருக்கின்றேன். அறக்கொடை வழங்கும் வைபவங்களில் கலந்து அதற்கு சாட்சியமாக இருந்திருக்கின்றேன். அவருடன் பழகிய காலங்கள் உளம் சார்ந்தும் ஆன்மீகம் சார்ந்தும் நாம் நம்மை வலுப்படுத்திய காலங்கள். இன்று அவரது ஜனன நூற்றாண்டில் அவரது பெருமைகளைப் பேசக்கிடைப்பது இன்னொரு வரலாற்றுச் சந்தர்ப்பம்.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வியினதும் அவரது வாழ்வினதும் மகோன்னதம் என்றும் நம் தமிழ்ச் சமூகத்தின் பெருமையின் குறிகாட்டியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இன்று அவரது பணிகளைத் தொடரும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் அவரோடு இணங்கிச் செயற்படும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தினரும் அன்னையின் கடமைகளைத் தம் கரமேற்றுச் செயற்படுகின்றார்கள். அன்னை அவர்கள் தோன்றாத் துணையாய் இருந்து அவர்களுக்கு வழிகாட்டுகின்றார்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது நாமமும் பெருமையும் தமிழ் கூறும் நல்லுலகில் மாத்திரமன்றி உலகம் முழுவதும் நீள நிறைந்து பெருமை கொள்ள இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம்**
முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தலைவர் - சைவமங்கையர் கழகம் யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



# ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்ட சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார்

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற ஆன்றோர் வாக்கினை தன் வாழ்நாளில் நிரூபித்துக் காட்டிய ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தெல்லிப்பழை பிரதேசத்திற்கு பெருமை சேர்க்கும் தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பெருந்தலைவராகவும், ஆன்மீக அன்னையாகவும் விளங்கிய தாயாரின் வாழ்க்கைப் பயணத்தில் தனது பெரும்பங்கினை பிற உயிர்களின் நல்வாழ்விற்காக செலவிட்டு, உத்தமியாக வாழ்ந்து காட்டினார். தற்கால நவீன ஊடகங்கள் தோன்றியிருக்காத காலத்தில் மேடைகளிலும் வானொலி ஊடாகவும் தனது அற்புதமான சொற்பொழிவுகள் ஊடாக நமது சமூகத்தினை சீர்படுத்தினார்.

ஆலயங்கள் தனித்து வழிபாட்டு நிலையங்களாக மட்டுமன்றி அறப்பணி யாற்றுகின்ற சேவை நிலையங்களாகவும் பணியாற்ற முடியும் என்பதை இந்த உலகிற்கு நிரூபித்துக் காட்டி, எண்ணற்ற அறப்பணிகள் செய்து, என்றும் எங்கள் மனதில் நீங்காத பெருந்தாயாக நிலைத்து நிற்கும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் புகழ் என்றும் மங்காது.

நமது சமூகத்தில் இறைவழிபாட்டை மேம்படுத்தும் வழியில் யாழ்ப்பாணத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் எங்கள் அன்னைக்கு முதன்மையான பங்குண்டு. "பண்டிதை" என அழைக்கப்பட்டு வந்த அன்னை சிவத்தமிழ்ச் செல்வி **1950 - 60**களில் இலங்கை வானொலியின் "மாதர் பகுதி" உட்பட பல இடங்களில் சமயச் சொற்பொழிவுப் பணிமூலம் சமய வளர்ச்சிக்குத் தனது தொண்டு செய்யும் வகையில் தனது சமயப்பணியைத் தொடங்கி தேவியின் பாதம் சென்றடையும் வரை ஆன்மீக அறப்பணியாற்றினார்.

**31** ஆண்டுகளுக்கு மேலாக தனது ஆசிரியப் பணி மூலம் நல்ல மாணவர்களை நமது சமூகத்தில் உருவாக்கியதுடன் இவரது எழுத்துக்கள் மிகப்பெறுமதியான வையாக சமூகத்தில் போற்றப்பட்டன. அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி காட்டிய வழியில் நாங்கள் பயணித்து போற்றுதலுக்குரிய அன்பும் அறனும் நிறைந்த சமூகத்தினை உருவாக்குவதற்காக நாங்கள் பாடுபட வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**திருமதி. சிவகெங்கா சுதீஸ்னர்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம் - வலி வடக்கு
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# துர்க்கா துரந்தரி பெண் தலைமைத்துவத்துக்கு முன்னுதாரணமானவர்

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி என்று போற்றிப் புகழப்படும் மறைந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத் தலைவரின் 100 ஆவது அகவை நிறைவினையொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதனை ஒரு பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் அவருடன் பழகி உறவாடினோம், அவர் ஆற்றிய செயற்கரிய செயல்கள் கண்டு அவர் மீது பெருமதிப்புக் கொண்டு ஈர்க்கப்பட்டோம் என்பதனை நினைக்கவே பெருமிதமாக உள்ளது.

எனது சிறு வயதுக் காலத்திலேயே அன்னாரின் சமயச் சொற்பொழிவுகளால் கவரப்பட்டேன். பின்னர் அவர் துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகப் பொறுப்பினை ஏற்றபோது, இலங்கையில் ஆலய நிர்வாகத்துக்குத் தலைமை தாங்கும் முதல் பெண்மணியாகக் கண்டு வியந்து மகிழ்ந்தேன். மேலும் அவர் துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தில் ஆலய நிர்வாகம், ஆலயங்களை நிர்வகிப்பது மாத்திரமல்ல அது சமுதாயப் பணிகளிலும் பங்குகொள்ள வேண்டும் என்ற புரட்சிகரமான மாற்றத்தினை விதைத்தமை வியந்து போற்றபட வேண்டியதாகும்.

சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்தநாள் அறக்கட்டளை நிறுவப்படும் போது அதில் பங்காளியாக இணைந்து அவருடன் செயலாற்றக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அறக்கட்டளையின் மாணவர்களுக்கான முதலாவது நிதி வழங்கல் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்ற போது அவருடன் அப்போர்க்காலச் சூழலில் பயணம் செய்தமை இன்றும் என் நினைவலைகளை விட்டு அகலவில்லை. அன்னையின் சேவைகள், அவர் விட்டுச் சென்றுள்ள அறப்பணிகள், என்றும் அவரை எம் நினைவில் வைத்திருக்கும்.

நன்றியுடன்

**திரு. வை. ஈழலிங்கம்**
பணிப்பாளர்
அவுஸ்ரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
அவுஸ்ரேலியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை


# சைவ மக்களின் அபிமானம் பெற்ற அன்னை

சைவ மக்களின் அபிமானம் பெற்ற மகத்தான அன்னை சிவத்தமிழ்ச்செல்வி. அம்மையாரின் நூற்றாண்டு விழா குறித்து வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அம்மையாரை எனது சிறுபராயத்திலேயே நன்கு அறிவேன். வடமராட்சியில் பல ஆலயங்களில் அம்மையாரின் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றமை மறக்க முடியாதது. லண்டனிலும் ஏழு வாரங்கள் தங்கியிருந்து சமயச் சொற்பொழிவு ஆற்றி லண்டன் வாழ் மக்களை நெறிப்படுத்தியவர் அம்மையார். சிறந்த ஆசிரியராக, ஆலயத் தலைவராக விளங்கிய அம்மையாரோடு பழகும் வாய்ப்புக்கிட்டியது. அம்மையாரது சகோதரி எனது மனைவியின் தாயாரோடு நீண்ட காலம் ஒரே பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றியமையால் அவர்களின் குடும்ப நட்பும் எமக்குண்டு. லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் அம்மையாரை நினைவு கூர்ந்து பல விழாக்களை லண்டனில் நடத்தியமை பலரும் அறிவர். அம்மையாரின் நூற்றாண்டு விழா இனிதே நடைபெற நடராசப் பெருமானை வேண்டி அமைகின்றேன்.

**திரு. எஸ். பாலசிங்கம்**
கணக்காளர்
புரவலர்
இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்தின் மீது அன்பு கொண்டவர் சிவத்தமிழ்ச்செல்வி

ஐரோப்பாவில் வாழுகின்ற தமிழ் சமூகத்தின் பெருமதிப்புக்குரிய அன்னையாகத் திகழ்ந்தவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். புலம் பெயர் தேசத்திலுள்ள ஆலயங்கள், சைவ முன்னேற்றச் சங்கங்கள், ஆன்மிகச் சஞ்சிகைகள், எனப் பலவற்றின், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று மதவேறுபாடுகள் இன்றி, அன்னை ஆற்றிய மனிதநேயப்பணிகள் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களை தன்பால் ஈர்த்தன என்றே சொல்லவேண்டும். அவர் தாய்மண்ணில் மக்கள் பணி மேற்கொண்ட காலம், இன்று போல் அல்ல என்பது யாவரும் அறிந்ததே.

ஒரு தாய் குழந்தைகளைக் காப்பது போல் தன்னிடம் வாழ்ந்த பிள்ளைகளைக் காத்தார். இன்று போல் சமூக ஊடகங்கள், வட்சப், வைபர், ஃபேஸ் புக், என்று எதுவும் பெரிதும் பாவனை அற்ற காலம். புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழ் உறவுகளுக்கு, தொடர்பு கொள்ள ஒரே ஊடகம் கடிதம் மட்டுமே. அவர் சொல்லச் சொல்ல அவர் பிள்ளைகள் கடிதம் எழுத, அவர்கள் எழுதிய கடிதத்தை ஒன்றுக்குப் பல தடவை வாசித்து அன்னை ஒப்பமிட்டு அனுப்புவார். எந்த நிறுவனமோ ஆலயமோ, தமிழ் அபிமானிகளோ யார் கேட்டாலும் அவர்களது விபரம் அறிந்து, வாழ்த்துச் செய்தி அனுப்புவார்.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தன்னலமற்ற சேவை அறிந்து, உதவிகளைப் புலம்பெயர் சமூகம் அளிக்கத் தவறவும் இல்லை. அவரது சேவையின் புனிதத் தன்மையானது இன்று வரை தாய் மண்ணில் உள்ள பலதரப்பட்ட அமைப்பு களுக்கும் உதவ அதுவே ஒரு உந்துசக்தியாக அமைந்தது என்று கூறலாம். சிறு தொகையோ பெரும் தொகையோ வழங்கியவர்கள், வழங்காதவர்கள் எவராக இருந்தாலும் தாய் மண்ணை தரிசிக்கச் செல்லும் போது தன்னைச் சந்திக்கவரும் மக்களை இன்முகத்துடன் வரவேற்பார்.

ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. பொதுவாக ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, நலம் விசாரிப்பதும், அவர் தகைமை அறிந்து வாழ்த்துவதும் பண்பு. தன்னைச் சந்தித்தவர் சென்று விட்டால், அதன் பின் அவர் நினைவும், அவர் திறனும், மனத்தை விட்டு நீங்க, தம் அன்றாட வாழ்வில் மூழ்கிடுவர். இது மனித இயல்பு.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களோ, தன் முகத்துக்கு நேரே பேசும் வார்த்தைகள், அவர் சென்று பல மணிநேரத்தின் பின்னும், அவர் பற்றி மக்கள் மத்தியில் கூறி, ஒரு நல்ல எண்ணத்தை விதைப்பதை என் வாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் பல தடவைகள் நான் அவதானித்து இருக்கின்றேன். காலையில் சந்தித்த வரை மாலையில் (செவ்வாய்க்கிழமை என நினைக்கிறேன்) துர்க்கா தேவி பூசை முடிந்தபின் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கும் நற்சிந்தனை உரையில், எப்படியும் தான் காலையில் சந்தித்தவர் நற்குணங்களைப் பகிர்வார். இத்தனைக்கும், காலையில் சந்தித்தவர், அங்கு இல்லாமல் வட மாகாணத்தைத் தாண்டியும் இருக்கலாம்.


முகத்துக்கு நேரே மட்டுமல்ல, முகத்துக்குப் பின்னும் நல்லவற்றை எண்ணு வதும், பேசுவதும் அவர் இயல்பாக இருந்தது. மிகவும் கண்டிப்பானவர் போல் தோற்றமளிப்பார், ஆனால் பழகும் போது கனியாக இனிப்பார். தனக்குபின் யார் தன் சேவையை தொடரவல்லவர் என்பதை சுட்டிக்காட்டாமல், வாழும் காலத்திலேயே பதிய வைத்துப் பாதுகாத்து, பாதை வகுத்து, சுயமாக எழும் பேராற்றல் கொள்ளும் அளவுக்கு, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனை செதுக்கி உருவாக்கினார். அடுத்த தலைமுறைக்கு அன்னை விட்டுச்சென்ற பெரும் கொடை கலாநிதி ஆறு. திருமுருகன் எனலாம்.

2005 ஆம் ஆண்டு அன்னையின் 80வது பிறந்த நாளின் போது, வெற்றிமணி பத்திரிகையானது தன் வெளியீடான சிவத்தமிழ்ச் சஞ்சிகையை, முத்து விழா சிறப்பிதழாக வெளியிட்டு மகிழ்ந்தது. அதுமட்டுமன்றி, தாயகம், ஜேர்மனி, இங்கிலாந்து, கனடா என நான்கு நாடுகளிலும் கொண்டாடியது. இவை யாவும் வெற்றிமணி பெற்ற பெரும் பேறென்பேன்.

உலகெங்கும் பரவி வாழும் நம் சமூகம், வாழும் இடம் எங்கும் ஆலயம் அமைப்ப தோடு மட்டுமல்ல, அந்த ஆலயங்கள் நல்ல பல சமூக நல பணிகளைச் செய்யவும் முன்னோடியாக வாழ்ந்து காட்டியவர் அன்னையவர்களே. இன்றும் அன்னையின் புகழ் மனிதநேயப் பூக்களாக மலர்கின்றன. அவை என்றும் மணம் பரப்பட்டும்.

**திரு. மு.க.சு. சிவகுமாரன்**
பிரதம ஆசிரியர்
வெற்றிமணி பத்திரிகை
சிவத்தமிழ் சஞ்சிகை
ஜேர்மனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# துர்க்காம்பிகையின் அருளை உலகறியச் செய்த அன்னை

"துர்க்கா துரந்தரி" "சிவத்தமிழ்ச் செல்வி" செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூற்றாண்டு தினத்தையொட்டி வெளிவருகின்ற மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் அம்பிகை துர்க்கையின் அருள் கடாட்சமே.

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பல்வேறு பரிணாமங்களைக் கொண்ட ஆளுமை மிக்கவர். முப்பது வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக நாட்டின் பல்வேறு பாகங்களிலும் தனது உன்னத சேவையை வழங்கி தனது பணியில் இறுதிக் காலப்பகுதியில் நீண்ட காலம் எமது கல்லூரியில் சேவையாற்றியமை தெல்லியூர் மண் செய்த பாக்கியமே. அன்னை, சைவத்தையும் தமிழையும் சிறப்பாகப் போதித்தவர் இரு துறைகளிலும் ஆழ்ந்த புலமை மிக்கவர். சைவப்புலவர், தமிழ்ப் பண்டிதையாக தேர்ச்சி பெற்றவர். தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை துறைபோகக் கற்றது மட்டுமன்றி இவை சார்ந்த பதிப்புக்களுக்கு ஆழமான மதிப்புரை வழங்கியவர். எமது கல்லூரியில் அவரிடம் கல்வி கற்ற மாண்புறு மைந்தர்கள் தாம் அன்னையிடம் கல்வி கற்றதை பெருமையாகக் கூறுவதை நான் பல தடவை செவிமடுத்துள்ளேன்.

19ஆம் நூற்றாண்டில் ஆறுமுநாவலரால் சைவசமயம் எவ்வாறு மறுமலர்ச்சி கண்டதோ அதே போன்ற புதிய பரிணாமத்துடன் இன்னோர் மறுமலர்ச்சியை 20 ஆம் நூற்றாண்டில் கண்டதென்றால் அப்பெருமை அன்னையையே சாரும். பன்முகப்பட்ட ஆற்றலும் ஆளுமையும் கொண்ட அன்னை அவர்கள் சிறந்த சொற்பொழிவாளர். ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது போல அவரது சொற்பொழிவும் தங்குதடையின்றிச் செல்லும் என்பது தமிழுலகம் அறிந்த உண்மை. ஈழத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ் மக்கள் அவரது சொல்வன்மையால் கவரப்பட்டவர்கள்.

ஈழத்தில் யாழ்ப்பாணம் பெருமை கொள்வதற்குக் காரணமானவற்றுள் ஒன்று தெல்லியூரில் குடி கொண்டிருக்கின்ற ஸ்ரீ துர்க்காதேவியின் தேவஸ்தானம். வெளியுலகம் அறியாதிருந்த சிறிய ஆலயத்தை உலக இந்துக்கள் பலரும் அறியும் வண்ணம் புதுப்பொலிவுடன் விளங்கச் செய்ததோடன்றியும் அம்பிகையின் அருளாற்றலை உணரச் செய்தவர் அன்னை அவர்களே. ஆலயம் வழிபாட்டிற்கு மட்டுமல்லாது ஆதரவு அற்றவர்களுக்கு அடைக்கலம் தரும் புகலிடமாகவும் அமைய வேண்டுமென்பதற்கு செயல் வடிவம் கொடுத்தவர். நாடு முழுவதும் ஆதரவற்ற பெண் பிள்ளைகள் மிக உயர்ந்த பாதுகாப்புடன் தங்கி மேல் நிலையடையும் நோக்குடன் "துர்க்காபுரம் மகளிர் இல்லம்" என்ற ஆதரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தை அமைத்தமை அவரது சமயப் பணிக்கு மேலான சமூகப்பணியை பறைசாற்றி நிற்கின்றது. இன்றளவும் அப்பணியைப் பின்வந்தோர் சிறப்புடன் தொடர்வது பாராட்டுக்குரியது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற பட்டங்கள் ஏராளம். சிறந்த கட்டுரையாசிரியர், ஆற்றல் மிக்க நூலாசியர் சமூகத்தின் தேவையறிந்து ஓடோடிச் சென்று ஆதரவு அளிப்பவர். யுத்த காலங்களில் கூட பலர் இவ் ஆலயத்தில் அடைக்கலம் புகுவதற்கு வழிவிட்டுக் கொடுத்தவர். இவரது அறப்பணியின் மகத்துவம், ஈழத்தின் ஏனைய ஆலய நிர்வாகத்தினருக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கியமை யாவரும் அறிந்த உண்மை.

நான் இங்கு குறிப்பிட்டுக் கூறிய பணிகள் ஒரு சிலவே. தனி ஒரு பெண்மணியாக நின்று பல்துறைப்பட்ட பணிகளிலும் வியத்தகு சேவையாற்றி அம்பிகை துர்க்கையின் பாதக்கமலங்களில் இன்புற்றிருக்கின்ற அன்னை அவர்களின் நினைவாக வெளிவருகின்ற இந்நூல் உலகெங்கும் அவர் புகழை ஓங்கி ஒலிக்கச் செய்யட்டும் என்று வாழ்த்தி அன்னையின் ஆசிகள் என்றென்றும் எமது கல்லூரியையும் கல்லூரி சார்ந்த சமூகத்தையும் வாழ்வித்துக் கொண்டிருக்க அம்பிகை துர்க்கையின் அருள் வேண்டி நிற்கின்றேன்.

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை"

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

**திரு. தில்லையம்பலம் வரதன்**
அதிபர்
யா/ யூனியன் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# எங்கு பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகின்றார்களோ, அங்கு தெய்வங்கள் மகிழ்கின்றன!

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டிக்காப்பவர்கள் பெண்களே. ஒவ்வோர் இனத்திலும் உருவாகும் கல்விமான்கள், பெரியோருக்குப் பின்னால் ஓர் உந்து சக்தியாக பெண் இருப்பதை வரலாறு கூறுகின்றது. பெண்ணினத்தின் முன்னேற்றம் சட்டதிட்டங்களினாலும் சூழற் காரணிகளாலும் தடைப்பட்டால் அது சமுதாயத்திற்கு பெருங்கேடாக அமையும்.

"யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதா" என்று மனுஸ் மிருதி கூறுகின்றது. அதாவது பெண்கள் மதிக்கப்படுகின்ற இடங்களில் தேவர்கள் இன்புறுகின்றனர்.

ஆலயங்கள் பக்தி மயத்தோடு சைவத்தையும் தமிழையும் அதனுடன் தொடர்பான பண்பாடுகளையும் கலாசார விழுமியங்களையும் வளர்த்தெடுக்கின்றது என்ற எல்லையைத் தாண்டி ஆலயங்கள் சமூகத்தினுள் இறங்கி சமுதாயத்தை விழிப்புணர்வுள்ள, சுயதிறனுள்ள சமூகமாக மாற்ற வேண்டும் என்ற தூரநோக்கு சிந்தனையுடன் சேவை அர்ப்பணிப்புடன் சமூகத்தில் காலடி எடுத்து வைத்த முதலாவது ஆலயம் தெல்லிப்பழை உளுகுடைப்பதியில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்காதேவி ஆலயம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

1982ல் தடைகளைத் தாண்டி இத் தூர நோக்கத்தை நிலைநிறுத்தி ஒரு நிறுவனமாக வளரச்செய்து ஒரு வழிகாட்டியாக அமைந்தவர் தான் எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் ஆவார். ஆதரவற்ற, பொருளாதார ரீதியில் நலிவுற்ற பெண்பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும் என்ற சமூக சிந்தனையுடன் சிவத்தமிழ்ச்செல்வியினால் ஆரம்பிக்கப்பட்டது தான் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற சிறுவர் இல்லம். இது நிறுவனமாக வளர்ந்து தற்போது சைவ ஆன்மீக விடுதிச்சாலையாக பரிணமித்துக் கொண்டிருக்கிறது. தூரநோக்கோடு சிந்தித்து, தாய்த் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்பி சமுதாயத்தின் சவால்களை எதிர்நோக்கும் திறன் பெற்றவர்களாக இங்கு வாழும் பெண் பிள்ளைகள் சமுதாயத்தில் காலடி எடுத்து வைக்கிறார்கள் என்பது ஸ்தாபகருக்கு பெருமை சேர்க்கும் விடயம்.

அன்னாரின் மனதில் தோன்றிய எண்ணமே எமது விருதுவாக்காகும்.
ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.

**Our Moto: See God in the smile of poor**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் 42 வருடங்களுக்கு முன் விதைத்த விதை முளைத்து வளர்ந்து அவரது ஜனன நூற்றாண்டு விழாவில் ஒரு எல்லையைத் தொட்டிருப்பது சமூகத்தில் வாழும் பெண்களின் ஆரோக்கியமான ஒரு அறை கூவல் ஆகும்.

**பயணத்தின் எல்லை**

சுயதிறன் நிறைவுடன் உயர்மனித விழுமியங்களைக் கொண்ட தாய்த்தலைமைத் துவப் பண்புநிலை விருத்திசார் மகளிர் உருவாக்கம்.

## Our vision

**Creation of woman of human values with matriarchal leadership and self-accomplishment.**

**பயணத்தின் பாதை**

தாங்குதிறன், அடிப்படை, காப்பு, அன்பு, கணிப்பு, கல்வி வழங்கப்படுவதன் மூலம் வாழ்வாதார வளம் குறைந்த பெண்பிள்ளைகள் சுயதிறன் நிறைவுத் தேவையைப் பெற்று எதிர்காலச் சமூகச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளும் ஆறுதல் மையமாக உணர்ந்து பயணிப் போம்.

## Our Mission

**We will journey on as a fostering center for achieving the social recognition to the female children lacking livelihood resources by providing base for sustainability, protection, care, respect and education for self-accomplishment to face the social challenges.**

அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தூரநோக்கோடு சிந்தித்து வகுத்த பயணப்பாதை அதாவது எதிர்கால சமூகச் சவால்களுக்கு முகங் கொடுக் கக் கூடிய சமூக அந்தஸ்து பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை யாவருக்குமே ஒரு பெரிய சவாலாக உள்ளது. அன்னை இவ்இல்லத்தை ஆரம்பிக்கும் போது இல்லாத வசதிகள், கல்வி முறை பிள்ளைகளின் எதிர்பார்ப்பு அதனால் அவர்களின் மனோநிலையில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள், புறச்சூழல் தாக்கங்கள் இன்னும் கூறிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் இங்குள்ள பிள்ளை களுக்கும் இப்பயணத்தில் பிள்ளைகளுடன் பயணிக்கும் மற்றும் ஏனைய பிள்ளைகளுக்கும் ஆதரவு கொடுக்கும் சேவையாளருக்கும் சவால்களாக உள்ளன.

தூய்மையான எண்ணத்துடன் ஒரு லட்சியத்தை நோக்கி பயணிக்கும் அன்னை ஆரம்பித்த நிறுவனம் பயணத்தின் எல்லையைத் தொட்டு கல்வியில், பொருளாதாரத்தில், ஒழுக்கத்தில் மேம்பட்டு சுயதிறன் மிக்க பெண்கள் சமுதாயம் உருவாக வேண்டும். இதுவே அவருடைய ஜனன நூற்றாண்டில் அவருக்கு இச்சமூகம் மட்டுமல்ல இந்நிறுவனத்தினூடாக பயன்பெற்று உயரிய நிலையில் சமூக அந்தஸ்துடன் இருப்பவர்கள் செய்யும் கைமாறாக அமையும்.

சிவத்தமிழ்ச்செல்வி இந்நிறுவனத்தை ஆரம்பித்த காலத்தில் உணவு, உடை, உறையுள் என்பவற்றுக்கே ஆதரவற்றோர் இருந்தனர். ஆனால் தற்போது கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே உரிய வகையில் பெற்றுக் கொள்ள சிலருக்கு மட்டும் முடியாதிருக்கின்றது. இந் நிலையில் பராமரிப்பு இல்லங்களின் தேவை படிப்படியாக குறைக்கப்பட வேண்டும். 40 வருடங்களுக்கு முன்னர் இல்லாத நன்னடத்தை திணைக்களங்கள், சிறுவர் உரிமை பாதுகாப்பாளர்கள் இப்போது இருக்கிறார்கள். அவர்களின் வேலைகளைச் சுலபமாக்குவதற்காக பயன்படுத்தப்படும் இல்லங்கள், சமூகத்தில் ஏற்படும் பிறழ்வுகளுக்கு முட்டுக் கொடுக்கும் இல்லங்கள் எமக்குத் தேவையில்லை. ஒழுக்கத்தோடு சேர்த்து அடிப்படைக் கல்வியை, உயர் கல்வியை வழங்குவது தான் இனி வரும் காலங்களில் சாலச்சிறந்தது. பெற்றோர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள அவர்களை நாம் வழி நடத்துவோம்.


**திருமதி. சிவமலர் அனந்தசயனன்**
அதிபர்
துர்க்காபுரம் மகளிர் இல்லம்
(சைவ ஆன்மிக விடுதிச்சாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



# சமய சமூகப்பணிகளில் ஈடுபடும் பெண்களுக்குத் திலகமானவள் அன்னை!

சைவத்தையும் தமிழையும் தமது அருந்தொண்டினால் நம் நாட்டில் மீண்டும் நிலைபெறச் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வழியில் செயலாற்றிய தேவஸ்தான முன்னாள் தலைவர் துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் *1979*ஆம் ஆண்டு தைத்திங்கள் *17*ஆம் நாள் *(31.01.1979) 18* பெண் தொண்டர்களுடன் ஸ்ரீ துர்க்காதேவி பெண்கள் தொண்டர்சபை உருவாக்கப்பட்டது. அம்மா அவர்கள் தேவஸ்தானத்தின் தலைவராகவும் தொண்டர் சபையின் தலைவராகவும் போசகராகவும் இச் சபையை சிறப்பாக வழி நடாத்தினார்.

அன்னை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொண்டர் சபையின் பணி இன்று வரை தொடர்வது அம்பாளின் அருளாகும். அத்துடன் ஆலயத்தில் விழாக்கள், அபிஷேகங்கள், அன்னதானம் என விரிவடைந்த போது தொண்டுகளினால் ஆலயம் எழுச்சியும், வளர்ச்சியும் பெற்றதை நாம் காணக் கூடியதாக உள்ளது. இன்றுவரை தூர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றிவரும் பல்வேறு பணிகளில் பெண்கள் தொண்டர் சபையின் பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயப் பணிகளில் ஈடுபாடுள்ள *18* பெண் தொண்டர்களுடன் இச்சபை உருவானது. பதினைத்து ஆண்டுகளுக்கு மேலாக சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இச்சபையின் தலைவராக விளங்கியமை சிறப்புக் குரியதாகும். *(1979 - 2006)* இன்று *25* அங்ககத்தவர்களைக் கொண்டு இச்சபை இயங்குகின்றது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் பெண்கள் தொண்டர் சபை உறுப்பினர்கள் கூட்டாகச் சேர்ந்து பூசை உபகரணங்களை சுத்தம் செய்யும் திருப்பணியை சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

அன்பும் அறனும் சமயவாழ்வில் பேணப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். ஆலயத் தொண்டுகளில் பெண்களும் பங்குபற்றினார்கள் என்பதை சேக்கிழார் பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாலயம் பெண் அடியார்களின் வழிபாட்டுக்கு உரியதாக காணப்படுவதும் சிறப்புக் குரியதாகும். ஆண்டு தோறும் மகா சிவராத்திரி உபயம் இச்சபையினால் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் *05.10.1991*இல் *10*வது ஆண்டு விழாவும் *10.06.1995* இல் *15*வது ஆண்டு நிறைவு விழாவும் *08.07.2001* இல் *20*வது நிறைவு ஆண்டு விழாவும் *06.02.2005*இல் *25*வது நிறைவு ஆண்டு விழாவும், *27.05.2012* இல் *30*வது நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு விழாவும் நடைபெற்றமை சிறப்பம்சம்மாகும். அம்மா அவர்களின் ஆரம்ப வழிகாட்டலும் அம்பாளின் அருளும் இன்றுவரை பெண்கள் தொண்டர் சபை நிலைத்து நிற்பதற்குக் காரணமாகும்.

**"நற்பணி ஆற்றி இறையருள் பெறுவோமாக."**

**செல்வி. ஞானேஸ்வரி சின்னத்தம்பி**
தலைவர்
பெண்கள் தொண்டர் சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



# இந்து இளைஞர்கள் தொண்டுள்ளத்துடனும் பத்தியுணர்வுடனும் பணிசெய்ய வழிகாட்டிய அன்னை

1965ஆம் ஆண்டு, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் ஆரம்பிக்கப்பெற்ற முதலே அம்மாவின் ஆலோசனைகளும், நெறிப்படுத்தல்களும் எமக்கு கிடைத்த வண்ணமிருந்ததை எந்தவொரு அங்கத்தவராலும் மறந்துவிட முடியாது. 1965இல் தொண்டர் சபையாகவே தொடங்கப்பட்டு பின்னர் சங்கமாக உருப்பெற்றதற்கு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும், திரு. சிவவாகீசர் ஐயாவும் காரணகர்த்தாக்கள். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பொன்விழா காணுமளவுக்கு வளர்ந்து வந்த பாதையில் அம்மா அவர்கள் வாழ்நாள் போஷகராக இருந்து வழிகாட்டல்களைத் தொடர்ச்சியாக நல்கி வந்தமையை இவ்விடத்தில் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

எமது சங்கமானது ஆரம்பிக்கப்பட்ட போது சங்கத்தின் குறிக்கோளாக "பாடு, பரவு, பணிசெய்" என்ற விருதுவாக்கினை உருவாக்குவதற்கு அம்மாவின் ஆலோசனை இன்றியமையாததாய் இருந்தது. ஆலயத்துக்குரிய சகல தொண்டுகளையும் முன்பு வாய்மொழி மூலமும் பின்பு நிர்வாக சபை ஊடாக கடிதம் மூலமும் அறியத் தருவார்கள். பின்னர் அம்மா அவர்கள் தான் எங்கள் சங்கத்தில் இருந்து அங்கத்தவர் ஒருவரை நியமித்து சங்கப்பிரதிநிதியாக நிர்வாக சபைக்கு அனுப்பும்படியும், அவரிடம் செய்ய வேண்டிய தொண்டுகள் பற்றி நிர்வாக சபைக் கூட்டத்தில் அறிவிப்பதாகக் கூறி ஆரம்பித்து வைத்தார் என்பதையும் மறக்க முடியாது.

இராஜ கோபுர அத்திவாரம் வெட்டும் பணியில் மட்டுமல்லாது, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்துக்கு பணிமனை அமைக்கும் விடயத்திலும், பஸ் தரிப்பு நிலையம் நிறுவப்பட்ட போதும், அம்மாவின் ஆலோசனைகள் புறந்தள்ளிவிடக் கூடியவை அன்று. இவ்விடத் தில் தான் வள்ளுவன் வாக்கு சாதனையாவதைக் காண முடியும். அதாவது

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" (குறள்)

அம்மையார் தோன்றினார்; புகழ் பெற்றார்; துர்க்காதேவி தேவஸ்தானத்தை எழுச்சி பெறச்செய்தார். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பெண்கள் தொண்டர் சபை, என்பவற்றை தொண்டுள்ளத்துடனும் பக்தியுடனும் மிளிரச் செய்து புகழ் பெறவைத்த பெருமையை யாரால்? எப்போது? எப்படி? மறக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய சந்திரர் உள்ளவரை அம்மாவின் நினைவும் இருக்கும்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" - அப்பர் சுவாமிகள்

அம்மாவின் நூற்றாண்டு விழா மலரினூடாக சங்கத்துக்கு அம்மா செய்த அளப்பெரும் சேவைகளை நினைவுகூருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**தலைவரும், நிர்வாகசபையும், அங்கத்தவர்களும்**
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
துர்க்காபுரம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



# தரணி போற்றும் தன்னிகரில்லா அன்னை

நம் ஈழமணித் திருநாடு ஈன்றெடுத்த ஓர் ஒப்பற்ற ஆளுமையாய் ஒளிர்ந்து கொண்டிருப்பவரே சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதில் நிச்சயமாய் நாம் ஒவ்வொருவரும் பெருமை கொள்ள முடியும். “மக்கள் சேவையே மகேசன் சேவை” என்ற அடிப்படையான இந்து மதக் கோட்பாட்டைத் துணிச்சலோடு அவனிக்கு எடுத்துக் கூறிய பெருமைக்குரியவர் இந்த அன்னை. சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றியதோடல்லாமல் நம் சமூகத்துக்கும் இவர் ஆற்றிய அரும் பணிகள் யாராலும் மறக்கமுடியாதவை. இந்து ஆலயங்கள் வெறுமனே கிரியைகளும் பூசை வழிபாடுகளும் நடைபெறுகின்ற இடங்களாக இல்லாமல் சமூகப் பணிகளை முன்னின்று ஆற்றுகின்ற அற நிலையங்களாகவும் பரிணாமிக்கவேண்டும் என்பதைச் சொல்லாமல் செய்துகாட்டிய இவருக்கு இணை இவரே.

தீங்குறு நிலையிலிருந்த பல பெண் பிள்ளைகளை ஒரு தாய்க்கே உரிய அன்போடும் பரிவோடும் அரவணைத்து, சீராய் வளர்த்தெடுத்து, சிறப்பாக வாழவைத்த இவரின் உயரிய சேவைக்கு ஈடாக வேறுஎதுவும் இருக்கமுடியாது. சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் எமது வாழ்வக நிறுவனத்தோடு கொண்டிருந்த உறவு மிகவும் ஆழமானது. வாழ்வக அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் மூத்த சகோதரியாய் அவருக்கு உதவிக் கரம் நீட்டியவர். 29.06.1998 அன்று முற்பகல் 10.00 மணியளவில் தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ள கட்டடத்தில் வாழ்வக நிறுவனத்தைத் தன் கைகளால் திறந்து வைத்து எங்களையெல்லாம் வாயார, மனதார வாழ்த்திச் சென்ற அந்த நாள் மனதில் நிழலாடுகின்றது. நாங்கள் ஏதாவதொரு உதவி கேட்டுச் செல்லுகின்றபோதெல்லாம் ஒரு தாயின் பரிவோடு எங்களை வரவேற்று அமரச்செய்து, தன் கைகளாலேயே தேநீர், சிற்றுண்டி பரிமாறுகின்ற அந்தப் பெரியம்மாவை இன்றும் எம்மால் மறக்க முடியவில்லை. அந்தத் தாயினும் நல்ல தலைவி இத்தரணியை விட்டு மறைந்த போது என் அகத்திலிருந்து உதித்த அந்தக் கவிதை வரிகளை மீண்டும் ஒரு தடவை இங்கே பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆலமரமொன்று அடியோடு சாய்ந்ததுவோ
காலன் தொடுத்த கணை கணக்காகப் பாய்ந்ததுவோ
ஞாலந்தனி லெமக்கு நல்வழி காட்டிநின்ற
ஞானத் திருவிளக்கு நழுவி மண்ணில் வீழ்ந்ததுவோ
தீபம் அணைந்ததுவோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைகள் இருண்டதுவோ
யாவும் முடிந்ததுவோ - எமக்கு
யாருமற்றுப் போனதுவோ...

அன்னையவர்கள் விட்டுச்சென்ற பணிகளை அண்ணன் ஆறு. திருமுருகன் அவர்கள் தொய்வின்றித் தொட்டுத் தொடர்ந்தபோது என் கவிதையின் இறுதி வரிகளை நான் மாற்றிக்கொண்டேன்.

தமிழ்கூறு நல்லுலகம் உள்ளவரை எங்கள் தங்க அம்மாவின் நாமமும் நிலைத்திருக்கும். அவர் விட்டுச் சென்ற பணிகள் இன்னும் இன்னும் பெருகும், வளரும்.

எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளின் தூய திருவடி நிழலிலிருந்து எங்கள் பெரியம்மா எங்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கட்டும்.

**ஆ. இரவீந்திரன்**
தலைவர்
வாழ்வகம்
விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்
சுன்னாகம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# சிவத்தமிழ்ச்செல்வி ஆற்றிய பணிகள் நம் ஈழத் திருநாட்டில் சைவ சமயத்தைப் பாதுகாத்தன

சிவத்தமிழ்ச்செல்வி அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் நூற்றாண்டு பிறந்தநாள் நினைவில் அவரது சிறப்பை மேன்மைப்படுத்தும் பொருட்டு வெளியிடப்படுகின்ற நூற்றாண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். சிவத்தமிழ் அன்னை அவர்கள் நம் ஈழத் திருநாடு செய்த மாதவத்தால் கிடைத்த மங்கையர் திலகம்.

எங்கள் யாழ்ப்பாண மண்ணின் பெரும் புகழை தன் நாவன்மையாலும் எழுத்தாலும் சமய, சமூகப் பணிகளாலும் உலகம் முழுமையிலும் பரப்பிய இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் பெண் ஆளுமை அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை.

ஆலயங்கள் அறப்பணி செய்ய வேண்டும் என்பதை இந்த மண்ணுக்கு எடுத்தியம்பிய பெருந்தகை. தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வளாகத்தில் மகளிர் இல்லத்தை ஆரம்பித்து ஆதரவற்ற பெண் பிள்ளைகளை அரவணைத்துப் பாதுகாத்து அவர்களை வாழ வைத்த பெருந்தகை. இந்த மண்ணில் ஆன்மிக தானத்தை வாரி வழங்கியவர். அவரின் பேச்சாற்றல் நம் ஈழத் திருநாடு கடந்து வெளிநாடுகளிலும் ஒலித்தன. அவரின் சொற்பொழிவுகள் நம் மக்களை ஆற்றுப்படுத்தின. அறப்பணிகளைத் தூண்டின. இறை நம்பிக்கையை ஏற்படுத்தின. சமய சமூகப் பணிகளை ஆற்றுவது தான் இறைவனுக்கு நாம் செய்கின்ற பெருந்தொண்டு என்பதை அவரின் சொல்லும் செயலும் உணர்த்தின.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலைவராக இருந்து அன்னை வகுத்த திட்டங்கள் அளப்பரியன. அவரின் அறப்பணிகளை கௌரவித்து யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கி பெருமை கொண்டது. 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி நாம் வலம்புரி பத்திரிகையை ஆரம்பித்தபோது அன்னையைச் சந்தித்து அவரின் கருணை மிகுந்த ஆசியைப் பெற்றுக்கொண்டோம். அன்று அவர் எங்களுக்கு அருளாசி வழங்கியதால் வலம்புரி நாளிதழ் வெள்ளிவிழா கண்டு தன் பணி தொடர்கிறது.

சிவத்தமிழ் அன்னையவர்கள் தன்னோடு தனது பணிகள் நிறைவு பெற்றுவிடக் கூடாது என எண்ணினார். தன் பணிகள் முன்னெடுக்கப்படவும் மேலும் பல பணிகளை முன்னெடுக்கவும் அவர் எமக்கு தந்த பெரும் சொத்துத்தான் எங்கள் மதிப்புக்குரிய கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் சமய, சமூகப் பணிகள் நம் ஈழத் திருநாட்டில் சைவ சமயத்தைப் பாதுகாத்து நிற்கின்றன. தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் தெய் விகத்தின் சுவர்க்கலோகமாக காட்சி தருகிறது.

இந்தப் பிறந்தநாள் நூற்றாண்டு நிகழ்வும் அன்னையின் அறப்பணிக்கு, துர்க்காதேவித் தாய் தந்த அங்கீகாரம் எனப்போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

**திரு. நல்லையா விஜயசுந்தரம்**
பிரதம ஆசிரியர்
வலம்புரி நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
துர்க்காதேவி துணை



# முன்னுதாரணமான உயர் பெண்ணாளுமை அன்னை சிவத்தமிழ்ச்செல்வி

"சிவத்தமிழ்ச் செல்வி" என்று
திசையெட்டும் அழைக்கும் அன்னை.
தவப்பெரு வாழ்வு வாழ்ந்து
தமிழ், சைவம் காத்த பெண்மை.
எவர்க்கும்...ஈடில்லாத் தாய்மை.
இரும்புப் பெண்ணான தூய்மை.
அவரின் "நூறகவை ஆண்டு"...
அவர் நாமம் அழியா துண்மை!

"தெல்லியூர்த் துர்க்கை" பாதம்
தினந்தொறும் பணிந்து, அந்தத்
"தெல்லியூர்த் துர்க்கை" மேன்மை
தினம் புவி வணங்க வைத்து,
வல்ல "சொற் பொழிவால்" சைவ
வலிமையை உரைத்து, தெய்வ
இல்லறம் காத்த கன்னி!
இரக்கத்தால் பலர்க்குத் தாய் நீ!

நிமிர் நடை நடந்து, அஞ்சா
நேர்கொண்ட பார்வை பார்த்து,
சமய நற் பணிக ளோடு
சமூகத்தின் குறைகள் தீர்த்து,
அமைத்தனள் "மகளிர் இல்லம்"
"அநாதையார் உலகில்"? என்று,
சமைத்தாராம் பசியைக் கொன்று,
சரித்திரம் படைத்தார் அன்று!

அன்னையின் "அகவை நூறை"
அனைவரும் வியந்து பாடி,
அன்னைசெய் திட்ட சேவை
அகலாத கதைகள் பேசி,
இன்றைக்கும்...அவரின் எண்ணம்
ஈடேறி வாகை சூடி
வென்றது " செஞ்சொற் செல்வர்"
வினைகளால்...புகழ்வோம் கூடி!

**திரு. த. ஜெயசீலன்**
நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
துர்க்காதேவி துணை

# துர்க்காதேவியின் திருவருட் பிரவாகம்

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஐயா அவர்கள் ஏறத்தாழ ஒரு மாதத்துக்கு முன்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரில் சந்திக்கு மாறு விநயமாக வேண்டினார். ஒரு செவ்வாய்க்கிழமை காலைவேளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அலுவலகத்தில் அவரைச் சந்திக்கச் சென்றேன். "அன்னையின் நூற்றாண்டு வருகின்றது மலர்க்குழு ஒன்று அமைத்துள்ளோம். நீங்கள் மலரைப் பொறுப்பெடுத்துச் செய்யவேண்டும்" என்று திருவாய் மலர்ந்தார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் **2015**ஆம் ஆண்டு மார்கழி மாதம் **27**ஆம் திகதி வெளியிடப்பெற்ற, காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் கலாநிதி க. வைத்தீசுவரக் குருக்கள் நூற்றாண்டு மலரின் ஆசிரியராக இருக்கும் திருவருட்பேறு அடியேனுக்குக் கிடைத்தது.

கலாநிதி க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களது நூற்றாண்டு மலர் அச்சாகியதும் முதற்பிரதியை தேவி அச்சகத்திலிருந்து பெற்று தெல்லிப்பழை துர்க்காதேவி யின் திருப்பாதங்களில் சமர்ப்பித்து அர்ச்சிக்க வேண்டி அன்று பிரதம சிவாசாரி யாராக விளங்கிய சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள் ஐயா அவர்களிடம் வழங் கினேன். அம்பிகையின் திருவடிகளில் சாத்திய மலரை - நூலை அகிலேஸ்வரக் குருக்கள் ஐயா ஆசீர்வதித்து துர்க்கா தேவியின் அருட்பிரசாதமாக வழங்கும் போது "சிவத்தமிழ்ச் செல்வியின் நூற்றாண்டு மலரையும் இவ்வாறு அழகுறச் செய்யவேண்டும்" என்று **10** வருடங்களுக்கு முன்னர் கூறிய ஆசிகளே கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களது சொற்களைக் கேட்டபோது என் நினைவுக்கு வந்தது.

கடந்த ஆண்டு கருங்கற்களால் புதிதாக ஆலயம் அமைத்து மகாகும்பாபிஷே கத்தை **6** மாதத்திற்குள் நிறைவேற்றிய துர்க்காதேவியானவள் ஒரு மாதத்தை விடக் குறைவான காலப்பகுதியில் நூற்றாண்டு மலரைச் செய்யப் பணித்துள் ளாள். தெல்லிநகர்த் துர்க்காதேவியின் மீளா அடியவர்கள் பலர் தோன்றாத் துணையாக நின்று இந்நூலைத் தொகுக்க உதவியமை அம்பிகையின் திருவருளே.

கலாநிதி ஆறுதிருமுருகன் ஐயா அவர்களும் தேவஸ்தான அலுவலகத்தில் பணியாற்றுகின்ற துர்க்காபுரம் மகளிரில்லப் பிள்ளைகளும் வேண்டிய ஆவணங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அரிதான பத்திரிகைத் தொகுப்புக்களையும் பார்வையிட ஏற்பாடு செய்தனர்.

துர்க்கா துரந்தரி **1971** இல் மலேசியா, சிங்கப்பூருக்குச் சமயச் சொற்பொழி வாற்றச் சென்றபோது அன்னைக்கு வந்த அழைப்பிதழ்கள், மலேசியாவில் ஆலயங்களில் ஆற்றிய சொற்பொழிவு தொடர்பான செய்திகள் மலேசிய நாளிதழ்களில் பிரசுரமானதைப் பார்க்கின்றபோது மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.

துர்க்காதேவிக்கு **1981** இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேக வைபவப் பத்திரிகை, சிவத்தமிழ்ச் செல்வியின் பொன்விழா, மணிவிழா, பவளவிழா, அமுத விழா தொடர்பான செய்திகள், மலர்கள், சிவத்தமிழ்ச் செல்விக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் **1998** இல் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியபோது நாடு முழுவதுமிருந்து அறிஞர்களும் ஆதீனங்களும் அன்பர்களும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு எழுதிய கடிதங்கள் (கடிதத்தலைப்பில் கையெழுத் தில்) பெரிய அளவான வரைபடத்தாளில் ஒட்டப்பட்டு புத்தகங்களாகக் தொகுக்கப்பட்டுள்ள ஆவணங்களைப் பார்வையிடுகின்றபோது மகிழ்ச்சியாக இருந்தது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வரலாற்றில் சிவத்தமிழ்ச் செல்வியின் காலம் முதலாக இன்றுவரை நடந்த முக்கியமான நிகழ்வுகளின் அழைப்பிதழ்கள், ஆவணங்கள், பத்திரிகைச் செய்திகள் தேவஸ்தானத்தில் பாதுகாக்கப்படு கின்றமை மிகவும் சிறப்பானது. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் தொடர்பான ஆவணங்கள், காட்சிச் சுவடிகள் கூடம் (***Gallery & Archives for Dr. Thangamma Appacuddy***) அமைத்து எண்ணிமப்படுத்தப்பட்டு, பொதுமக்கள் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

புத்தகத்துள் உறைகின்ற மாது என்று சரஸ்வதிதேவி போற்றப்படுகின்றாள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் நூற்றாண்டு விழா மலரின் அழகு துர்க்காதேவியின் அழகே.

இந்நூலில் எழுந்தருளியுள்ள துர்க்காதேவியின் புகைப்படங்களை மனமுவந்து வழங்கிய சிவஸ்ரீ இ. பிரசன்னவதனக்குருக்கள், துர்க்காதேவியின் மீளா அடியவர் களான திரு. செ. சிவசொரூபன், திரு. அ. நிரோசன், திரு. வீ. விஜயகுமார் - யாழ். நிக்கொன் ஸ்ரூடியோ, திரு. கு. துர்க்காதாஸ் - துர்க்கா ஸ்ரூடியோ ஆகியோருக் கும், மிகுந்த வேலைகளுக்கு மத்தியிலும் அம்பாளுக்காகத் தமது வேலைகளைத் தியாகம் செய்து இந்நூலைச் செவ்வை பார்த்து உதவிய திரு. அய்யாத்துரை சண்முகநாதன் (பொருளாளர், துர்க்காதேவி தேவஸ்தானம்), சிரேஷ்ட விரிவுரை யாளர் இ.சர்வேஸ்வரா, கௌ. சித்தாந்தன் ஆகியோருக்கும், தட்டச்சுச் செய்தும் செவ்வை பார்த்தும் பலவழிகளிலும் உதவிய துர்க்கபுரம் மகளிர் இல்ல மாணவி சர்மிளா இராஜராஜேஸ்வரன், ஏனைய மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கும் எனது சகபணி யாளர்களான திரு. கி. நயூரன், திருமதி. ப. மயூரன், திருமதி. ம. சலூஜா ஆகியோருக்கும், இந்நூற்றாண்டு மலரைத் தொகுக்கத் துணைநின்று, ஆலோசனை வழங்கி, ஊக்கமளித்த கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் மற்றும் ஏனைய மலர்க் குழுவினருக்கும், சிறந்த முறையில் நூற்றாண்டு மலரை வடிவமைத்து, அச்சிட்டுத் தந்த எவகிறீன் அச்சகத்தாருக்கும், இந்நூல் சிறப்பாக வெளி வர பல்வேறு வழிகளில் தொண்டுள்ளத்துடன் உதவியவர்களுக்கும், எட்டுணையும் நன்றி கூறத்தகும். அனைவருக்கும் துர்க்கா தேவியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றனன்.

**பா. துவாரகன்**<br>
அபிவிருத்தி உத்தியோகத்தர் (பொறுப்பு)<br>
மருத்துவ அருங்காட்சியகம் (ம) தொலைமருத்துவப் பிரிவு<br>
போதனா மருத்துவமனை<br>
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
நூற்றாண்டு விழா மலரை அலங்கரிக்கும்
தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
வரலாற்றுத் தொகுப்பு
கட்டுரைகள், ஆவணங்கள், படங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை வழிபாட்டு மரபும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயமும்

தெ. து. ஜயரத்தினம், பி.ஏ., முன்னாள் அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

*"பரங்கிரியின் மேவியருந் தவமிழைத்து விறல்சேர்ந்து பாரு ளோங்கித்*
*திரங்குலவு மவுணனையே வீட்டியவன் சிரமிதித்த சிலம்பினாளை*
*வரங்குலவு வேலவனார் மணக்கோலங் கண்டிருந்த மகிழ்ச்சியாளைக்*
*கரங்குலவு சங்காழி தரித்துவளர் துர்க்கைதனைக் கருத்துள் வைப்போம்."*

பாரத நாட்டின் சமய வரலாறு, பல்வேறு சமய மரபுகளையும் வழிபாட்டு முறைகளையும் உள்ளடக்கியதாகும். தாய் வரலாற்றிலே ஒவ்வொரு சமூகமும், அவற்றின் மனிதநலவியற் பண்புகளுக்கு ஒப்பச் சமயங்களையும் வழிபாட்டு முறைகளையும் உருவாக்கி, ஒழுக்கவியலையும் ஆத்மீகத்தையும் நெறிப்படுத்த முயன்றது. இந்தவகையிலேயே பாரத நாட்டின் வைதீக, அவைதீக சமயங்களின் பரிணாம வளர்ச்சியும் நடைபெற்று வந்துள்ளது.

சைவம், வைணவம், சாக்தம் ஆகிய மூன்றும் வைதீக சமயங்களெனவும், சமணம் பௌத்தம் உலோகாயதம் ஆகிய மூன்றும் அவைதீக சமயங்களெனவும் பெரும் படியாகக் கொள்ளப்படுகின்றன. காணாபத்தியம், கௌமாரம், சௌரம் போன்றவையும் வைதீக சமயப் பிரிவுள் அடங்குவனவாம். வைதீக சமயங்களுள் சாக்தம் மிகப் பழமையானதென அறிஞர்கள் ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளனர்.

வேதகாலக் கடவுள் வணக்கத்தின் முன்னரே சிந்துவெளி நாகரிகத்தில் சக்தி வணக்கம் செல்வாக்குற்றிருந்தது. பின்னர் ஆரியரின் செல்வாக்கினால் சிவவணக்கம் உயர் நிலையடைந்தது. சிந்துவெளி நாகரிக முத்திரைகள் சக்தி வணக்கத்தை வலியுறுத்துகின்றன. பின்னர் சக்தி சிவத்துடன் இணைந்த தெய்வமாக வளர்ச்சியடைந்தது. இம்மரபு பாரத நாடு முழுவதும் செறிந்து, சக்தியின் பல்வேறு வடிவங்களையும் கலையுருவிற் கண்டு வணங்கி வழிபாடு செய்யும் வகையில் இன்றும் நிலவுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளது சத்தியாகும் அரன்தனக் கருளை இன்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவம் இன்றிச் சத்தி இல்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப்போல் ஈசன்

என்ற சிவஞான சித்தியார் பாடலும்,

உணர்ந்துட னேநிற்கும் உள் ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்
புணர்ந் தட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே.

என்ற திருமந்திரப் பாடலும், அப்பனும் அம்மையும் இயைந்து நின்று சுரக்கும் பேரருளைக் காட்டுகின்றன. சக்தியின் ஐக்கியம் இல்லாவிட்டால், சிவம் தொழிற்படாதென்பது சைவசித்தாந்தத் தெளிவு.

சக்தி வெளிப்பட்டு நின்று அருள்பாலிக்கும்போதுதான், பராசத்தி என்று அழைக்கப்படுகிறதென்ற உண்மையையும் இவ் வழிபாட்டு மரபு வளர்ச்சி எமக்குக் காட்டுகிறது.

இப்பராசக்தி உலகம் உய்யவும், உயிர்கள் சுபீட்சம் அடையவும் பலவிதமான தொழில்களை நிகழ்த்துகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு மூர்த்தமாக விளங்குகிறது. இம்மூர்த்தங்கள் பலவாயினும் மரபுவழி முக்கிய மான மூன்றையே வழிபாடு செய்வது வழக்காறாக வந்துளது. வீரத்தின் வடிவா யிருந்து, உயிர்களுக்கு வீரத்தை வழங்கும்போது துர்க்கா முகூர்த்த மாகவும், ஐஸ்வரியத்தின் வடிவாயிருந்து பொன்னையும் பொருளையும் பல்வேறு வளங்களையும் தருங்கால் இலக்குமி மூர்த்தமாகவும், சாந்தமே வடிவாயிருந்து உயிர்களுக்கு ஞானத்தை நல்கும்போது சரஸ்வதி மூர்த்தமாகவும் கொண்டு நாம் சக்தியை வழிபடுகிறோம்.

இம்மூன்று மூர்த்தங்களிலும் துர்க்கா மூர்த்தமே மிக உன்னதமானதும், சகல ஆற்றல்களையும் தன்பாலடக்கியிருப்பதுமாகும். துர்க்கா மந்திரமே ஓசை யாலும், பொருளாலும் உபாசிப்பவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் தன்மையது. "அணுகுதற் கரியவள்" என்பது அம்மந்திரப் பொருளா கும். மெய்யன்புள்ளவர்களே அவளிடத்தணுகி, அவளின் கருணைப் பிரவாகத்தில் திளைக்கலாமென்பது கருத்து. துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபால னஞ் செய்யுந் தன்மையில் "அக்கிரமம் செய்பவரை அழிப்பவள்" என்பதும் பெறப்படுகின்றது.

துர்க்கன் என்னும் பெயரையுடைய அசுரன் ஒருவன் தேவியால் அழிக்கப்பட்டா னென்றும், அந்தக் காரணத்தினாலேயே தேவிக்குத் துர்க்கை என்னும் நாமம் வந்ததென்றும் புராணங்கள் கூறுகின்றன. அன்றியும் மகிஷாசுரன் என்னும் எருமைத் தலைதாங்கிய அசுரன் ஒருவனை அழித்த காரணத்தால் "மகிஷாசுர மர்த்தனி" என்னும் திருநாமத்தைத் துர்க்காதேவி தாங்கினள் எனவும் கூறுவர். இறைவனின் ஐந்தொழில்களுள் அழித்தல் என்பது சங்காரம் எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் காரணமாயிருப்பவர் சிவபெருமானே என்பதும், சர்வ சங்காரகாரணியாயிருப்பவள் துர்க்கா மூர்த்தமுடைய பராசக்தியே என்பதும் அறியற்பாலனவாம்.

தெல்லிப்பழை உழுகுடைத்துர்க்கா தேவி ஆலயம் பழைமையும் அற்புதமும் வாய்ந்த தலமாகும். இவ்வாலயத்தின் பழம் பெருமைகளை அறிய முயன்ற போது, பல தகவல்களையும் அறியும் வாய்ப்பு அடியேனுக்குக் கிட்டியது. அவற்றை மிகச்சுருக்கமாக விளக்க விழைகின்றேன். இந்தியத் துணைக் கண்டத் துடன் ஈழம் கொண்டுள்ள பழைமையான கலாசாரத் தொடர்புகளும் பண் பாட்டு இணைவுகளும் பிற தொடர்புகளும் பலவுள. இவற்றைப் பிரித்து நோக்கும் வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஈழத்து மரபுகளை நுணுகி நோக்கும் போதும், இவற்றின் மூலத்தை ஆய்வு செய்யும்போதும் இவை தென்னக வரலாற்றுடன் சென்று இணைவதைக் கவனிக்கலாம். வழிபடு தலங்களும் வழிபாட்டு முறைகளும் இதனை நன்கு வலியுறுத்துகின்றன.

பழைமை நிறைந்த சக்தி வழிபாட்டின் பல்வேறு வடிவங்கள் பாரத நாட்டில் காணப்படுகின்றன. சக்தியையே மூலாதார மூர்த்தமாகக் கொண்டு வழிபடும் சாக்த சமயத்தினரை இன்றும் வடநாட்டிற் காணலாம். இவ்வழிபாடு இருவகை யிலமைகின்றது. சக்தியை உலகத் தாயாகவும், வளத்தின் தெய்வமாகவும் கொண்டு வழிபடும் வகை ஒன்று. வீரத்தாயாகவும், வெற்றி தரும் மூர்த்தமாகவும் கொண்டு வழிபடும் வகை மற்றொன்று. வீட்டு வழிபாட்டில் பெருமளவில் தாய்த்தன்மை கலந்த தெய்வநிலை விளங்குகிறது. பொது வழிபாட்டில் உடல் வீரத்தையும், மன வைராக்கியத்தையும் தரும் தெய்வநிலை அமைகிறது. புராண இதிகாசங்களில் நாம் காணும் ஒரு தெய்வநீதி அசுரத்தன்மையை அழித்துத் தெய்வீகத் தன்மையை வாழ வைப்பதேயாம். சக்தி அசுரர்களை அழிக்க வீரவடிவம் தாங்கி நிற்பதைத் “தேவிமகாத்மியம்” பேசுகிறது. துர்க்கை, காளி, மூர்த்தங்கள் இதற்காகவே அமைந்துள்ளன. காளி மூர்த்தம் உக்கிரமான தன்மை வாய்ந்ததாகவும், பயங்கர உணர்ச்சி தருவதாகவும், அதர்மத்தை அழிக்கும் தன்மையானதாகவும் விளங்கும். வட இந்தியாவிலே வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களில் இன்றும் காளி வழிபாடு அதிகமாகக் காணப்படுகிறது. மகான் இராம கிருஷ்ணபரம ஹம்சரே ஒரு காளி உபாசகராக விளங்கியருள் பெற்றாரென்பதும் நாம் அறிந்த உண்மையாகும்.

பாரத நாட்டிலே குலமரபுத் தெய்வமாகவும், குழுத்தெய்வமாகவும், யுத்த தெய்வமாகவும் துர்க்காதேவியை வழிபட்டு வருவதைப் பரக்கக் காணலாம். சீக்கிய மக்களின் மரபில் யுத்தத் தெய்வமாகத் துர்க்கையை வழிபடுவது செறிந்து காணப்படுகிறது. சீக்கிய வீரனான கோவிந்தசிங் என்பவன் துர்க்கை வழிபாட்டினைச் சீக்கியரிடம் செல்வாக்குப் பெறச் செய்தானெனச் சரித்திரம் கூறும்.

வட இந்தியாவில் “தசரா” மரபு வீர தெய்வமாகிய துர்க்கை வழிபாட்டை வலியுறுத்துவதாக அமைகிறது. துர்க்கா பூஜை துர்க்கோற்சவமாகப் பத்து இரவுகளுக்கு நடைபெறுகிறது. இவ்வழிபாடு சக்தி வழிபாடாகவும் குறிப்பாக ஐந்தாவது நாள் துர்க்கையை லலித பஞ்சமியாகக் கொண்டும் வழிபடுவர். ‘போர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரரும், அரச பரம்பரையினருமே துர்க்கா பூஜைகளில் அதீதமாக ஈடுபட்டு வந்தனர். இந்து சமஸ்தானங்களில் அரச வைபவமாக "தசரா" வழிபாடும், கொண்டாட்டமும் நடைபெற்று வருகிறது. பண்டைக் காலத்தில் எதிரிகள் மீது படையெடுத்துச் செல்வதற்கு "தசரா" நாட்களைப் பயன்படுத்தினர். அரச ஊர்வலங்களும் படை அணி வகுப்புகளும் நிறைந்த வைபவங்களாகவும் கண்கவர் காட்சிகளமையக் கோலாகலமாகக் கொண்டாடப்படுவதையும் நாம் அறிகின்றோம்.

நட்சத்திரங்களிற் பரணிக்கும் கிரகங்களுள் ராகுவுக்கும், துர்க்கையே அதி தேவதை எனப் பிரம்மரகசியம் கூறும். பூர நட்சத்திரத்துக்கு துர்க்கை என்னும் மறுநாமமுமுண்டு. ஒருவன் ராகு தோஷத்துக்குட்படுவானாயின் துர்க்கா பிராட்டிக்குப் பரணி, பூர நட்சத்திரங்களிலும் செவ்வாய், வெள்ளி நாட்களிலும் விசேட பூசையியற்றித் தோத்திரம் செய்ய வேண்டுமென நவக்கிரக சாந்திப் பத்ததிகளிற் கூறப்பட்டுள்ளது. அச்சமயங்களிற் பாயாசம், சர்க்கரைப் பொங்கல் போன்ற இனிமையான அமுது வகைகள் தேவிக்கு நிவேதிக்க வேண்டுமெனவும் நூல்கள் கூறுகின்றன.

வடநாட்டில் துர்க்கை வழிபாடு பரந்திருப்பது போலத் தென்னாட்டில் இல்லையெனினும் நவராத்திரி விழாக்கொண்டாடும் மரபு பெருமளவிற் கோவில்களிலும், கல்வி நிலையங்களிலும் கைக்கொள்ளப்படுகிற முறையில் துர்க்கை அம்பாளை வீரசக்தியாகக் கொள்ளும் வழக்கம் பரவி வந்திருக்கிறது. முல்லைநில மரபிலும் கால்நடைகளுக்கு வரும் நோய்களையும், சக்தி வழி பாடுகள் கிராமிய மரபில் நடந்தமையையும் அறிகிறோம். தனியாலயங்களிலும் குலதெய்வமாக விளங்குங்கால் உரு ஆடல் நிமித்தம் குறி சொல்லல் ஆதியன நிகழ்ந்து, வருவதையும், கிராமிய மக்கள் ஏகோபித்துப் பங்குகொள்வதையும் இவ்வைபவங்களிற் காணலாம்.

கிராமிய தேவதைகளின் வழிபாட்டு மரபுகளைப் பற்றி ஆய்வு செய்த தெலுங்கு நாட்டு அறிஞர் டாக்டர் தங்கிரலா என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "சக்திகளிற் பல மூர்த்தங்கள் உண்டு. லலிதா, சண்டி, துர்க்கை முகலியோர் வைதிக தேவதைகள், உத்தம சக்திகள். மந்திரம் தந்திரம், ஜெயம், ஹோமம் முதலிய பூஜை முறைகளால் இவர்களை ஆராதிப்பார்கள். எல்லம்மா (ரேணுகை) போரேலம்மா, காகதம்மா முதலியோர் சிறு தேவதைகள். உக்கிர சத்திகள். பலி முதலியவற்றால் இவற்றைத் திருப்திப்படுத்துவார்கள்."

ஆந்திர நாட்டிற் பரந்திருக்கும் கிராம தேவதை வழிபாட்டின் மூலங்களை விரிவாக நோக்கும்போது, அவை யாவும் ஒவ்வொரு குலமரபுக்கும் குழு மரபுக்கு மேற்ப வேறு வேறு வடிவங் கொண்டமைவதைக் காணலாம். அங்கம்மா, கங்கம்மா, கங்கணம்மா, மாரியம்மா, பல்லக்கம்மா முதலிய தெய்வங்கள் காணப்படுகின்றன இது போலவே தமிழ் நாட்டிலும் முத்துமாரியம்மன், மாரியம்மன், காளியம்மன், கண்ணகியம்மன், இராஜேஸ்வரியம்மன் ஆகிய மூர்த்தங்கள் விழாவெடுத்து வழிபடப்படுவதையும் காணலாம். இவையாவும் சத்தி வழிபாட்டின் அம்சங்களேயெனச் சமூகவியலறிஞர்கள் விளக்கியுள்ளனர். ஒவ்வொரு வழிபாட்டு மரபுகளோடும் புராணக் கதைகள் பின்னிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைந்துள்ளன. விழாக்காலங்களில் சத்தி மூர்த்தங்களின் பெருமைகளைப் பற்றி வீரக் கதைகளை இசையிலமைத்துப் பாடுவதும் வழக்கமாகி வந்துள்ளது.

தமிழ் நாட்டில் சக்திவழிபாட்டு மரபுகள் இடத்துக்கிடம் வேறுபட்டுள்ளன. கிராமியத் தேவதைகளைக் காலப்போக்கில் வைதிக தெய்வங்களாக வணங்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. சங்க இலக்கிய மரபில் காணப்படும் கொற்றவை வணக்கத்தைத் துர்க்கை வழிபாட்டுடன் இணைத்துக் கூறலாம். கொற்றவை வீரவணக்கத்துக்குரிய தாய்த் தெய்வமாக விளங்குகிறாள்,

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" எனத் திருமுருகாற்றுப்படையில் முருகன் குறிப்பிடப்படுவதும் நோக்கற்பாலது. சிலப்பதிகாரத்தில் கொற்றவையின் வீரம் புனைந்துரைக்கப்படும்போது,

.....பலர் தொழும்
அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய் கலைப்பாவை அருங்கலப் பாவை
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து,

(வேட்டு வரி 67-72 சிலம்பு)

என வரும் தேவராட்டி தேவியைப் போற்றும் பகுதி வீரவணக்கத்தையும், சத்தியின் இயல்பையும் எடுத்துக் காட்டுகிறது. கொற்றவையின் தோற்றம்,

"மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி
நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியின் உரிவை போர்த்தணங் காகிய
அரியின் உரிவை மேகலை யாட்டி
சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
இரண்டுவே றுருவில் திரண்டதோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல்

(வேட்டுவவரி 54-66)"

எனக் கூறப்படுவதையும் உணரலாம். இதில் வரும் இறுதி இரண்டடிகளையும் உரையாசிரியர்கள்,

"எருமைத் தலையும் மனித உடலுமாகத் திரண்ட தோளுடை மகிடாசுரனைக் கொன்று, அவன் தலைமீது நிற்பவள்" என விளக்கியுள்ளனர். எனவே கொற்றவையென்பது மகிஷாசுரமர்த்தனியாகிய துர்க்கையையே குறிப்பதாகும். வடநாட்டுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கை வழிபாடே தென்னாட்டில் கொற்றவை வழிபாடாகக் கொள்ளப் பட்டதாகும்.

ஈழ நாட்டிலும் சக்தி வழிபாடு மிகப் பழைமை வாய்ந்ததாக மரபுவழி வளர்ச்சி யைக் கொண்டு விளங்கி வருகிறது. இவ் வழிபாட்டின் மூலப் பண்புகளைத் தனி வழிபாட்டுடன் இணைத்து நோக்கும் மரபும் நிலவுகின்றது.

கயவாகு மன்னன் காலந் தொடக்கம் ஈழநாடு முழுவதும் பத்தினி வழிபாட்டை மக்கள் மேற்கொண்டுள்ளனர். சிங்கள மக்களும் "பத்தினித் தெய்யோ" என்னும் கண்ணகியம்மனுக்குக் கோவில் எடுத்து வழிபாடாற்றி வந்துள்ளனர். இங்கு நிலவும் மாரியம்மன், முத்துமாரியம்மன். காளியம்மன், சப்தகன்னியர், இராஜ ராஜேஸ்வரி, நாச்சிமார் வணக்கம் யாவும் தென்னக வழிபாட்டு மரபுடன் தொடர்புள்ளவையாகவே விளங்குகின்றன. ஆனால், கிராமிய வழிபாட்டு முறை மாற்றமடைந்து தனியாலயங்கள் தோன்றி வைதீகநெறி வழிபாட்டுடன் இணைந்துவிட்டன. அவ்வாலயங்கள் சிவாகம விதிப்படி புனருத்தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகங்கள் நடைபெற்று விதிமுறை வழிபாட்டுத் தலங்களாக விளங்குகின்றன.

"யாதொரு தெய்வங் கொண்டீரத்
　　　　தெய்வமாகியாங்கே
மா தொருபாகனார் தாம் வருவர்"

எனும் உண்மைக்கமைய, இறைவனின் அருட்சக்திப் பிரவாகத்தை மக்கள் பெற்றுச் சிறப்புறுவதைக் காண்கிறோம்.

ஈழத்தில் வருடா வருடம் கொண்டாடப்படும்: நவராத்திரி விழா" சத்திபூஜை மரபை வளர்த்து வந்துள்ளது. கோவில்களிலும், கல்வி நிலையங்களிலும், தொழில் நிலையங்களிலும் வழிபாடாற்றும் இம்முறை தென்னகத்திலிருந்தே இங்கும் பரவியதென எண்ண இடமுண்டு. துர்க்கா தேவி வணக்க வளர்ச்சிக்கும், நவராத்திரி விழாவே ஆதாரமாக அமைந்துள்ளது. துர்க்கை பரிவார தெய்வமாக விளங்கும் ஆலயங்கள் பலவுள. ஆனால் மூலமூர்த்தியாகித் தனியாலயத்தில் எழுந்தருளித் துர்க்காதேவி காட்சி கொடுக்கும் தலம் தெல்லிப்பழை உழுகுடைத் துர்க்காதேவி ஆலயமேயாம். இவ்வாலயத்தின் கர்ண பரம்பரைச் செய்தியைப் பின்வருமாறு எழுதியுள்ளனர்:

"ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் தெல்லிப்பழையில் கதிர்காமர் என்ற சைவ வேளாளர் ஒருவர் வசித்து வந்தார். அவர் தலயாத்திரை புரிவதிற் பத்தியும் சிரத்தையும் மிக்கவர். 1750 ஆம் ஆண்டளவில் அவர் தலயாத்திரைக் காகப் புறப்பட்டுக் காங்கேசன்துறையில் தோணியேறித் தென்னிந்தியாவின் கீழைக்கரையிலுள்ள வேதாரணியத்திற் கரையேறினார். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகத் தலவழிபாடு செய்து கொண்டு காசிவரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறையப் பத்து வருடங்கள் சென்றன. இக்காலவெல்லைக்குள் அவர் தமிழும் சமஸ்கிருதமும் கற்றுத்தேறி துர்க்காதேவி உபாசகராக மாறிவிட்டார். ஆனால் ஏறக்குறைய 1760 ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும் போது துர்க்காதேவி யந்திரம் ஒன்றினையும் வெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலத்தினாலமைந்த "திருமுகக்கெண்டி" உருவமொன்றினையும் கையோடு கொண்டு வந்தார். குறித்த அன்பர் கதிர்காமர் என்பவர் காசியில் பலநாள் தங்கியிருந்திருப்பார். இந்தியா முழுவதிலுமுள்ள சத்திபீடங்கள் அறுபத்து நான்கினுள்ளும் காசியிலுள்ள சொர்ப்பனேஸ்வரி பீடமே முக்கியமானது துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் பீடம் அதுவாகும். அன்பர் கதிர்காமர் குறித்த யந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருப்பாரென எண்ணுவதற்கிடமுண்டு. இங்ஙனம் அவர்தாம் கொண்டு வந்த இயந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் தெல்லிப்பழை உழுகுடைப் பதியில் ஒரு மரத்தடியிற் கொட்டிலமைத்து அதில் தாபனஞ் செய்து பூசித்து வந்தார்." - (தெல்லிப்பழை உழுகுடைப் பதித் துர்க்காதேவி ஆலய வரலாறு **1963**)

மேற்குறித்த வரலாறே இவ்வாலயத்தின் பழைமை பற்றி நாம் அறியக் கூடியவோர் பெருஞ் செய்தியாகும். இக்கர்ண பரம்பரைச் செய்தி ஒல்லாந்தர் காலத்துக்கு எம்மை இட்டுச் செல்கிறது. அக்காலந் தொட்டுக் குல தெய்வமாகவும், பலரின் இஷ்ட தெய்வமாகவும், கிராம மக்களின் தெய்வமாகவும் படிப்படியாக வளர்ந்து இன்று அகில ஈழத்துக்கும் ஒளி கொடுத்து வருவதைக் காண்கிறோம். துர்க்காதேவி தனி நாயகியாய், அதியுன்னத அருட்பிரவாகம் சொரியும் மூர்த்தமாய் உழுகுடைப்பதியில் எழுந் தருளியிருந்து பக்த கோடிகளுக்கெல்லாம் ஓர் அரிய கலங்கரை விளக்குப் போலக் காட்சி தருவதை ஆங்குச் சென்று வழிபடுவோர் உணருவர்.

இவ்வாலயம் ஆரம்பகாலத்தில் கொட்டிலாயிருந்து, ஆண்டுகள் பல சென்றபின் கட்டடம் பெற்றுத் திருப்பணி பூர்த்தியாகி **1820** ஆம் ஆண்டில் முதல் கும்பாபிஷேகம் நிகழ்ந்ததென்றும், ஒரு தாமிர விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பெற்றதென்றும் பெரியோர் வாயிலாக அறிகின்றோம். சில ஆண்டுகள் செல்ல இக்கட்டடமும் பழுதடைந்து, ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாகப் புனருத்தாரணம் செய்யப்படாமல் சிதைவடைந்து சுவர்கள் தானுமில்லாது மதிற் சுவர்களும் பழுதுபட்டிருந்த நிலையை நாமறிவோம்.

இத்தலத்தைத் தோற்றுவித்த பெரியார் கதிர்காமரின் வழிவந்த கோப்பாய் கதிரேசம்பிள்ளை நாகநாதன் என்பவர் இவ்வாலயச் சொந்தக்காரராகித் தமது காணிகள் பொருள்கள் எல்லாவற்றையும் கோவிலுக்கு அர்ப்பணித்திருந்தார். அவர் ஆலயத்தைச் சொந்த முயற்சியினால் நன்னிலைக்குக் கொண்டுவர முடியாமை காரணமாக, **1949** ஆம் ஆண்டு ஜூன் மாதம் **22** ஆம் திகதி உறுதி மூலம் பதினொரு சைவப் பெரியார்களைக் கொண்ட தர்ம கர்த்தாக்கள் சபையை உருவாக்கித் தனது உரிமையையும் அதிகாரத்தையும் அச்சபையாரிடம் கையளித்துவிட்டார். இந்நிகழ்ச்சி ஆலயத்தின் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த திருப்பத்தை உண்டாக்கியது. இன்நன்முயற்சி தர்மகர்த்தா சபையினரின் நன்முயற்சியினாலும், அவர்களால் தெரியப்பட்ட ஆலய நிர்வாக சபையினரின் உழைப்பினாலும் இவ்வூரில் வதியும் சைவ இளைஞர் ஒன்று சேர்ந்து செய்ய முன்வந்த சிரமதானத் திருப்பணியினாலும், எல்லாவற்றுக்கும் மேலாகத் தேவியின் திவ்விய கடாட்சத்தினாலும் **1953** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **6** ஆம் திகதி ஆரம்பமாகிய திருப்பணி வேலைகள், சைவ அன்பர்கள் பலரின் நிதியுதவி கொண்டு நடைபெறலாயின. பணமின்மை காரணமாகத் திருப்பணி வேலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் தாமதப்பட்டாலும், அன்னையினருட் பிரவாகத்தினால் பெருநிதி படைத்தோரும், மற்றவர்களும் நிதியுதவி வெகுவிரைவில் திருப்பணி பூர்த்தியாகியது. சிவாகம முறைப்படி அமைந்த அழகு பொலியும் ஆலயம் உருவாகியது.

1965 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் எட்டாம் நாள் சிவவிக்கிரகப் பிரதிட்டையும் மகாகும்பாபிஷேகமும் வெகு விமரிசையாக நிகழ்ந்தன. இவ்வாறான சிறப்புக்கள் யாவற்றுக்கும் இவ்வூர்ச் சைவ இளைஞரின் அரும்பெரும் தொண்டே முக்கிய காரணமாகும். இத்தகைய ஒத்துழைப்பை வேறெங்கும் காண்டலரிதெனலாம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும் துர்க்கையம்பாள் ஆலயத்துக்கும் - இடையேயுண்டான தொடர்பு மிக முக்கியத்துவம் பெற்றதாகும். மாவை ஆலயத்தின் வெண்கல் திருப்பணி 1815 ஆம் ஆண்டு பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடைபெற்றதென நாம் அறிகிறோம். பின் ஐந்தாண்டு செல்லத் துர்க்காதேவி ஆலயம் முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றமை இவ்விரு ஆலயங்களுக்குமிடையே திருவருளாலமைந்த ஒற்றுமையையும், பத்தர்களின் சைவப் பற்றினையும் உணரச் செய்கிறது. இக்கும்பாபிஷேகம் நிறைவெய்தி நான்கு வருடங்களின் பின் 1829 ஆம் ஆண்டு மாவை முருகப்பெருமான் ஆரோகணித்து மயில் மீதிலமர்ந்து முதன்முதலாகத் துர்க்காதேவியின் ஆலயத்துக்கு வந்து மானம்புத் திருவிளையாடல் (மகான் அம்பு போடுதல்) நிகழ்த்தினாரென்பது பெரியோர் வாயிலாக அறிந்த உண்மை. அக்காலம் தொட்டு இன்றுவரை நவராத்திரியைத் தொடர்ந்து விஜயதசமியன்று இவ்விழா முட்டின்றி நடைபெற்று வருகின்றது. 144 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சி அம்பாளும் முருகனும் புரியும் அரும்பெரும் திருவிளையாடலேயாம்.

இத்துர்க்காதேவி ஆலயத்தின் பழைமைக்குச் சான்றாக மிளிருவது சங்கானை தம்பர் பொன்னையா என்னும் அம்பாள் பக்தராகிய பெரியார் பாடிய துர்க்கா தேவி பதிகமாகும். அப்பாடல்கள் சைவசித்தாந்தப் பொக்கிஷமாகவும், பக்தியை வளர்க்கும் கருவூலங்களாகவும், தேவியின் அருட்பிரவாகத்தில் நீந்தச் செய்யும் சுனையாகவும் விளங்குகின்றன. அப்பாடல்களின் பொருளை விரிக்கின் சிறு ஞான நூலொன்று உருவாகத்தக்க அடக்கம் கொண்டுள்ளது. இச்செவ்விய பதிகத்தின் ஒன்பதாவது பாடலில் மாவைக் கந்தன் மானம்புத் திருவிளையாடலுக்கு அன்னையிடம் வரும் காட்சியும், அன்னையின் அருளின் மாட்சியும் அழகாக அமைந்துள்ளன.

"மாருதப் பிரவல்லி திசையுக்ரசோழ னுயர்
　　மகளூற்ற குன்ம வலியும்
மாமுகமு நீக்கியவர் மகளென வனப்பருளி
　　மாவிட்ட புரமென்று நற்
பேருலவ விட்டுலகி னிற்கொடிய மிடிகவலை
　　பிணி யொன்று மணுகாமலே
பேறுதரு கோயில்கொண்டு டாசகல் விழாப்பவனி
பேசுமயில் மீது வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருமயல் தீர வருள்விளையாடல் செய்துவரு
மறுமுகக் கும ரேசனை
ஆர்வமொ டெதிர்த்து பசரித்திட வு மடியருறு
மாகுல மகற்றி மேலாஞ்
சீருமுயர் கல்வி ஞானம் பேறளிக்கவுந்
திருவுளங் கொண் டெழிலுறுந்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்வி துர்க்கா தேவியே"

என்பது அப்பாடலாகும்.

மகிடாசுரனின் வதத்தை நினைவூட்டும் வகையில் ஓராலய மூர்த்தி, வேறொரு ஆலயத்துக்குச் சென்று, வன்னி வாழை வெட்டும் மரபு இங்கே தான் முதன் முதலாக ஏற்பட்டிருக்கலாமென எண்ணுதற்கிடமுண்டு. இந்நிகழ்ச்சி தெல்லிப் பழை மக்களுக்கு மாத்திரமன்று, அயற்கிராம மக்களுக்கும் சிறப்பான நிகழ்ச்சியாக விளங்குகிறது.

1968 ஆம் ஆண்டு தொடக்கம் கொடித் தம்பம் நிறுவப்பெற்று, கொடியேற்று விழாத் தொடங்கித் தேர், தீர்த்தம் உட்பட பன்னிரு நாட்கள் கோலா கலமான விழாக்கள் ஆண்டு தோறும் நடைபெற்று வருவதும் ஆலயத்தின் பொலிவைச் சிறப்பிக்கின்றது.

உழுகுடைத் துர்க்காதேவியின் அருள் நோக்கம் பெற்றுத் தொண்டு புரியும் தவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களைப் பற்றியும், இக்கட்டுரையில் எழுதாவிடின் இத்தொகுப்பு பூரணத்துவம் பெறமுடியாது. சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டுபுரியுமாறு அன்னையின் வரப்பிரசாதமாக வாய்த்தவர் பண்டிதர் அவர்களாவர். அவர்கள் துர்க்காதேவியைத் தனது வழிபாட்டுத் தெய்வமாகவும், இளமை தொடக்கம் தன்னை வழிநடத்தும் மூல சக்தியாகவும் கொண்டு வளர்ச்சியடைந்தவர். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் செல்வி யவர்கள் தன் நாவன்மையாலும், ஆழ்ந்த அறிவுப் பெருக்கினாலும், இனிய சாரீரத்தினாலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் மனதைக் கொள்ளை கொண்டு பிரசங்க மழை பொழியும் முகிலாக விளங்குகிறார். தமிழகம், மலேசியா ஆகிய இடங்களுக்கெல்லாம் அவர் சென்று துர்க்கையினருளால் சைவமும் தமிழும் வளரத் தொண்டு புரிகிறார் என்பது ஈழத்துக்கே பெருமை தருவதாகும். ஈழத்துப் பெண்மணிகளுள் தலைசிறந்த பேச்சாளராக விளங்கிடும் திறமையினால், தமிழக விழாக்களில் தலைமை வகிக்கும் பேற்றையும் பெற்றுள்ளார்.

இப்பெண்மணி அன்னையின் அரவணைப்பில் தாம் வாழும் தன்மையுணர்ந்து, ஆலய வீதியில் சொந்தப் பொறுப்பில் சைவத்திரு நெறித் திருமுறை மடத்தைத் தாபிதம் செய்து, திருமுறை வகுப்புகள், புராண வகுப்புகள், புராணபடன நிகழ்ச்சி ஆகியவற்றை நடத்தி வருகிறார். ஒரு காலத்தில் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் போன்றவர்கள் இவ்வாலயத்தில் புராணபடன நிகழ்ச்சியில் விரிவுரை நிகழ்த்திய பெருமையை மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறா ரெனலாம். ஆலய நிர்வாகசபைப் பொருளாளராகத் திருப்பணிக்கெல்லாம் உறுதுணையாக. ஆலய ஆக்க வேலைகளுக்கு உதவி புரிபவராகத் தொண்டுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றுக்கும் அச்சாணியாக விளங்குகிறார். அவருடைய சைவத் தமிழ்த் தொண்டு பெண்ணுலகுக்குப் பெருமையளித்து நீடுவாழ்வதாக.

"மிகுதெல்லி உழுகுடைப் பதியில் வாழ் துர்க்கையும்
வீர மொடு வாழி வாழி"

**மூலம்:** *செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பாராட்டு விழா மலர் 1974.*
**வெளியீடு:** *அகில இலங்கை இந்து மாமன்றம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Temple

## Tamil Pandit Dr. M. Kandaiyah, Earlalai

The temple of Durgadevi at Tellippalai is an object of more admiration than that of veneration in the era of its recent development. The rapid growth and the fast development of its edifices and the vivid colours and varigated beauties issuing forth from them create a good solemn taste and an indelible mark of imprint in the minds of pilgrims and devotees and as a whole the temple stands to be felt as a marvel.

In early thought of saivism any spot where in a marvel is enacted is undoubtedly a kshetra or a sacred spot or a field of divinity where in the process of an active power is already on the working. The kshetrahood or sacredness of the spot in reference i.e. the venue of the temple is to be traced to its very beginning that is said to be roughly three hundred years back. It is said that a saintly person known as Kathirkamer who himself is an ardent worshipper (upaasaka) of goddess Durga in a chakra-mystic diagram-form took shelter in an Iruppai-Bassia Longifolia- grove in ulukodai the exact site of the present temple. He installed the Durgadevi chakra at his worship at the foot of a tree there and rested worshiping the same.

Generally it is believed that the foot of a tree under which a saintly person could sit in contemplation retiring from his worldly alliances, becomes a sanctified spot and the tree itself is conceived as the haunt of divinity. It is quite evident from what we witness that the well flourished ancient kshetras include a sacred tree with- in their bounds and the tree too is venerated as Tala Vruksha the tree of the sacred spot and when an icon or anything equvalent to it installed in the same spot the sanctity of and divinity adds to it rises to an unimaginable level.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The natural affinity of divinity with some of the material things such as the tree the water spread, the ant hill and the mountain peaks claimed in the Baihatsamhita and the Bhavishya puraana, the famous Hindu scriptures can be suggested as an scriptural evidence to this fact. So it is not far, from truth if we account the quick and steady development and the marvellous features of this temple to the contact with the particular Bassia Longifolia tree through saint Kathirkaamer. It is also to be noted that four of the same kind of trees are still found in the temple premises.

The awe inspiring sight of the depth and vast spacious dimension of the temple tank attracting the on comer with a long row of sculptural sacred pots set with the traditional mango leaves and the coconuts, on all the four sides the small but well looking difices in the miniature form of shrine rooms with pretty domes in the four corners, the glittering long steps symmetrically laid with spotless white stones and the well painted and fashionably shaped dome (vimaana) over the shrine hall meant for the deity of Durgadevi's residence when the deity visits the tank for the festival of water-cutting ceremony, the admirably large and lofty size of the chariot stand, the all enveloping excellence of artistic beauty manifesting in the rows of carvings of the massive chariot, the imposing height along with the architectural excellence and the sculptural embellishment of the majestic raaja gopuram depicting the graceful functions of gods illustrated in the extent saiva puraanas, the solemn beauty of the niches enshrined with Dvaaraganapathi, Dvaarasubrahmaniya, the Sanganithi and Padu- manithi in the front wall to be found on either side of the raaja gopuram and interposed with fashionable edifices are some of the salient features striking the devotional minds and directing them straight to the darsan of Durgadevi enshrined in the sanctorum manifesting in boundless grace.

The cleanliness of the various halls, shrines and the first praaha- ara-the circum ambulatory passage of the inner temple-is maintained with meticulous care. The vimaana-the single tiered dome over the sanctum sanctorum and the projected shrine room of the mahaamandapam-the court room or pavilion of Durgadevi are pleasant for look as they are adorned with the sculptures of lions in lying posture, the divine goblins at the corners and the deified forms of Sakti one on each side. The inner cavity of the vasanthamandapa shines also with a good fashionable painting. The wall of mahaamandapam is laid with marble slabs. The walls and the floor of Darsana mandapam the audience hall of the temple, are polished with terrazo method of work. That which e Anshines all these beauties and rests behind all these as the beauty of beauties is the grace of the deity of Dugadevi installed in a most appropriate position in the sanctum sanctorum. The deity clad in red silk and worn with golden diadem is remarkably wonderfull because due to the power waves of which the entire temple system glows in lustre and is made so marvellous as what is to be inferred from its history of development.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The present is a time when the moral part of the temple rites and the temple worship is almost neglected mainly because most of the authorities concerned are uninterested in the true spirit and the true import of them and this draw back is deeply felt in the orthordox section of saivism for sometimes. At this juncture the temple stands, as if take it a challenge to fulfill the need of the time by way of putting into practice the just and proper methods of rites and worship. Unlike the average temples it has a domi- nant power over the host of priests working and a mass of saivait worshipping here and get them passively involved in an intensive performance of rites and a real and devotional worship respectively. The systematic and efficient administration of the executive committee headed by Pandit Miss Thangammah Appakutty and the harmoney found in the devotional services of the youths in the name of volonteer corps-Thonder sabai-are to be well attributed to the same. Thus this temple is to play its role in the upliftment of the moral standared of the populace. Such is the bare minimum demanded from the existence of a temple.

The scripture of saivism avowdly stress that any of the tiny default allowed to fall in the temple rites and the worship will have its repurcussions very badly on the public and it will readily affect the moral standared of the people. So it may not be out of place to emphasise that a temple that has no power to keep up the mark, to put in other words, if the temple is powerless to get them performed in purely a religious perspective, has nothing to do in the name of good to the public.

The temple serves the society in a number of ways. It attracts every section of the society, the poor and the rich, the learned and the unlearned, the beggar and the affluent, and the young and the old and treats them all alike. It manifest a pristine pure religious atmosphere in which a mass of saiva public finds solace forgetting their distresses both mental and physical. It gives the necessary impetus to a good number of men and women especially the youths to volunteer themselves for selfless religious services. It provides facilities not only for religious worship but religious lives. Strangely enough, even in the age of kali-notorious for unreligious character. It gets the saiva youths easily involved in the fold of religious characteristics. It contributes much to promote the art of music both vocal and instrumental by way of giving more frequent chances than that are available elsewhere, to musicians to serve this temple and honouring competent musicians occasionally with valueable gifts.

This temple generously allows a good part of its abundance to be channelled towards the propagation of Sivadharma within and without its bounds. It caters for cows breeding, orphanage, a welfare centre for destitute women, regular classes for religious Knowledge and devotional music for saiva children and youths, and religious sessions for adults. It also maintains a centre of Learning (Gurukulam)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

meant for brahmin youths that can produce learned temple priests of good demeaner and a well provided Feeding centre Annashaala within its bounds. It makes good response to calls for Dharma from outside in the name of flood relief, refugee relief educational needs and medical needs.

Of all the religious sessions held under the auspices of this temple, the red coral Jublee of the saiva siddhamta mahaasamaajam of mylapore voluntarity called to be held here was hailed supreme. This session was held continually for three days in a large scale demanding more than a lakh. It attracted a good number of eminent learned pundits and religious adepts from South India and Sri Lanka and thousands of the saivite public are benefitted by it.

Out of all the extensive special agamic rites conducted by this temple, the chandihoma, a famous sacrifice meant for Durga held in 3-5 July 1983 is plausible. This homa that employed hundreds of priests headed by Prof. Dr. K. Kailasanathan, consumed more than a cart load of samith-the sacred fire-stick, gallons of ghee, heap of cereals and other accessories, bundles of cloth, and bouquets of wreaths and garlands lasted for three days in an awe striking devotional atmosphere to the atmost admiration of the devotees gathered in several thousands who actually witnessed the same deity form of Durgaa illustrated in Durgaa sooktam of the Rig veda when the flames of the sacred fire rose to lick the roof of the well decorated pandal erected twelve feet high in the court yard of the temple for that purpose.

The two events just referred are meant to have contributed much to the advancement of the religious as well as cultural atmosphere of this temple.

The impact of the temple on the Saiva public seems to be very intensive. The credence the public has on this temple is admirably great. They firmly belief in the authoritativeness of this temple in healing their distresses speedily and effectively. So they throng in flocks especially on Tuesdays and festival days and perform intensive worship and they also take strenuous efforts to make this temple fullfledged. They bring with them enough of things in cash and kinds as their offer and makes the temple treasury self sufficient. Various things and accessories needed for the performance of even the very extensive rites such as the mahaakumbhaabhisheka and the chandi homa are found heaped in the temple hall with a slight verbal notice. The expenses for the big construction works such as the chariot, the temple tank, the raaja gopuram, the hall for nuptial ceremony 'etc' easily and effortlessly met with voluntary donations. Voluntary services from technicians of all vocation are available, here and such is the impact of the temple on the saiva public.

The propagation of sivadharma is an important factor in the curriculum work of a temple. As it may be superficially felt siva- dharma does not mean the


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

maintenance of the temple and promoting the interest of worship alone. It has a lot to be included in it such as caring for the needies, the destitutes, the orphans, the victims, the ignorants and the deseased in the society out of genune love for the soul viewing it to be manifested by Siva. The Hindu scriptures repeatedly emphasise such services rendered purely in the religions perspective form the potential part of sivadharma. The most appropriate centre to do sivadharama can be the temple alone. Because the religious perspective of viewing the soul Siva - manifested will be more proper in this centre than elsewhere. We have already noted how this temple cater for these things.

So it can be avowedly claimed that by means of all the aspects of progress this temple advances to reach the upper most limit of the ideal of a Saiva temple which is to be culminated from the history of the well flourished saiva temples of the cola period the golden age in the history of tamils. According to reliable epigraphical records it is suggested that the prominent temples of that period are not the centres of mere worship but they are the un- failing sources of social as well as spiritual excellence. Almost all the social institutions such as the schools, art calaries libraries, feeding centres and even hospitals are provided by the temples within their bounds. The temple at Thiruppathy on the venkada hill can be suggested as a living example to this even today.

That the saivism provided for sivadharma having temple the centre for it reflexes the all enveloping nature of saiva philosophy which instructs that whatever good to be done to the humanity should be had purely in a religious atmosphere and that alone would be conducive to one's realization of absolute truth which is the highest level of human goal to which saivasiddhanta stands for ever.

**Source:** Sri Durga Devi Temple of Tellipplalai (Pages 8-13)
**Published by:** Sri Satkuru Pablications Indological and Oriental Publishers a Divison of Indian Book Centre, 40/5, Sakti Nagar, Delhi, India; First Edition: Delhi 1991


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Goddess Durga


## Tamil Pandit Dr. M. Kandaiyah, Earlalai


The twin aspects of God as Siva and Sakti is a significant feature of saivism. How Siva is thus Sakti is. It is an accepted truth expounded in traditional saiva treatises. Though they are inferentially two yet there is no twoness to be found. Both of them are inseparably one even as the fire and heat, jewel and lustre, and flower and fragrance. Whatever aspect of divinity acclaimed to Siva is not without its share to Sakti. There is no Siva without Sakti and no Sakti without Siva, even when it is philosophically ex- pounded that Sakti is the manifestation of Siva, the being of Siva in the manifestation, itself is implied to be.

The Sakti of Siva is named variously such as grace, power and energy. According to philosophical and theological threatises it is established that the Sakti, though it is formless like Siva becomes visible to seers and sages like Thirumooler in an innumerable forms of manifestation to be named variously as Gowri, Kaali, Umaa, Durgaa, Puvaneswari, Lakshmi, Saraswati, Rajesvari and Lalita all of them are one and the same in essence. Though they are sometimes distinguished as higher and lower deities for purposes of various functions attributed to them in the annuals of ceremo- miral settings all of them are same in substance.

Saivism in its long history has been admitting the worship of Siva with Sakti being an inseparable part of it. Yet to worship the ferent forms of Sakti as visualized by seers and sages also how- ever bas become inevitable and even then the concept of worship is mot worshipping Sakti alone. The inseparableness of Sakti with Siva warrants that Siva is implied in the act of worshiping the Sakti effected a temple to Nisumba soothithe killer of the demon Nisumba-an epithet of Durga. But it does not mean that the wor- ship of Durga started in the 9th century itself. The deity




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

worship by the individuals is much more earlier than temple worship. The sculptors of lore had an special taste in engraphing the Durga forms. An sculpture of Durga of the 7th century found in Maamalla puram the famous city of Arts in south India is commended much for its expression of dreadfulness mingled with calmness.

The ancient kshetras include at least a shrine room for Durga within their bounds somewhere within and somewhere without the temple court yard, the inner praahaara or the circum ambulatory passage. In some towns Durga is installed as guardian deity and worshiped with due respect. In paddeecharam a reputed ancient Siva temple Durgadevi is installed in the front hall within the temple and honoured as the prominent deity of the temple. In Thiruvotiyoor Durga is installed in the northernside of the inner praahaara and worshiped in the name of Vaddapuri Amman with special rituals and festivals for fifteen days in a particular season every year. In Thiruvaaroor, the prominent Siva temple in the Tanchoor district Durga is installed outside the temple bounds in the name of Raaja Durgaa. In Vedaaranyam she is worshiped in the name of Kaadukaal or Kaadukilaal meaning the deity of the forest and it is held as a remnant of the habit of worshipping Durga as the principal deity of the desserts as laid down in Thol-kaappiam, the famous encyclopedia of Tamil Culture.

Durga is also worshiped in some other kshetras in her mani- fested form of Kaali. The deified forms of Kaali worshiped in the Thraupathi Amman temple at Kumpakonam and Chidamparam- Thillaikaali-are to be noted. Vide: Encyclopedia in Tamil, Madras edition Book 3, page 623.

That Durga was worshiped as an absolute deity form in the Saiva land has come down through both the Tamil canon and the Sanskrit Canon. In the canonical literatures she is known as Kottavai, Kotti, Kumari, and Kanni. In the later literatures she is mentioned as Imay akilavi and Kadumporkkanni, Kottavai-Kotta +Avvai-Victory + mother means-The goddess of victory. Kumari and Kanni means the virgin. Imaya kilavi means the old deity of the mount Himaalaya. Kadumporkanni means the virgin. going on furious war. Through the Sanskrit Canon she has been known as Thripura, Chandikaa, Chaamundi, Kaali and Durga, Durga means the deity of the fortress or she who is difficult to be approached. Chandikaa and Chaamundi means Victorious over the demons Chanda and Chaamunda by name. The common feature of all these names categorically point to Durga's Character of being ever victorious.

In Thirumurukaattuppadai, one of the canonical literatures in Tamil Lord Muruka is invoked as vetti velpor kottavai Siruva!- the tender child of Durga known as victorious in the wars. The relationship of Durga with Muruka in the victory point of view is brought out well in the legend of Vyaaghraasura. The theme of the legend is


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

that goddess Durga and Lord Muruka once formed an array against Vyaaghraasura who had the demon Mahisha as his alliant and in the ensuing war Durga killed Mahisha and Muruka Vyaaghraasura. Vide the article Vyaaghraasura sambaaramoorthi in the Sovenier published on 4-9-78 by the executive committee of Durgadevi temple in commemoration of the chariot-construction. While dealing with the said legend the author of the article nicely brought to light the inner secret or the special significance of why the deity of Muruka from Maavidda-puram should visit the temple of Durgadevi on the occasion of Mahaanambu festival falls in the month of September year after year.

Of all the accounts of Durgadevi that has come down through Sanskrit Canon the one which is found in the Maarkandeya purana is celebrated. A chapter under the title of Devi Mahatmya in that purana contains 700 verse-form mantras known as the 'Saptasati' meaning, that which contains seven times hundred. The Sapta- sati is celebrated as the best for chanting and meditating on Durga and the other best use of it is to be observed when it is used in the elaborate sacrifice the chandihoma where in it adds much to the devotional flavour to be prevailed in the officiating priests and the worshipers participating in the homa ceremony. The saptasati is taken also as complimentary of the enchanting of the mystie formulae known as Navaakshai which is said to be the best to invoke the grace of Durga. The Navaakshari mentra renders as 'Aum- Aim Hreem-Kleem-Chaamundaayai Vicce' meaning I know god- dess chaamunda as the very form of the threefold, base-form mystic formulae Aim, Hreem and Kleem.

The saptasati is of immense value for so much as it expounds almost all the divine attributes and marvellous power of Durga- devi through simple legends easily appealing even to less cultured minds. The all embracing character and the all enveloping feature of manifestation of Durgaa are well defined in this portion of Maargandeya puraana especially in mantras 273-339 chap. 5. The axiomatic truth that the in and out of the entire soul cavity is exclusively filled in and moved by Durgadevi, the chandikaa is well portrayed in this section and thereby its excessive power of creating devotional atmosphere in the worshipers mind is enormous.

The bulk of different manifestations of Durgadevi seem to form a good part of Hind a pantheon and this is mainly attributed to the saatvic raajasic and thaamasic nature of grace. She assumes in view of her gracious acts of liberating the good, protecting the passionate and destroying the vicious types of men respectively. (To destroy means the destruction of the bad qualities prevailing in one but not the soul). The most dreadful form of Durga is said to be Thamasic which may be seen to have several hands-eight, ten and even eighteen-wielding deadly weapons and also with terrible facial features such as knitting eye-brows and daring look. The form of Durga, the expression of which may be in a complex of dreadfullness mingled with calmness is said to be raajasic. The sculpture of 7th century at


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Maamallapuram refered to above can be suggested as an example to this type and that which is manifesting in a solemn beauty of calmness is called to be saatvic. It is also interesting to note that one and the same of these three forms may act differently on different worshiper as to get him gifted with what he deserves, provided his worship is just and proper.

Of the three forms mentioned above the one installed in our temple at Tellippalai is Saatvic. Its facial expression is calmness, It has the bare minimum of four hands wielding the couch, the discuss the trident and the skull sometimes Sakti is identified with Vishnu and called Naaraayanee and always claimed to be one with Siva. It is remarkable that our deity here is born with the attri butes belonging to both Vishnu and Siva. It is a form rarely me with in the bulk of deity forms of Sakti. The conch and discus are of Vishnu and the rident and the skull are of Siva. Th significance of these four attributes amounts to the special featur of our deity. The conch reveals Sakti's attachment with pranava which is expressed in the couch by it form and sound. The discus: signifies her being the wielder of power. The rident mentions that she is an embodied form of Icchaa Kriyaa and Jnaana the volitior conation and cognition respectively. The skull stands as a sign of her being even after everything is reduced to its final stage of perish and thereby it is she who causes the destruction on behalf of her Lord Siva. Totally all these amount to show that our deity is non other than Paraasakty and she is Durga parameswari. The solemn calmness and graceful lustre radiating from the face of this deity may increase an insatiable thirst for worship on Her devotees.

**Source:** Sri Durga Devi Temple of Tellipplalai (Pages 1 -7)
**Published by:** Sri Satkuru Pablications Indological and Oriental Publishers a Divison of Indian Book Centre, 40/5, Sakti Nagar, Delhi, India; First Edition : Delhi 1991


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்கா தேவஸ்தான வரலாற்றுக் குறிப்பேடு

1760 : காசியிலிருந்து துர்க்காயந்திரமும் திருமுகக் கெண்டியும் அம்பாள் உபாசகர் கதிர்காமர் கொண்டுவந்து அம்பாள் ஆலய ஸ்தாபிதம்.

1820 : வெள்ளைக்கல் திருப்பணி நிறைவேற்றப்பட்டு புனருத்தாரண மகா கும்பாபிஷேகம்.

1829 : மாவை முருகன், விஜயதசமியிலன்று இவ்வாலயத்திற்கு எழுந்தருளி வந்து வன்னி வாழை வெட்டும் மானம்பூ விழா ஆரம்பமும்.

1949-06-26 : தனி முகாமையாளரிடமிருந்து உறுதிமூலம் தர்மகத்தா சபை நியமனம்.

1953-8-06 : பாலஸ்தாபனமும் திருப்பணி வேலைகள் ஆரம்பமும்.

1953-08-22 : கர்ப்பக்கிருக மண்டப அத்திவாரக்கல் நாட்டல்.

1954-02-08 : மூலஸ்தானம் வெள்ளைக் கற்கோயில் அர்த்த மண்டபம் வரை திருப்பணி பூர்த்தி.

1962 : அர்த்த மண்டபம் வெள்ளைக் கற்கோயில் பூர்த்தி

1962-05-05 : தர்மகத்தா சபையினால் பூர்த்தியாகிய திருப்பணிகளுக்குரிய கணக்கு அறிக்கை வெளியீடும், முப்பது அங்கத்தவர்களைக் கொண்ட திருப்பணிச் சபை உருவாக்கமும்.

1964 : மகா மண்டபத் திருப்பணி வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1964-03-31** : திருப்பணிச் சபையினால் மகா மண்டபத் திருப்பணி வரவு செலவுக் கணக்கு விவரம் வெளியீடு.

**1965** : ஸ்நபன மண்டபம் திருப்பணி வேலை

**1965** : விநாயகர், நாகதம்பிரான், வைரவர் சந்நிதி, திருப்பணி வேலை சிம்மம், பலிபீடம், மடைப்பள்ளி, வெளிக்கிணறு

**1965-05-03** : பொதுக் கூட்டத்தின் மூலம் பதினேழு அங்கத்தவர்கைக் கொண்ட திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டது.

**1965 - 06-25** : பரிவார விநாயகர் ஆலய அத்திவாரக் கல் நாட்டல்

**1965-07-11** : தெல்லிப்பழைச் சைவ இளைஞர்கள் ஆலயத்தில் சிரமதான இயக்கம் ஆரம்பம்.

**1965-08- 20** : ஆலயத்திற்கு வெளியே கிணறு ஒன்று வெட்டிக் கட்டப் பட்டது.

**1965-08-25** : நான்காம் மண்டபத் திருப்பணி பூர்த்தி.

**1965-09-04** : சிரமதான இயக்கத்தினர் நாலாம் மண்டபத் திருப்பணி நிதிக்காக மகாஜனாக் கல்லூரியில் கதம்ப நிகழ்ச்சி.

**1965-09-05** : பெரியசாமி ஸ்தபதி அவர்களல் உருவாக்கப்பட்ட துர்க்கை அம்பாள் விக்கிரகம் ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டு வருதல்

**1965- 09-07** : பெருந்தெருவிலிருந்து ஆலயத்திற்கு நிரந்தர மின்சார இணைப்பு.

**1965- 09-08** : ஆவணித் திங்கள் 23 ஆம் நாள் உதயநேரத்தில் திருவோண நட்சத்திரத்தில் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் பரி வாரத்தில் விநாயகர், சந்தானகோபாலர், பைரவர், சிம்மம், பலிபீடம் அமைக்கப்பெற்றது.

**1965-12-22** : ஆலய திருப்பணிச் சபை அறிக்கையும் 1965-10-31 வரை வரவு செலவுக் கணக்கும் வெளியிடல்.

**1966** : ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், உள்வீதி சுற்றுமதில் அமைக்கப்பட்டது.

**1966 -05-18** : தர்மகர்த்தா சபைக் கூட்டத்தில் பதினைந்து பேர் கொண்ட நிர்வாக சபை நியமனம்.

**1966-06- 24** : வெள்ளிவிழாக் காணும் நிர்வாக சபையின் முதற் கூட்டம் உத்தியோகத்தர் தெரிவு ஆலயபரிபாலன கடமைகள் பொறுப் பேற்றல்.

**1966-08-27** : மகாதனை மக்கள் உபயமாக மணிக்கோபுரத் திருப்பணி பூர்த்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966-09-25 : சட்டத்தரணி பொ.கந்தையா உபயமாக வசந்த மண்டபத் திருப்பணி பூர்த்தி.

1967-07-25 : "திலக கோட்டம்" (நிதி அலுவலகம்) கட்டப்பெற்றது.

1967 : மணிக்கோபுரம் கட்டப்பெற்றது.

1967 : முன்வாசல் வெளி மண்டபம், அலுவலகம் அமைக்கப்பெற்றது.

1968 : யாகசாலை அமைக்கப்பெற்றது.

1968-06-20 : யாக மண்டபத் திருப்பணி பூர்த்தி, உற்சவ மூர்த்திகளாக விநாயகர், வள்ளி தேவசேனா சமேத ஆறுமுகசாமி, சண்டேஸ் வரி அஸ்திரதேவர், பலிபீடம், ஸ்தாபிதம், கூட்டுப் பிரார்த் தனை ஆரம்பம்.

1968-08-09 : முதன் முறையாக கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பம்.

1968-08-19 : கட்டுத்தேரில் அம்பாள் பவனி.

1968-12-20 : திருநந்தவனம் அமைக்கப்பட்டது.

1971 : வாகனசாலை அமைக்கப்பட்டது.

1971-04-08 : செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயச் சொற் பொழிவு மூலம் மலேசியாவில் அம்பாளின் அருட்பிரவாக பிரசாரம் ஆரம்பம்.

1971-07-10 : உட்பிரகார வாகனசாலைத் திருப்பணி பூர்த்தி. பெருந்தெரு விலிருந்து வாயிலுக்கு நேராக புதிய பாதை திறப்பு.

1972-02-04 : "திருமுறை மடம்" சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் உபயமாக கட்டப்பெற்றது.

1973 : மலசலகூடம், முன்வாசல் புதியபாதை அமைப்பு

1973 : உட்பிரகார கொட்டகை வேலை ஆரம்பம்.

1973-01-23 : அர்ச்சனைச் சீட்டுக்கள் பெற்று அர்ச்சனை நடைபெறும் ஒழுங்கு ஆரம்பம்.

1974-05-04 : செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 25 ஆண்டுகள் சமயத் தொண்டினை பாராட்டி "துர்க்கா துரந்தரி" பட்ட மளித்து பொன்னாடை போர்த்தி வெள்ளி விழா எடுக்கப் பட்டது.

1974-12-31 : நிர்வாக சபை அமைப்பு விதிகள் வரையப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது.

1975-01-07 : துர்க்கா துரந்தரி அவர்களின் "பொன் விழா" வைபவம்.

1976 : உட்பிரகார கொட்டகை பூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1976-03-18* : ஸ்ரீ கஜலட்சுமி கோயில் கும்பாபிஷேகம்.

*1976* : ஸ்ரீ பாலசுப்பிரமணிய சந்நிதி ஸ்தாபிதம்

*1976-1977* : திருமுறைமட அறைகள் அமைக்கப்பட்டது

*1977* : கஜலட்சுமி சந்நிதி ஸ்தாபிதம்

*1977* : வெளி வீதி விஸ்தரிப்பு

*09-1977* : செவ்வாய் இரவுத் திருவிழா ஆரம்பம்.

*1977-11-20* : தேர்முட்டித் திருப்பணி ஆரம்பம்.

*1977-1978* : தேர்

*1978-03-01* : கோயில் பிரதமகுரு - சுகவீனம் காரணமாக ஓய்வு.

*1978-09-04* : சித்திரத்தேர் வெள்ளோட்டம் - மலர் வெளியீடு

*1978-09-10* : தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவிக்கு சாகித்திய மண்டலப் பரிசு. (கந்தபுராணச் சொற்பொழிவு நூலுக்கு)

*1978-09-13* : தேர்த் திருவிழா- வானொலி நேர்முக அஞ்சல்.

*1978* : ஸ்ரீ சக்கர பூசையும் பூரணை விழாவும் ஆரம்பம்.

*1979* : தேர்முட்டி, உற்சவமூர்த்தி, சண்டேஸ்வரர் சந்நிதி, பொங்கல் மண்டபம், அலங்கார மண்டபம், ஞானசுரபி, மகளிர் இல்ல விடுதி, பாதுகாப்பு அறை

*1979* : சபாமண்டபம், இராஜகோபுரம், மூலஸ்தான தூபி திருக் கோயில்

*1979-01-14* : பெண்கள் தொண்டர் சபை - அங்குரார்ப்பணம்.

*1979-01-15* : இராஜகோபுரம் அத்திவாரம் வெட்டல்.

*1979-02-10* : இராஜகோபுரம் அத்திவாரக் கல் நாட்டல்.

*1979-07-01* : புதிய உற்சவமூர்த்தி அம்பாள் ஊர்வலம் கன்னாதிட்டி காளி கோயிலிலிருந்து ஆரம்பம்.

*1979-07-05* : புதிய உற்சவமூர்த்தி, சண்டேசுரர் கோவில் கும்பாபிஷேகம்.

*1979-07-24* : ஸ்தபதி சி. பெரியசாமி அவர்களுக்கு கௌரவமும் பிரியா விடையும்.

*1979-12-03* : முதன்முறையாக கௌரி விரதம், திருவிளக்கு பூசை ஆகியன ஆரம்பம்.

*1979* : நுழைவாயில், பொங்கல் மண்டபம் திருப்பணிகள் பூர்த்தி.

*1979-12-31* : பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினரால் முதன்முதல் கணக் காய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980-04-24 : குருகுல வகுப்பு - ஆரம்பம்.

1980-07-18 : "ஞானசுரபி" மண்டபம் திறப்பு விழா.

1980-07-31 : ஞா. குமாரசுவாமிக் குருக்கள் இறைவனடி சேர்ந்தார்.

1980-08-11 : அசையாமணி - ஏற்றும் வைபவம்.

1980-11-20 : அந்தணர் விடுதிக்கு - அத்திவாரமிடல்.

1980 : பாதுகாப்பறை, எழுந்தருளிக் கோயில் ,தென்கிழக்கு வளவில் கிணறு ஸ்தாபிதம்.

1981 : இராச கோபுரம், சங்கநிதி, பதுமநிதி, அந்தணர் இல்லம், அன்ன பூரணி மண்டபம், தம்பப் பிள்ளையார் ஆகியன ஸ்தாபிதம்.

1981-01-25 : தொலைபேசி இணைப்பு பெறப்பட்டது. பாலஸ்தாபன கும்பா பிஷேகம்.

1981-04-17 : புனருத்தாரண மகா கும்பாபிஷேகம், இராஜகோபுர மகா கும்பாபிஷேகம். துவார கணபதி, துவார பாலசுப்பிரமணியர், சங்கநிதி, பதுமநிதி, பிரதிஷ்டை ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகள் வருகையும் - சமயச் சொற்பொழிவும் திருப்பனஞ்தாள் ஆதீன ஓதுவார் முத்துக்கந்த தேசிகர் அவர்களின் திருமுறைப் பண்ணிசையும், ஐந்து காலப் பூசையும் ஆரம்பம்.

1981-05-08, 09,10 : சென்னை சைவசித்தாந்த சமாசத்தின் மகாநாடும் பவள விழாவும்.

1981-05-31 : மண்டலாபிஷேகம் - மலர் வெளியீடு (கும்பாபிஷேகம்).

1981-06-01 : சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக நியமனம்.

1981-08-31 : மகோற்சவத்தை பிரகடனப்படுத்தப்பட்ட திருவிழாவாக அரசு தீர்மானித்தமை.

1981 : முதன்முதலாக மகோற்சவத்தில் வேட்டைத் திருவிழா.

1981 : அன்னபூரணி மண்டபம் கட்டப்பெற்றது.

1981-11-04 : தீர்த்தக்கேணி - மண் எடுத்தல் வைபவம் ஆரம்பம்.

1982 : தீர்த்தத் தடாகம் - துர்க்கா புஷ்கரணி அமைக்கப்பெற்றது.

1982 : மாதப் பிறப்புக்களில் சங்கிராந்தி தீர்த்தம்.

1982-01-24 : முதன் முதலாக அபிராமிப்பட்டர் விழா.

1982-02-03 : துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆரம்பம்.

1982-04-08 : தேவஸ்தான தலைவரின் காசி யாத்திரையும், கங்கை, யமுனை தீர்த்தங்கள் கொண்டுவரலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1982-04-14* : வருடப் பிறப்பிலன்று முதன்முதலாக 108 கலச அபிஷேகம்.

*1982-04-27* : அகில உலக இந்து மகாநாட்டுப் பிரதிநிதிகள் வருகை.

*1982-07-30* : முதன் முறையாக வரலட்சுமி விரதாரம்பம்.

*1982-09-01* : “துர்க்கா புஷ்கரணி” தடாகப் பிரதிஷ்டையும் மலர் வெளியீடும்.

*1982-09-16* : கலாசூரி நா. க. பத்மநாதன் அவர்களுக்கு பாராட்டு விழா.

*1982-09-19* : தேவஸ்தான தலைவருக்கு சமாதான நீதவான் பட்டமளிப்பு.

*1982-12-16* : திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் சொற்பொழிவு.

*1982-12-17* : பெண்கள் தொண்டர் சபை தென் இந்திய யாத்திரை.

*1983-04-14* : அன்னபூரணி - கல்யாண மண்டபமாகத் திறப்பு விழா, சப்பறத் திருப்பணிகளுக்கான கால்கோள் விழா.

*1983-07-1,2,3* : சதசண்டி ஹோமம்.

*1983-10-25* : பெரிய புராண வசனம் 18ஆம் பதிப்பு வெளியீடு.

*1983-12-02* : துவார பாலசுப்பிரமணியர் பிரதிஷ்டை.

*1983* : தீர்த்த மண்டபம் - நிர்மாணம், புதிய லிஸ்ரர் மின் இயந்திரம் கொள்வனவு, யாழ். பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு நிதியுதவி, மடைப்பள்ளி விஸ்தரிப்பு, பக்தர் விடுதி கட்டிடம் அமைப்பு.

*1984-01-18* : மகளிர் இல்ல மாடிக் கட்டிடத்திற்கு அத்திவாரமிடல்

*1984-06-03* : இனக் கலவரத்தால் அகதியான குடும்பத்திற்கு வீடு கையளிப்பு. பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் மணிவிழாப் பாராட்டு.

*1984-06-19* : “அரியதும் பெரியதும்” பகுதி I வெளியீடு.

*1984-07-31* : சைவ போதம் 1ஆம் புத்தகம் நூல் வெளியீடு.

*1984* : யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்த பீடத்திற்கு நிதியுதவி.

*1985-01-07* : தேவஸ்தானத் தலைவரின் மணிவிழா நூல் வெளியீடு.

*1985-01-20* : அபிராமி அந்தாதி நூல் வெளியீடு.

*1985-03-04* : நள்ளிரவில் கொள்ளைச் சம்பவம்.

*1985-06-04* : திருமுறை முற்றோதல் ஆரம்பம்.

*1985-08-10,11* : கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், துர்க்கா ஹோமம்.

*1985* : சுற்று மதில் திருப்பணி பூர்த்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1985 | : சப்பறத் திருப்பணி, துர்க்காபுர மகளிர் இல்ல விடுதி மாடிக்கட்டடம் ஆகியன அமைப்பு |
| 1986-01-31 | : துர்க்காபுரம் மகளிர் இல்ல மாடிக் கட்டிடம் திறப்பு விழா. |
| 1986-02-14 | : மாசிமக இலட்சார்ச்சனை ஆரம்பம். |
| 1986-02-24 | : ஏகாதச கலசாபிஷேகம். |
| 1986-03-26 | : தேவஸ்தான உபதலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களின் முத்துவிழா. |
| 1986-05-23 | : களவு போன நகைகள் திரும்பிய அற்புதம். |
| 1986 | : செங்கழு நீர்த்தொட்டி - அமைப்பு. |
| 1986-07-01 | : அரியதும் பெரியதும் பாகம் II நூல் வெளியீடு. |
| 1986-10-12 | : தவில் நாதசுர வகுப்பு ஆரம்பம், கொடிமரம் தகடுகள் புதுப்பித்தல். |
| 1986 | : கோப்பாய் றெக் என்ஜினியாஸ் - குழாய்க் கிணறு அமைப்பு. |
| 1987-04-18 | : தேவஸ்தானத் தலைவரின் பிரித்தானியா விஜயம் (இலண்டன்). |
| மே - 1987 | : வன் செயல் காரணமாக இடம்பெயர்ந்த அகதிகளுக்கு வெளி மண்டபம் அமைப்பு, ஆறுமாத கால பராமரிப்பு, ஊனமுற்றோர், மரணித்தோருக்கு நிதி உதவி, ஆடி அமாவாசை தினத்தன்று துர்க்கா புஷ்கரணியில் மாவை முருகன் வேல் எழுந்தருளி தீர்த்தமாடி அடியார்களுக்கு காட்சி கொடுத்தமை. |
| யூன் - 1988 | : கூட்டு வழிபாட்டு பாமாலை 4ஆம் பதிப்பு வெளியீடு, கந்த புராணச் சுருக்கம் நூல் வெளியீடு, ஸ்ரீ துர்க்கா நூலகம், வெளி வீதி வாகானசாலை, பணியாளர் விடுதி அமைப்பு. |
| 1988-08-14 | : புதிய அன்னதான மண்டபம் ஸ்தாபிதம். |
| 1989-04-01 | : சுன்னாகம் திருமகள் அழுத்தகம் - கொள்வனவு.<br>நிதி அலுவலக விஸ்தரிப்பு. |
| 1989-12-31 | : இராமதாஸ் அருளுரைகள் - நூல் வெளியீடு. |
| 1989 | : சரஸ்வதி மண்டபம், அலுவலர் விடுதி, அன்னதான மண்டபம் ஆகியன ஸ்தாபிதம். |
| 1990-01-07 | : சமயப் பணிகளுக்கென சிவத்தமிழ்ச்செல்வி பிறந்ததின அற நிதியம் ஆரம்பம், ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாம ஸ்தோத்திர நூல் வெளியீடு நிறைவேறியமை |
| 1990-04-28, 29,30 | : தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க வெள்ளி விழாவும், மலர் வெளியீடு நிறைவேறியமை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990-06-15 : அகதிகள் பராமரிப்பு ஆரம்பம். மல்லாக கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் குழாய்க் கிணறு அமைப்பு.

1991 -01-07 : சைவக் கிரியைகளும் விரதங்களும் நூல் வெளியீடு.

1991 : அகதிகள் மண்டபம் அமைப்பு, பராமரிப்பு.

1991-06-24 : வெள்ளி விழாவை முன்னிட்ட சங்காபிஷேகம்.

1991-08-30 : வெள்ளி விழா மலர் வெளியீடு.

1992-05-31 : ஆலயத்தின் மீது விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை. பக்தர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். ஆலயம் சேதமடைந்தது.

1997 : மகா கும்பாபிஷேகம்.

2002 : நல்லூர் துர்க்கா மணிமண்டபம் அமைக்கப்பெற்றது. அன்ன சத்திரம் விஸ்தரிப்பு. சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலக நிர்மாணம்

2004 : யாத்திரிகர் விடுதி ஸ்தாபிதம்

2014-2015 : துர்க்காதேவி வீட்டுத்திட்டம்

2009 : திருமஞ்சத் திருப்பணி

2010 : பாலஸ்தாபனம்

2011 : உட்கோயில் நிலம் ரெறோசோ பதித்தல், ஆலய முன்மண்டபம் புதிய பெரிய மணிக்கோபுரம் அமைத்து 100kg எடை கொண்ட புதிய காண்டாமணி பொருத்தப்பட்டது.

2011 : மகாகும்பாபிஷேகம்

2013 : கைலாசவாகனத் திருப்பணி

2014 : சமயகுரவர் நால்வர் பிரதிஷ்டை

2014 : நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணம்

2014 : தணிகாசலம் பூங்கா யஅமைப்பு

2016.01.07 : அன்னையின் 91 ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை சிறுவர் விடுதிப்பிரிவு பெற்றுக்கொண்டவர் - வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி அவர்கள் (பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை

பெற்றுக்கொண்டவர் - வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகர் அவர்கள் (அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை)

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்

(தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரத்தில் (2016)ல் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் தேவைப் படுபவர்களில் முதன்மையானவர்களையும் கருத்திற் கொண்டு 100 மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்)
பெற்றுக்கொண்டவர் - திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம் அவர்கள் (கல்விப் பணிப் பாளர், தீவகக் கல்வி வலயம்)

2017 : தெற்குவாசல் கோபுரம்

2017.01.07 : அன்னையின் 92ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை பெண்கள் வைத்தியப் பிரிவு
பெற்றுக்கொண்டவர் - வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி அவர்கள் (பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை
பெற்றுக்கொண்டவர் - வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகரன் அவர்கள் (அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம் (தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரத்தில் (2017)ல் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மை யானவர்களையும் கருத்திற் கொண்டு 100 மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்)
பெற்றுக்கொண்டவர் - திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் அவர்கள் (கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம்)

2018 : குபேரவாசற் கோபுரம் ஸ்தாபிதம்

2018 : வடக்கு பக்க புதிய பாதை திறப்பு

2018.01.07 : அன்னையின் 93ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை பெண்கள் சத்திர சிகிச்சைப்பிரிவு
பெற்றுக்கொண்டவர்: வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் (பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை)
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை
பெற்றுக்கொண்டவர் - வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகரன் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

உதயம் விழிப்புலனற்றோர் சங்கம்,
கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்
(தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரத்தில் (2018)ல் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவர்களையும் கருத்திற் கொண்டு 100 மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்) பெற்றுக்கொண்டவர் - திருமதி. செல்வின் சுகந்தினி செபஸ்ரியன் அவர்கள் (கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம்)

*2019* : மேற்குவாசற் கோபுரம்

*2019* : தங்கரதத் திருப்பணி

*2019.01.07* : அன்னையின் 94ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை இருதய சத்திர சிகிச்சைப்பிரிவு
பெற்றுக்கொண்டவர் - வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி அவர்கள் (பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை
பெற்றுக்கொண்டவர் - வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகரன் அவர்கள் (அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரத்தில் (2019) கல்வி கற்கும் திறமையின் உச்சமும் தேவைப் படுபவர்களில் முதன்மையானவர்களையும் கருத்திற் கொண்டு 100 மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்
பெற்றுக் கொண்டவர் - திரு. எஸ்.சந்திராஜ் அவர்கள் (கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

*2020* : திருமகள் அழுத்தகம் மற்றும் மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணம்

*2020.01.07* : அன்னையின் 95ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம் : மன்னார் கல்விவலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2021.01.07 : அன்னையின் 96 ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

கருவள சிகிச்சை நிலையம்
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்

2021 : உள்வீதிக்கான புதிய சித்திரத்திரத்தேர் உருவாக்கம்

2022 : தலைவாசல் கோபுரம்

2022.01.07 : அன்னையின் 97 ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப்பிரிவு
பெற்றுக்கொண்டவர்:
வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி அவர்கள்
(பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை
பெற்றுக்கொண்டவர்:
வைத்திய கலாநிதி ப. தீலிபன் அவர்கள்
(அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்
(வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரம் (2022)ல் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவர்களையும் கருத்திற் கொண்டு 50 மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்)
பெற்றுக்கொண்டவர்:
திரு. பொன்னையா ரவிச்சந்திரன் அவர்கள்
(கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

2023.01.07 : அன்னையின் 98 ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு
பெற்றுக்கொண்டவர்: - Dr. M. M. றிமான்ஷ்
(அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்
(தெல்லிப்பழை கல்விக்கோட்ட பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரம் (2023)ல் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவர்களையும் கருத்திற் கொண்டு 50 மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்)
பெற்றுக்கொண்டவர்: திரு. வேலாயுதர் அரசகேசரி
(கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழை கோட்டம்)

2023 : பாலஸ்தாபனம், மூலாலய கருங்கற் திருப்பணி: துர்க்காதேவி அம்பாளுக்கான கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் ஆகியவற்றை கருங்கற்களால் அமைக்கப்பட வேண்டும் என்ற கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களது சிந்தனை நிறைவேற்றப்பட்டது. பாரிய திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2024.01.07 : அன்னையின் 99 ஆவது பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு
பெற்றுக்கொண்டவர்:
வைத்திய கலாநிதி ஏகாம்பரநாதன் தேவநேசன்
(அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்
(உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரம் (2024)ல் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவர்களையும் கருத்திற் கொண்டு 50 மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்)
பெற்றுக்கொண்டவர் - திரு. பஞ்சாட்சரம் கணேஷ் அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)

2024-03-25 : மகா கும்பாபிஷேகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைவுகளின் நிழலில்
துர்க்கா துரந்தரி
தங்கம்மா அப்பாக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருபானந்தவாரியாருடன்...



ஹரிதாஸ் சுவாமிகளுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள் மற்றும் கலாநிதி ஆறுதிருமுருகனுடன் அன்னை...



அருட்கவி சீ. விநாசித்தம்பியுடன் அன்னை...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். போதனா வைத்தியசாலைக்கு அறக்கொடை வழங்கும்போது...



யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு அறக்கொடை வழங்கும்போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1972 இல் மலேசியா சிலாங்கூர்
இலங்கைச் சைவச் சங்கத்தினர்
'திருவாசகக் கொண்டல்'
என்ற பட்டத்தை வழங்கிக்
கௌரவித்த போது



1972 ஏப்பிரலில் சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம்
சிவத்தமிழ்ச்செல்விக்கு
பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரிகளுடன் அன்னை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையினருடன் பெருந்தலைவர் துரக்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்




துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளுடன் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களது நூற்றாண்டில் மலர்ந்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பெண்பாற் கவிதாயினிகளின் படைப்புக்களில் தமிழர் பண்பாடும் வாழ்வியலும்: ஓர் நோக்கு

**பேராசிரியர். சிவேசன் சிவானந்தமூர்த்தி**
*பேராசிரியர் மற்றும் நிகழ்ச்சி திட்டத் தலைவர்*
*சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ அலகு*
*யாழ்ப்பாணப் பல்கலைகழகம்*

## 1.0 அறிமுகம்

இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்க்கைக்கான வாழ்வியல் இலக்கணத்தினை வகுத்தும், வகுத்ததன் படி வாழ்ந்த, கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு, நாகரீகங்களினை உடைய ஓர் உன்னதமான இனமாக தமிழ் இனம் நோக்கப்படுவதற்கும், ஆராதிக்கப்படுவதற்கும் பண்டைய தமிழ் இலக்கியங்களின் செழிப்பும், கருத்து செறிவும், அவை வழியாக இயம்பப்படும் வாழ்வியல் நடைமுறைகளும் முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது. பண்டைய தமிழர்கள் அக மற்றும் புற வாழ்வியல் பற்றிய தெளிவான, திடமான சிந்தனை புரிதலினையும், கருத்தியல் உருவாக்கத்தினையும் கொண்டிருந்தனர் என்பதற்கு அவர்களுடைய படைப்புகள் சான்றுகளாக அமைகின்றன (வித்தியானந்தன், *1982:* வேலுப்பிள்ளை *1985).* இலக்கியங்களின் வாயிலாக மக்களின் பண்பாடு, நாகரீகம், வாழ்க்கை முறை, அறம், வீரம், அறிவு, அரசு, ஆட்சிமுறை, போர், காதல், அன்பு, பணிவு, துணிவு போன்றவற்றினை அறிந்து கொள்ள முடிகின்றது. இலியாட் (*Iliad*), ஒடிசி (*Odyssey*) போன்ற பழமையான ஓமரின் (*Homer*) கிரேக்க இலக்கியங்கள் போன்று சங்க இலக்கியங்களும் மிக தொன்மையானதாகவும் புராதன தமிழர்களின் அறிவுசார் புலமையினை அறிந்து கொள்வதற்கு ஆதார சுருதியாகவும், அடையாளமாகவும் அமைந்துள்ளன. எனவே இவை காலம் கடந்தும் போற்றுதலுக்கு உரியனவாகவும், ஆய்வுகளுக்கு தொடர்ந்து உட்படுத்தப்படுபவையாகவும் காணப்படுகின்றன. "பண்டைய தமிழர் பண்பாடு : ஓர் புதிய அணுகுமுறை" என்கின்ற படைப்பில் பேராசிரியர் பாலசுந்தரம் தமிழர்களின் வரலாறு, பண்பாட்டுக் கோலங்களினை புனைகின்ற போது உசாத் துணைகளாக தமிழ் இலக்கியங்கள் உரம் சேர்க்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார் (பாலசுந்தரம், *2015).* மேலும் வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு ஆகும். வரலாறுகள் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியவையே. மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்படுகின்ற போது பண்டைய வரலாற்றினை நவீன கால சிந்தனை மரபுகளுடன் ஒப்பிடுகையில் முரண்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படவே செய்கிறது. அவை தவிர்க்க முடியாததும் கூட. அறிவியல் உலகில் புதிய கருத்துகளின் தோற்றங்களும், மரபு வழியான கருத்துக்கள் மறுதலிக்கபடுவதும், தவிர்க்க முடியாததும், தேவைப்பாடு உடையதும் கூட. அதாவது அறிவியல் ரீதியான ஆரோக்கியமான கருத்தியல் முரண் நிலைகளே புதிய கருத்துகளின் தோற்றத்துக்கு அடிப்படையானதாக அமைகின்றது என்பது மறுக்கப்படாத உண்மையே.

சங்க காலத்தினைக் கால அடிப்படையில் வரையறை செய்தல் என்பது அறிவியல் வளர்ந்த நவீன இவ்வுலகில் சற்றுக் கடினம் என்றாலும், சங்க இலக்கியங்கள் எவை என்பதனை தமிழ் ஆய்ந்த நல் அறிஞர்கள் வரையறை செய்துள்ளார்கள். பேராசிரியர் வித்தியானந்தன் எழுதிய "தமிழர் சால்பு" என்ற நூலில் சங்க இலக்கியங்கள் குறித்த பார்வையினை திராவிட இனத்தின் வளர்ச்சியும், எழுச்சியும் என்ற நோக்கில் ஆய்வு செய்யலாம் என்கின்றார் (வித்தியானந்தன், 1982). மேலும் இத்தகைய ஓர் கருத்து பேராசிரியர் அருணாச்சலம் எழுதிய "தமிழ் இசை இலக்கிய வரலாறு" என்ற படைப்பிலும் பிரதிபலிப்பதை அவதானிக்கலாம்.

இக்கட்டுரையானது சங்க இலக்கியத்தில் உள்வாங்கப்பட்ட பெண்பாற் புலவர்களினால் எழுதப்பட்ட பாடல்களின் வாயிலாக தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் பற்றி ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. இக்கட்டுரையில்:

- சங்க இலக்கியங்கள்
- சங்க பெண்பால் கவிஞர்களும் கவிதைகளும்
- சங்க பெண்பால் புலவர்களின் பார்வையில் தமிழர் வாழ்வியல்
- இல்லறம்
- விருந்தோம்பல்
- காதலும் காமமும்
- பெண்களும் உறவுமுறைகளும்
- போரும்,வீரமும்

போன்ற முக்கியமான விடயங்கள் ஆராயப்படுகின்றன.

**2.0 சங்க இலக்கியங்கள்**

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கம் வைத்து தமிழ் வளர்த்த முன்னோர்கள் தாம் வாழ்ந்த காலத்துக்குரிய தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், மற்றும் பண்பாட்டினை பிரதிபலிப்பதாக எழுதிய இலக்கியப் படைப்புகள் இயற்கைச் சீற்றத்தினாலும் (கடல் கொந்தளிப்பினால்), முறையான பாரமரிப்புக்கள் இல்லாமையினாலும் கறையான் போன்றவற்றிற்கு இரையானவை போக மீதமாகவுள்ளவற்றினை எட்டுத்தொகை நூல்களாகவும், பத்துப்பாட்டு நூல்களாகவும் வகுத்தனர். எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களினையும் சேர்த்து பதினெண் மேற்கணக்கு நூல்கள் என அழைப்பர். இவற்றில் முதலில் தொகுக்கப்பட்டது எட்டுத் தொகை நூல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். கலித்தொகை, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து மற்றும் புறநானூறு என்பனவற்றினை எட்டுத் தொகை நூல்கள் என்பர். இவற்றில் பதிற்றுப்பத்து மற்றும் புறநானூறு புற பொருள் சார்ந்தவையாவும் ஏனைய ஆறு நூல்களும் அகப்பொருள் பற்றிப் பேசுகின்ற நூல்கள் ஆகவும் உள்ளன. பத்துப்பாட்டு நூல் தொகுப்பில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை மலைப்படுகடாம் போன்ற நூல்கள் உள்ள டக்கப் பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் மக்கள் வாழ்க்கை பாடும்பொருளாக கொள்ளப் பட்டுள்ளது (இட்சுமணன், 2007). இத்தகைய மரபின் வழியே அகம், புறம் எனப்பட்ட திணைகள் தோன்றின. அகப்பொருள் என்பது ஆண், பெண் உறவினையும் புறம் என்பது போர், வீரம், கல்வி போன்றவற்றினையும் குறிக் கின்றது.

சங்க புலவர்களினால் சிருஷ்டிக்கப்பட்டவை (பாடல்கள்) கருத்து வளம் நிரம்பி யவையாகவும் பிறர் உள்ளத்தை புண்படுத்தாத நிலையில் அமைந்தவையாகவும், குறிப்புப் பொருள்மிக்கவையாகவும் அமைந்துள்ளன. 18ம், 19ம் நூற்றாண்டில் வேறுபட்ட கால இடைவெளியில் ஏடுகளில் மாத்திரம் இருந்த சங்க இலக்கியங்கள் சரவணப்பெருமாளையர், உ.வே சாமிநாதையர், ராகவையங்கார், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், ஈழத்து சி.வை தாமோதரப்பிள்ளை, சௌரி பெருமாளரங்கன் போன்றவர்களினால் அச்சுப்பதிப்புக்கு உட்படுத்தப்பட்டது. ஐரோப்பியர் வருகையின் பின்னர் ஆங்கில கல்வியின் வருகையும், அதன் வளர்ச்சியும், மற்றும் அச்சு இயந்திரங்களின் கிடைப்பனவுகளும் கல்விப் புலத்தில் பாரிய அளவிலான மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியது. சங்கம் என்று எதுவொன்றும் இருந்திருக்கவில்லை, அவை கற்பனையின் வழிதனில் தோன்றி யவை என்றும் “தமிழரின் வரலாறு” என்னும் நூலில் பி.டி சீனிவாச ஐயங்கார் மற்றும் “பழந்தமிழர் கால அட்டவணை” என்னும் நூலில் சிவராஜபிள்ளை போன்றோர் சங்கம் இருந்தமையினை நம்பமுடியவில்லை என்றும் அவை பிற்காலத்தில் எழுதி சேர்க்கப்பட்டவை என்றும் குறிப்பிடுகின்றார்கள் (பாலசுந்தரம், 2015). ஆனால் இக்கருத்துக்கு மாறாக தொல்லியல் சான்றுகள் குறிப்பாக ஆதிச்ச நல்லூர், அரிக்கமேடு, கீழடி, கொடுமானல் போன்ற தொல்லியல் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் பண்டைய தமிழன் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. சங்க காலம் என்பது சிந்து வெளிநாகரிகத்தின் ஒரு நீட்சியே என்பது அகழ்வு ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (பாலகிருஸ்னன், 2020).

### 3.0 சங்கப் பெண் பால் கவிஞர்களும் கவிதைகளும்

தமிழ் மொழியில் காணப்படுகின்ற மிகத்தொன்மையான இலக்கியங்களான சங்கப் பாடல்கள் ஈழத்துப் பூதன்தேவனார் உட்பட 473 புலவர்களால் பாடப்பெற்ற மொத்தம் 26,350 வரிகளைக் கொண்ட 2,381 பாடல்கள் 18 நூல்களுக்குள் உள்ளடங்கியிருக்கின்றன. முருகேச பாண்டியன் எழுதிய “சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள்” என்னும் படைப்பில் சங்க காலத்தில் கவியார்த்த பெண் கவிஞர்களினை இனம் கண்டு அக்கவிதைகளுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரையினை மிக தெளிவாக வழங்கியுள்ளார். அவருடைய படைப்பில் 41 பெண்பால் புலவர்களினை இனம் கண்டுள்ளார். என்னும் பெண் கவிஞர் களின் எண்ணிக்கை குறித்து முரண்பட்ட கருத்து நிலவுகின்றது. உதாரணமாக உ.வே.சாமிநாதையர் 38 பெண்பால் கவிஞர்கள் என்றும் வையாபுரிப்பிள்ளை மற்றும் ஔவை துரைசாமி போன்றவர்கள் முறையே 30, 34 என்றும் குறிப்பிட் டுள்ளார்கள் (முருகேச பாண்டியன், 2005 ப.8). சங்க காலத்தில் பெண்கள் எழுத்தறிவு கொண்டிருந்ததுடன், பல்வேறு வகையான சமூகப்பணிகளிலும் ஈடு பட்டனர். மேலும் சங்க காலத்தில் தாய்வழிச் சமூக அமைப்பானது காணப் பட்டது. எனினும் பக்தி இலக்கிய காலத்தில் பெண்கள் குறித்த பார்வையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக பெண்களின் பணிகள் மனைக்குரிய கடமை களினை நிறைவு செய்வதுடன் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. (அறவணர், 1994). பெண் என்பவள் ஆணின் அரைவணைப்பில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பின்னர் வந்த பாரதியார் மற்றும் பாரதிதாசன் போன்றவர்களின் படைப்புக்கள் பெண்கள் தொடர்பாக சமூகம் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளினை தகர்த்து எறிந்தனர். சங்கப் பெண்பாற் புலவர் பாடல்களில் சங்கப் பெண்பால் புலவர்களின் கவித்துவமான, கருத்து செறிந்த கவிதைகள் வழியே பண்டைய தமிழர்களின் வாழ்வியல் முறையினை புரிந்து கொள்ளுதல் சிறப்பு மிக்கது. பரந்த பாரினிலே பல்வேறு பண்பாட்டு கோலங்களினையும், நம்பிக்கையினையும் உடைய இனக்குழுக்களாக வியாபித் திருந்த மக்கள் கூட்டத்தினை தமிழ் என்றும் மொழி இணைந்தது. தமிழினை ஒரு மொழியாக மட்டும் நோக்காது மேலும் இனத்தின் அடையாளமாக நோக் கப்படுகின்றது. மேலும் தமிழ்மொழியினை சிறப்பிக்கும் வகையில் அமைந் தவையே சங்க இலக்கியங்களில் இவற்றில் 181, பாடல்களினை பெண்பால் புலவர்கள் இயற்றியுள்ளார்கள். இக்கட்டுரையில் பெண்பால் புலவர்களின் பாடல்வரிகளின் மூலம் வாழ்வியலினை அவர்கள் எவ்வாறாக புரிந்து கொண் டார்கள் என்பதனை இலக்கிய சான்றுகளுடன் ஆய்வியல் விபரிக்கப் பட்டுள்ளது.

### 3.1 இல்லறம்

குடும்பம் என்ற ஒழுங்கமைக்கப்பட்ட சமூக நிறுவனத்தின் வழியே வாழ்வியல் என்னும் கலை வளர்ந்து, விரிந்து சென்றது என நவீன மேற்கத்தேய உளவிய லாளர்கள் கருதுகின்றனர். பண்டைய தமிழர்களின் குடும்ப வாழ்க்கை யானது வீரம், காதல், அறம், அன்பு போன்ற பல்வேறு சிறப்பு அம்சங்களின் உறைவிட மாகவுள்ளது (தட்சிணாமூர்த்தி, 2021, அறவாணன், 1994 வித்தியானந்தன், 2007). தமிழர் வாழ்வியலினை பற்றி நோக்குகின்ற போது வீரம், காதல், அன்பு அறம், காமம், விருந்தோம்பல் போன்றவற்றின் வழி நோக்கு தல் பொருத்தப்பாடு டையது ஆகும். தமிழர்களின் வாழ்க்கையானது அறத்துடன் பின்னிப் பிணைந்தது. அறநெறி வழி பயணிப்பதாக அமைந்தது. தமிழர் வாழ்வியல் அறம் விஞ்சி நின்றமையினால் அல்லது அறமே வாழ்க்கையானதால் குடும்ப வாழ்க்கையினை முன்னோர் இல்லறம் என அழைத்தனர். தலைவனும் தலைவி யும் ஒருவரினை ஒருவர் புரிந்து ஏற்படுத்தி கொள்ளுகின்ற பந்த பாசத்தின் விளைவாக ஏற்படுகின்ற அன்னியோன்னியமாக வாழ்வதையே இல்லறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். சங்க காலப் படைப்புகளில் இல்லறம் பற்றியும், வாழ்க்கை பற்றியும் புறநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு போன்றவற்றில் தெளிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் சங்கமருவிய காலத்தின் படைப்புகளில் ஒன்றான திருக்குறளில் திருவள்ளுவர் இல்லறத்தினை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை

(திருக்குறள் 41)

இல்லறத்தில் நின்று வாழ்பவன் என்பவன் அறத்தின்பால் ஒழுகி வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுக்கங்களினை கடைப்பிடித்து வாழ்கின்ற வாழ்க்கையினை குறிக்கும். குடும்பம் என்பது பெண்ணை முதன்மையாக கொண்ட ஓர் சமூக நிறுவனம் ஆகும். பெண்ணின் தூய உடல் இன்றி சமூக அமைப்பினை கட்டிக் காப்பாற்ற முடியாது. சங்க இலக்கியங்களில் குடும்பம் என்ற பதம் பிரயோகத்தில் இல்லை அதற்கு பதிலாக குடி, இல்லம், இல், மனை என்றும் பதங்கள் பயன்படுத்தப்பட்டன. சங்க நாட்களில் தாய்வழி சமூக அமைப்பே குடும்ப நிலைகளில் காணப்பட்டது. ஏன் சங்க இலக்கியங்களில் கூட பெண்களின் வகிபாகமானது முதன்மை பெற்றதாய் இருக்கிறது. இல்லறத்தின் சிறப்புக்கும், பெருமைக்கும் விருந்தோம்பல் அடிப்படையானதாக அமைகின்றது.

**3.2 விருந்தோம்பல்**

இல்லறத்தில் மிகமுக்கியமான பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் அமைந்துள்ளது. விருந்தோம்பல் என்பது விருந்தினர்களினையும் புதியவர் களினையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களுடன் நட்பு ரீதியாக பழகி அவர்களுடைய தேவைகளினை உணர்ந்தும், அறிந்தும் நிறைவேற்றி கொள்வதனை குறிக்கும். தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களில் மிக உயரியதும், மனிதவாழ்வோடு இணைந்ததும், இசைந்ததுமாக விருந்தோம்பல் பண்பாடு காணப்படுகின்றது. விருந்தோம்பல் என்பது உணவு வழங்குகின்ற செயற்பாடுகளுடன் மாத்திரம் குறிப்பதாய் இல்லை. விருந்தோம்பல் என்பது ஒரு பரந்த கலையின் வெளிப்பாடு ஆகும். 18ஆம் நூற்றாண்டுக்கு பின்னர் சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினால் ஆதி தமிழனின் வாழ்வியலின் உயிர் நாதமான விருந்தோம்பல் இன்று வணிக ரீதியாக இலாபத்தினை உழைக்கத்தக்க ஒரு தொழிலாகவும் நோக்கப்படுகின்றது. சமகாலத்தில் டென்னில் மற்றும் ரெய்னொல்ட்ஸ் போன்ற அறிஞர்கள் விருந்தோம்பலினை பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்துகின்றனர். விருந்தினர்களினையும் மற்றும் புதியவர்களினையும் இன்முகத்துடனும், அன்புடனும் வரவேற்று அவர்கள் மீது அக்கறை காட்டி அவர்களின் தேவைகளினை அறிந்தும் அல்லது உணர்ந்தும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப சேவையினை வழங்குகின்ற செயற்பாட்டினையே விருந்தோம்பல் என்பர் (சிவேசன், 2023). முன்னர் இயம்பியபடி சங்ககாலத்தில் விருந்தோம்பலை ஓர் கலையாக எண்ணியே மன்னன் முதல் மக்கள் வரை விருந்தோம்பலுக்கு முன்னுரிமை வழங்கினர். அள்ளூர் நன்முல்லையார் என்ற பெண்பால் புலவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய 306ம் புறநானூறு பாடலின் மூலம் பெண்கள் நடுகல் (வீரக்கற்கள்) வைத்து போருக்கு புறப்பட்டு சென்ற கணவர் வெற்றிவாகையுடன் வீடு திரும்பி வரவேண்டும் என்றும், தொடர்ச்சியாக மனை நோக்கி விருந்தினர்கள் வரவேண்டும் எனவும் வேண்டி நடுகல் வைத்து வழிபட்டனர். சங்க காலத்தில் இறந்த முன்னோர்களினை வேண்டி நடுகல் வைத்து வழிபடும் வழமை இருந்தது (சிவேசன், 2023, வித்தியானந்தன், 2007). இப்பாடல்வழியே சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்கள், தத்தமது பூவும் பொட்டும் நிலை பெறப்போர்களம் சென்றவர்கள் பாதுகாப்புடன் வீடு திரும்பவேண்டும் என்று எண்ணினார்களோ அதுபோன்றே இல்லறம் செழித்து நல் அறம் பெருகிட விருந்தினர் வருகையையும் ஆவல் கொண்டு எதிர்பார்த்தனர். சமகாலத்தில் அறிவியல் ரீதியாக அணுகுகின்றபோது. சங்க பெண்களின் இத்தகைய உணர்வு பூர்வமான செயற்பாட்டின் யதார்த்தம் எவ்வளவு தூரம் ஆழமாக உள்ளது என்பது வியப்பாகவுள்ள போதும். விருந்தோம்பல் என்பது மிக முக்கியமான பணியாக கடமையாக பெண்டிர்களினால் நோக்கப்பட்டது என்பது புலப்படுகின்றது. இதனை "நடுகல் கைதொழுவது பரவும், ஓடியாது விருந்து எதிர் பெறுகதில்யானே என்னையும்" என்னும் (306: 4-5) புறநானூறு பாடல்களின் வரிகள் சான்றுபடுத்துகின்றது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மன்னர்கள் குடியானவர்களின் நலன்கள் மீது அக்கறை உடையவர்களாகவும், மன்னன், அரண்மனை நாடி வருபவர்களின் கோரிக்கைகளினை, செவிசாய்த்து அவற்றுக்கு தகுதியான தீர்வினை வழங்குபவராகவும், அழிவுகள், இடர்கள், இயற்கை அனர்த்தங்கள் வரும் பொழுதெல்லாம் நெல்லும் பொருளும் மக்களுக்கு கால, நேரவரையறைகள் அற்று மக்களுக்கு ஈபவராக இருந்தனர். இதற்கு அதியமான் நெடுமான் அஞ்சியின் வாழ்கை ஒரு சிறந்த உதாரணம். இக் கருத்துருவை ஔவையார் பாடாண் திணையில் அமைந்த ஒரு பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். பாடான் திணை என்பது ஒருவரை புகழ்ந்து பாடுகின்ற பாடல்கள் ஆகும். இத்திணையில் அமைந்திருக்கும் மேலும் இப்பாடலில் மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சி தன்னை எவ்வாறு உபசரித்தார் என்பதனை மிக தத்துரூபமாக பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நான் அணிந்திருந்த பாசி படர்ந்தது போல் இருந்த பழைய ஆடையினை மாற்றுவதற்கு புதிய மிருதுவான ஆடையினை எனக்கு கொடுத்து ஆடை மாற்றுவித்து பின்னர் கள்ளும், ஊண் (இறைச்சி) கலந்த உணவும் எனக்கு கொடுத்தான் எனவும் தன் சுற்றத்தார்க்கும் உணவுகள் வழங்கப்பட்டது என்றும் ஔவையார் "இயற்றி தன் உழைக்கும் குறுகல் வேண்டி, என் அரை" என்று ஆரம்பிக்கும் 390ம் புறநானூற்று பாடலில் காட்சிப்படுத்தியுள்ளர். மேலும் 392ம் வது புறநானூற்றுப் பாடலில் ஔவையார் அதியமான் நெடுமானஞ்சி மகன் பொருட் செழியனின் சிறப்பினை ஔவையார் பாடும் போது அவன் புளித்த கள்ளினையும் அன்னமும் கொடுத்து மகிழ்ந்தாள் என்றும் அந்த புறப்பாடல் குறிப்பிடுகின்றது. அதியமானின் கொடையின் சிறப்பினை பற்றி ஔவையார் பல பாடல்களில் விபரித்துள்ளர். இருந்த போதும் ஔவையார் 91வது புறனூற்று பாடலில் "சிறியிலை நெல்லித் தீம்கனி குறியாது" என்று சுட்டிக்காட்டி அதியமானின் கொடைச் சிறப்பினை விபரிக்கின்றர். அதாவது பெறுதற்கு அரிய நெல்லிக்கனியினை பெற்ற அதியமான் அதனை தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாது ஔவையார்க்கு கொடுத்தான். இதனை நான் உண்பதனால் எனது ஆயுள் நீடிக்கும் என்று அதியமான் நம்பினர். அதியமான் மிக அரிதாக கிடைகக் கூடிய பொருட்களினையும் தானமாகக் கொடுத்து மகிழ்கின்ற மனநிலையினை கொண்டவன் என்றும் நட்ப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவன் என்றும் ஔவையார் 91வது புறனூற்று பாடலில் விபரித்துள்ளர். சங்க காலத்தில் வாழ்ந்த மக்களும் மன்னனும் கொடைச் சிறப்பு மிக்கவர்களாகவும் வந்தோரை வரவேற்று உண்டி கொடுத்து உபசரித்தும் மகிழ்ந்தனர் என்பதும் பெறப்படு கின்றது.

**3.3 பெண்களும் உறவு முறைகளும்**

சங்க காலத்தில் பெண்கள் தெய்வ நிலையிலும், தெய்வீக உணர்வுகளுடனும் சமநிலைப்படுத்தப்பட்டு ஏற்றுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்களாக விளங்கினார்கள். அக் காலத்தில் வாழ்ந்த மங்கையர்களின் மனநிலை, குணவியல் புகள் கூட ஆண்களுக்கு சம நிலைப்பட்டதாகவே காணப்பட்டது. தெரிவை, மாதர், நல்லார், மென்சாயலர், மாதர், ஆயிலை, மடந்தை போன்ற மறு பெயர் களினாலும் பெண்கள் அழைக்கப்பட்டனர். சங்க இலக்கியங்களில் பெண்ணின் அறம், காதல், வீரம், காமம், விருந்தோம்பல் போன்ற பண்புகளினை விபரித்த அதேவேளையில் பெண்ணின் கண், கூந்தல், முகம், நெற்றி, இடை, தொடை, பற்கள், முலைகள், மற்றும் பாதங்கள் போன்ற பெண்ணின் அங்கங்களினையும் வருணித்தனர் (சிவேசன், 2024). இவ்வாறான வர்ணனைகளின் வாயிலாக நோக்கும் போது பெண் என்பவள் ஒரு போக பொருளாகவும் நோக்கப்படுகின்ற நிலை உயிர்யிதப்படுத் தப்படுகின்றது. சங்க காலத்து பெண்கள் பல தொழில்களில் ஈடுபட்டனர் என்பதற்கு இலக்கிய வழி சான்றுகள் உள்ளன (அகம் 20, 390, 157, 387, புறம் 311, பட்: 178 - 181, பெ : 336 - 340). இதற்கும் மேலாக ஆடவர் வாணிபம், அரசியல், படைக்காப்பு போன்ற துறைகளினை முகாமை செய்ய பெண்கள் அறம் ஓம்பி குடும்பம் நடத்தினர். பொன்முடியார் என்ற பெண்பால் பாவலரினால் எழுதப்பட்ட "ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே" என ஆரம்பிக்கும் 312 வது புறநானூற் பாடலில் ஒவ்வொருவருக்குமான கடமை களினைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

பண்டைய தமிழர்கள் தமக்கு என தம்மால் வகுக்கப்பட்ட கடமைகளினை செய்கின்ற உணர்வு நிறைந்தவர்கள். இப்பாடலில் தாய் என்பவள் குழந்தையினை பெற்று பாதுகாப்புடன் வளர்ப்பது அவளது கடமையாகும் என்றும், தந்தை யானவன் குழந்தையினை நற்பண்புகளுடன் வளர்க்க வேண்டும் அதாவது தனது குழந்தை சான்றோன் என பிறர் பாராட்டும்படியாக வளர்க்கவேண்டும் என்றும், போர்க் கலையினை அறிந்திட வேண்டும் என்றும் மேலும் வேல் போன்ற ஆயுதங்களினை செய்வது கொல்லனின் கடமை என்றும், நல்ல முறையில் போர் பயிற்சிகள் வழங்கி போர்க் கலையில் வல்லவர் ஆக்குதல் மன்னனின் கடமை என்றும் பொன்முடியார் குறிப்பிடுகின்றர். பெண்பால் புலவர்கள் தாம் தெரியப் படுத்த விரும்பியவற்றினை ஒளிவு மறைவின்றி நிதானமாக வெளிப்படுத்துகின்ற தன்மையைக் காணக் கூடியதாகவுள்ளது. பெண்பால் புலவர்கள் வாழ்க்கை பற்றிய ஓர் தெளிவான சித்தாந்த நோக்கல்களினை கொண்டவர்களாக இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமக்கணிப்பசலையர் என்ற பெண்பால் கவிஞர் பாலை திணையில் உள்ள நற்றினை பாடலில் வாழ்க்கையின் நிலையாமை தன்மையினை சூதாட்டத்துக்கு ஒப்பிடுகின்றார். "கவறுபெயர்த்தன்ன நில்லா வாழ்க்கை இட்டு" (நற் 2435) சூதாட்டத்தில் வெற்றி தோல்வியானது நிலையற்றது போல் வாழ்க்கையில் தேடப்படுகின்ற செல்வமும் நிலையில்லை என்பதனை உணர்த்துபவராக இப் புலவர் உள்ளார். மேலும் அறமும், செல்வமும் நிறைந்திருக்கும் இல்லற வாழ்க்கையில் செல்வம் என்பது நிலையற்றது என உணர்ந்தும் அதை தேடுவதற்கு வாழ்க்கை காலத்தின் பெரும்பகுதியினை செலவு செய்தனர். ஆடவர்கள் எல்லாம் சரியான அறத்தின் வழி ஒழுகுகின்றார்களா என்ற வாதம் சங்க காலத்தில் காணப்பட்டது. இவ்வாறன பெண்களின் ஆதங்கம் பெண்பால் புலவர்களின் வழியே வெளிக்கொண்டுவரப்படுகின்றது. மேலும் சங்ககாலத்து பெண்கள் சுதந்திரமான உணர்வுகளுடன் தனக்கு தேவையான கணவனை (தலைவனை) தெரிவு செய்கின்ற உரிமையும், சுதந்திரமும் கொண்டிருந்தார்கள் என்றும் அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட தலைவனினை அவர்கள் பெற்றோர்கள் ஏற்று கொள்ளாத போதும் தடைகளினை மீறியும் விரும்பியவரின் கரம் பற்றும் துணிவு கொண்டவர்கள்களாகவும் இருந்தனர் என ஔவையார் பாலை திணையில் அமைந்த 15வது குறுந்தொகைப்பாட்டில் மிக அழகாக குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடலில் இருமனம் ஒத்த தலைவனும், தலைவியும் பெற்றோர்கள் விருப்பத்துக்கு மாறாக வீட்டினைவிட்டு வெளியேறி திருமணம் செய்தார்கள் என்று புலவர் குறிப்பிடுகின்றார். சங்க காலத்திலேயே வீட்டைவிட்டு வெளியேறி திருமணம் செய்கின்ற முறை காணப்பட்டது. திருமண நிகழ்வில் பெரியவர்களின் ஆசீர்வாதமும் அவர்களுடைய வாழ்த்துக்களும் முக்கியமானதாக காணப்பெற்றது. திருமண நிகழ்வுகளில் வாசிக்கப்படுகின்ற பறை மேளத்தினை மணப்பறை என்பர். இத்தகைய மணப்பறையினை திருமண மேளம், கலியாண முழவு என்று அழைக்கப்பட்டது. சங்கமருவியகாலத்துப் படைப்பான நாலடியாரிலும் பறைபற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. பறையானது தமிழர்களுடைய மிக முக்கியமான தோல் வாத்தியக் கருவியாகும். தமிழர் வாழ்வியலில் திருமணம் என்பது மிக முக்கியமான நிகழ்வு ஆகும். அதாவது தேவகானம் முழங்க, பெரியோர் ஆசிர்வதிக்க, மங்கள வாத்தியம் ஒலிக்க இருமனம் இணைந்து ஆணும் பெண்ணும் அக்கினி சாட்சியமாக இல்லறம் என்றும் நல்லறத்தில் இணைதல் ஆகும்.

சங்க இலக்கியங்களில் அதிகம் சிறப்பிக்கப்பட்ட பாத்திரப்படைப்புகளில் பரத்தையர் குலமும் ஒன்று. பரத்தையர் என்பதனை தமிழ் இலக்கியங்களில் வேசி, விலைமகள் மற்றும் கணிகையர் எனவும் அழைப்பர். பரத்தையர் என்பவர்கள் மானிட சமுதாயத்தினை மகிழ்விக்கக்கூடிய ஆடல், பாடல்களில் வல்லுனர்களும், அழகும், ஆற்றலும், இளமையும் உடையவர்கள், மேலும் பொருள், இன்பத்தினை தேடி செல்லுகின்ற பெண்களினையும் பரத்தையர் என்பர். சங்ககாலத்தில் வாழ்ந்த ஆண் மக்கள் பரத்தையர்களினை தேடி செல்லுகின்ற வழமையிருந்தது. இத்தகைய ஒரு நிகழ்வினை தோழி ஒருத்தியின் கூற்றாக அமைந்த 139வது குறுந்தொகைப்பாடல் அழகாக சித்தரிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாக தலைவியினை பிரிந்து பரத்தையர்களுடன் தங்கிய தலைவன் பரத்தையர் உறவில் சலிப்புற்று தலைவியுடன் இணைந்து வாழ விரும்புகின்றான் ஆதலால் தன்னை தலைவியுடன் சேர்த்து வைக்குமாறு தோழியிடம் வினாவிய போது அவள் அது இயலாகாரியம் என்கின்றாள். ஏனெனில் ஊர்மக்களின் பழிச் சொல்லினையும், பரத்தையர் பழிச்சொல்லினையும் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் ஆகவே நீ ஊருக்குள் வருவதை நிறுத்திக் கொள் என்கின்றாள். பண்டை காலத்தில் வாழ்ந்த மக்கள் தமக்குரிய ஒழுக்கங்களுடன் வாழ விரும்பினர்கள் என்பதும், ஒழுக்கவிழுமியங்களினை மீறுகின்ற போது சமூகம் தமது செயல் களினை அங்கிகரிக்காது என்றும் தம்மீது பழிச் சொல் பேசும் என்கின்ற பயமும் அவர்களிடம் காணப்பட்டது. தமிழ் இலக்கியங்களில் தோழி என்பவள் முதன்மையான ஒரு பாத்திரம் இதன் யதார்த்தம் நவீன உலகியல் சிந்தனை ஓட்டங்களின் ஊடாக நோக்குகையில் நகைப்புக்கு இடமாகின்ற சந்தர்ப்பங்கள் பல உள்ளன. இருந்த போதும் சங்க இலக்கியங்களில் தோழி என்கின்ற பாத்திரப் படைப்பானது சமூக உறவுகளின்பால் வலிமை மிக்கதாகவும், தலைவி மீது கொண்ட அன்பின் நிமிர்த்தம் தலைவி குறித்த பயன்தரு தீர்மானங்களினை எடுக்க வல்லவளாகவும், தலைவியினுடைய அந்தரங்கங்களினை பகிர்ந்து கொள்வதற்கான நம்பிக்கையும் விசுவாசமும் நிறைந்தவளாகவும் சித்தரிக்கப் படு கிறாள். சங்க இலக்கியங்களில் "தோழி" என்பதற்கு பதிலாக சகி, சேடி, பாங்கி போன்ற பதங்களும் பயன்படுத்தப்பட்டன.

பெண்பால் புலவர்களின் கவிதை வரிகளில் பெண் அடக்குமுறைக்கும், பெண் கள் குறித்த தவறான புரிதலுக்கும் மற்றும் நம்பிக்கைகளுக்கும், எதிரான குரலாக அமைந்த பல கவிதைகளும் உண்டு. இதற்கு ஔவையாரின் 295 நற்றினைப் பாடலினைக் குறிப்பிடலாம். இவ் நற்றினைப் பாடல் "இற்செறித்தலுக்கான" எதிராக அமைந்துள்ளது. இற்செறித்தல் என்பது வயதுக்கு வந்த பெண் ஒருத்தியினை வீட்டைவிட்டு வெளியே செல்லமுடியாதவாறு தாயினால் வீட்டு காவலில் வைத்திருத்தலை குறிக்கும். இற்செறித்தலுக்கு பல காரணங்கள் காணப்பட்டாலும் 295வது நற்றினைப் பாடலில் ஔவையாரினால் இற்செறித் தலுக்கான காரணமாக தாய் தனது மகளின் களவொழுக்கத்தை அறிந்திருத்தலை குறிப்பிடுகின்றார். செல்வங்களினை தேட கப்பல்களில் பயணித்து வணிகம் செய்யும் தந்தையர் வரும்வரை காத்திருந்து, மகளுக்கான தலைவன் (மணவாளன்) விரைந்து வந்து மணந்து கொள்ளவும் வேண்டும் என்று எண்ணி யும் தனது மகளினை இற்செறித்தலுக்கு (வீட்டுக்காவலில்) உட்படுத்துகின்றாள். மேலும் இவ் நன்றியினைப் பாடலில் மகளின் களவொழுக்கத்தினால் தாய்பாடும் சஞ்சலங்களினையும், மேலுமாய் இவ்வொழுக்கம் குறித்து உறவுகள், அயலவர்கள் ஊரார் (சமூகம்) அறிந்து கொள்வதற்கு முன்னர் அவளுக்கு நல்ல வாழ்க்கையினை அமைத்து கொடுக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தினையும் இங்கு பார்க்கலாம். குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பெண் தியாக உணர்வுகளுடன் செயற்படுகின்றாள் என்பதனை அறியமுடிகிறது. இற்செறித்தலுக்கு உட்பட்ட எமது சக தோழியானவள் சரிவான மலைப்பகுதி யில் வெப்ப மிகுதியினால் கருகியது போல் காட்சி தரும் கள்ளிச் செடிபோல் எமது தோழியின் அழகும் மங்கிப்போனதே என கவலை அடைகின்றார்கள். ஔவையார் இற்செறிவினை எதிர்க்கின்றார். அவர் அதனை பற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகையில் பல்வேறு திசைகளிலிருந்தும் வந்து துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டவைகள் - சாடி போன்று இன்பம் தரும் இளமை இல்லத்தில் இருந்து கழிந்து செல்கின்றது என்கின்றார்.

### 3.4 காதலும் காமமும்

காதலின் பிரிவு, தவிப்பு, துயர் போன்றவற்றினை சங்க காலத்து பெண்பால் கவிஞர்கள் மிகவும் அழகாகவும், வாழ்வியல் யதார்த்தத்துடன் காட்சிப்படுத்தி யுள்ளார்கள். இதனை பின்வரும் சங்கப்பாடல் வரிகளின் வாயிலாக உணரலாம். காதல் என்றால் இரு மனங்களின் உணர்வு பூர்வமான அன்பின் வெளிப்பாடு ஆகும். அண்டம் முழுவதும் வியாபித்துள்ள பண்பாடுகளில் காதல் என்பது தெய்வீகமானதாகவும், புனிதமானதாகவும் நோக்கப்படுகின்றது. அறிவியல் ரீதியான நோக்கில் பருவமுற்ற (பருவமடைந்த) ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் கொள்ளுகின்ற அன்பினைக் காதல் என்பர், காதல் என்றுமே ஆனந்தமானது என்றும் அவை என்றுமே சுமைகலந்த சுவை கொண்ட உணர்வாகும்.

அமெரிக்க உளவியல் சங்கம் (**American Psychological Association**) காதல் என்பதனை ஒருவர் மற்றொரு நபர் மீது கொள்ளும் பாசம், மென்மையான உணர்வு, அவர் களின் செயற்பாடுகளுக்கான உணர்திறன், மற்றொரு நபரால் இன்பத்தினை அனுபவிப்பது, பக்தி போன்றவற்றினை உள்ளடக்கிய சிக்கலான உணர்ச்சியே காதல் என்று வரையறுத்துள்ளது. காமம் என்பதனை பண்டைய தமிழ் இலக் கியங்களில் பாலின்ப விருப்பு, புணர்ச்சியின்பம், காமநீர் போன்ற பெயர்களி னால் அழைத்தனர். காமம் என்பதனை சுருங்கக் கூறின் அது ஒரு புலன்சார்ந்த இன்பம் ஆகும். இந்து சமயத்தின்படி அறம், பொருள், காமத்தினை முறையாக பின்பற்றினால் வீடுபேறினை அடைந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. பண்டைய தமிழர்கள் காதல், காமம் பற்றிய ஓர் தெளிவான புரிதலுடன் வாழ்ந்தார்கள் என்பதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

காமம் என்பதனை திருவள்ளுவர் திருக்குறளில் குறிப்பு அறிதல் என்னும் அதிகாரத்தில் உடல் ஒன்றுபடும் புணர்ச்சி என்கின்றார். அதே நூலில் **360**வது குறளில் காமம் என்பதனை விருப்பம் என்கின்றார். இவற்றின் வழிநோக்கில் காமம் தவிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஒரு குணமாக வள்ளுவரினால் பார்க்கப்படுகின்றது.

காதல், காமம், பிரிவு போன்றவற்றினால் பெண்கள் மத்தியில் ஏற்படுகின்ற மாற்றங்களினை ஆண் கவிஞர்கள் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் பெண் கவிஞர்கள் மிகவும் நுண் உணர்வுகளுடன் வெளிப்படுத்தியுள்ளார்கள். எடுத்துக் காட்டாக ஆதிமந்தியார் என்கின்ற பெண்பால் கவிஞரினால் இயற்றப்பட்ட "மன்னர்குழீஇய விழவினானும்" என தொடங்கும் **31**வது குறுந்தொகையின் பாடலினை குறிப்பிடலாம். தலைவி தன்னுடைய தோழிக்கு தன்னை பெண் கேட்டு அயலவர் வருவதாகவும் ஆனால் நான் வீரர்கள் சூழ்ந்த சபையில் நடனமாடுகின்ற ஒரு நடன கலைஞனை விரும்பி இருப்பதாகவும், அவனை தான் காணமுடியாததால் ஆட்டம் நடைபெறுகின்ற இடங்கள் தோறும் சென்று அவனை தேடுவதாலும், அவன் குறித்த என் நினைவுகளின் மிகுநிலையால் உடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிந்தது, எனது வளையல்கள் எனது கையில் நிலைத்து நிற்காமல் அவை கைகளிலிருந்து நழுவி விழுகின்றது எனவும் தனது தலைவன் மீதான தவிப்பினை ஏக்கத்துடன் வெளிப்படுத்துகின்றாள். அதேவேளை தலைவன் மீது கொண்ட காதலின் வலிமையினை உணர்த்துகின்றாள். தான் எல்லா ஆடுகளங்களுக்கும் தலைவனைத் தேடிச் செல்வதனால் நானும் ஓர் ஆடுகள மங்கையானேன் (பரத்தை) என்கின்றாள். இப்பாடலில் சமூகம் ஆடுகள மங்கை எனத்தன்னை விழிக்கும் என்கின்ற அச்ச உணர்வும் அவளுக்கு ஏற்பட்டிருப்பது வெளிப்படு கின்றது. அதேவேளை தலைவனை பற்றி தோழியிடம் இயம்புகின்றபோது "மாண்தக் கோனை" என்றும் "குரிசிலும்" என்கின்ற இரு உயர்ச்சி மிக்க பதங்கள் பயன்படுத்தி உள்ளாள் இதன் மூலம் எவ்வளவு மானசிகமான ஓர் உயர்ந்த நிலையில் தன் தலைவனை வைத்து என்னுகின்றாள் என்பது புலப்படுகின்றது. பிரிவுத் துயரினாலும், தோல்விகளில் துவண்ட போதும் சங்ககாலத்துப் பெண் கள் தம் வாழ்வியல் ஒழுக்க சிந்தனைகளில் முரண்படாதவர்களாகவும் காணப்பட்டனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. ஊன்பித்தையார் என்கின்ற பெண்பால் புலவரின் **232**வது குறுந்தொகை பாடல்வரிகளில் பொருள் தேடச் சென்ற தலைவனைப் பிரிந்து தவிக்கின்ற தலைவியின் புலம் பலாகவே இப்பாடல் அமைகின்றது. பிரிந்து தவிக்கின்ற தலைவியின் தவிப்பினை யதார்த்தமாக பின்வரும் பாடலில் சித்தரித்துள்ளார். பொருள் தேட சென்ற தலைவன் அங்கு இருந்து கொண்டு தன்னை நினைப்பாரா என தலைவி அச்சம் கொண்டு தோழியிடம் வினாவுகின்றாள். சிக்மண்பிறைடின் (***Sigmund freud***) கருத்துப்படி ஆளிடைக்கவர்ச்சியில் காதல் மனப்பாங்கு வளர்ந்து செல்வதில் அருகாமை முக்கிய காரணி ஆகும். அருகாமை வெறுமனே புவியியல் ரீதியான இருப்பிட ரீதியான நெருக்கத்தினை மட்டும் குறிப்பதில்லை (சிவானந்தமூர்த்தி, ப, 281, 2003) மன ரீதியாகவும் தலைவனும் தலைவியும் இணைதல் அவசிய மானது ஆகும்.

சங்கம் தொடங்கி சமகாலம் வரை பெண்கள் பிரிவின் துயரினை தாங்க முடியாதவர்களாகவே உள்ளனர். ஊண்பித்தையார் என்ற பெண்பால் புலவர் பெண்ணின் உணர்வுகளினை நன்கு உணர்ந்தவளாக தலைவன் வரவுக்கு வழி மீது விழிவைத்து காத்திருப்பதையும் காலம் கடந்தும் தலைவன் வரவில்லையே என்ற தவிப்பினையும் "உள்ளார் கொல்லோ? தோழி! உள்ளியும்" என தொடங்கும் **232**வது குறுந்தொகை பாடலில் அழகாக சித்தரித்துள்ளார். பெண் என்பவள் மென்மையானவள், உணர்வு பூர்வமானவர்கள் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவள் போன்ற பண்புகளினை கொண்டிருப்பவளாக சங்க இலக்கியங் கள் இயம்புகின்றன. இவைகள் யாவுமே பெண்ணுக்கான அணிகலன் ஆகும். இவை பெண்ணின் வளர்ச்சிக்கும், சிந்தனை ஓட்டத்தின் பரிணாம வளர்ச்சிக்கு மான தடைக்கற்கள் அல்ல. இந்த குறுந்தொகைப்பாடல் (232) அன்பினால் ஏற்பட்ட தவிப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. மனிதர்கள் பிறமனிதர்கள் மீதும் விலங்குகள் மீதும் வினையத்தினாலும், மனம் சார்பான புரிதல்களினாலும் ஏற்படுத்துகின்ற ஈர்ப்பினை அன்பு என அழைப்பார். உறவுகளின் நிலைக்கு ஏற்ப அன்பின் பரிமாணங்களும் மாறுபடும் தன்மை கொண்டது. ஓர் ஆடவன் தாய்மீது கொள்ளும் அன்புக்கும் அவன் தன் மனைவி மீது கொள்ளும் அன்புக்கும் வேறுபாடு உள்ளது. ஆதிகிரேக்க மெய்யியல் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் அன்பு, நட்பு, காதல், தெய்வீக அன்பு, குடும்ப உறவு இந்த வேறுபாடுகள் நான்கு பரிமாணங்களில் நோக்கப்பட்டுள்ளது. ஊன்பித்தையாரின் குறுந் தொகைப் பாடலானது காதலன் காதலி மேல் கொண்ட மாசற்ற ஆளிடைக் கவர்ச்சியினை காட்டுகின்றது. காமம் என்ற பதத்துக்கான சமகால பார்வை சற்று முரண்நிலை கொண்டதாயினும் கூட தமிழர்களின் வாழ்வியலில், தமிழர்களின் பார்வையில் இவை உன்னதமானதாகவே நோக்கப்பட்டது. மேலும் மனித வாழ்வியலின் முழுமைக்கும் காம உணர்வு தேவைப்பாடுவுடையது ஆகும். சங்க காலத்தில் மக்களினால் பின்பற்றப்பட்ட மதங்களில் பௌத்த, சமண மதங்களில் காமம் குறித்த தத்துவார்த்த ரீதியான பார்வை எதிர் மறையானவையாக இருந்தது என்கிற கருத்தும் எண்ணிப்பார்பதற்குரியது. குறுந்தொகைப்பாடலில் பொருள் தேடுதல் பொருட்டு காதலியினை தனிமையில் விட்டுவிட்டு சென்ற தலைவனை எண்ணி புலம்புவது போல் அதாவது கார்காலம் ஆகியும் தலைவன் வரைவில்லையே, என் இளமையின் உணர்வினை புரிந்து கொள்ளவில்லையே, கூடிக்குலாவி புலன் உணர்வினை அனுபவித்து மகிழ்ந்திட அவன் இல்லையே என்ற ஏக்கம் அவளை கதி கலங்க வைப்பதனால், தனது அந்தரங்கமான உணர்வினை அவள் தன்னுடைய தோழிக்கு பகிர்ந்து தனது மனச்சுமையினை ஆற்றிக் கொள்ள முனைவதன் மூலம் பண்டைய தமிழ் மக்கள் குறிப்பாக மகளிர் எவ்வளவு தூரம் புலன் உணர்வுகளுக்கு (உடலியல் தேவைகளுக்கு) முக்கியம் கொடுக்கின்றார்கள் என்பதனையும் கார்காலத்தில் இரம்மியமான பொழுதில் படர்வதற்கு துணையின்றி தவிக்கும் முல்லைக் கொடிபோல் தலைவனின் நினைவால் அவள் ஏங்கியவளாக இருந்தாள் எனவும் அழகிய மென்மையான சுபாவத்தினைக் கொண்ட இளம் பெண்களின் சிற்றின்ப மிகுதியினையும், அதனை நிவர்த்தி செய்வதற்கான அறம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த தேடலினையும் பெண்பால் புலவரினால் "இளமை பாரார் வளம்நசை இச்சென்றோர்" என ஆரம்பிக்கும் **126**வது குறுந்தொகைப் பாடலின் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

மேலும் முல்லை திணையில் அமைந்த **186** வது குறுந்தொகைப்பாடல் தலைவன் வருகையினை எண்ணி தலைவி உறக்கம் இழந்து உறங்காத விழிகளுடன் காத்திருக்கின்றாள். என்பதனை ஒக்கூர் மாசாத்தியார் என்கின்ற பெண்பால் புலவர் "எயிறு என முகையும் நாடற்குத் : துயில் துறந்தனவால் தோழி! எம் கண்ணே" என மிக அழகாக வர்ணித்துள்ளார்.

சமகால இயந்திர மயமான இவ் உலகிலும் பொருள் தேடும் முகமாக நாடுகடந்து எத்தனையோ ஆடவர்கள் வெளிநாடுகளில் வேலை செய்கின்றார்கள். அவர்களுடைய மனையாள்களும் இளமை உணர்வுகளினை தியாகம் செய்தவர் களாக உணர்வுகள் இருந்தும் உணர்வுகள் அற்ற ஜடங்களாக வாழ்கின்றார்கள் இந்த கையறவுநிலையை அன்றே. ஔவையார் அகநானூறு பாடல் **273**வது பாடலில் பெண் ஒருத்தியின் காமநோயினை மரத்துக்கு உவமை செய்திருக் கின்றார். அந்த பாடலில் பெண் ஒருத்திக்கு எவ்வாறு நுண்ணிய காம உணர்வு ஏற்படுகின்றது என்பதையும் ஆசை மற்றும் காமம் இரண்டும் வெட்கமறியாது என்பதையும் விளக்குகின்றார். சில் என வீசும் வாடை காற்று பெண்ணின் உடலை வருடுகின்ற போது காம உணர்வு முளைவிடுகின்றது. பனிகாலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்மிகுதியான நேரத்தில் கணவன் அருகினில் இல்லாமையினால் அவள் துன்புறுகின்றாள் என ஔவையார் சித்தரிக்கின்றார். அதேவேளை இவை எல்லாவற்றினையும் தலைவன் அறிந்திருப்பான்தானே? என்ற கேள்வியின் மூலம் பெண் தனது காம உணர்வுகளினை தலைவன் அறிந்திருக்க வேண்டும் என்கின்ற உரிமையுடன் கூடிய எதிர்பார்ப்பும் பெண்கள் மத்தியில் இருக்கின்றது என்ப தனை பெண்பால் புலவர் தெளிவாக எடுத்துரைக்கின்றார். மேலும் பெண்கள் அந்தரங்கமான உணர்வுகளினை எல்லாம் தோழியிடம் கூறுவதனால் காமமிகுதி யினால் நாணம் இழந்தவளாகக் காணப்படுகின்றனர். பெண்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான அச்சம், பயம், நாணம் என்கின்ற மூன்று குணங்களில் காமம் என்னும் நோயினால் நாணத்தினை இழந்தேன் அதனால் மற்றவர்களின் நகைப்புக்குரியவளாகப் பார்க்கப்பட்டேன் என எண்ணி வருந்து கின்றாள். பிரிவுத்துயரினையும் காமத்தின் விளைவால் ஏற்படுகின்ற தவிப் பினையும் பல பெண்பால் புலவர்களின் பாடல்கள் விளக்குகின்றன. பெரும் பாலான பாடல் வரிகளின் யதார்த்தமானது கேள்விக்குரியதாகவுள்ள துடன் நாடகத்தன்மை வாய்ந்ததாகவுமுள்ளது. ஆனாலும் உடலியல் தேவையின் அவசியமானது என்பதனை உணர்வு பூர்வமாக அறிந்து கொள்ளக்கூடிய தாகவுள்ளது.

சங்க இலக்கியங்களில் கணவனைப் பறிகொடுத்த அல்லது இழந்த பெண்களின் ஆதங்கங்கத்தினை, துன்பத்தினை பூதப்பாண்டியன் தேவியர், மாரிப்பித்தியார், தாயங்கன்னியார் போன்ற பெண்பாற்புலவர் உட்பட பல புலவர்கள் கவியாகப் படைத்துள்ளனர். கணவனை இழந்தவளை "கைம்பெண்", "கைம்பை" என்ற சொற்களினால் அழைத்தனர். குடும்பம் என்கின்ற நிறுவனத்தில் கணவன் மற்றும் மனைவி என்கின்ற பாத்திரங்கள் முதன்மை வாய்ந்தவை. தலைவனை இழந்த குடும்பத்தில் சமூக, பொருளாதார நிலைபேறுதன்மை சிதைவது மட்டுமன்றி, தலைவியின் இருப்பினையும் சிதைப்பதாகவேயுள்ளது. பூதப்பாண்டியன் தேவியாரினால் எழுதப்பட்ட **246** வது புறநானூறு பாடலில் கணவனை இழந்த மனைவி ஏன் உடன்கட்டை ஏறவேண்டும் என எண்ணுகிறாள் என்பதற்கு பல காரணங்களினை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சங்ககாலத்து சமூகத்தில் கணவனை இழந்த பெண்ணுக்கு பழைய சாதமும் (நீர்ச்சோறு) எள்துவையலும், புளிசேர்த்த வேர்க்கீரை போன்றன உண்பதற்கும் அவர்கள் படுத்து உறங்குவதற்கு கல் படுக்கையும் வழங்கப்படும். இவ்வாறன வாழ்வியல் நடை முறையினை கைம்மை நோன்பிற்றல் என்பர். கைம்மைகளுக்கு வழங்கும் கொடுமையான வாழ்வியல் தண்டனைகளினை எண்ணி பயந்தும் அவர்கள் தமது கணவனின் ஈமத்தீயில் தம்மை மாய்த்து கொள்ள விரும் பினார்கள். அவர்கள் ஈமத்தீயில் தம்மை மாய்த்து கொள்ளும் அனுபவத்தை "இதழ் மலர்ந்த தாமரையின் தண்ணீர் பொய்கை நீர்போல் இன்பம் அளிக்கும் என்று" வர்ணித்துள்ளனர். சங்க புலவர்கள் கணவன் மறைவின் பின் கைம்மை களாக வாழ்வதனை விட மிக உயர்வானதும் உன்னதமானதும் ஈமைத்தீயில் தம்மை மாய்த்தல் என நம்பினர். சங்க காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவி யும் தன் உயிரைப்போக்கிக் கொள்ளும், தலைக்கற்பு, இடைக்கற்பு போன்ற மரபுகள் இலக்கியங்களில் வலியுறுத்தப்படுகின்றது. கைம்மை நோன்பு குறித்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பாடல்களில் விளக்கப்பட்டிருக்கின்றது. மாநோக்கத்து நப்பசாலையார் பாடிய பாடலில் பெண் ஒருத்தி விழுப்புண் பட்டு இருக்கும் தனது கணவன் இறந்தால் தான் "கழிகல மகளிர்" கைம்மை நோன்பு அனுஷ்டிக்க வேண்டி வரும் என எண்ணி கலக்கம் கொள்கின்றநிலை வெளிப்படுத்தப்படுகின்றது. இப்பாடலில் மாநோக்கத்து நப்பசலையார் கைம்மை நோன்பு இருக்கும் கைம்மைகள் மொட்டையிட்டு, அல்லிசோறு உண்டு வாழ வேண்டும் என்கின்றார். மேலும் இப்பாடலில் தலைவி விழுப்புண் அடைந்த தலைவனை இழந்து விடுவேன் என்ற பதகளிப்பினையும், அவ்வாறு நடந்து விடுமே என எண்ணி அருடம் கொள் கின்றாள். இவ்வாறு நடந்துவிடும் என்பதற்கு: புண்கள் மீது வண்டுகள் மொய்க்கின்றதினையும், வீட்டில் ஏற்றிவைத்த விளக்கு அடிக்கடி அணை கின்றமையினையும், உறங்காத விழிகளுடன் கணவன் அருகிலிருந்து சேவகம் செய்த என்னுடைய கண்கள் உறக்கத்தை நாடுகின்றமையினையும். ஆந்தை அலறுகின்றமையினையும், செம்முது பெண்டின் சொற்கள் பாதகமானதாக அமைந்ததினையும் காரணமாக முன்வைக்கின்றனர். தலைவன் மீளாதுயில் கொள்ளப்போறான் என்று எண்ணிய பெண்ணின் ஏக்கம் மிகவும் யதார்த்தமாக 280 வது புறநானூற்றுப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாயங்கண்ணியார் என்ற பெண்பால் புலவர் கைம்மைநோன்பின் கொடுமையினை "மனையும் மனைவியும" என்ற புறநானூற்றுப்பாடலில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

சங்ககாலத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு தலைமயிர்கள் கொய்யப் பட்டன, அவர்கள் கைகளில் வளையல்கள் அணிவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன, அவர்களுக்கு வழங்கப்படும் உணவிலும் வரையறைகள் இடம்பெற்றிருந்தது. அதாவது அல்லி இலையில் அளவுசாதம் வழங்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு துன்பங்களினை கைம்மைகள் அனுபவித்ததை தாயக கன்னியார் என்ற பெண்பால் புலவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அளவு சாப்பாட்டினை உட்கொள்ளுவதால் பால்வேண்டி அழும் பாலகனுக்கு பால் வழங்க முடியாத தாயின் பரிதாபமான நிலைமையும் இங்கு சுட்டிக்காட்டப்படு கின்றது. இவ்வாறு கைம்மைகளின் அவலமான வாழ்வியலை சங்கப்பாடல்கள் எமக்கு காட்சிப்படுத்துகின்றன. அதேவேளை மனைவியினை இழந்த கணவனின் வலிகள் ஆழமானவை. கணவனை இழந்த பெண்குறித்த சமூக பார்வையும், மனைவியினை இழந்த ஆண்குறித்த சமூகத்தின் பார்வையும் வேறுபட்டவை யாக இருந்தன. ஆனால் தனிமனித இழப்பின் வலியானது மிக ஆழமாக சங்கப் பாடல்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்ற பெண்பால் கவிஞர் மனைவியினை இழந்த கண வரின் புலம்பலினை குறிப்பிடுகையில் கள்ளிச்செடிகள் வளர்ந்துள்ள துயிலும் இல்லத் தில் (சுடுகாட்டில்) விறகுகளினால் அடுக்கப்பட்ட படுக்கையில் என் அன்புக் குரியவளுக்கு தீ மூட்டப்பட்டுள்ளது. நான் தனியே என்னவளை ஈமைத்தீயில் விடமாட்டேன் நானும் அவளுடன் கூடவே ஈமைத்தீயில் கலக்கப்போகிறேன் என துணைவியினை இழந்த ஆடவன் படும் வேதனையினை 245வது புற நானூறு பாடல் குறிப்பிடுகின்றது. குடும்பத்தில் ஏற்படுகின்ற இழப்புகள் குடும்பத்தின் இயல்பு நிலைகளினை பாதிப்பவையாகவே சங்கமுதல் சமகாலம் வரை காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.4 போரும் வீரமும்

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் மூவேந்தர் களுக்கும் குறுநில மன்னர்களுக்குமிடையே அதிகார போட்டியின் மிகுதியால் ஓயாது போர்கள் நிகழ்ந்தவண்ணம் இருந்தன. பண்டைய கிரேக்கச் சமூகம் போல போர்ச் சமுதாயமாக விளங்கிய தமிழகத்தில் பெண்டிரும் ஆடவர்போல் மறவுணர்வு மிக்கோராய் விளங்கினர். (தட்சிணா மூர்த்தி, 2021 ப.24). பூங்கன் உத்திரையார் என்ற பெண்பால் கவிஞர் கூந்தல் வெண்மையாக நரைத்த மூதாட் டித் தாய் ஒருத்தி தனது மகன் போர்க்களத்தில் மாண்டான் என கேள்வியுற்ற போது அவனை பெற்ற பொழுது ஏற்பட்ட ஆனந்தத்தினை காட்டிலும் ஓர் உயர்வான பெருமகிழ்வு கொண்டாள் எனக் குறிப்பிடுகின்றார். இங்கு தாய் சேய் என்கின்ற இரத்த உறவைக்காட்டிலும், வீரம், போர் என்கின்ற அரசியல் உறவு நிலை முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் தாய் பாசத்தின் மிகுதியினால் மாவீரனை பெற்றதாக மார்தட்டி பூரிப்பு அடைந்த தாய் நிலைதழும்பி, நிலைகுலைந்து மாலைப் பொழுதில் மூங்கில் காட்டில் மழை பொழிவது போல் பாச உணர்வின் மிகுதியால் அவள் கண்களிலிருந்து கண்ணீர் சிந்துகின்றாள். இதற்கு "சிதரினும் பலவே" என்கின்ற புறநானூறு பாடல் சான்றாக அமை கின்றது.

பண்டைய பெண்டிர் பந்த பாசங்களுக்கும், உறவுகளினால் ஏற்படுகின்ற உணர்வுகளுக்குள்ளும் சிக்குண்டு கொள்ளாமல் வீரத்துக்கும் ஆண்மைக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இருந்தார்கள். இதற்கு பிரமாணமாக புற நானூற்றில் காக்கை பாடினியார் நச்செள்ளையார் எழுதிய 278வது பாடல் அமைகின்றது. மகன் யுத்தத்தில் புறங்கொடுத்தான் என ஊர் சொல்ல கேட்ட தாய் அது உண்மை எனின் அவனுக்காகப் பால் சுரந்த என் முலையினை அறுத்து எறிவேன் என சபதம் செய்து நடந்தவற்றினை காண்பதற்கு யுத்த களம் செல் கின்றாள். அங்கு மாய்ந்த வீரர்களுடன் தன்மகனும் நெஞ்சில் விழுப்புண்களுடன் களத்தில் மாண்டுகிடப்பதை கண்டு ஆனந்தம் கொள்ளுகின்றாள். மேலும் ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பால் புலவரினால் வாகை திணையில் எழுதப்பட்ட செல்கெனவிடுமே என்ற 279வது புறநானூறு பாடலில் ஓர் மறவ குலத்து பெண்ணின் துணிவும், நாட்டின் மீது கொண்ட நாட்டுப்பற்றும் தெளி வாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது பேணுவதற்கு யாருமற்ற நிலையில் இருக் கும் பெண் நாட்டின்மீது கொண்ட தீராத காதலின் விளைவாக (நாட்டுப்பற்றின்) தன்னுடைய சிறிய மகனை யுத்த களம் அனுப்புகின்றாள். இங்கு யுத்த களத்தில் தந்தையை, கணவனை இழந்தும் தேசிய உணர்வு மேலோங்கி நிற்பதால் அதாவது தன்னின் உணர்வு மேலோச்சி நிற்பதால் தனது சிறிய மகனைப் போர்க்களம் புகச்செய்தாள். இதனை "ஒருமகன் அல்லது இல்லோள், செருமுக நோக்கிச் செல்க என விடுவே!" என்கின்ற புறநானூற்றுப் பாடல்வரிகளில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

### 4.0 முடிவுரை

ஆண் - பெண் என்கின்ற பால் வகுப்பு இயற்கையின் நியதியின் வாயிலாக உருவாக்கப்பட்ட ஒருமையின் இரு வேறு நிலைகளேயாகும். இதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களினால் மட்டுமே தாய்மையடைய முடியும் ஆதலால் பெண்கள் எப் பொழுதும் தமிழ்ச் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகவே நோக்கப்படுகின்றார் கள். சங்க காலத்தில் பெண்கள் பல்வேறுவகையான கல்வி, கலை, பொழுது போக்கு, அறிவு, சமூக செயற்பாடுகளுடன் தம்மை இணைத்திருந்தனர். அதன் மூலம் பெண்களின் அறிவு, சமூக மூலதனம் போன்றவை மேம்படுத்தப்பட்ட வலுவான சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய பெண் ணினம் சங்க காலத்தில் பெருவாழ்வு வாழ்ந்தனர். இக்கட்டுரையில் சங்க படைப்புகளில் பெண்பால் புலவர்களினால் படைக்கப்பட்ட மொத்தம் 181 கவிதைகள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றுள் பெண்பால் புலவர்கள் அகநானூறு பாடல்கள் இருபத்திரெண்டினையும், அறுபத்திமூன்று புறநானூறு பாடல்களினையும், இருபத்தைந்து நற்றிணைப் பாடல்களினையும், அறுபத்தி யொரு குறுந்தொகைப்பாடல்களினையும், பத்து பதிற்றுப்பற்று பாடல்களினை யும் இயற்றியுள்ளார்கள். இவர்களுடைய பாடல்களில் அன்பு, காதல், வீரம், காமம், பிரிவு துயர், கைம்மை நோன்பு, வாழ்க்கை பற்றிய பேருண்மை, இற் செறிதல் போன்றன பெண்மைக்கே உரிய நுட்பமான உணர்வுகள், அறிவுணர் வுடன் மதிநுட்பமாக வெளிப்படுத்தியுள்ளனர். உலகளாவிய மாந்தர்கள் இன்றுவரை மனித வாழ்வியலை மேம்படுத்துவதற்காக சபைகள் அமைத்தும் சங்கம் வைத்தும் முயன்றுவரும் வேளையில் பண்டைய பண்பாட்டு தமிழன் அன்றே உயர் நாகரீகமான வாழ்வியலை தமக்கு அமைத்து கொண்டான்.

**5.0 உசாத்துணைகள்**


- கனகலதா முகுந்த்(2016) பழந்தமிழ்வணிகர்கள் சர்வதேச வர்த்தகத்தின் முன்னோடிகள்.
- கிருஷ்ணராசா,சோ, (2010), பண்பாடு: சமூகமெய்யியல் நோக்கு, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
- பாலசுந்தரம், (2015) பண்டைய தமிழ்ப்பண்பாடு- ஓர் புதிய அணுகுமுறை, நொன்ரோ: சுவாமி விபுலானந்தர் ஆய்வு மையம்.
- புலியூர்க்கேசிகன், (2003), அகநானூறு மணிமிடைபவளம் சென்னை ராமபிரசுரம்.
- புலியூர்க்கேசிகள், (2002),புறநானூறு தெளிவுரை சென்னை பாரிநிலையம்.
- வையாபுரிப்பிள்ளை, எஸ், (2009), இலக்கியச் சிந்தனைகள், பாரிநிலையம், சென்னை.
- தட்சணாமூர்த்தி,அ, (2021) தமிழர் நாகரிகமும் பண்பாடும், சென்னை: ஐந்திணை பதிப்பகம்.
- அருணாச்சலம்,மு (2009), தமிழ் இசை இலக்கிய வரலாறு. தஞ்சாவூர்: மங்கையர்கரசி பதிப்பகம்.
- ஆறவாணன்,க,ப.(1994) தமிழ்ச்சமுதாய வரலாறு, கலப்பியக்காலம், சிதம்பரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மோகன்,இரா.(2004) சங்கஇலக்கியம் பத்துப்பாட்டு1, சென்னை: நியூ செஞ்சுரி புக்கவுஸ் (பி) லிமிட்
- மோகன்,இரா.(2004) சங்கஇலக்கியம் பத்துப்பாட்டு11, சென்னை: நியூ செஞ்சுரி புக்கவுஸ் (பி) லிமிட்
- வேங்கடசாமி. மு.சீ (2007) பழங்காலத் தமிழ் வாணிகம்: இந்தியர் நாம் தமிழர் பதிப்பகம்.
- வேலுப்பிள்ளை, ஆ (1985), தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் பாரிபுத்தகப் பண்ணை, சென்னை, மூன்றாம் பதிப்பு.
- சுப்பிரமணியன், ச.வே.(2006), சங்கஇலக்கியம்(முழுவதும்) சென்னை: மணிவாசகர் வெளியீட்டகம்.
- சிவேசன், சி. (2023), சங்க இலக்கியத்தில் வணிகமும் வணிக நடைமுறைகளும், இந்தியா : எழிலினி பதிப்பகம்.
- சிவானந்தமூர்த்தி, க.(2003)இ கோவலன் - கண்ணகி மாதவி ஆளிடைக் கவர்ச்சி ஓர் உளவியல் ஆய்வு. ஐெ இரகுபரன்.க. (பதிப்பாசிரியர்), நிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் பேதலங்கள் (பக் 273 - 290): கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு.
- சிவத்தம்பி, கா (1985) தமிழ்த்தேசியமும் சமுதாயக்கொந்தழளிப்பும், யாழ்ப்பாணம்: ஈரோஜ் ஆவணக்காப்பக வெளியீடு.
- சிவத்தம்பி, கா (1994) தமிழ்இலக்கியத்தில் மதமும் மானிடமும் சென்னை : நியூ செஞ்சரி புக்ஹவுஸ் வெளியீடு.
- சிவத்தம்பி, கா (2000) யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடும், கருத்துநிலை, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
- வித்தியானந்தன், சு (2007) தமிழர் சால்பு, கண்டி.
- ராஜன்,கா. (2010), தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பங்களில் தங்கிவாழும் வேலையற்ற யுவதிகளைச் சமுதாய மேம்பாட்டு வேலைகளில் உள்ளீர்த்தலிலான சவால்கள்.

**இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*சமூகவியல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையில் இன்னும் தீர்க்கப்படாது தொடர்ந்து கொண்டிருக்கும் சமூகப் பிரச்சினைகள் பலவகைப்பட்டவை. அப்பிரச்சினைகள் பல்வேறு மட்டங்களிலும் பல பிரமாணங்களிலும் நிலவுகின்றன. எத்தகைய மட்டத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் எனினும் அவை பொதுநிலையில் சமூக மற்றும் சமுதாய மேம்பாட்டுக்கான சவால்களே. இதனால் சமூக மற்றும் சமுதாய மேம்பாட்டினை முன்தள்ளக்கூடிய வகையில் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சாத்தியமான வழிமுறைகளை இனங்காண வேண்டியது அவசியமாகின்றது.

இத்தகைய பிரச்சினைகளிலே இளையோர் சம்பந்தமான பிரச்சினைகள் இன்று பூதாகரமாக உருவெடுத்துள்ளன. இளையோர் விலகல்கள், இளையோரின் கடத்தல்கள் (*youth trafficking*), இளையோர் இடர்நடத்தைகள் (*youth risk behavior*) முதலியவற்றினைப் போல மிகக்கடுமையான சமூகத்தாக்கத்தினைத் தரவல்ல பிரச்சினையாக இளையோர் வேலையின்மை அமைந்துள்ளது. இது வளர்ந்து வரும் தேசங்களில் வேலைக்காக 'கியூ' வரிசையில் நிற்பவர்களின் தொகையினை அதிகரித்துள்ளது. இளைஞர் யுவதிகள் கற்றுக்கொண்ட கல்விக்கும் வேலையுலகத்துத் தேவைப்பாடுகளுக்குமிடையில் ஒரு பெரிய பொருத்தப்பாடின்மை (*mismatch*) இருப்பதைப் பல்வேறு தரப்பினரும் வெளிப்படுத்தி வருகின்றனர். கல்வித்தரத்தினால் உயர்ந்த இளைஞர் யுவதிகள் ஆகக்குறைந்தது 'எல்லோருக்கும் பொருந்த வைக்கப்படும் ஒரு வேலை' (*one size-fits-all*) என்ற தீர்வுமுறைக்குள் வந்து திருப்திப்பட்டுக்கொண்டு காலங்கழிக்கின்றனர். இதனால் அவர்களின் உற்பத்தித்திறன் குறைந்து அது புதிய பிரச்சினைகளுக்குக் காரணமாகி விடுகின்றது.

க.பொ.த (உயர்தரம்) தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் பட்டம் பெற்றவர்கள் நீங்கலாக உள்ள இளைஞர் யுவதிகளை வேலைப்படையினுள் உள்ளீர்த்தலிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்கள் மேலும் சுமையானவை. இவ்வாறு க.பொ.த (சாதாரணதரம்) மற்றும் க.பொ.த(உயர்தரம்) வரை பாடசாலைக்கல்வியைத் தொடர்ந்து, கல்வியிலிருந்து விடுபட்டுப்போன, இன்னும் குடும்பங்களில் தங்கிவாழும் இளைஞர் யுவதிகள் தனித்துக் கவனிக்கப்படவேண்டிய ஒரு பிரிவினராவர். அவர்களிலும் குறிப்பாக இளைஞர் நிரந்தர அல்லது நிரந்தரத் தன்மையற்ற வன்திறன் வேலைகளில் (*hard skill works*) ஈடுபடுகின்றனர். ஆனால் யுவதிகள் (*female youth*) குடும்பங்களில் தங்கிவாழும் ஒரு பிரிவினராக மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவற்றுக்கான காரணங்கள், அவற்றைத் தீர்ப்பதற்கான உபாயங்கள் குறித்து சிந்திப்பது அவசியமாகின்றது.

**யார் இந்த யுவதிகள்?**

சமூகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவினராக குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகள் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் க.பொ.த. உயர்தரத்தோடு அல்லது உயர்தரத்திற்கு முன்னர் ஏதோ ஒரு வகுப்புடன் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக் கொண்டவர்கள். இவர்கள் பொதுவாக கல்வியைத் தொடர்பவர்களாகவும் இல்லை ஏதாவதொரு தொழில் புரிபவர்களாகவும் இல்லை. நகரப்பகுதிகளில் இந்தப் பிரிவினரை உள்வாங்கத்தக்க தொழில் முயற்சியாண்மைகள் அதிகம் வளர்ந்துள்ள நிலையில் ஒப்பீட்டுரீதியில் கிராமப் புறங்களில் இவ் இளம் பெண்கள் திருமணமாகும்வரை குடும்பத்தில் தங்கி வாழ்பவர்களாகவே உள்ளனர். உழைப்புக்கான மூலங்கள் எதுவுமற்றவர் களாகவும், உழைப்பதற்கான மார்க்கங்களைத் தேடும் ஆர்வம் அற்றவர்களா கவும், உழைப்பதற்கான தகுதியை அதிகரித்துக்கொள்வதில் பொறுப்புணர்வு குறைந்தவர்களாகவும் இருக்கும் இவர்கள் பெற்றாரிலோ அல்லது பாதுகாவலர்களிலோ தங்கியிருப்பவர்களாக உள்ளனர். செயலாற்றலுக்கான வயதுப்பிரிவினராக விளங்குகின்ற இவர்களின் செயல்கள் குடும்பங்களில் வீட்டினைப் பராமரித்தல், வீட்டிலுள்ள சிறுபிள்ளைகளைப் பராமரித்தல், வீட்டுவேலைகளில் தாய்க்கும் வயதில் மூத்த பெண்களுக்கும் துணையாயிருத்தல், தம்மை அழகுபடுத்திக் கொள்வதிலான செயற்பாடுகள், அயலவர்களுக்கு ஒத்தாசை செய்தல் ஓய்வு நேரத்தினை அவர்களுடன் கழித்தல், தமது பொழுதுபோக்கிற்காக சில விடயங்களிலே ஆர்வமாயிருத்தல் முதலிய பலவற்றில் தொடர்ச்சியாகவும் கிரமமாகவும் ஈடுபடுவதாக அமைகின்றன. தாம் தமது குடும்பத்தில் ஒருவராக இருத்தலால் இவற்றைச் செய்தாகவேண்டும் என்ற இயல்பான ஏற்புடைமையினால் இத்தகைய கடமைகளைச் செய்கின்றனர். இக்கடமைகளில் ஈடுபடும் அதேவேளையில் தங்கியிருத்தலால் ஏற்படும் பல்வேறு உள மற்றும் சமூகத் தாக்கங்களுக்கும் உட்படுபவர்களாக விளங்குகின்றனர். இத்தகைய ஒரு பிரிவினர் ஒவ்வொரு கிராமங்களிலும் கணிசமான அளவினராக உள்ளனர். ஓர் ஆற்றல்மிக்க பிரிவினர் வெறுமனே வீட்டுக்கடமைகளுடன் (*domestic works*) மட்டும் தம்மை முடக்கிக்கொள்வது எந்தளவில் ஒரு சமுதாய மேம்பாட்டுக்குத் துணைசெய்யும் பிரிவினராக இவர்களை ஆக்கும் என்ற வினா எழுகின்றது. இதனால் தவிர்த்துவிட முடியாத இந்தத் தங்கிவாழும் வேலையற்ற யுவதிகளை கிராமிய மற்றும் சமுதாய மேம்பாட்டுச் செயன்முறைகளில் உள்ளீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் கவனஞ்செலுத்த வேண்டியுள்ளதுடன் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்ளும் தனிமனித, குடும்ப மற்றும் சமூக மட்டத்திலான பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

**தங்கிவாழும் யுவதிகளின் தனிமனித உள மற்றும் சமூகத் தாக்கங்கள்**

சமூகத்தின் பால்நிலைசார் கண்ணோட்டங்களில் ஒப்பீட்டு ரீதியில் தங்கிவாழும் வேலையற்ற யுவதிகள் எதிர்கொள்ளும் உள மற்றும் சமூகப் பிரச்சினைகளும் தாக்கங்களும் அத்தகைய தங்கிவாழும் ஆண்களிலும் அதிகமாகும். இத்தகைய ஆண்களின் பொறுப்புக் கூறுதல் என்பது பொருளாதார உழைப்புடன்தான் அதிகம் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றது. ஆனால் தங்கிவாழும் வேலை யற்ற யுவதிகளின் பிரச்சினைகள் சமூகப் பாதுகாப்பு, தனியாள் உள நெருக் கீடுகள், பொருளாதார உழைப்பிற்கான சமூக அந்தஸ்து முதலிய பல விடயங் களுடன் தொடர்புபட்டதாக அமைகின்றன. அவற்றினைப் பின்வரும் வகையில் சற்று விரிவாக நோக்கலாம்.

- தொழிலற்ற குடும்ப அங்கத்தவர் என்பதால் தங்கள் அனைத்துத் தேவை களுக்காகவும் பிறரில் தங்கியிருக்க நேரிடுவதால் ஏற்படும் மனச்சுமைகளு டன் இருப்பர்.
- திருமண வயது வரை தங்கியிருப்பதால் குடும்பங்களில் பொருளாதார தேட்டத்தில் அவர்களை மையப்படுத்தியதான சில சுமைகள் உணரப்படும்.
- தொழிலொன்றைப் பெறுவதற்கான போதிய கல்விசார் தகுதி இல்லாமையால் வீட்டுக்கடமைகளுடன் மட்டுமே தமது காலத்தைக் கழிக்கும் இவர்களிடத்தில் சலிப்புணர்வு அதிகரிக்கின்றது.
- சில குடும்பங்களில் நீண்டகாலம் தங்கிவாழ்பவர்களாக விளங்குவதால் அவர்கள் மீதான அவதூறுகளும் வன்முறைகளும் நிகழ்கின்றன.
- வீட்டுக் கடமைகள் தவிர்ந்த நேரங்களில் ஏதோ ஒரு வெகுஜன ஊடகத்தின் செல்வாக்கிற்கு உட்படுவதால் அவற்றின் வழியான கருத்தேற்றங்களுக்கு உட்படுகின்றனர்.
- தமது குடும்பத்திலோ அல்லது தாம் வாழும் சூழலிலுள்ள ஏனைய குடும்பங் களிலோ தம்வயதினை ஒத்தவர்கள் தொடர்ந்து கல்வி கற்பது தொழிலுக்குச் செல்வது தொடர்பாக தாழ்வுமனப்பான்மை கொண்டவர்களாக இருப்பர்.
- சமூக மட்டத்தில் கிடைக்கின்ற கணிப்பு, அங்கீகாரம் மற்றும் அந்தஸ்து என்பவற்றில் ஒப்பீட்டு ரீதியில் குறைவை உணர்பவர்களாக இருப்பர்.
- எதிர்காலம் தொடர்பான ஏக்கங்கள் மிகுந்தவர்களாகவும் நிகழ்காலத்தில் எல்லாவகையான தேவைகளையும் சுயமாக பூர்த்திசெய்ய முடியாதவர் களாகவும் இருப்பர்.
- சுயதொழில் ஒன்றைச் செய்வதற்கான கட்டாயமான நிலைமைக்குத் தள்ளப் படும் இவர்கள் வங்கிக் கடன்கள் மற்றும் லீசிங் பெறுவதன் மூலமாக குடும்பப் பொருளாதார நிலையில் இரட்டைச் சுமையேற்றுபவர்களாக மாறி மேலும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குடும்பத்தின் இளவயது அங்கத்தவர்களுக்குத் தாம் முன்மாதிரிகளாக அமையமுடியவில்லையே என்ற ஏக்கம் நிறைந்த மனநிலை உடையவர்களாக இருப்பர்.

- தம்வயதை ஒத்த தொழில்புரிபவர்கள் மற்றும் தொடர்ந்து கற்பவர்களுடன் ஒப்பிடுகையில் திருமணத்தின் பின்னான வாழ்வு தொடர்பாகப் பொதுநிலையில் பெறவேண்டிய விசேடமான சில அறிவைப் பெறுவதிலான தேக்கநிலை உள்ளவர்களாக அல்லது வாய்ப்பற்றவர்களாக இருப்பர்.

- பொது வேலைகளில் ஈடுபடுதல் மற்றும் தலைமைத்துவம் ஏற்றலில் தயக்கம் காட்டுபவர்களாக இருப்பதால் இவர்களிடத்தில் பொதிந்துள்ள சமூகத்திறன்களைத் தம்முள் தாமே மறைத்துள்ளவர்களாக இருப்பர்.

- எப்போதுமே குடும்பங்களின் மூத்த பெண்களின் அதீத கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் இருப்பதால் பெண்கள்மீது சமூகம் வகுத்துள்ள பாரம்பரியமான விழுமியங்களை மாற்றமில்லாது காவிச்செல்பவர்களாக இவர்கள் வடிவமைக்கப்படுகின்றனர்.

மேற்கண்ட நிலைமைகள் வேலையற்ற, குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகளை சமுதாய மேம்பாட்டுக்கான விசைகளாக மாற்றுவதற்கான தடைக் காரணிகளா கவும் தொழிற்படுவதை நுணுக்கமாக அவதானிக்கமுடியும். இவர்கள் கல்வித் தகுதியை வெளிக்காட்டும் சான்றிதழ்களை வைத்துக்கொண்டு வேலைக்காக வரிசையில் நிற்பவர்கள் அல்ல. இவர்கள் தனித்துவம் வாய்ந்த பிரிவினர் என்பதால் கிராமிய மற்றும் சமுதாய மேம்பாட்டுச் செயன்முறைகளில் இவர் களை உள்ளீர்த்தலுக்கான வழிமுறைகள் தனித்துவம் வாய்ந்ததாக அமையலாம். இத்தகைய வழிமுறைகள் ஒரே நேரத்தில் வேலையற்ற குடும்பங் களில் தங்கிவாழும் யுவதிகளின் குடும்பம் மற்றும் சமூக மட்டத்திலான நெருக்கு வாரங்களைக் குறைப்பதுடன், அவர்களை தாம் வாழும் சமுதாயத்தின் மேம் பாட்டுச் செயன்முறைகளில் பங்கேற்பவர்களாகவும் மாற்றும்.

**குடும்பங்களில் தங்கிவாழும் வேலையற்ற யுவதிகளை வலுவூட்டுதல்**

சமுதாய அபிவிருத்திச் செயன்முறைகள் தொடர்பான இன்றைய சிந்தனைகளில் பெண்களின் பங்கேற்பு தொடர்பாக அதிக சிரத்தைகொள்ளப்படுகின்றது. கிரா மிய சமுதாயங்களில் ஏற்படவேண்டிய அபிவிருத்திச் செயன்முறையின் பிரதான பங்குதாரர்களாக பெண்கள் விளங்கவேண்டியதன் அவசியத்தினை சகல தரப்பினரும் வலியுறுத்துகின்றனர். இதற்காக கிராமிய சமுதாயங்களில் உள்ள பெண்களை வலுவூட்டும் வகையில் சுய உதவிக் குழுக்கள் தொழிற்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழுக்களில் தொழிற்படு நிலையிலுள்ள பெண்கள் பலவகைப்பட்டவர்கள். திருமணமான பெண்கள், யுவதிகள், கணவனை இழந்த பெண்கள் என்ற தனியான வகைப்படுத்தல்களோ அல்லது பேதப்படுத்தல்களோ இன்றி சுய உதவிக் குழுக்களில் பெண்களின் அங்கத்துவம் மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. இலங்கையை பொறுத்தவரை கிராமிய மட்டத்தில் தொழிற்படும் பெண்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ***(WRDSs)*** இதற்கான அடிப்படை அலகுகளாகத் தொழிற்பட்டு வருகின்றன. இவை மாகாண மட்டங்களில் கிராமிய அபிவிருத்தித் திணைக்களங்களின் அதிகார எல்லையினுள் தொழிற்பட்டு வருகின்றன. மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களின் நேரடியான கட்டுப்பாடுகளும் இவற்றின்மேல் உள்ளன. இத்தகைய அமைப்புக்கள் சுய உதவிக் குழுக்களாக தொழிற்படுவதைப்போல அரச சார்பற்ற வேறும் பல அமைப்புக்களால் பெண்களுக்கான சுய உதவிக் குழுக்கள் சில குறித்த தேவைகளை விசேடமாகக்கொண்டு அமைக்கப்படுகின்றன.

கிராமிய சமுதாயங்களில் பெண்கள் பங்கேற்றலினால் வெற்றிகொள்ளப்பட வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. அதற்கான செயலூக்கம் மிக்க பகுதியினராக கிராமிய சமுதாயங்களில் வேலையற்ற குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகளை இனங்காண முடியும். சுய உதவிக்குழுக்களின் வினைத்திறன் வாய்ந்த செயற்பாடுகளுக்கு பெரியளவில் பங்காற்றிக் கிராமிய சமுதாய அபிவிருத்திச் செயன்முறைகளில் தம்மைத் தவிர்க்கமுடியாத பங்காளிகளாக இணைத்துக் கொள்ள வேண்டிய ஒரு பிரிவினராக வேலையற்ற குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகள் இனங்காணப்படுகின்றனர். இவர்களைக் கிராமிய சமுதாய அபிவிருத்திச் செயன்முறைகளில் உள்ளீர்தலுக்கான சவால்கள் பல்வேறு மட்டங்களில் உள்ளன. அத்தகைய சவால்கள் மற்றும் தடைகளை கொள்கை நிலையில் பகுப்பாய்வு செய்வதன்வழி இப் பிரிவினரை கிராமிய மட்டத்திலான சுய உதவிக் குழுக்களின் பங்காளிகளாக ஆக்குவதுடன் அவர்களின் வலுவூட்டலுக்கான உபாயங்களைக் கண்டறிவதும் அவசியமாகும். இவர்களை வலுவூட்ட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு வருகின்றது. இவ் வலுவூட்டல் செயன்முறை தனியாள் நிலை, குடும்ப மட்டம் மற்றும் சமூக மட்டம் ஆகிய மூன்று மட்டங்களில் நிகழவேண்டும்.

இந்த மூன்று மட்டங்களிடையிலும் ஒரு ஒருங்கிணைந்த தொடர்பு ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கான சில உபாயங்கள் அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வகுக்கப்பட்டு நடைமுறையிலுள்ள போதிலும் அவை மேலும் வினைத்திறனான வெளிப்பேற்றினைக் காட்டவேண்டியுள்ளன. பின்வரும் காட்டுரு மேற்குறித்த மூன்று மட்டங்களிலும் கவனிக்கப்பட வேண்டிய சில வழிமுறைகள் மற்றும் செயன்முறைகளைக் குறிப்பிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கு**

கிராம மட்ட சமுதாயங்களில் வேலையற்ற குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகளை கிராமிய மற்றும் சமுதாய மேம்பாட்டுச் செயன்முறைகளில் உள்ளீர்த்தல்

**செயன்முறைகள்**

கிராம மட்ட சமுதாயங்களில் வேலையற்ற, குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகளை பங்கேற்க வைக்கும் திட்டங்களை அமுலாக்குதல்.

**உ-ம்:** ஆடை தயாரித்தல் போன்ற கூட்டு முயற்சியாண்மைகளை உருவாக்குதல். சிறு சிறு சமுதாய மேம்பாட்டு வேலைத் திட்டங்களில் பயிற்சி பெற்ற சமூகமட்ட ஊக்குவிப்பாளர்களாகத் தொழிற்பட வைத்தல். பாரம்பரிய கிராமியத் தொழில்களை நிறுவனமயப்படுத்தி அமைப்பாண்மைக்கு உட்படுத்தும் வேலைகளைக் கையளித்தல். நவீனமான தேவைகளை முன்னிறுத்திய தொழில் பயிற்சிகளை (ஆண்கள் ஈடுபடும்) வழங்குதலும் முயற்சியாண்மைக்கான அடிப்படை மூலங்களைப் பெற்றுக் கொடுத்தலும்.

**ஆரம்ப வழிமுறைகள்**

| தனியாள் நிலை | குடும்ப மட்டம் | சமூக மட்டம் |
|---|---|---|
| கிராமமட்டத் தலைமைத்துவப் பயிற்சிகள், கிராம மட்டத் தொழிற்பயிற்சிகள், சுயமுகாமைசார் பயிற்சிப்பட்டறைகள், உளஆற்றுப்படுத்தலும் தொழில்வழிகாட்டலும், வன்திறன் மற்றும் மென்திறன் பயிற்சிகளில் ஈடுபடுத்தல், சுய ஆற்றல் மதிப்பீட்டு வழிகாட்டல்களை வழங்கலும் மூலங்களைக் கண்டறிவதற்கான பயிற்சியும் | பெற்றோர் மற்றும் மூத்தோருக்கான உணர்வூட்டல் மற்றும் வழிகாட்டல் செயலமர்வுகள், மூத்தோரிடத்தில் மனப்பாங்கு மாற்றத்திற்கான கருத்தரங்குகள் | கிராம மட்ட பெண்கள் அமைப்புக்களில் அங்கத்துவம், சுய மதிப்பீட்டுச் செயலமர்வுகள், பெண்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வழிமுறைகளில் ஈடுபடுத்தல், விசேட கலந்துரையாடல்களுக்கு ஒன்று கூடுதல் கூட்டுத் தொழில் முயற்சியளாண்மைகளில் ஈடுபடுதல் |

**நிலை**: **தனியாள் நிலை** | **குடும்ப மட்டம்** | **சமூக மட்டம்**

மேற்கண்ட காட்டுருவில் குறிப்பிடப்பட்ட விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு மூன்று மட்டங்களிடையேயும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை திட்டமிடுதல் பயன்மிக்கதாக அமையும். ஆயினும் இவற்றுக்கான சவால்களும் அதிகம் உள்ளன.

வேலையற்ற குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகளை கிராமிய மற்றும் சமுதாய மேம்பாட்டுச் செயன்முறைகளில் உள்ளீர்த்தலிலான சவால்கள்

இவர்களை விசேடமான ஒரு பகுதியினராகக் கருத்திலெடுத்து தங்கிவாழ்தலாலும் வேலையற்றிருத்தலாலும் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் நோக்குடன் சமுதாய மேம்பாட்டுச் செயன்முறைகளிலே உள்ளீர்ப்பதில் குறித்த மூன்று மட்டங்களிலும் சவால்கள் பல உள்ளன. அவற்றைப் பின்வரும் வகையில் நோக்கலாம்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனியாள் மட்டத்திலான சவால்கள்:**

- வீட்டுக் கடமைகளோடு திருப்திகொள்ளும் மனப்பாங்கு
- சமுதாய மேம்பாட்டு வேலைகளில் ஈடுபடுவதிலான மனத்தடைகள்
- மரபு ரீதியான தொழில்களை விடுத்து புதியவகைத் தொழில்களில் ஈடுபடுவதிலான தயக்கம்
- தமது உண்மையான விருப்புக்களை வெளிப்படுத்துவதில் பின்நிற்றல்
- வெளியுலகச் சமூக அனுபவங்களைப் பெறுவதற்கு முன்பே அது தொடர்பான தவறான முற்கற்பிதங்களை உருவாக்கிக் கொள்ளுதல்
- தாம் சமகாலத்தில் ஈடுபடவுள்ள வேலை அல்லது கடமையுடன் திருமண வாழ்வின் பின்னான குடும்ப உறவினை இணைத்துப்பார்த்து முற்கற்பிதம் செய்தல்

**குடும்ப மட்டத்திலான சவால்கள்:**

- மரபு ரீதியான தொழில்களை விடுத்து புதியவகைத் தொழில்களில் ஈடுபடுதல்
- பெண்பிள்ளைகளுக்குப் பொருத்தமானதல்ல என்று மூத்தோர் கருதுதல்
- சமுதாய மேம்பாட்டு வேலைகளில் ஈடுபடுபட்டு பெறும் சிறியளவு வருமானத்தைக் காட்டிலும் வீட்டுப்பணி செய்வது பயன்மிக்கது என்ற வரட்டுத்தனமான போக்கு
- ஆண்பிள்ளைகளோடு ஒப்பிடுகையில் பெண்பிள்ளைகள் (யுவதிகள்) சுய முயற்சி யாண்மைகளில் ஈடுபடுவது பூரண பலனைத் தராது என்ற பொதுமையாக்கம்
- பெண்பிள்ளைகள் சமுதாய வேலைகளில் (ஊர்த்தொண்டுகளில்) ஈடுபடுவதால் வரன் (மணமகன்) தேடுவதில் சிக்கல்கள் ஏற்படலாம் என்ற ஊகங்கள்
- பெண்களின் அடக்கம் தொடர்பான மரபுநிலைப்பட்ட எண்ணப்போக்குகளுக்கும் சமுதாய மேம்பாட்டு வேலைகளில் ஈடுபடுவதற்குமான எதிர்நிலைத் தொடர்பு களை குடும்ப உறுப்பினர்கள் கொண்டிருத்தல்

**சமூக மட்டத்திலான சவால்கள்:**

- பால்நிலைக் கண்கொண்டு தொழில்களை வகுத்து நோக்கும் வார்ப்பான சமூக மன எண்ணங்கள்
- சமுதாய மட்ட நிறுவனங்களில் முதன்மைப் பொறுப்புக்களைப் பெண்களுக்காக வழங்குவதிலான தயக்கம்
- புதியவகை தொழிற்பயிற்சிகளில் ஆண்களை உள்ளீர்க்கும் அளவிற்குப் பெண்களை உள்ளீர்ப்பதில் சமுதாயமட்ட நிறவனங்கள் நாட்டங் கொள்ளாமை
- இளம் பெண்கள் சுயாதீனமாகத் தொழில் முயற்சிகளில் அல்லது சமுதாய மேம்பாட்டு வேலைகளில் ஈடுபடுதல் தொடர்பான சமூகத்தின் எதிர்மனப்பாங்கு
- சமூக மனத்தில் பதிந்துள்ள 'பெண்களுக்கான வேலைகள்' தொடர்பான ஒரே வார்ப்பான கண்ணோட்டங்கள்
- வேலையற்ற, குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகளின் பிரச்சினைகளை ஆழமான சமுதாயக் கண்ணோட்டத்துடன் நோக்குகின்ற கருத்தாடல்களைச் சமுதாயமட்ட நிறுவனங்கள் தமக்குரிய ஒரு கடமையாக ஏற்பதில் பின்நிற்றல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட சவால்களை வெற்றிகொள்வதற்கான மிக அடிப்படையிலான ஆரம்ப வழிமுறைகள் சில முன்னர் காட்டப்பட்டுள்ளன. எனினும் அவ் வழிமுறைகள் குறித்த மேலும் ஆழமான சிந்தனைகள் அவசியமாகின்றன. இந்தச் சிந்திப்புகள் குறித்த வேலையற்ற, குடும்பங்களில் தங்கிவாழும் யுவதிகளின் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கான மிகப் பொருத்தமான மாதிரியம் (***model***) ஒன்றினை கண்டறிவதற்கான சாத்தியங்களைத் தரும். இது ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட தொடருறு கருத்தாடல் களின் வழிதான் திட்டவரைவாக்கம் பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயினும் நல்ல தலைவி

முனைவர் ச. மனோன்மணி சண்முகதாஸ்

2025 ஆம் ஆண்டு ஜனவரி 07 ஆம் நாள் எல்லோரது நினைவிலும் ஆழப்பதிய வைக்க வேண்டிய இன்றியமையாத நாளாகும். அது துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூறாவது பிறந்த நாளாகும். ஈழநாட்டில் தோன்றிய அவர் ஒரு காலம் தந்த கைவிளக்கு. குறிப்பாக யாழ்ப் பாணத்தில் நாவலருக்குப் பின் வழிபாட்டு மரபைப் பேணிக் காத்து நின்றவர் அன்னை என்றால் மிகையாகாது. இன்றைய தலைமுறையின் வாழ்வியல் தடம் நெறிப்படுத்தல் இன்றித் திசை மாறிச் சென்று கொண்டிருக்கிறது. வேகமான விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் எல்லோரும் வழிமாறிச் செல்கின்ற வேளையிது. மனித விழுமியப் பண்புகளை முற்றாக மறந்து பொறி வயப்பட்டு வாழும் அவலநிலை. இந் நிலையை நெறிப்படுத்த அன்னையின் நூற்றாண்டு நம் முன்னே கை நீட்டி நிற்கிறது. எனவே அதன் கரம் பற்றி அன்னையை மீள நினைவில் நிறுத்தி வாழ எல்லோரும் இணைந்து பணி செய்ய வேண்டியுள்ளது. அத்தகைய பணியின் ஒரு சிறு துளியாகவே இந்த ஆக்கமும் அமைகிறது. அன்னை வாழ்ந்த காலத்தில் வாழக் கிடைத்த வாய்ப்பும் அவரது வழிகாட்டலால் பெற்ற பயனும் இந்த ஆக்கத்தின் அடித்தளங்கள் என்பதில் ஐயமில்லை.

### தாயும் தோற்றமும் வாழ்வுச் சூழலும்

தாயின் பெற்றோர் கல்விச் சூழலில் வாழ்ந்தவர்கள் குறிப்பாகத் தந்தையார் திண்ணைப் பள்ளிக் கல்வியையும் நவீன கல்வியையும் கற்றவர். சில ஆண்டுகள் மலையகத்துப் பெருந்தோட்டப் பாடசாலையில் ஆசிரியப் பணி செய்தவர். பின்னர் ஊருக்கு வந்து தமிழையும் சைவசமய வழிபாட்டு மரபையும் கற்பிக்கும் பணியை மேற்கொண்டவர். தாயார் சைவச் சூழலிலே பிறந்து வளர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிற் பணிகளில் குழந்தை பருவத்திலேயே ஈடுபாடு கொண்டவர். இனிய குரலில் திருமுறைகளைப் பாடும் பணியிலும் இணைந்திருந்தவர். மாவைக் கந்தனை நாள் தோறும் வழிபட்டு வளர்ந்தவர். தங்கம்மாவின் பிறப்பு பெற்றோருக்கு மகிழ்வாக இருந்தது. பேர்த்தியின் பெயரையே பிறக்கும் பெண் குழந்தைக்குச் சூட்டுகின்ற மரபு பேணப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

தங்கம்மா பெற்றோரின் வழியிலே வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட குழந்தை யாக வளர்ந்தார். தொடக்கக் கல்வி, இடை நிலைக்கல்வி என்பவற்றையும் பெற்றார். பத்தாம் ஆண்டு பயிலும் போதே கீழ் வகுப்பு மாணவர்க்குப் பயிற்றும் வாய்ப்பைப் பெற்றார். இவருடைய உரை ஆற்றும் திறனும் இப்பணிக்கு அணியாக அமைந்தது. இசைப் புலமை நாடகத்திறன் என்பனவும் இவருடைய தனித்துவத்தை மேலும் வெளிக் கொணர்ந்தன. தொடர்ந்து ஆசிரியர் கலாசாலையில் கற்கின்ற வாய்ப்பும் கிட்டிய போது தமிழறிவும் சைவம் பற்றிய அறிவும் மேலோங்கத் தங்கம்மா பயிற்றப்பட்ட ஆசிரியராகிப் பல பாடசாலை களில் கற்பிக்கும் வாய்ப்பையும் பெற்றார். ஆசிரிய பயிற்சி பெற்ற போது தனக்குக் கற்பித்த ஆசிரியர்களைப் பதிவுகளை ஒரு தொகுப்பு நூலாவும் வெளியிட்டிருந்தார். அதிலுள்ள பின்வரும் பதிவு அவருடைய ஆளுமைக்கான காரணத்தை விளக்குகிறது.

“என்னை ஒரு சொற்பொழிவாளராகவும் எழுத்தாளராகவும்
சமூகசேவையாளராகவும் ஆக்கி வைத்த பெருமை ஒரு
சில கற்றோருக்குச் சிறப்பாக உண்டு ஆகவே அவர்களின்
சமய சமூகப் பணிகளையும் அவர்கள் வாழ்ந்த சீரிய
வாழ்க்கையினையும் எடுத்துக் காட்ட வேண்டும் என்ற
நன்றியுணர்வு இந்நூலை எழுத என்னைத் தூண்டியது”

இத்தகைய ஆசியர்களைப் போல எதிர்காலத்தில் தன்னை உருவாக்கவே பால பண்டிதர், பண்டிதர் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றுத் தங்கம்மா பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியானார். இவரது ஆளுமைக்கு **1941** இல் பிரவேச பண்டிதராகி **1953** இல் பால பண்டிதராக உயர்ந்தது **1954** இல் பண்டிதராகச் சிறப்புப் பெற்று **1969** இல் சைவப்புலவராகவும் நிலை பெற்றமையே காரணமெனலாம். இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்று திருக்குறள், திருமுறைகள், புராணங்கள் பற்றி அவர் ஆற்றிய பயனுள்ள சொற்பொழிவுகள் பொதுமக்களை நெறிப்படுத்தும் நல்ல பணியாக அமைந்திருந்தன. தமிழ்ப் புலமையை மரபு வழிக் கல்வி மரபின் மூலம் பெற்றமையால் சிவத்தமிழ்ச் செல்வியானார்.

தங்கம்மாவின் வானொலி உரைகள் தமிழ் நாட்டவரையும் கவர்ந்தது. அவரைத் தமிழகம் உரையாற்ற அழைத்தது. அவரது தமிழ்ப் புலமையையும் நாவன்மை யையும் ஆற்றொழுக்கான சொற்பெருக்கும் எல்லோரையும் ஈர்த்தன. இதனால் தங்கம்மா நாடு கடந்த சிறப்புப் பேச்சாளரானார். தமிழ்நாடு சிதம்பரத்திலே நடைபெற்ற சைவச்சித்தாந்த மாநாட்டிலே உரையாற்றும் வாய்ப்பையும் பெற் றார். ஆரணியிலே நடைபெற்ற சைவச்சித்தாந்த மாநாட்டிலே உரையாற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பையும் பெற்றார். ஆரணியிலே நடைபெற்ற சைவச்சித்தாந்த மாநாட்டில் மாதர் பகுதிக்குத் தலைமை தாங்கிப் பெருமை பெற்றார். இந்த ஆற்றலே தங்கம்மாவின் பிற்கால அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஒரு தொடக்கமாகவும் அமைந்தது. பெற்றோரின் இழப்பு அவருக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி யிருந்த போதும் தமிழ்ப் பணியையும் சமயப் பணியையும் தன் எதிர்கால இலக்காகக் கொண்டு மீண்டும் ஆற்றலுடன் செயற்படலானார். இல்லற வாழ்வையும் துறந்தார். 1962 தொடக்கம் 1985 வரை அவர் செய்த அயராத பணி அவரைத் "துர்க்கா துரந்தரி" ஆக்கியது.

### தமிழ் மகளான தங்கம்மா

தமிழ்ப்பணி என்ற நிலையில் இவரது பணி வியந்து பேசப்பட வேண்டியது. ஈழத்து அறிஞர்கள் பலர் 19ஆம் நூற்றாண்டிலே தமிழகம் சென்று தமிழ்ப்பணி ஆற்றியுள்ளனர். 20ஆம் நூற்றாண்டில் கல்விப்பேறு என்ற நிலையில் ஆங்கிலக் கல்வி மூலம் பட்டம் பெறுவதற்கு பெண்களும் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். ஆனால் இவர் தனது மொழி ஆற்றலால் தமிழக அறிஞர்களால் உரையாற்று வதற்காக அழைக்கப்பட்டார். நாவலர் பாரம்பரியத் தொடர்ச்சியாகவும் இது அமைந்தது. தமிழக அறிஞர் திரு. வெள்ளை வாரணர் தலைமையில் 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற சைவச்சித்தாந்த சமாச வைரவிழாவில் "மணிவாசகர் ஞான உள்ளம்" என்ற தலைப்பில் உரையாற்றியமை ஈழத்துப் பெண் உரையாளரின் திறமைக்குச் சான்றாக அமைந்தது. இது போலவே 1973 ஆம் ஆண்டு திருவாவடு துறை ஆதின முதல்வர் அம்பலவாணர் தேசிகர் தலைமையில் நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்கிலே இரண்டாம் நாள் நடைபெற்ற மங்கையர் மாநாட்டுக் குத் தலைமை தாங்கும் பெருமையும் பெற்றார். ஈழநாட்டிலிருந்து தமிழ்நாட்டு ஆதினத்தில் இவ்வாறு மதிப்புப் பெற்ற பெண்கள் வேறுயாரும் இல்லையென்றே கூறலாம். தொடர்ந்து கும்பகோணம், திருவிடைமருதூர் போன்ற இடங் களிலும் இவருடைய உரைகள் நடைபெற்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் உரையாற்றும் வாய்ப்பையும் பெற்றார்.

தங்கம்மாவின் சொல்லாற்றலும் எடுத்துரைக்கும் திறனும் தனித்துவமானவை சொல்ல வந்த கருப்பொருளைக் கட்டமைத்து தெளிவாக விளக்கிப்பேசும் திறன் இவரிடம் மிக இருந்தது. தமிழ்மொழியின் சொற் சிறப்பை உரை மூலம் சிறப்பாக எடுத்துரைப்பார். நூல் வழிக் கருத்துக்களை ஏற்றபடி இணைந்து புறந்திரியாமல் உரையாற்றுவார். இவர் உரையாற்றும் போது ஆட்டம் அசைவின்றி இயல்பாக நின்று பேசுவார். தமிழையும் சைவவாழ்வியலும் அவர் உரையிலே நெறிப்படுத் திக் கூறி மக்களை ஆற்றுப்படுத்தும் அழகும் தனித்துவமானது.

திருமுறைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண்களைப் பற்றிய செய்திகளை 1979ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் நடந்த உலகளாவிய இந்து மாநாட்டில் எடுத்துரைத்த போது எல்லோரும் வியந்தனர். ஈழத்தமிழறிஞர்கள் வரிசையில் இவருக்கென தனியான இடம் எப்போதும் உண்டு. இவருடைய சொற்பொழி வின் பெருமை தமிழகத்தையும் தாண்டி தென்கிழக்காசிய நாடுகளான சிங்கப்பூர் மலேசியாவையும் ஈர்த்தது. 1971 ஆம் ஆண்டு மலேசியாவில் இலங்கைச் சைவர் சங்கம் இவரை அழைத்தது. இதுவே இவருடைய முதற் பயணமாக இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் பல இடங்களிலே தமிழ் மொழியின் ஆற்றலை வழிபாட்டு நெறிப் படுத்தல் முறைமையைப் புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் தாயாக நின்று அவர் உரை செய்த போது அவர்கள் உள்ளம் நிறைவு பெற்றது. புலம் பெயர்ந்து தாய கத்தை நினைந்து மனத்துள் மாய்ந்து கொண்டிருந்த தமிழ் மக்களை இவருடைய அருளுரை அமைதிப்படுத்தியது.

ஆனால் அம்மையார் சைவப்பணியைச் செய்யவிடுத்த அழைப்பைப் பெறு வதற்கு முன்னரேயே மலேசியாவுக்குத் தமிழால் அழைக்கப்பட்டிருந்தார். 1966 ஆம் ஆண்டு மலேசியாவிலே கோலாம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலே பங்கு பற்றிக் கட்டுரையும் சமர்ப்பித்திருந்தார். அவருடைய தமிழ்ப்புலமைக்கு உலகளாவிய சிறப்பு இதன் மூலம் கிடைத்தது.

இந்தப் பங்களிப்பு தமிழாராய்ச்சி என்ற நிலையிலும் ஈழத்தின் சிறந்ததொரு பெண் ஆளுமையாக அவர் சிறப்புப் பெற்றவர். தங்கம்மா மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் ஆற்றிய உரைகள் காற்றோடு போய்விடவில்லை. அவை மலேசியா - சிங்கப்பூர் பிரயாணச் சொற்பொழிவுகள் என்னும் பெயரிலே நூலாக்கம் பெற்றன. மலேசியாவில் அவர் பேசிய 27 உரைகளும் நூல் வடிவம் பெற்றுள்ளன. தங்கம்மாவின் தமிழாற்றலுக்கு அவர் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகளும் சான்றாக அமைந்தன. கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களில் தொடர் சொற்பொழிவாற்றி இலங்கை மக்களிடமும் சமய வாழ்வியல் நெறியைப் புகட்டினார். மேலும் அவருக்குப் பல்வேறு அமைப்பு களும் சிறப்புப் பட்டங்களை வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளன. பின்வரும் அட்டவணையில் அவற்றை ஒரு பார்வையில் நோக்கலாம்.

| ஆண்டு | வழங்கிய பட்டம் | வழங்கியவர் |
|---|---|---|
| *1966* | செஞ்சொற் செம்மணி | மதுரை ஆதீனம் |
| *1970* | சிவத்தமிழ்ச்செல்வி | காரைநகர் மணிவாசகர் சபை |
| *1971* | சித்தாந்த ஞானசாகரம் | காஞ்சி மெய்கண்டார் ஆதீனம். |
| *1972* | சைவதரிசினி | தமிழ்நாடு இராஜேஸ்வரி பீடாதிபதி |
| *1972* | திருவாசகக் கொண்டல் | மலேசியா சிலாங்கூர் இலங்கை சைவச் சங்கம் |
| *1973* | துர்க்கா துரந்தரி | தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் |
| *1973* | திருமுறைச் செல்வி | வண்ணை வைத்தீஸ்வரன் ஆதீனம் |
| *1974* | சிவஞான வித்தகர் | அகில இலங்கை இந்து மாமன்றம் |
| *1974* | சிவமயச் செல்வி | திருக்கேதீஸ்வர ஆதீனம் |
| *1983* | திருமொழி அரசி | இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் ஆதீனம் |
| *1991* | கலாசூரி | இலங்கை அரசு |
| *1999* | துவிஞோத்தமி | கனடா சைவச்சித்தாந்த மன்றம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மாவின் தமிழ்ப்பணிகளுக்கு ஊடகங்களும் துணை செய்தன வானொலி, செய்தித்தாள் என்பவற்றில் அவருடைய சொற்பொழிவுகள் பற்றிய செய்திகளையும் சிறப்புகளையும் மக்களுக்கு உடனடியாகப் பதிவு செய்து வழங்கின. யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஈழநாடு செய்தித்தாள் பற்றி தங்கம்மாவே எழுதியுள்ளார். அச் செய்தித்தாளின் நிர்வாக ஆசிரியர் ஹரன் பற்றிய பதிவை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

**துர்க்கா துரந்தரியான தங்கம்மா**

சைவ சமய வாழ்வியலை நெறிப்படுத்தும் களமாக விளங்குவது திருக்கோயிலாகும். மனித வாழ்வியலில் அல்லல் என்னும் தொடர் துன்பங்களை எதிர்கொள்ளும் ஆற்றலைத் தருவது திருக்கோயில் வழிபாடாகும். வழிபாட்டுப் பயிற்சியால் மனித உள்ளம் அமைதியுறும். அன்பு நெறியிலே தொழிற்படும். நமது முன்னோர் நமக்குக் கையளித்துச் சென்ற வழிபாட்டு நடைமுறைகளை நாம் பயிலுமிடமாகவே திருக்கோயில் விளங்கிறது.

இந்த மரபான கையளிப்பை முழுமையாக உணர்ந்து செயற்பட்டவர் தங்கம்மா ஈழநாட்டில் இன்று புகழ் பெற்ற ஆலயமாக விளங்கும் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் அவர் ஆற்றிய அரும்பணியை இன்று மீள எண்ணிப் பார்க்கும் போது அதனை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். இத்திருக் கோயில் திருப்பணிச்சபையிலே **1963** ஆம் ஆண்டு ஓர் உறுப்பினராகச் சேர்ந்து ஊக்கமாகப் பணி செய்து **1965** ஆம் ஆண்டு குடமுழுக்கும் நடைபெறப் பங்காற்றியதால் கோவில் நிர்வாக சபையின் பொருளாளராகப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றவர். தொடர்ந்து **10** ஆண்டுகள் பொருளாளராகப் பணியாற்றி கோவிலின் விரிவாக்கத்துக்குப் பெரிதும் உதவினார். தனது சொற்பொழிவு மூலம் பெற்ற பொருள் வளத்தால் திருக்கோயிலை வளப்படுத்தினார். **1972** ஆம் ஆண்டு கோயிலின் வளர்ச்சி நிலையாகத் திருமுறை மடம் ஒன்று அமைக்கப் பட்டது. புராணபடனம், திருமுறை வகுப்பு, குருபூசைகள் இம் மடம் மக்களின் சமய வாழ்வியலை நெறிப்படுத்தப் பணியாற்றியது.

தங்கம்மாவின் பணியின் சிறப்பு **1977** இல் திருக்கோயில் தேவஸ்தான நிருவாகச் சபைக்குழுவின் தலைவராகும் பொறுப்பையும் வழங்கியது. இப்பணிக் காலத்தில் அழகிய சித்திரத்தேர் கோவிலுக்கு உருவாக்கப்பட்டது. **1981** இல் இராஜகோபுரம் அமைக்கப்பட்டுத் திருக் கோயில் புதுப்பொலிவு பெற்றது கோயில் உள் வீதி, புறச்சூழல் என்பன தெய்வீகத் தோற்றம் பெற்றன. அதே ஆண்டு தீர்த்தக் குளமும் அமைக்கப்பட்டது. தொடர்ந்து கல்யாண மண்டபமும் மக்கள் தேவையை நிறைவேற்ற அமைக்கப்பட்டது. ஆளுமைப் பெண்ணாக ஒரு தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தும் ஆற்றலை அவர் பெற்றமைக்கு அவருடைய தமிழ்ப்புலமையும் நாவமன்மையும் அடித்தளமாக அமைந்தன. அவருடைய தலைமைத்துவம் மிகவும் கட்டுப்பாடும் ஒழுங்கும் கொண்டதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. கோவில் வழிபாட்டுக்கு வருபவர் குறிப்பாகப் பெண்கள் பண்பாட்டு ஆடையோடு தான் வர வேண்டும் என்ற இறுக்கமான கட்டுப்பாட்டை அவர் மிக நேர்த்தியாகவே பேணினார். பெண்கள் பேணுவதற்காகவே உலகிலே உருவாக்கப்பட்டவர்கள் எல்லோரையும் நெறிப்படுத்துகின்ற பொறுப்புடையவர்கள் என்பதை அவர் எல்லோருக்கும் உணர்த்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் வழிபாடு என்பது ஏனைய தொண்டுப் பணிகளுடனும் இணைந்திருக்க வேண்டும். மக்கள் எல்லோரும் வேறுபாடில்லாமல் ஒன்று கூடி எல்லோருக்குமாக வழிபாடு செய்யும் இடமே திருக்கோயில் தங்கம்மா தனது அறுபதாம் வயதிலே கோயிற் பணியிலே ஓர் அங்கமாக "பிறந்தநாள் அறக் கொடை" ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த அறக்கொடை மூலம் கொடை வேண்டி நின்றோர் பலர் பயன் பெறலாயினர். திருக்கோயில் மக்களுக்கு அறிவூட்டும் பணியையும் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு சுன்னாகம் திருமகள் அச்சகத்தையும் கோவிலுடன் இணைத்துவிட்டார். கோயிற் சொத்தாக மாறிய அச்சகம் நூல் வெளியீட்டுப் பணிகளில் சிறப்பாக இயங்கத் தொடங்கியது.

இச் சிறப்பான பணிக்கு இடராக இடம் பெயர வேண்டிய நிலையும் ஏற்பட்டது. **1992** இல் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் அடைக்கலம் புகவும் நேரிட்டது. ஆனால் துர்க்கையருளால் மீளவும் துர்க்காபுரத்தில் பணிகள் தொடர இறையருள் கைகூடியது. துர்க்காபுர வழிபாட்டு நெறிப்படுத்தலின் இன்னொரு அங்கமாக நல்லூரிலே துர்க்காமணி மண்டபம் அமைக்கப்பட்டது. அந்த மண்டபம் அமைந்த நிலத்தைக் கொடையாக வழங்கியவரும் திருமதி விசாலாம்பாள் அரியக்குட்டி என்னும் பெண்மணியேயாவார்.

கோயில் திருவிழா, சிறப்பு நாள் பூசை என்பவற்றில் தமது உரைகள் மூலம் அடியார்களை நெறிப்படுத்திய பணி மிகச் சிறப்பானதொன்றாகும். வழிபாடு முன்னோர் வழியே எம்மிடம் வந்து செயற்பாடாக இணைந்து கொண்டாலும் அவை பற்றிய தெளிவும் விளக்கமும் மக்களிடையே இருக்கவில்லை. மக்கள் நவீன பொறிமுறைக் கையாட்சியாலும் பிற பண்பாட்டுச் செல்வாக்காலும் மாற்றத்துக்குள்ளாகியிருந்தனர். அவர்களை நெறிப்படுத்த வேண்டிய நிலையை நன்குணர்ந்த தங்கம்மா திருக்கோவிலிலே தான் விளக்க நிலையிலே உரையாற்ற வேண்டும் என்ற ஒழுங்கை ஏற்படுத்தினார். அதனால் வழிபாட்டு நடைமுறைகளில் எல்லோராலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நோன்பு பற்றிய விளக்கங்கள், குருபூசை நாள் பற்றிய தெளிவு, திருவிழாக்கள் பற்றிய செய்திகள் மக்களை விரைவாகச் சென்றடைந்தன.

திருக்கோயில் வழிபாடு தான் எல்லாச் சிக்கல்களையும் தீர்த்து வைக்கும் என்ற முழுமையான நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட வேண்டும். இக் கருத்து நிலையைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் திலகவதியாருடைய வாழ்வியல் மூலமாக விளக்கியுள்ளார். பெற்றோரது திடீர் மறைவு, மணஞ் செய்ய இருந்தவரின் மறைவு, தம்பியின் பிரிவு எனத் தன்னைச் சுற்றியிருந்த துணைகளைப் பிரிந்த போது திலகவதியார் திருக்கோயில் வழிபாட்டிலே இணைந்து மகிழ்வாக வாழ்ந்தார். அதனால் அவர் பெற்ற மனநிறைவு துன்பங்களை மறக்கடித்துவிட்டது. அதன் பின்னர் சூலை நோயுற்று தம்பியார் தன்னிடம் திரும்பி வந்த போதும் அந்த வழிபாட்டு நடைமுறையே அவருக்கும் பயிற்றி அவர் வாழ்வையும் சீர் செய்தார். பெரியபுராணம் தந்த இந்த வரலாறு தங்கம்மாவையும் பெரிதும் ஈர்த்தது. அதனாலே வழிபாட்டில் எல்லோரையும் இணைக்கப் பணி செய்தார். திருக்கோவில் நிருவாகப் பொறுப்பாளர்களையும் தலைமைப் பொறுப்பும் அவருக்குக் கிடைத்த போது அந்த ஆளுமையை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திப் பணி செய்தார். ஆண்களால் மட்டுமே செய்யப்பட்ட கோயில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாக மரபை மடைமாற்றி அவர் செய்த பணியை இன்று வரை உலகமே போற்றுகிறது. அவரது ஆளுமையை ஆண் ஆளுமை யெனக் கூறியவர்களும் பின்னர் தலை குனிய நின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**அன்னை தங்கம்மா ஆனார்**

பெண்மையே தாய்மையின் வடிவம். அன்னை என்ற சொல் பெண்மையின் பேராற்றலை விளக்குவது. பெற்றெடுத்த குழந்தைக்கு மட்டும் அன்னையாக அல்லாமல் எல்லாக் குழந்தைகளுக்கும் அன்னையாய் வாழ்ந்தவர் தங்கம்மா. அவர் தோற்றம் குழந்தைகளை மட்டுமல்ல எல்லோரையுமே "அம்மா" என்று அழைக்க வைக்கும். வழிபாட்டு நெறியைப் புகட்டும் பணிக்கான பயிற்சி பெண் குழந்தைக்களுக்குத் தேவை. பெற்றோருடன் வாழும் நிலையில் அப் பயிற்சி இயல்பாகவே அவர்களுக்குக் கிடைத்துவிடும். ஆனால் பெற்றோரை இழந்த பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு யார் அந்தப் பயிற்சியைக் கொடுப்பது? இந்தக் கேள்வி தங்கம்மாவின் உள்ளத்திலே எழுந்த போது அதற்கான மறுமொழியையும் அவரே கண்டு கொண்டார்.

துர்க்கை அம்மனின் பார்வையிலே அத்தகைய பெண்குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்று எண்ணினார். அதற்காகத் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை 1982 ஆம் ஆண்டு ஒன்பது பெண் குழந்தைகளோடு தொடங்கினார். அம்மாவின் அன்பான வளர்ப்பிலே அவர்கள் தாம் பெற்ற அன்னைமாரை மறந்து வளர்ந்தார்கள். அவர்கள் வாழ்க்கை துர்க்கை அம்மனின் கடைக் கண் பார்வையில் அன்னையின் கண்காணிப்பில் வளமான வாழ்வாக மாறியது. வழிபாடு, பாடப்பயிற்சி, கோசாலைப் பராமரிப்பு, தோட்டம், கைவினைகள், இயல், இசை, நாடகம், பள்ளிக் கல்வியெனப் பல்வேறு பயிற்சிகளை அவர்கள் பெற்றார்கள். உணவும் உடையும் உறையுளும் என்ற நிலையில் வளராமல் உலகை அறியும் திறனாளிகளாகவும் மகிழ்வாக வாழவைக்கும் என்ற இலக்குடனே தங்கம்மா அவர்களை வழிநடத்தினார். துர்க்காபுரம் மகளிர் இல்லம் 60 பெண்கள் வாழும் இல்லமாகவே இருக்க வேண்டுமென அம்மா வரையறையும் செய்திருந்தார். அப் பெண் குழந்தை இல்லறத்திலே இணைக்கின்ற பெரும் பணியையும் அவரே ஏற்றுக் கொண்டார். உலகெங்கும் வாழும் துர்க்கையம்மன் அடியார்கள் இப்பணிக்கு வேண்டிய பொருளுதவி செய்தனர்.

இல்லம் என்பது பலர் கூடி வாழும் ஒரு இடம் இல்லத்திலே வாழும் போது என்னைப் போலவே துன்பம் அநுபவிப்பவர்களும் இருக்கிறார்கள் என்ற தெளிவும் ஏற்படும். அத்துன்பத்தைக்களைய வழிபாடும் கூட்டுறவும் பெரிதும் உதவும் என்ற உண்மையும் புலனாகும். தங்கம்மாவின் பராமரிப்பிலே வளர்ந்த குழந்தைகள் பண்பாட்டுப் பயிற்சியிலே தொடர்ச்சியாக ஈடுபட்டமையால் இல்லறம் என்னும் மனையறம் செய்வதிலும் சிறப்பு உடையவராகினார்.

இப் பணியுடன் முதுமை நிலையில் ஆதரவற்று இருந்த பெண்களுக்கும் ஒரு அன்னையர் இல்லம் தொடங்கப் பெற்றது. பெண்களின் வாழ்க்கை சீர்கெடாமல் பேணப்பட வேண்டும் என்பதை அம்மாவாகவே அன்றே அவர் உணர்த்தியிருந்தார். தங்கம்மாவின் தாய்மையின் தனித்துவத்தை அவருடைய காலத்திலே வாழ்ந்து மறைந்துவிட்ட திருமதி வசந்தா வைத்தியநாதன் வருமாறு பதிவிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களுக்கு துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி, தெய்வத்திருமகள், தெல்லிப் பழை தந்த அரும்பெரும் செல்வம் "தங்கம்மா அப்பாக்குட்டி" என்ற ஒரு பெண்ணின் திருவுருவத்திலேயே அனைவரையும் ஒருங்கே தரிசிக்கும் பேறு கிடைத்தது நாங்கள் செய்த தவப்பயனே. குடும்பத்தின் நல்ல உறவாக சிறந்த ஒழுக்கமிக்க மாணவியாக நல்லாசிரியையாக அனைவரும் போற்றும் ஆலய நிர்வாகியாகிய ஆதரவற்ற குழந்தைகளின் தாயாக தரணி போற்றும் சிறந்த பேச்சாளராக துர்க்கையம்மனின் திருவடிக்கே பதிந்த மனம் கொண்ட பக்தியாக மானுடத்தை நேசிக்கும் மனித நேயம் மிக்கவராக சிறந்த சிந்தனையாளராகப் பற்பல கோணங்களில் ஒளிவிடும் செம்மனச் செல்வியைக் காணுந் தோறும் நம் உள்ளத்தில் வியப்பே மேலிடுகிறது. ஒருவருக்குள்ளேயே இப்படிப் பல்வேறு தன்மைகளா? இப்படிப் பண்பிலே தலைநிற்பவர்கள் லட்சத்தில் ஒருவர் தான். அவர்கள் கருவிலேயே திருவாய்ந்தவர்கள். உலகை உய்விப்பதற்காகவே பிறந்தவர்கள்"

இப் பதிவு அன்னையை இன்று நேரில் காணாதவர்களையும் நேரிலே காண்கின்ற சொல்லோவியமாக அமைந்துள்ளது வழிபாடு செய்ய வழிகாட்டிய துர்க்கா துரந்தரி

தனது வாழ்க்கை முழுமையும் தமிழ்ப்பணியும் சைவப்பணியும் செய்த தங்கம்மா அம்மன் வழிபாட்டை உலகெங்கும் பரவச் செய்தார். தான் வாழும் காலத் திலேயே இளையவர் ஒருவரை இனங்கண்டு ஏறக்குறையப் பதினான்கு ஆண்டு களாக அந்த இளையவரைத் தம்பணிகளில் பயிற்றித் தனக்குப் பின்னே துர்க்கை யம்மன் திருக்கோயிலைப் பேணும் பொறுப்பை அவரிடம் செவ்வனே கையளித் தார். அவரே இன்று உலகறிந்த சமயப்பணியை ஆற்றும் திருமுருகன். அம்மா அவரைத் தான் வாழும் காலத்திலேயே பிறநாடுகளோடு தான் கொண்டிருந்த சமய சமூக நிறுவனங்களுடனும் தொடர்புபடுத்தி வைத்தார். அம்மாவின் பணிகளை அம்மாவைப் போலவே எடுத்துச் செல்லக் கூடிய ஆற்றலாளராக அவரை உருவாக்கிவிட்டார். இக் கட்டுரையாளர் ஏறக்குறைய நாற்பது ஆண்டு கள் நெருக்கமான தொடர்பிலிருந்தவர். ஆதலால் இந்த இளையவரின் உருவாக் கத்தை நேரில் கண்டு மகிழ்ந்தவர். இன்று ஆறு.திருமுருகன் செய்கின்ற அனைத்துப் பணிகளுக்கும் உந்து சக்தியாக இருப்பது அம்மாவின் ஆசியும் பயிற்சியுமே என்பதில் ஐயமில்லை.

வழிபாடு வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும். தெய்வப் பணியும் சமூகப் பணியும் செய்பவர் உயர்ந்த சிறப்பைப் பெறுவதற்கு வாய்ப்புண்டு என்ற உண்மையையும் அன்னையின் வாழ்வு நன்கு உணர்த்தியுள்ளது. அவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் **1998** ஆம் ஆண்டு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியமை இதற்குச் சான்றாகும். இதே போலவே அம்மாவின் பணிகளைத் தொடர்ந்த ஆறு.திருமுருகனுக்கும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. சமயப்பணி என்பது கோவில் வழிபாட்டுடன் மட்டும் அடங்கியிருக்கவில்லை. கோயிலை வழிபட சமூகத்தவர் நலன் பேணும் பணியுடன் இணைக்கப்பட வேண்டுமென்பதை உணர்த்தியவரும் தங்கம்மாவே. துர்க்கையம்மன் கோயி லுக்கு அடியார் கொடுக்கும் கொடைகளை தேவையானவர்களுக்கும் பகிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற கொள்கை அம்மாவிடம் வேரூன்றியிருந்தது. அவர் செய்த அறக்கொடைகளில் கல்வி, மருத்துவ, பண்பாட்டு நிறுவனங்களும் உள்ளடக்கப் பட்டிருந்தன. துர்க்கையை வழிபட்டால் "யாவும் அவள் தருவாள்" என்ற நம்பிக்கையை வழிபடுவோரிடம் விதைத்தவர் அம்மாவே இதனை அவரது பதிவு வருமாறு உறுதிசெய்துள்ளது.

"சமயம் என்பது மனிதனுடைய அன்றாட வாழ்க்கை அலுவல்களிடமிருந்து விடுவிக்கக் கூடிய ஒரு சிறந்த மார்க்கமாகும். இது இம்மை, மறுமை, வீடு மூன்றுக்கும் வழிகாட்டும். மனிதனுடைய புறவாழ்வுக்கு ஊணும் உடையும் தேவையாவது போல் அகவாழ்வுக்கு வழிபாடு தேவையாகும்." இவ்வழி பாட்டைப் பலவகையில் வேறு வேறு காலங்களில் நடாத்தி வருகின்ற மரபு பல நூற்றாண்டு காலமாகப் பேணப்பட்டு வருகிறது. இந்த வழிபாட்டு மரபைப் பேண அவர் எல்லோருக்கும் ஒரு வழிகாட்டி எனலாம்.

நிறைவாக இந்த எழுத்துரு ஒரு விண்ணப்பத்தையும் பதிவு செய்ய முற்படுகிறது. தாயினும் நல்ல தங்கம்மாவை வருங்காலத் தலைமுறை ஒரு முன்னோடி நெறியாளராகப் பின்பற்றி வாழ வேண்டும். அவருடைய வாழ்வையும் பணிகளை யும் பற்றியறிந்து கொள்ளப் பல ஆவணப் பதிவுகள் உள்ளன. எனினும் அவற்றைக் கையில் எடுத்துப் படிக்கும் பழக்கம் கைவிடப்பட்டு வருகிறது. எனவே தொழில்நுட்பம் பொறிவயப்பட்டு நிற்கும் எமது இளைய தலைமுறை யினருக்கு அன்னையை அறிமுகம் செய்ய அவரைப் பற்றிய "ஆவண ஒளிப்படம்" ஒன்று ஆக்கப்பட வேண்டும். இன்றைய தலைமுறை எழுத்தோவியங்களை உள்வாங்கும் ஆற்றலற்றவர்கள். எனவே கருவிகளுக்கூடாகக் காட்சிப்படுத்த வேண்டியுள்ளது. துர்க்கா துரந்தரியின் நூற்றாண்டு காலத்தில் இப் பணியை ஆர்வலர் செய்வது மிகப் பயனுடைய பணியாகும்.

எமது வாழ்வியலுக்கு வழிகாட்டிய தங்கம்மா பற்றிய எண்ணப்பதிவுகளை முழுமையாக இவ் எழுத்துருவில் அடக்க முடியாது. அவற்றை விரிவாக நூலாக்கம் செய்ய வேண்டும். ஏனெனில் அன்னை எங்களுக்குக் காலம் தந்த ஒரு கைவிளக்கு. அந்த விளக்கு எல்லாக் காலத்திற்கும் ஊழிக்காலம் வரை ஒளிகாலும் உன்னத விளக்காகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவும் கெழுவும் திறன் ஆகுமே

திருமதி. கோகிலா மகேந்திரன்
ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர்

ஆசிரியத்துவம் அற்புதமாகவும் வாழ்ந்து மறைந்த ஒருவரைப் பற்றிச் சில சிந்தனைகள் மனதில் தோற்றம் பெறுகின்றன. ஒருநல்ல கல்வி யாரையும் நல்லபடி மாற்றும். ஒரு நல்லாசிரியர் எல்லாவற்றையுமே சிறப்பானதாக மாற்றும் வல்லமை மிக்கவர். பிள்ளைகள் ஆசிரியர் என்ன கற்பிக்கிறார் என்பதைவிட, அவர் எப்படியானவராக இருக்கிறார் என்பதிலிருந்தே அதிகளவு கற்றுக்கொள்கிறார்கள். கற்பித்தலில் ஆசை உள்ள ஆசிரியர்கள், தங்கள் இறுதிக்காலம் வரை தொடர்ந்து கற்கும் பண்புள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடம் கற்கும் மாணவர்கள் கற்றலில் ஆர்வம் உள்ளவராகிறார்கள். இவை ஆசிரியத்துவம் பற்றிய நவீன காலச் சிந்தனைகள்.

தொல்காப்பியம், "குருவும் கெழுவும் திறனாகும்மே" என்று சொன்னபோது, குரு எனும் சொல் நிறச்செம்மையைக் குறிக்கும். நிறச்செம்மை, உளச்செம்மையை உணர்த்தும் ஆகுபெயராக மாறிச் செம்மையானவராக விளங்கும் ஆசிரியரை உணர்த்தும் பழந்தமிழ்ச் சொல் ஆகியது. ஆகவே ஆசிரியர் உளச்செம்மை கொண்டவராக அமையவேண்டும். குரு என்ற சொல், தலைமை, மேன்மை, சிறப்பு, ஒளி ஆகிய பல பொருள்களையும் கொண்டது.

மேலே சொல்லப்பட்ட சூத்திரங்கள், புரிந்துகொள்வதற்குக் கணிதச் சூத்திரங் களைவிட இலகுவானவை. ஆனால் செயற்படுத்தக் கடினமானவை. ஒரு முன்மாதிரி ஆசிரியருக்கான இயல்புகள் மிக இளவயதிலேயே தோற்றம் காட்டத் தொடங்கிவிட்ட ஒரு ஆளுமையாகச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களைக் காணலாம்.

வாழ்நாள் முழுவதும் தொடரப்போகும் கற்றலை அவர் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலை ஆசிரியராக இருந்த காலத்திலேயே தொடங்கிவிட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கான ஆதாரம் அவர் அப்போது இலங்கை வானொலியில் தொடர்ந்து ஆற்றிவந்த உரைகளில் முளை கொள்வதைப் பார்க்கலாம். **1949-1950** காலப் பகுதியில், "பெண்மைக்கு இணையுண்டோ?" என்ற உரைத்தொடர் பலவேறு இலக்கியங்களையும் புராணங்களையும் அடியொற்றிய தேடலாய் அமைந்து பொதுமக்களை ஈர்த்துக்கொண்டது. தொடர் கற்றல் என்பது பெறுமதி மிக்க உள்ளுணர்வை உருவாக்கும். அவர்களைக் கூர்மையான மனதுடன் வைத் திருக்கும். உண்மையான உலக வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளும் மனநிலையைத் தோற்றுவிக்கும். மாணவர்களுடனும் ஏனைய மனிதர்களுட னும் அதிக ஒத்துணர்வைக் காட்டும் பண்பையும் உருவாக்கும்.

பிள்ளைகளுக்கு ஊக்கம் தரும் கருவியாகவும் ஆத்மிக உள்ளுணர்வைத் தரும் நபராகவும் ஆசிரியர் அமைவது சிறப்பு. இதற்குக் கருணை, இரக்கம், அன்பு போன்ற விழுமியச் செயற்பாடுகள் அவசியம். பிள்ளைகள் சொல்வதைக் கவன மாக உற்றுக் கேட்டல் மிக முக்கியம். அம்மையார் அவர்கள் **1964-1976** காலப் பகுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகவும், உயர் வகுப்புகளுக்கான இந்துநாகரிகத்துறை ஆசிரியராகவும் பணிபுரிந்தபோது அவரிடம் படித்த சில மாணவர்களைச் செவ்விகண்டேன். வகுப்பில் உள்ள பிள்ளைகளின் குடும்பப் பின்னணி, பொருளாதார நிலைமைகள் தொடர்பாக உற்றுக்கேட்பார் என்றும், அவர்களின் வீட்டுக்குச் சென்று தனது சம்பளப் பணத்தில் சிறுபங்கையேனும் கொடுத்துதவுவார் என்றும் அவர்கள் கூறு கிறார்கள்.

நல்லாசிரியர் இயைபாக்கம் அடையத்தக்கவராக இருப்பார். எத்தகு செயற்பாடு பிள்ளைகளிடம் வேலைசெய்கிறது, எது வேலை செய்யவில்லை என்பதைப் புரிந்துகொண்டு அதற் கேற்றபடி தான் மாறிக்கொள்வார். பிள்ளைகளோடு நேர் மீளவலியுறுத்தல் நன்கு வேலை செய்கிறது என்ற உளவியல் உண்மையை அம்மையார் நன்கு புரிந்துகொண்டிருந்தார். நவராத்திரி உற்சவ காலச் சமயப் பேச்சுக்களைப் பிள்ளைகள் வகுப்பில் பேசிக் காட்டவேண்டும். நன்றாகச் செய்யும் மாணவர்களுக்கு வகுப்பிலேயே சன்மானம் கொடுப்பார். பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் மாணவருக்குப் (இந்துநாகரிகம் ஒருபாடமாக எடுத்து) பாராட்டுச் செய்வதில் பாடசாலையை முந்திக்கொள்வார்.

**1992**ஆம் ஆண்டு தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறநிதியச் சபை சைவ ஆசிரியர்களுக்கான பேச்சுப்போட்டி ஒன்றை நடத்தியது. அப்போட்டியில் நானும் கலந்துகொண்டு பெண்கள் பிரிவில் முதலாம் பரிசை வென்று கொண்டேன். நாங்கள் விழிசிட்டியில் இருந்து இடம்பெயர்ந்துவிட்ட காலம். மிகுந்த நெருக்கீடுகள் மத்தியில் எனக்கான நேர் மீளவலியுறுத்தல் செய்த ஒரு குருவாக நானும் அவரைக் காண்கிறேன். தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்தே இந்த வழிகாட்டல் ஆரம்பமாகிவிட் டதெனலாம். (**1986**). பொதுவாக ஆசிரியர்கள் சிந்திக்கும் முறைக்கு அப்பால் வெகுதூரம் சென்று, சிந்திக்கும் ஆக்கபூர்வமான சிந்தனை அவரிடமிருந்தது. இந்த ஆக்கத்திறன் (*thinking outside the box*) எல்லோரையும் கவர்ந்தது. அதனால் தான் கலை இலக்கியக் களத்தின் மூன்று காப்பாளர்களில் முதலாம் நபராக அவரையே வரித்துக்கொண்டோம். எமது ஆலோசகராக இருந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுடன் சேர்ந்தியங்கும் அவரது செயற்பாட்டுத் திறனையும் உணர்ந்து வியந்தோம். நாம் அழைத்த போதெல்லாம் எமது ஒன்றுகூடல்களில் வந்து உரையாற்றினார். அதற்கான ஆயத்தங்களை அதிசயிக்கத் தக்க முறையில் செய்து வந்து உரையாற்றுவார். ஒரு ஆசிரியருடைய ஆயத்தமாகும் நிலையின் மேன்மைக்கு அவை சாட்சியங்களாக இருந்தன.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகளுக்கு முன் மத்திய குழுவினராகிய நாங்கள் பேராசிரியர் நா .சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் அம்மையாரை ஒருமுறை சந்தித்துக் கலந்துரையாடி ஆலோசனை கேட்போம். அப்படிப்போகின்ற சந்தர்ப்பங்களில் எமது நிதி நிலைமையையும் கேட்டறிவார். பொருளாளர் அநு.வை .நாகராஜன் அவர்கள் சதக் கணக்குத் தவறாமல் நிதி அறிக்கை வைத்திருப்பார். கையிருப்புக் குறைவாக இருப்பதை அவதானித்தால் உடனேயே எமக்கு ஒரு சிறு அன்பளிப்புத் தந்து "நிகழ்ச்சிகளைத் தவறாமல் நடத்துங்கள்" என்று ஊக்குவிப்பார்.

யாழ்ப்பாணத்திலிருந்தான மிகப்பெரும் இடப்பெயர்வின்பின் ஒருபகுதி மக்கள் வலிகாமம் திரும்பியிருந்த நிலையில் 1997தை மாதத்தில் கலை இலக்கியக் களத்தின் நாற்பத்து நான்காவது நிகழ்வை நாடகம் சார்ந்த நிகழ்வாக நடத்த எண்ணி அம்மாவின் ஆலோசனையைக் கேட்டோம். தனது தாயார் திருமதி தையல்பிள்ளை அப்பாக்குட்டி நினைவாக ஒரு சிறு நூல் வெளியிடுமாறு கூறி அதற்கான நிதியையும் தந்து உதவினார்கள். நூலை நான் தான் எழுதவேண்டும் என்று மத்திய குழு முடிவு செய்தது. கிரேக்கத்தின் தோல் சீர் அரங்கு என்ற நூல் அப்படித்தான் எழுதப்பட்டது. உயிரைத் தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திக்க முடியாத சூழலிலும் நூல் எழுத என்னை வழிப்படுத்தியவரைக் "குரு" என்று தானே கூறமுடியும். அந்த நூல் 31.01.1997 இல் இராமநாதன் கல்லூரியில் வெளியிடப்பட்டபோதும் அம்மா வந்திருந்து வாழ்த்துரை வழங்கினார். பின்னர் அவரது பவள விழாவின் போது நான் "தங்கத் தலைவி" என்ற நூலை எழுத விரும்பி அவரைப் பேட்டி காணப் பலமுறை சென்றபோதும் தனது நேரத்தை ஒதுக்கி எனக்குத் தேவையான தகவல்களைத் தந்ததோடு என்னை நெறிப்படுத்தினார்.

அந்நூலுக்குப் பதிப்புரை எழுதிய பேராசிரியர் நா .சுப்பிரமணியன் அவர்கள், "தமிழர் வாழும் நிலமெங்கும் சிவம் பேசித் தமிழ் வளர்க்கும் அன்னை" என்று குறிப்பிட்டதோடு சமயம் என்றால் என்னவென்றும் விளக்கினார். "சமயம் என்பது ஒரு வாழ்க்கை முறை. அது அன்பில் முளை கொள்வது. அரவணைப்பில் வளர்வது. பிறர் துன்பம் துடைப்பதில் முன்னிற்பது. இது பலருக்குத் தெரிவதில்லை. அதனால் புற நிலையான சடங்குகளிலும் புரிந்துகொள்ள முடியாத தத்துவச் சிக்கல்களிலும் மட்டும் சமயம் பற்றிய தேடலை மேற்கொள்பவர் பலர் எம்மத்தியில் உள்ளனர். அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் சிந்தனையும், சொல்லும், செயலும் சமயத்தை அதன் இயல்பான வடிவில் அன்பு, அரவணைப்பு, துன்பம் துடைக்கும் தொண்டு ஆகிய வடிவங்களில் தரிசிப்பன, விளங்குவன, செயற்படுத்துவன எனவே அவர் சமயம் அறிந்தவர்: தெளிந்தவர்." என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் என்றால் என்ன? ஆன்மிகம் என்றால் என்ன? என்பவற்றை வாழ்ந்து காட்டுகிற ஒருவர் சமய ஆசிரியராக இருந்தால் எப்படி இருக்கும்? அது அப்படி அற்புதமாக இருந்தமையை அவரது மாணவர் கூட்டம் ஒரே குரலில் கூறுகிறது. இன்றைய உலகில் மிகச்சிறந்த ஆன்மிக வாதிகள் எனப்போற்றப்படுகின்ற சிலரில் ஒருவர் 14ஆவது தலாய் லாமா அவர்கள். தனது 78ஆவது வயதிலும் தொடர்ந்து உலகம் முழுதும் பயணம் செய்து அன்பு, அமைதி, புரிதல் தொடர்பான பௌத்த மத நம்பிக்கைகளைப் பரப்பி வருபவராக இருக்கிறார். யாழ்ப்பாணத்தில் இருந்து சைவ சமயம் சார்ந்த விழுமியங்களை உலகெங்கும் சென்று பரப்பி வரவேண்டும் என எண்ணித் துணிந்த முதற் பெண்மணியாக அம்மையார் அவர்கள் விளங்குகிறார். இதுவும் நல்லாசிரியரின் பண்புதான். ஆசிரியரின் செயற்பாடு வகுப்பறையோடும், டியூசனோடும், பரீட்சையோடும் நிறைவு பெறுவதில்லை. அதற்கும் அப்பால் வெகு தூரம் வெளிச்சம் பாய்ச்சுவது எனப் புரிந்துகொண்டு செயற்பட்டவர் எமது தங்கத் தலைவி.

தனது தந்தையார் அழுக்கேறிய சிரட்டையில் தனது பேரனாருக்கு உணவு கொடுப்பதைப் பார்த்திருந்த மகன் அந்தச் சிரட்டையை எடுத்துக் கவனமாகச் சேமித்துக்கொண்டான். "அதை ஏன் நீ எடுத்து வைத்திருக்கிறாய்?" என்று தந்தை கேட்டபோது,"உனக்கு வயதாகும்போது உணவு தருவதற்கு வேண்டுமே!" என்று மகன் சொன்னான் என்ற கதையை நாம் சிறு வயதில் படித்ததுண்டு. அதேபோல ஒரு ஆசிரியர், தனது ஆசிரியருக்கு எவ்வாறு மதிப்புக் கொடுக்கிறார் என்பதைப் பிள்ளைகள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரித்தான் அவர்களும் தமது ஆசிரியரை மதிப்பார்கள். விதைத்ததுதானே முளைக்கும்? இது தொடர்பான ஒரு சம்பவத்தை எனது தந்தையார் செ .சிவசுப்பிரமணியம் அவர்களோடு தொடர்படுத்தி நோக்கலாம். விழிசைச்சிவம் அவர்களின் ஜனன நூற்றாண்டுமலரில் (இதுசிவத்தமிழ்ச் செல்வியின் ஜனன நூற்றாண்டு மலர்) எனது மகன் பிரவீணன் பதிவு செய்திருக்கிறார்.

"இவர் மருத்துவமனையிலிருந்து மீண்டிருந்த ஒருநாள். (1999-அப்போது நாங்கள் இடம்பெயர்ந்து இணுவில் மக் லியோட் மருத்துவமனைக்கு அருகில் வாழ்ந்தோம்.)சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் அவரைப் பார்ப்பதற்காக எமது இல்லம் வந்திருந்தார். "அம்மா" என்று நாங்கள் எல்லோரும் போற்றும் அவ்வம்மையாருக்கு எனது பாட்டனார் சிலகாலம் ஆசிரியராக இருந்தார். இதனால் சாதாரணமாக இல்லங்களுக்குச் செல்லாதவரும், செல்லத் தேவை யில்லாதவருமான அம்மா அவர்கள் தமது உடல் தளர்ந்திருந்த நிலையிலும் இவரைப் பார்க்க வந்திருந்தார். அவர் வந்திருப்பதைச் சொல்லி நாம் இவரை உள் அறை ஒன்றிலிருந்து அழைத்துக்கொண்டு வந்தோம். அவர் தூரத்தில் வருவதைக் கண்டதுமே, யாழ்ப்பாணம் முழுதும் போற்றி வணங்கியவரும், பவளவிழாக் கண்டிருந்தவருமான அம்மூதாட்டி கூப்பிய கைகளுடன் தன் ஆசனத்திருந்து எழுந்து நின்றார். எனது பாட்டனார் அமரும்படி சைகை காட்டி யும் அவர் அமரவில்லை. இவர் மிக மெதுவாக வந்து ஆசனத்தில் அமர்ந்த பிறகே தாம் அமர்ந்து கொண்டார். என் கண்ணில் நீரை வரவழைத்த சம்பவம் இது. அந்தக் காலத்து மனிதர்களின் குருபக்தி, பண்பாடு, மரியாதை என்பவற்றை எண்ணி நான் பெரிதும் வியந்தேன். தனக்குச் சில காலம் கற்பித்த ஆசிரியருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வயதிலும் அவ்வளவு மரியாதை அளித்த அம்மா அவர்கள் எப்படிப் பட்ட உயர்ந்த மனிதர்!"

துர்க்கா துரந்தரி தனது ஆசிரியருக்குக் கொடுத்த மரியாதையைவிடப் பன் மடங்கு உயர்ந்த மரியாதையை அம்மாவுக்கு அவரது மாணவர்கள் கொடுத்ததை நான் நேரில் தரிசித்திருக்கிறேன்.

இலக்கைத் தீர்மானித்தல், சேவைசெய்தல், தொடர்பாடல் திறன், பொது மக்களுக்கு உரையாற்றல், அன்புசெய்தல், நேர முகாமைத்துவம் போன்ற விடயங்களில் இந்த ஆசிரியை எவ்வளவு சிறப்பாகத் தொழிற்பட்டார் என்பதை அவரது பவளவிழாவை ஒட்டி நான் எழுதிய "தங்கத் தலைவி" என்ற நூலில் விபரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
  கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம், மலை, நிறைகோன் மலர் நிகர் மாட்சியும்
  உலகியல் அறிவொடு உயர் குணமினையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே"

என்று நன்னூலார் சொன்ன ஆசிரிய வரைவிலக்கணத்துக்கு ஒருபடி மேலே சென்று நின்ற ஒரு ஆசிரியப் பெருந்தகையாக நாம் அவரைத் தரிசித்தோம். இனிமேல் இப்படி ஆசிரியர்கள் தோன்றுவார்களா என்ற கேள்வி மனதில் தொக்கு நிற்கத்தான் செய்கிறது.

ஆசிரியத்துவ அற்புதங்களை இழந்துவிட்ட ஒரு சமூகமாக நாம் இன்று மாறிவிட்டோம். அதன் விளைவுகள் துல்லியமாகச் சமூகத்தில் வெளித் தெரியவும் செய்கின்றன. அம்பாள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ்ச்செல்வி ஒரு தனிப் பெரும் தலைவி

### கலைக்குரிசில் பாகீரதி கணேசதுரை

இந்துமா கடலீந்த இலங்காபுரியாம் அழகிய மரகதத்தீவின் வடபுலத்தில் வலிவடக்காம் வளம் கொழிக்கும் புனித பூமியில் துர்க்காபுரம் உழுகுடைப் பதியில் அன்னைக்கோர் ஆலயமாக துர்க்காதேவி தேவஸ்தானம் வலிதுடைத்து வாண்மை பெருக்கி வாழவைக்கும் துர்க்காபுரி ஒரு சொர்க்காபுரியாக விளங்கு கிறது. அன்னை ஓர் ஆலயம் என்னும் பெருமை மிக்க வாக்கிற்கு அர்த்தமாக பெண் தலைமைத்துவத்தை எமக்கெல்லாம் போதனை மூலமும் சாதனை மூலமும் எடுத்துக்காட்டி வாழ்ந்து தெய்வ நிலையடைந்தவர் தான் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் ஆவார்.

தர்மத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்களுக்கு பதவியோ, பட்டமோ தேவை யில்லை அவர் எது நடக்க வேண்டும் என்று விரும்புகின்றாரோ அதை நடாத்தி வைப்பதற்கு இறைவனுடைய பிரதிபிம்பங்களே பூலோகம் வந்து உடனிருந்து அதனை நடத்தி முடிப்பார்கள். தர்மமும் அறப்பணிகளும் மனதிலிருந்து கருக்கொண்டு வெளியே உருப்பெற்று உலகை உய்ய வைக்க வல்லது. அத்தகைய மனமே எங்கள் அன்னையின் மனம் என்பதில் மறுவார்த்தைக்கே இடமில்லை.

அன்னை தன்னைப் புடம் போட்டு உருவாக்கிய ஆசான்கள், சான்றோர் நடந்து சென்ற வழித் தடங்களைப் பின்பற்றி வாழும் வாழ்வியலை சமூகத்தில் உள்ளவர்கள் தமக்கு முன்மாதிரியாக ஏற்றுக் கொண்டு தமது வாழ்வியலை செம்மைப்படுத்தி வாழ்வார்கள்.

இது ஒரு சுழற்சி நியதியாகும். உயரிய தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த அன்னை அவர்கள் ஆலய நிர்வாகம், தர்மகர்த்தாசபை ஊழியர்கள் விசுவாசம் மிக்க அன்பர்கள் என்று பலதரப்பட்ட மனித வளங்களுடன் அற்புத தொடர்பாடல் கொண்டு அவர்களின் எண்ணங்கள் தேவைகள் கருத்துக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை அவதானமாக செவிமடுத்து தூய்மையான தாய்மைப் பண்பு களுடன் வழிநடத்தும் பண்பு மிக்கவர். ஆனால் முடிவுகளைத் தாமே சுயமாக தெரிவு செய்து செயற்படுத்துவார். அவர் நடந்து வந்த பாதை, பயணம் இரண்டுமே மிகுந்த சவால்கள் கொண்டவை ஒரு பெண்ணாக அம்பாள் சந்நிதியில் தூய பக்தியின் துணையோடு அறப்பணிகளை மேற்கொண்டவர் நெருங்கி வரும் இன்னல்கள், இடர்பாடுகள் என்பவற்றை பிறர் அறியாமலே தெளிவாக எதிர்கொள்ளும் ஆற்றல் அவருடைய பலம். அவர் வாழ்ந்த காலம் அவருக்கு சாதகமாகவே இருந்தது. தனது முடிவுகளை தானே எடுப்பதும் அதை செய்து முடிப்பதும் இவரது தனித்துவம் அவர் எதற்காகவும் எவரையும் கையேந்தவோ பின்செல்லவோ தாழ்ந்து போகவோ மாட்டார். அவர் ஒரு சக்தி சமுத்திரம் அம்மாவின் ஆலய நிர்வாகத்தோடு இணைந்த அறப்பணிகள் தொடர்ந்து தடையின்றி நிகழ்ந்தமைக்கும் அவரது தற்துணிவே துணையாக நின்று ஒரு சாதனைப் பெண்ணாக உலகோர் வியக்க அவரை உயர்த்தி சிலையாக நிலையாக நினைவாலயத்தோடு காலத்தை வென்ற காவியநாயகியாக வாழ்ந்து காட்டியவர் தங்கத்தாய் அவர்கள்.

சைவமும் தமிழும் அவரது இருகண்கள். ஆசிரியத்துவம், சைவப்புலவர், பால பண்டிதர் போன்ற வாண்மை விருத்தியின் அடித்தளத்தில் நின்றே அவரது பேச்சாற்றல் அமைந்திருந்தது. அதுவே ஒரு ஊடகமாகக் கொண்டு புலம் பெயர் நாடுகள் சென்று உரையாற்றி ஒரு பெரும் சமூகசேவகியாகி சமூக மேம்பாட்டை உருவாக்கி பெண் தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். அம்மாவின் காலம் என்று பெரிமிதமாகக் குறிப்பிட்டு வியந்துரைக்கும் வண்ணம் அவரது நாவன்மையும் ஒருங்கிணைப்புத் திறனும் நிர்வாகமும் அமைந்திருந்தது.

இன்றைய காலகட்டம் முற்றிலும் வேறானதாக விதிகள் சட்ட வரன் முறைகள் நிறுவன யாப்புக்கள் என்பன ஒரு தலையாக அமைந்து எதற்கெடுத்தாலும் மேலிடம் ஒன்றிற்கு விடையளிக்க வேண்டிய கட்டுப்பாடிற்கு உட்பட்டே சேவையாற்ற வேண்டிய நிலை. ஓடவும் முடியாத பிடியும் கொடுக்காத சுதந்திரமற்ற நிலைக்குள் எந்த ஒரு நகர்விற்கும் வகை கூறவும் விளக்கமளிக்கவும் வேண்டிய இறுக்கத்திற்குள் நின்றே சேவையாற்ற வேண்டிய கட்டாயமானது இயங்கு திறனை மட்டுப்படுத்தி வைக்கும் துர்ப்பாக்கியம் கொண்டது. அன்னைக்கு அவரது சேவைக்கு இத்தகைய அழுத்தங்கள் எதுவுமே தடையாக இருக்கவில்லை. பெண்கள் சிறுமியர் ஆகியோரை வளர்த்து ஆளாக்கிய அனுபவம் மிகவும் அற்புதமானது. பிள்ளைகள் மேல் மிகுந்த அன்பும் உரிமையும் பாராட்டும் கண்டிப்பும் இயல்பாகவே காணப்படும். எவரும் முரண் பட்டதோ எடுத்தெறிந்து நடந்து கொண்டதோ கிடையாது. அவர் அன்பால் அடிமை கொண்டு வளர்த்த பாசம் தாயன்பு மிக்கது. பெண் பிள்ளைகளை வளர்த்தெடுத்தல் என்பது மடியில் நெருப்பை கட்டிக்கொள்வதற்கு ஒப்பானது என்பது அனுபவவாக்கு. பெண் பிள்ளைகள் கல்வியில் கலைகளில் சமய அனுட்டானங்களில் கோவில் பணிகளில் விருந்தோம்பலில் மிக்க பயிற்சி கொண்டு ஒரு நிகழ்வையே நடாத்தும் திறன் பெற்றிருந்தார்கள். அன்னையின் கவனிப்பும் கண்காணிப்பும் எந்நேரமும் அவர்களைப் பார்த்து நிற்கும். கலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் முடிந்ததும் அன்று மாலையே அன்னையரைக் கொண்டு திருஷ்டி சுற்றிப் போடவைப்பார். தப்பான செயல்கள் செய்யும் போது சடுதியாகவே கண்டிப்பாக ஏசி தண்டனையும் கொடுப்பார். ஆறு மாலை கட்டி அம்பாளுக்கு கொடுக்க வேண்டும், திருவாசகத்தில் குறிப்பிட்ட பகுதியை மனனம் செய்து பாடிக்காட்ட வேண்டும், திருமுறைகளை மனனம் செய்து பாடவேண்டும், கோவில் உள் வீதியை தனியாகக் கூட்டி முடிக்க வேண்டும், விளக்குகள், தீபங்கள் என்பவற்றை புளிபூசி மணல் போட்டு நன்றாக மினுக்க வேண்டும். இவை தான் அன்னையின் தண்டனைகள். இதில் குறைகுற்றம் என்று விசாரணைகள் செய் வதற்கு எந்த அதிகாரியும் முன் வரமாட்டார்கள். இது அன்னையின் தர்ம நீதி சபை. அன்பும் மலர்ச்சியும் கொண்ட அழகிய இளவரசியாக ஒரு அற்புத சிற்றரசையே நடாத்திக் காட்டிய தலைவி எங்கள் அன்னை. பல்கலைக்கழக கல்வி முடிந்து பட்டமளிப்பு விழாக் கொண்டாட்டமும் நிகழும். அவர் குடும்ப வாழ்வை வாழாத தாய். காதல் ஏற்பட்டு வளர்ந்த பெண் பிள்ளைகள் விடயத்தில் மிகவும் கோவப்பட்டு கடுமையாக ஏசுவார், கண்டிப்பார் முடிவில் அது தகுதி யான தேர்வாக இருந்தால் பெற்றவர் பாதுகாவலரை அழைத்துப் பேசி திருமண மும் முடித்து வைப்பார். நீளக்கயிற்றில் விடப்பட்ட கன்றுக் குட்டிகளாக பிள்ளைகளை உண்மையாக நேசித்து வாழ வழிகாட்டியவர். பிள்ளைகளும் உயர் நிலையடைந்து நல்வாழ்வு வாழ அடித்தளம் இட்டவர்.

பெண்கல்வி, பெண் தலைமைத்துவம், வாழ்க்கைத்தேர்ச்சி, சமையல், தையல் போன்ற பயிற்சிகள் பெண்மையின் புனிதத்துவம், உண்மை, நேர்மை, ஒழுக்க விழுமியம் போன்றவற்றின் மூலம் தான் பெண் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். இப்படி வளர்க்கப்படும் பெண் தான் ஒரு நல்ல தாயாக தன் குடும்பத்தை கட்டிக்காத்து நல்ல குழந்தைகளைப் பெற்று பேணி, வளர்த்து சமூகத்திற்கு வழங்க முடியும். என்றும் ஆழ்ந்த நம்பிக்கையோடு தொலைநோக்கில் உருவாக்கிய மகளீர் இல்லம் அவரது அற்புதக் கனவை நனவாக்கியுள்ளது. இதற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்து காட்டியவர் என்பதை அன்னையின் நூறாவது பிறந்தநாளில் நெஞ்சார்ந்த நெகிழ்வுடன் பதிவாக்கி தனிப்பெரும் தலைவி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றுவோமாக.

வாழ்க அன்னையின் நாமம்!
வளர்க அவர்தம் அறப்பணிக்கொடைகள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ்ச்செல்வி

### திரு. மு. பாபுஜி

"எம் கடன் பணி செய்துகிடப்பதே", என்ற உயர்வாக்கிற்கு ஒப்ப மக்கள் சேவையே மகேசன் சேவையென கொண்டு வாழ்ந்த பெருமாட்டியின் பெருமை அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக இருக்கும். பொதுவாக பெண்களுடைய வாழ்வு என்று தனது குடும்ப வட்டத்திற்குள்ளேயே முடங்கிவிடும் ஒன்றாக இருப்பதே வழமையாகும். ஆனால் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் வாழ்வு தன் வாழ்வு, தன் குடும்பம் என்று இல்லாது "எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்ற உயர் இலட்சியத்தோடு, சமுதாயத்தோடு ஒன்றிப் பிணைந்து விளங்கியதன் காரணமாக ஈழச்சைவத் தமிழ் உலகம் புத்தொளி பெற்றது.

தங்கம்மா அவர்கள் மல்லாகத்திலே சாதாரண மத்தியதர குடும்பத்திலே 1925தை மாதம் 7ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் அப்பாக்குட்டி. தாயார் பெயர் தையற்பிள்ளை. கருவிலே திரு என்பது போல சிறுவயதிலிருந்தே சரஸ்வதி கடாட்சம் பெற்றிருந்த தங்கம்மா கல்வியிலே திறமை பெற்றவராக விளங்கி முதல் பரிசுகளையும் வென்றவர். பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சை களிலே தேறி, பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் சித்தி பெற்று சைவத்தையும் தமிழையும் பிரதானமாக கற்பிக்கும் சிறந்ததொரு ஆசிரியராகவும் விளங்கினார். 1946இல் மட்டக்களப்பு சென் சிசிலியா ஆங்கிலப் பாடசாலையிலே பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியராக பணியிலே சேர்ந்தார். அதனைத்தொடர்ந்து 1949ஆம் ஆண்டு கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையிலே ஆசிரியராக இணைந்து கொண்டார். தமிழையும் சைவசமயத்தையும் முறையாகக்கற்று 1952 ஆம் ஆண்டு பாலபண்டிதராக தேர்வடைந்த இவர், 1958இல் தமிழகத்திலே சைவப்புலவர் பட்டத்தையும் பெற்றார். இவரது 31 ஆண்டுகள் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியிலே கடைசி 12 ஆண்டுகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றி 1976ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அம்மையாரது சொற்பொழிவு ஆற்றல், இறைவனின் கொடை சேர்ந்த புலமையுள்ள சைவத் தமிழ் அறிஞராக விளங்கிய இவர் தனது சிறந்த பேச்சாற்றலால் சமுதாயத்தை ஆன்மீக ரீதியிலும் இலக்கிய பண்பாட்டு ரீதியிலும் உயிர்த்து வழிநடத்தும் ஒருவராக மிளிர்ந்தமை யாவரும் அறிந்ததே.

தமிழ்ப்பண்பாட்டின் உருவமாக அறிவாற்றலின் கனிவோடு இவர் ஆற்றும் பிரசங்கம் நாடெங்கிலும் ஒலித்தது. இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் எல்லாம் புராணங்கள், சைவசித்தாந்த விளக்கங்கள், சைவத் திருமுறைகள், கோயிற்கிரியைகள் விழாச்சிறப்புகள் உட்பட பல்வேறு சமய தலைப்புகளில் உரையாற்றி பெரும் புகழ் பெற்றார். அதனால் ஒரு கால கட்டத் திலே தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய சிறப்புரை இன்றி ஆலய விழாக்கள் இல்லை. மேடை நிகழ்ச்சிகள் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருந்தது.

யாழ்பகுதியிலே இறைவழிபாட்டை மேம்படுத்தும் வழியிலே, யாழ்ப்பாணத் திலே ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு முதன்மையான பங்கு உண்டு. பண்டிதை என அழைக்கப்பட்ட தங்கம்மா 1950 - 1960 களிலே இலங்கை வானொலியில் 'மாதர் பகுதி' உட்பட இலங்கையில் பல இடங்களில் சமய சொற்பொழிவு பணி மூலம் சமய வளர்ச்சிக்கு தொண்டு செய்யும் வகையிலே தனது சமயப்பணியைத் தொடங் கினார். தமிழ்நாடு சிதம்பரத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் 1965இல் உரையாற்றியிருக்கிறார். 1970களிலே சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியோடு மக்கள் தொண்டும் ஆற்றி வந்திருக்கிறார்.

ஈழத்துச் சிதம்பரமென அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோயிலில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவிற்காக 'சிவத்தமிழ்ச்செல்வி' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும் திருவாசககொண்டல், செஞ்சொற்செம்மணி, துர்க்கா துரந்தரி, சிவஞானவித்தகி போன்ற பதினைந்திற்கு மேற்பட்ட பட்டங்களையும் பெற்றுகொண்டிருக்கிறார்.

தங்கம்மா அப்பாக்குட்டியினுடைய "கந்தபுராண சொற்பொழிவு" நூலுக்கு சாகித்திய மண்டல பரிசு கிடைத்ததுடன் இவருடைய முயற்சியிலே பல அறநெறி நூல்களும் வெளியிடப்பட்டன. "கற்றாருக்கு சென்ற இடமெல்லாஞ் சிறப்பு" என்பதற்கிணங்க நாட்டிலே சென்ற இடமெல்லாம் சிறப்புப்பெற்ற இச்சைவத்தமிழ் பெருமாட்டிக்கு, தமிழ்நாட்டினுடைய சைவ மன்றங்கள், திருத் தலங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலிருந்தும் சிறப்புரைகளுக்கு அழைப்புக்கள் விடுக்கப்பட்டமை இவருக்கு மட்டுமல்ல, இலங்கை சைவத் தமிழ் உலகிற்குக் கிடைத்த பெருமை என்றே கூறலாம்.

அந்தவகையிலே அம்மையார் சிதம்பரம் சைவசித்தாந்த சமய வைரவிழா, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருவிடை மருதூர் திருமுறை கருத்தரங்கு, கும்பகோணம் திருமுறைவிழா, திருவிடைமருதூர் திருவாசக விழா, சிவகங்கை சைவசித்தாந்த மாநாடு, புதுக்கோட்டை உலக இந்துமாநாடு, வடஆர்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமங்கையர் மாநாடு உட்பட பல்வேறு நகரங்களிலும் பல்வேறு அரிய உரைகளை ஆற்றி சிறப்புப்பெற்றார். அவரது அரும்பெரும் உரைகளைக் கேட்டு புகழாங்கிதம் அறிஞர் பெருமக்கள் அம்மையாருக்கு தக்கப்பட்டங்கள் அளித்து பெருமை கொண்டார்கள். சித்தாந்தஞானாகரம், சிவமயச்செல்வி, ஆகியன அவற்றுள் சிலவாகும். தமிழ்நாடுதவிர மலேசியா, சிங்கப்பூர், லண்டன் ஆகிய நாடுகளிலும் அம்மையாரின் பேச்சுக்கு பெரும்வரவேற்புக் கிடைத்தது. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே" என்று துணிந்த திருமூலர், சிவத்தமிழ்ச்செல்வியோ", "என்னை நன்றாகவே இறைவன் படைத்தனன், தன்னை நன்றாக சேவிக்கத்தானே" என்று துணிந்தாரோ அதன் பயனாய் தனது சொற்பொழிவு வித்துவத்தின் மூலம் கிடைத்த பொருளைக் கொண்டு சாதாரண நிலையிலிருந்த தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை புதுப்பித்து புணருத்தாரனம் செய்து சிறப்புற நிர்வகிக்கும் இறைபணியில் தம்மையும் இணைத்துக் கொண்டார் அம்மாயார். ஆலய அறங்காவலர் சபையில் பெண்கள் பதவிவகிப்பது மிகவும் அசாதாரணமான காரியம். எனினும் இத்தகைய பெரும்பொறுப்பை அறங்காவலர் சபையார் நீண்ட காலம் அம்மையாரிடம் ஒப்படைத்தார்கள் என்றால் அவர் சிறந்த நிர்வாகி மட்டுமல்ல. அவர்மீது கவிந்திருந்த ஸ்ரீ துர்க்காதேவியினது அருட்கருணை என்பதைத்தவிர வேறில்லை.

1962இல் அறங்காவல் சபையின் பொருளாளராக பதவியேற்று ஆலய முன்னேற்றத்திற்கு உதவியதன் பயனாய் 1965இல் ஆலய மகாகும்பாபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது. 1977ஆம் ஆண்டு அறங்காவலர் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற துர்க்காதுரந்தரியின் அயராத பெரும்பணி காரணமாக, இந்த ஆலயம் ஏனைய பல ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்வதாய் பெரியோர்கள் பாராட்டி மகிழ்கிறார்கள். 1987களிலேயே போரின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆலயத்தை நோக்கி இடம்பெயர்ந்து வந்த வேளை அவர்களுக்கு உணவும் தற்காலிக தங்குமிட வசதிகளும் வழங்கி சிவத்தமிழ்ச்செல்வி காட்டிய பரிவை, மக்கள் நன்றியோடு நினைவு கூருகிறார்கள்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினுடைய தலையாய பணியாக கருதப்படுவது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணியாகும். இவ் இல்லம் 1982இல் ஆரம்பிக்கப்பட்டு ஆதரவற்ற சிறுமிகள் மற்றும் மகளிருக்கு ஆதரவுக்கரம் நீட்டி பராமரித்து வருகிறது. இன்றும் இந்த இல்லத்திலே நூற்றுக்கு மேற்பட்ட சிறுமிகள், பெண்கள், பராமரிக்கப்படுகிறார்கள்.

இவை தவிரவும் துர்க்கா தேவி தேவஸ்தானம் அம்மையாரின் பிறந்தநாளை அர்த்தமுள்ளதாக்க நிறுவப்பட்ட அறக்கட்டளை மூலம் வைத்தியசாலைகளுக்கு நன்கொடை வழங்கல், ஏழை மாணவர்களுக்கு உதவுதல், சிறந்த நூல்களை வெளியிடுதல், அறிஞர்களைப் பாராட்டுதல் முதலிய நற்பணிகளை ஆற்றி வருவருகின்றது.

சுமார் நான்கு தசாப்த காலமாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மூலமாக தன்னலமற்ற சைவத்தமிழ் பணியாற்றிய துர்க்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரந்தரிக்கு, சைவத்தமிழ் உலகம் காட்டிய மதிப்பும் நன்றியுணர்வும் அளப் பரியது. அம்மையாருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் **1998** இல் கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது. சிவத்தமிழ்ச்செல்வியினுடைய தனித் துவமான பணிகள் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகை யிலே, யாழ்ப்பாணத்திலுள்ள இந்துமதப் பண்பாட்டிலே அண்மைக்காலமாக இரு முக்கிய மாற்றங்கள் ஏறபட்டிருக்கின்றன. ஒன்று "இந்துக்களால் வழிபடப் படும் பெண் தெய்வத்தினுடைய வழிபாடு பற்றியது. தங்கம்மா அப்பாக்குட்டி என்ற ஒரு தமிழ் ஆசிரியையின் ஆன்ம யாத்திரையின் ஊடாக அவரது புலமை முதிர்ச்சியின் வழியாக அவரை வழிநடத்தும் சமூக மத - தரிசனத்தினூடாக இந்த இரு மாற்றங்களும் நிறைவேறி இருக்கின்றன" என்று குறிப்பிடுதல் சாலப் பொருத்தமே.

"எது நடக்க வேண்டுமோ அது நன்றாகவே நடந்தது. இனி எது நடக்க வேண் டுமோ அதுவும் நன்றாகவே நடக்கும்", என்று கீதாசாரத்தில் குறிப்பிட்டது போலவே அம்மையாரது பணிகள் சிறப்பாகவே நடந்தேறின. அவர் விட்டுச் சென்ற அறப்பணிகளை அவர்வழியிலே தொடர்ந்து கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஆற்றிவருவது சிறப்பிற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களது நூற்றாண்டில் மலர்ந்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சிந்தனை
### (புதுவருடப் பறப்பு)
### சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்பது எமது தினாந்தரப் பிரார்த்தனை. "வையகமெல்லாம் துயர் தீர்கவே" என்பது நாம் படிக்கும் திருமுறை. "பெரு கலாம் தவம் பேதைமை தீரலாம் திருகலாகிய சிந்தை திருத்தலாம்" என்பது அப்பர் பெருமான் வாக்கு. இன்றைய தினத்தில் எமதுள்ளத்தில் இருத்த வேண்டிய வாசகங்கள் இவை. எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம், எதிலும் சிவமயம் என்று எண்ணியெண்ணி இறும்பூது எய்தவேண்டுமானால் ஒவ்வொரு அடியும் திருவருளை நோக்கி வைக்கவேண்டுமென்ப தற்குப் பயின்றுகொள்ள வேண்டும். காலத்தை அளந்து அளந்து வாழுகிறோம். அளவுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை. என்றாலும் அது தானாகவே இயற்கை நியதிப்படி அமைந்து எம்மை விழிப்படையச் செய்கிறது. கடந்த ஆண்டு நாமாற்றிய தரமான கரு மங்கள், தவறான செயல்கள் புத்தாண்டில் நினைக்கப்பட்டு மேலும் தரமான பாதைக்கு வழிநடத்தத் தூண்டுகிறது. ஒழுக்கமும் தெய்வ நம்பிக்கையும் இணைந்து இடைவிடாது முயற்சிசெய்து வாழ்வை வளமாக்க உறுதிபூண வேண்டும். தெய்வ நம்பிக்கையுடையவர்களே நியாயத்துக்குக் கட்டுப்படு வார்கள். பிறர் துன்பங்கண்டு வருந்துவதோடு அதனைப் போக்கிவிடவும் முன்வருவார்கள். நமது சமயப் பெரியோர்கள் ஆத்மீகத்துறையில் எவ்வளவு உயர்ந்து நின்றார்களோ, அந்த அளவு மக்கள் தொண்டும் செய்திருக்கிறார்கள். இதனால் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரரானார்கள். இந்தநிலை கைவருமானால் மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் எம்மை நலிவடையச் செய்யமாட்டா. கோளறு பதிகம் இதனை அழகாகக் காட்டுகிறது.

"கோளரி யுழுவை யோடு கொலையானை கேளல்
        கொடுநோய்க ளான பலவும்
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
        அடியா ரவர்க்கு மிகவே,"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஞான வாக்கு. இவை எமது இல்லங்கள் தோறும் இடம்பெறவேண்டும். புதுவருடப்பிறப்பு என்றால் இறைவழிபாட்டுடன் பொங்கல் செய்து தாமுண்டு பிறருக்கு வழங்கலும் பெரியவர்கள் கையினால் பணம் பெற்று மகிழ்வதும் விருந்தயர்தலும் சுபநேரம் பார்த்துப் புதுக் கருமங்களை ஆரம்பிப்பதும் ஆலய வழிபாட்டைத் தவறாது செய்தலும் எமது பண்டுதொட்ட மரபாகும். இவற்றை வெறுஞ்சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமையுணர்வு ஓங்கி "நானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பேன்" என்ற ஒரு திடசங்கற்பத்தை எடுத்துக்கொள்வது மேலானது. சிந்தனையிலும் செயலிலும் புதுமை காணவேண்டும்.

"அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி, மனத்துளே பேதா பேதம் பொய்வஞ்சம் களவு சூது, சினத்தையும் தவிர்ப்பாராகில் செய்தவம் வேறொன் றுண்டோ" என்றார் ஒரு பெரியார். சமயவாழ்வு என்பது தனக்குத் தானே நற்சான்று பகர்வதிலேதான் வெற்றி காண்கிறது. கல்வி என்பதும் நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளர வேண்டும். இன்று கற்றவர்கள் மத்தியிலே பல ஊழல்களைக் காணுகிறோம். கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் என்று சொல்ல நேரிடுகிறது. ஆகவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து தெய்வத்தை முன்வைத்து திருவருளைத் துணைகொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்புங்கொண்டு வாழ வழிகாண்போமாக.

**நன்றி:** *சிவத்தமிழ் இன்பம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா மலர், 07.01.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் இலக்கிய கலாநிதி
# சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள்

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

ஈழத் தமிழகத்திலே யாழ்ப்பாணக் குடாநாடு, அறம் வளர்க்கும் அந்தணர்கள் பலரும், அன்புள்ளம் படைத்த தமிழ் அன்பர்களும் செறிந்து வாழும் பிரதேச மாகும். குடாநாட்டுக்கு மேற்கில் அமைந்தது காரைநகர் என்று அழைக்கப்படும் தீவுப் பிரதேசமாகும். இங்கு சைவத் தமிழ் கோயில்களுக்குக் குறைவில்லை. அவையனைத்திலும் மேலானதாக விளங்குவது ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிவஸ்தலமாகும். இவ்வாலயத்தில் ஐயனார் பெருமானும் சுந்தரேஸ்வரப் பெருமானும் அடுத்தடுத்துள்ள கருவறைகளிலே மூல மூர்த்திகளாகக் காட்சி தருகின்றனர். ஒரு பக்கம் கடற்கரையும் மற்ற மூன்று பக்கமும் வெள்ளை மணல் பிரதேசமுமாகப் பரந்த வெளியில் இவ்வாலயம் காட்சி தருகிறது. தீர்த்தக்குளம், இராஜகோபுரம், அன்னதானமடம், அந்தணர் விடுதி, ஆச்சிரமங்கள் நிறைந்து பொலிந்து காணப்படும் திருக்கோயில் இதுவாகும்.

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவெம்பாவை விழாவும் ஆருத்திரா தரிசனமும், தேர் உற்சவமும் மிகவும் மகத்தானவை. இவ்வாலயத்தின் வெளிவீதி ஐந்து திருத்தேரோடும் அற்புதமான திருவீதியாகும். மார்கழி மாதத்தில் கொட்டும் பனியிலும், பொழியும் மழையிலும் பெருங்கூட்டம் ஒன்று இவ்வாலயத்துக்கு வந்து சேருவது வழக்கம். ஆலயத்தின் இரண்டாவது வீதியில் சொற்பொழிவு மேடை அமைக்கப்பட்டிருக்கும். பக்தர்கள் அமைதியாகவும், பயபக்தியோடும் இவ்வீதியை அலங்கரித்து அமர்ந்திருப்பார்கள். திருவெம்பாவை இறுதி மூன்று நாட்களும் மணிவாசகர் விழா இங்கு சிறப்பாக நடைபெறும். தமிழகத்துச் சான்றோர்கள் பலர் இவ் விழாவுக்கு அழைக்கப்பட்டு உரையாற்றிச் செல்வார்கள். மணிவாசகர் சபை என்பது இங்கு கருமமாற்றும் ஒரு மகத்தான சபையாகும். இச்சபையினரின் அழைப்பை ஏற்று 1957ஆம் ஆண்டு தொடக்கம் நான் அங்கு சென்று உரையாற்றி இருக்கிறேன். இந்தத் தொடர்பில் 1959ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு மார்கழிமாத திருவெம்பாவை 8ஆம் நாள் திருவிழாவில் திருச்சதகம் என்ற பொருள் பற்றி ஒரு மணித்தியாலம் உரையாற்றும் வாய்ப்பு எனக்குத் தரப்பட்டது. திருச்சதகப் பாடல்களை சந்தர்ப்பம் அறிந்து பாடி விளக்கமும் கூறி உரைவிரித்தேன். நிகழ்ச்சி முடிவடைந்து கோபுர வாயிலைக் கடந்து வெளியே நின்ற வாகனத்தில் புறப்பட வந்தேன். செந்தண்மை பூண்ட அந்தணாளன் என்று அனைவராலும் போற்றப்படும் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் முன்னே காட்சியளித்தார். வணக்கம் கூறினேன். உடனே ஐயா சொற்பொழிவுக்கு வாழ்த்துக் கூறினார். இராப்பகலாக சொற்பொழிவுக்கு ஆயத்தப்படுத்திய நிகழ்ச்சி இது. ஐயாவின் வாழ்த்து மேலும் இப்பணியில் என்னை ஊக்குவித்தது. இவரின் அறிவின் திறமையையும், ஆசிரியப் பணியையும், ஆன்மிக நாட்டத்தை யும் வித்துவான் முருகேசன் போன்ற காரைநகர் மக்கள் எடுத்துக் கூற நான் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

இப்படியாக வருடாவருடம் மார்கழித் திங்கள் திருவெம்பாவை காலத்தில் எட்டாவது நாள் எனது சொற்பொழிவு இடம்பெற்று வந்தது. மணிவாசகர் சபையினர் ஆண்டுதோறும் இவ்வொழுங்கை மேற்கொண்டனர். காலம் உருண்டோடியது. ஆலயத்தின் வளர்ச்சியும், அன்பர்களின் ஈடுபாடும் மிகமிகப் போற்றக்கூடிய முறையில் அமைந்தன. 1970ஆம் ஆண்டு ஆவணி மாதம் குடமுழுக்கு விழாவுக்கு ஒழுங்கு செய்திருந்தனர். கண்ணியமான ஒரு சபை இதற்குப் பொறுப்பாக இருந்தது. கண்கொள்ளாக் காட்சியாக அமைந்த அவ்விழாவை அடுத்து எனக்கு ஒரு கௌரவம் அளிக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். இதற்கேற்ப 19-08-1970இல் "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டம் மணிவாசகர் சபையினரால் வழங்கப்பெற்றது. இது ஈழத்துச் சிதம்பர சபாமண்டபத்தில் வைத்து கொக்குவில் குமாரசாமிப் புலவர் அவர்களால் வழங்கப்பெற்றது. இவ்விழாவில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டவர் வைத்தீஸ் வரக் குருக்கள் ஐயா அவர்களே. தன்னை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் அனைத்துக் கடமைகளையும் சீராகவும் சிறப்பாகவும் ஆற்றிய பெருமை ஐயா அவர்களுக்குண்டு. மணிவாசகர் சபையின் சார்பில் அளிக்கப் பட்ட மங்கல வாழ்த்தில் ஒரு பாடலை மாத்திரம் இவ்விடத்தில் காண்போம்.

"உவப்புடன் உலகோ ரெல்லாம்
உளமகிழ்ந் தினிது வாழ்த்த தவப்பயன் தலைசேர் நங்கை
தங்கம்மா இற்றை நாளில்
சிவத்தமிழ்ச் செல்வி யென்னுஞ்
சீரியல் பட்டம் சூடல் நிவப்புறு மலைமேற் தீப
நிறைசுடர் நிகர்க்கு மாலோ."

பட்டங்கள் பல பெறக்கூடிய வாய்ப்பு எனக்குப் பலதடவைகள் கிடைத்த போதும் வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் தேர்ந்தெடுத்த "சிவத்தமிழ்ச்செல்வி" என்ற பட்டமே நிலைத்த பெயராக எனக்குப் பெற்றோர் இட்ட பெயரோடு ஒன்றி விட்டது.

1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி ஈழத்துச் சிதம்பரத்தில் அருட்பணியாற்றிய சிவஸ்ரீ கணபதீசுவரக் குருக்கள் அவர்களுக்கும் சிவயோக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம்பாள் அவர்களுக்கும் மகனாகப் பிறந்த பெருமை இவருக்குண்டு. இவர் உத்தரகோசமங்கை என்று சொல்லப்படும் சிவாலயத்தில் பரம்பரையாக பூசை செய்த அந்தணர் மரபில் உதித்தவர். சைவப்பாரம்பரியமும், தமிழ்ப் புலமையும் மிக்கவர் இவர். தமது ஆரம்பக் கல்வியைத் தமது தந்தையிடமே சிறப்பாகப் பெற்றுக் கொண்டார். வடமொழியிலும் சிறந்த புலமை பெற்றவர். மகாவித்து வான் கணேசையாவிடம் தமிழ் மொழியை ஐயந்திரிபறக் கற்று பண்டித பரீட்சையிலும் சித்தி பெற்றவர். இவர் ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியராவர். ஆசிரியப்பணி, அதிபர் பணி, சமூக சேவைகள் பணி என்பவற்றை கல்விச் சமூகம் பாராட்டக்கூடிய நிலையில் ஆற்றினார். காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் மணிவாசகசபை என்பவற்றில் இவரது ஈடுபாடு அதிகம். காரைநகரில் சைவசமய வளர்ச்சி, ஈழத்துச் சிதம்பரபுராணம் தொடர் மொழிக்கு ஒருமொழி எதிர்ச்சொற்கோவை, உரைநடை ஆக்கம், பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங் களின் குண இயல்பு என்பன இவர் எழுதிய நூல்களாகும்.

வேறு பலர் எழுதிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பெருமையும் இவருக் குண்டு. மணிவாசகர் சபையின் பொன்விழா மலர் ஐயா அவர்களுடைய புனித மான சைவசேவைக்கு எடுத்துக்காட்டாகும். எந்த இடத்திலும் தன்னுடைய தாயாரின் திருவாசகப் பற்றையும் அதன் மூலம் தான் பெற்ற பேற்றையும் எடுத்துக் காட்டுவார். ஈழத்துச் சிதம்பரபுராணம் என்ற ஒரு சிறந்த வரலாற்று நூலை புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்களால் பாடுவித்து பண்டிதை மணி இ. பரமேஸ்வரி அவர்களால் உரை எழுதி சிறப்பாகப் பதிப்பித்து வெளி யிட்டு வைத்த பெரும் சிறப்பு வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களுக்கு உண்டு. அறிஞர்கள் பலருடைய வழிகாட்டல் இவரை உயர்த்தியது. புலவர்மணி நவநீதகிருஷ்ண பாரதியார் நமது நாடறிந்த நல்லறிஞராவார். அறிஞர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களும் கொக்குவில் குமாரசாமிப் புலவரும் ஐயா அவர்களுடைய ஆசிரியர்களாக காலத்துக்குக் காலம் விளங்கினார்கள். பாடசாலைக் கல்வியிலும் பார்க்க இவ்வறிஞரிடம் பாடங்கேட்ட கல்வி அவரது உயர்ச்சிக்குக் காரணமானது. ஆசிரியப் பணியை கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆரம்பித்து படிப்படியாக உயர்வு பெற்று யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் அதிபராகப் பணியாற்றி கல்விப் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் இவர். ஆனால் அவருடைய ஆத்மிகப் பணியும், சமூகப்பணியும் இன்றுவரை உயர்ந்து கொண்டே போகிறது. பழுத்த மனத்து அன்பர்கள் பலர் ஐயாவோடு தொடர்பு கொண்டுள்ளனர். தமிழோடும் சைவத்தோடும் தொடர்பு பட்ட பதினைந்து நூல்களை இவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். காரைநகர் சைவமகாசபையில் நடைபெற்ற சமய நிகழ்ச்சிகளில் எல்லாம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஏறக்குறைய பதினைந்து வருடங்கள் நான் அங்கே தொடர்ந்து சொற்பொழி வாற்றினேன். பொதுவாக ஐயா அவர்களின் மதிப்பான அழைப்பு காரைநகர் மக்களிடையே எனக்குப் பெரும் செல்வாக்கைத் தந்தது. ஒருமுறை மகாஜனாக் கல்லூரியிலே பண்டிதர் க.பொ. இரத்தினம் அவர்கள் உரையாற்றும் பொழுது நகைச்சுவையாக பண்டிதை தங்கம்மா அவர்கள் முற்பிறப்பில் காரைநகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்து பணியாற்றியவர் என்பதை உணரமுடிகிறது" என்று கூறி அனைவரையும் சிந்திக்க வைத்தார்.

பண்டிதர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களை கனடா சைவ சித்தாந்த மன்றம் கௌரவிக்க எண்ணி "வைத்தீஸ்வரர்" என்ற மலரையும் வெளியிட்டது. சைவசித்தாந்த மன்றத்தின் தலைவர் உயர்திரு திரு.தி.விசுவலிங்கம் அவர்கள் இதனை முன்னின்று நிறைவேற்றினார். சான்றோர்களின் அர்த்தமுள்ள வாழ்க்கையை இனங்கண்டு அவ்வப்போது வெளிப்படுத்துகின்ற தன்மை பண்பாளர்களுக்கு உண்டு. இந்தவகையில் புகழையும் விருதுகளையும் எள்ளளவேனும் விரும்பாத எங்கள் குருக்கள் ஐயா அவர்களுக்கு வலிந்து அவரைக் கௌரவிக்க விரும்பினர் கனடா வாழ் சைவமக்கள். என்னைப் போன்ற எத்தனையோ பேரை மூலையிலிருந்து முற்றத்துக்குக் கொண்டு வந்தவர் வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள். அத்தகைய பெருமகனாரைப் பாராட்டுவதில் சைவசித்தாந்த மன்றத்தோடு நானும் தொடர்பு கொண்டேன். திருவாளர் ஐ. தி. சம்பந்தன் அவர்கள் மற்றும் மணிவாசகர் சபையினர், மற்றும் அறிஞர்கள், பெருமக்கள் இதற்கான நன்முயற்சியில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். திருமதி வடிவழகாம்பாள் விஸ்வலிங்கம் அவர்களும் அக்குடும்பத்தைச் சார்ந்தோரும் பலர் மிகுந்த ஆர்வம் காட்டினர். இம்முயற்சிக்கு அன்பும் ஆதரவும் உலகநாடுகள் எங்குமிருந்து கிடைத்தன. 22-09-2001 இல் இம்மலர் வெளி வந்தது. தமிழ் நாட்டிலிருந்தும் இம்மலருக்கு அதிக வரவேற்புக்கிடைத்தது. அத்தனைக்கும் ஐயா அவர்களின் தூய அன்பும், தன்னலங்கருதாப் பணியும், புலமைச் சிறப்பும் காரணமாக அமைந்தன என்றால் அதில் மிகையொன்று மில்லை.

1990ஆம் ஆண்டுக்குப் பின்பு சில ஆண்டுகள் இடம் பெயர்ந்து வாழவேண்டிய நிலை யாழ்ப்பாணத்து மக்களுக்கு ஏற்பட்டது. கொடியயுத்தம் காரணமாக நாங்கள் தெல்லிப்பழையில் இருந்து மருதனார்மடம் சென்றோம். காரைநகர் மக்களும் இடம்பெயர வேண்டிய அவல நிலையை அடைந்தனர். அவர்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சமீபமாகச் சில இடங்களில் தங்கினர். இந்த இடைக்காலத்திலும் மணிவாசகர் சபையினருடைய விழாவை நடாத்த முற்பட்டவர் ஐயா அவர்கள். எனக்கும் அழைப்பு வந்தது. சித்தங்கேணியில் இவ்விழா நடைபெற்றது. ஐந்நூறுக்கு மேற்பட்ட காரைநகர் அன்பர்கள் விழாவுக்கு வருகை தந்திருந்தனர். மாலை 5-00 மணிக்கு முன்பு திருவாசகத்தையே மையமாக வைத்துப் பல அறிஞர்கள் பேசினர். குருக்கள் ஐயா அவர்கள் ஒரு மூலையில் இருந்து அனைத்தையும் கவனித்தார். என்னையும் ஆசீர்வதித்து இருப்பிடத்துக்கு அனுப்பினார். சிலகாலம் சென்ற பின்பு நிலைமை ஓரளவு சீரடைய எங்கள் மகளிர் இல்லம் பிள்ளைகளும், பணியாளர்களும், நானும் ஈழத்துச்சிதம்பரத்துக்குச் சென்றோம். குருக்கள் ஐயா அவர்களையும் தரிசித்தோம். அவருடைய அன்பான புன்னகை எமக்கு வாழ்த்தாக அமைந்தது. இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின்பு யாழ் பல்கலைக்கழகம் எனக்கு "கலாநிதி"ப் பட்டம் அளித்து கௌரவித்தமைக்கு ஐயா அவர்களும் வாழ்த்தைத் தெரிவித்தார். அன்னாரின் வைத்தீஸ்வரர் மலரிலே இச் செய்தி பின் அட்டையில் படங்களோடு வெளிவந்துள்ளது அடுத்து எனக்கு ஒரு பாராட்டு விழா ஈழத்து சிதம்பரத்தில் நடைபெற்றது. மணிவாசகர் சபையினர், கல்விப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் ஈழத்துச் சிதம்பர சபாமண்டபத்தில் இடம்பெற்றனர். குருக்கள் ஐயா அவர்களை நான் வீழ்ந்து வணங்கி சபாமண்டபத்துக்கு வரும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் அவ்விடத்திற்கு வருகை தந்தார்கள் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மிகவும் மகிழ்ச்சியான தினம் அதுவாகும். மணிவாசகர் சபையின் இணைச்செயலாளர்கள் ஐயாவைப் பற்றிக் குறிப்பிட்ட ஒருவார்த்தை என்னுள்ளத்தில் என்றும் நிலைபெறுகிறது. “காலம் என்ற தீயில் கருகாத தங்கம்” என்று இவரைப் பாராட்டியுள்ளனர். மேலும் “அணுக்கத் தொண்டர்” என்றும் “பொன்மனச் செம்மல்” என்றும் “புகழ்பெற்ற பேராசான்” என்றும் “புகழ்க்குன்று” என்றும் பேரறிஞர்கள் பலர் இவருக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். கவிஞர் கந்தவனம் அவர்கள் பின் வருமாறு ஐயாவைப் போற்றுகின்றார்.

“கதிசேர்க்கும் காரைநகர் சிவன்பால் காதல்
கனிந்துவர காட்சி நலம் பூசையாலே
இதமாக அடியவரை ஈர்த்த வையம்
ஈழத்துச் சிதம்பரம் என ஏற்க வைத்தார்”

ஐயா அவர்களுக்குப் பல ஆண்டுகளாக இரத்த சோகை வருத்தம் இன்னும் பல சிறு வருத்தங்கள் வருத்திக் கொண்டு வருவதை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன். “உடம்பு எனதல்ல” என்ற கொள்கையோடு எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வருபவர் இவர். நோய்க்கு அஞ்சிப்பணி செய்வதில் நின்றும் விலகமாட்டார். ஆனால் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொண்டார்.

யாழ். பல்கலைக்கழகமும் ஐயா அவர்களின் புனிதமான சேவையைப் பாராட்டி “இலக்கிய கலாநிதி” என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தமை குறித்து உலகச் சைவத்தமிழ் மக்கள் அனைவரும் தத்தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டேயிருக்கின்றனர். இதனை முன்னிட்டு இந்த ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி எனது எழுபத் தெட்டாவது பிறந்த தினத்தின் போது அறநிதியச் சபை சார்பில் ஐயாவை அழைத்திருந்தோம். ஆனால் தனது உடல் நிலை நன்றாக இல்லை என்று சொல்லி எங்கள் வேண்டுகோளை மறுத்து விட்டார். ஆனால் எங்கள் நிர்வாகசபை உறுப்பினர்கள் காரைநகரில் அவரது இல்லத்துக்குச் சென்று வாழ்த்துக் கூறி அறநிதியம் பரிசையும் வழங்கி மீண்டனர்.

கட்டுரையின் முடிவுரையாக கனடா சைவ சித்தாந்த மன்றத்துக்கு ஐயா அவர்களின் “வைத்தீசுவரர்” மலரில் எழுதிய எனது வாழ்த்துரையை அப்படியே தருகிறேன்.

“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.”

என்று பாடியருளினார் வள்ளுவப் பெருமான். அறப் பணியிலும், ஆன்மிகப் பணியிலும், சிவனை நினைந்துருகும் சிந்தையிலும் தன்னிகரில்லாதவர் குருக்கள் ஐயா அவர்கள். இப் பெரியாருடைய காலத்திலே ஈழத்துச் சிதம்பரம் ஓங்கி உயர்ந்து மிளிர்கிறது என்பது முற்றிலும் உண்மை. அதுவுமன்றி எம்மைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பலரை அங்கு அழைத்து சொற்பொழிவுகள் ஆற்ற வைத்து கௌரவித்த சிறப்பும் ஐயா அவர்களுக்கே உண்டு.

உயர்ந்த பக்தியும், நிறைந்த புலமையும் ஒழுக்க சீலமும் ஒன்றாகப் பெற்றவர் குருக்கள் ஐயா அவர்கள். இதனைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நான் நன்கு அறிவேன். காரைநகர் மண்ணுக்குப் பக்தி வித்தை விதைத்து உரமூட்டியவர் இவர். ஆசிரியராக இருந்து அதிபராக உயர்ந்து ஆன்மீகப் பேராளராக வளர்ச்சி கண்ட பெருமை இவருக்குண்டு. ஐயா அவர்களுடைய ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்கள் இடம்பெறாத பத்திரிகைகளோ, சஞ்சிகைகளோ இந்நாட்டில் இல்லை என்றே கூறலாம்.

ஈழத்துச் சிதம்பரத்திலே இடம்பெற்ற அத்தனை நிகழ்வுகளிலும் அறங்காவலர் களையும், மணிவாசகர் சபையினரையும் தனது சொல்லாலும் செயலாலும் ஊக்குவித்து வழிநடாத்திய பெருமை இவருக்குண்டு. ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை காலத்தில் இடம்பெறும் மணிவாசகர் விழாவிலே இவருடைய ஆளுமையையும், ஆற்றலையும் கால் நூற்றாண்டு காலமாக நான் நேரில் கண்டு பெருமிதம் அடைந்தேன். 1970ஆம் ஆண்டு "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டத்தை சுந்தரேசப் பெருமானின் அருள்வாக்குப் போல் எனக்கு எடுத்து வழங்கியவர் இவர். அன்றைய விழாவின் எழுச்சியைக் காரைநகர் ஈழத்துச் சிதம்பர முன்றிலிலேகண்டு இறும்பூது எய்திய மகிழ்ச்சி என்றும் நினைவு கூரத்தக்கது. அந்த ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்திலே குட முழுக்கு நடந்த ஆண்டாகும். உலகெங்கும் செறிந்து வாழும் காரைநகர் மக்கள் அவ்விழாவுக்கு வருகை தந்திருந்தனர். இந்த வருகையின் காரணமாகவே நான் மலேசியா, சிங்கப்பூருக்குச் சொற்பொழிவு செய்வதற்கு அழைக்கப்பட்டேன். இந்நிகழ்வு கள் என் வாழ்நாளில் என்றும் பசுமையாகவே பதிந்துள்ளன, இதற்கு முக்கிய காரணமாக அமைந்தவர் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா என்பதை எடுத்துக் கூறுவதில் நான் மேலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கனடாவில் நற்பணி ஆற்றிவரும் "சைவசித்தாந்த மன்றம்" குருக்கள் ஐயாவின் பணிகளைப் பாராட்டி இருப்பது வரவேற்கத் தக்கதாகும். கனடா மாத்திரமல்ல உலகம் முழுவதும் ஐயாவின் பணிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. எண்பத்தைந்து வயது நிறைவு எய்த இருக்கும் இப்பெரியாரை சைவத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பாராட்டக் கடமைப்பட்டவர்கள் என்பதை நினைவில் இருத்தி ஐயா அவர்களின் திருவடிகளை வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

**நன்றி:** அறிவொளி காட்டிய சான்றோர் வரிசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரர் செந்தமிழ்

### சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ ரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே."

அவனருளே கண்ணாகக் கொண்டு அவனைக் கண்டவர்கள் நாயன்மார்கள். அந்த அனுபவத்தையே திருமுறைகள் எடுத்துக் காட்டுகின்றன. பன்னிரு திருமுறைகளில் ஏழாவது திருமுறையே சுந்தரர் செந்தமிழாகும். "சொற்றமிழ் பாடு" என்று இறைவனே சுந்தரரைக் கேட்டுப் பாடுவித்தார் என்பதைப் "பெரியபுராணத்" தால் அறிகிறோம். திருமணப்பந்தலிலே வைத்துத் தடுத்தாட் கொண்ட பெருமான் திருவெண்ணெய் நல்லூரிலே திருவருட்டுறை என்னும் கோயிலுள்ளே சென்று மறைந்தருளியவுடன், அதிசயித்து நின்றார் நம்பியாரூரர், உடனே எம்பெருமான் அசரீரியாக முன்பு நீ எனக்குத் தொண்டன் நம் ஏவலாலே மண்மீது பிறந்தாய் துன்புறுவாழ்க்கை நின்னைத் தொடராமல் தடுத்தாட் கொண்டோம்" என மொழிந்தருளினார். இவ்வோசையைக் கேட்ட நம்பியாரூரர் ஈன்ற ஆன்கனைப்புக் கேட்ட கன்றுபோற் கதறி நின்று கைகளைத் தலையின் மேற்குவித்து வணங்கி நின்றார். பின்னும் அசரீரியாக மொழிகின்றார் எம்பெருமான்.

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்."

இவ்வருள் மொழியைச் செவிமடுத்த நம்பியாரூரர் "கோதிலா அமுதே இன்றுன் குணப் பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்டபொழுது "பித்தன் என்றே பாடுக" என்றார் எம்பெருமான். அவர் வாக்கை அருள் வாக்காகக் கொண்டு "பித்தா பிறைசூடீ" எனத் தொடங்கிப் பாடியருளினார். முதற்பாடலாகிய இப்பாடலிலேயே "எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை வைத்தாய்" எனப் பாடி இறைவனுக்கும் தனக்குமிடையேயமைந்த யோக மார்க்கத்தை விளங்க வைத்துள்ளார். திருவெண்ணெய் நல்லூரிலிருந்து புறப்பட்டுத் தில்லைக்குச் சென்று வழிபாடுகள் நடத்தி வருங்கால் "திருவாரூருக்கு வா" என்று அழைத்துத் தோழனாக என்னை உனக்குத் தந்தேன் எனவும் அருளினார் எம்பெருமான். சுந்தரர் இறைவனோடு கொண்டுள்ள இந்தத் தோழமைத் தொடர்பு பேச்சு உரிமைக்கு மிக வாய்ப்பான தொடர்பாகும். சம்பந்தப்பெருமான் இறைவனோடு புத்திரன் என்ற முறையில் தொடர்பு கொண்டவராகையால் தகப்பன் பிள்ளைக்கு உணர்ந்து செய்யும் முறையிலே யாவும் கிடைத்தன. வாதாட இடமில்லை, முறையுமில்லை. அப்பர் சுவாமிகள் அடியார் என்ற முறையிலே தாழ்மையான வேண்டுகோள்களையே விடுத்தார். மணிவாசகப் பெருமான் சீக்ஷன் என்ற பாங்கிலே பிரிவாற்றாமையால் அலறியும் உழறியும் வேண்டுகோளை விடுத்து இரங்குகிறார். ஆனால் சுந்தரரோ தோழன் என்ற முறையிலே எம்பெருமானோடு தொடர்பு கொண்ட தன்மையினால் எப்பொருள்களையும் வலியுறுத்திக் கேட்டுப் பெற்றுமிருக்கிற தன்மையைக் காணலாம்.

ஒருவருடைய பெருமையையும் குணத்தையும் அவரவர்களுடைய நண்பர்களைக்கொண்டு சொல்லிவிடலாம் என்பது ஒரு பெரிய உண்மை. சிவபெருமான் சுந்தரரிடத்துத் தோழமை கொள்ள வந்தாரென்றால் சுந்தரரின் பெருமைக்கு வேறு சான்றே தேவையில்லை. சுந்தரரின் செந்தமிழ்ப் புலமை எம்பெருமானை ஈர்த்து விட்டது என்பதை அருணகிரிநாதர் விளக்குகிறார்.

"கற்ற தமிழ்ப்புல வனுக்கு மேமகிழ்
வுற்றொரு பொற்கொடி களிக்க வேபொர்
கற்பனை நெற்பல அளித்த காரண னருள்பாலா."

என்பது திருப்புகழ். இவருடைய செந்தமிழை நயந்ததனாலேயே எம்பெருமான் பரவையாரிடமும் ஒருமுறைக்கு இருமுறை தூதுசென்றார் எனவும் அறிகிறோம். ஒரு பிழை பொறுத்தருளும் பெற்றி வாய்ந்த எம்பெருமானைத் தோழமையாகக் கொண்ட சுந்தரர் வியந்து பாடுகிறார்.

"..........அடியேற் கெளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாத னைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே."

என்பது தேவாரம் : திருவாரூர்ப் பெருமானே அடி எடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத் தொகையும் பாடியருளினார் சுந்தரர். இதுவே "பெரியபுராண"ந் தோன்றுவதற்கு முதல் நூலாக அமைந்தது. இதனைக் குறித்துச் சுந்தரருக்குப் "பெரியபுராணத்தில் பல இடங்களில் நன்றி செலுத்துகிறார் சேக்கிழார், "தம்பிரான் தோழரவர் தாமொழிந்த தமிழ் முறையே எம்பெருமான் தமர்கள் திருத்தொண்டேத்த லுறுகின்றேன்" என்றும் ஈசனடியார் பெருமையினை எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரும் தொழ எடுத்து தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன் வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வழுத்துவாம் என்றும் பாடியுள்ளார்.

சுந்தரர் செந்தமிழில் மற்றைய புலவர்களுக் கெல்லாம் ஒரு புதுவழி காட்டப் படுகிறது. பொருள் வேண்டிப் புலவர்களையும் வள்ளல்களையும் பாடினர் சங்கச் சான்றோர். ஆனால் பொருளையும் அருளையும் வேண்டி எம்பெருமானைப் பாடும்படி வழிகாட்டுகிறார் சுந்தரர். மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக் கிவனென்று கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று நொந்து கொள்கிறார். காரணம் பல்லவர் காலத்து மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கவில்லை. அதனாலேயே ஒரு புதிய வழியைத் திறந்து காட்டுகிறார்.

"புலவர்களே; உண்ண உணவும் உடுக்கக் உறையும் துன்பநீக்கமும் இம்மைக் கருளுவான்; மறுமைக்குச் சிவலோகப் பெரும் பேற்றையும் நல்குவான்." எனவே அவனையே பாடுங்கள் என்பது நாயனார் அறிவுரையாகும். ஒரு மணத்தைத் தடுத்து வைத்த பெருமான் சுந்தரருக்கு இரு மணத்தைப் பொருத்தி வைக்கிறான். பரவையாரை மணம் முடித்து இல்லற தர்மத்தை இனிது நடத்திக்கொண்டு வரும் நாட்களிலே நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டமையால் குண்டையூர்க்கிழார் அளித்த நெல்லை வீட்டிலே சேர்ப்பிக்கும்படி இறைவனையே வேண்டிப் பாடுகிறார்.

"நீள நினைந்தடியென் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடயா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவை யட்டித் தரப்பணியே."

இப்பாடலிலிருந்து ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தம்பொருட்டு எம்பெருமானை ஏவுகின்ற சுந்தரர், இறைவனோடு தனக்குள்ள அன்புப் பிணைப்பையும் எடுத்துக் காட்ட மறக்கவில்லை. பாடலின் முதலடி யிலேயே அதனை விளக்குகிறார். நீளநினைந்து நித்தலுங் கைதொழுபவன் தான் என்ற தகுதிப் பாட்டை எடுத்துக்காட்டி நாமும் அத்தகுதிப்பாடு உடையோ மானால் இறைவனை ஏவல் கொள்ளலாம் என்பதையே எடுத்துக்காட்டுகிறார்.

வாழ்க்கை வாழ்வதற்கே யென்றும் அதற்கு வழி வகுத்துத் தரவேண்டிய பொறுப்பு எம்பெருமானைச் சார்ந்ததே என்றும் எடுத்துக்காட்டியருளிய பல பாடல்களைக் காணலாம். திருநாகைக்காரோணம் என்ற தலத்திலே எழுந்தருளிய பெருமானைப் பார்த்துக் கேட்கிறார். "முத்தாரம், மணிவயிரம், கத்தூரி, கமழ் சாந்து தந்தருளவேண்டும். கந்தம் முதலாம் ஆடையாபரணம் பண்டாரத்தே யெனக்குப் பணித்தருள வேண்டும். பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும். கறிவிரவு நெய்ச்சோறு முப்போதும் வேண்டும். இம்மைப் போகங் குறித்து எவற்றை வேண்டினாலும் வேண்டத் தருபவன் அவனே என்பதை இவ்வாறு பல இடங்களிற் காட்டியுள்ளார்.

அடிகளுடைய வாழ்க்கையை மேலெழுந்தபடி நோக்கினால் சிற்றின்பச் சுவைக்காகவே பல இடங்களில் ஆண்டவனை வேண்டிப் பாடினார் என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முள்ளத்திற் படுகிறது. ஆனால் எந்த நிகழ்ச்சியிலும் பேரின்ப விளைவையே எதிர்பார்த்தார் என்பதை நாமுணர வேண்டும்.

"ஏடுதரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
ஏறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்

என்று அருணந்திசிவம் குறிப்பிடுவதுபோன்ற வாழ்க்கை நிலையை மேற்கொண்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். மற்றுப் பற்று எனக்கு இன்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன்" எனப் பாடித் தனது உள்ளத்தினுயர்வை நாம் காண வைக்கிறார். இறை நினைவற்ற நாட்களை "ஓய்வுநாள் உணர் வழியுநாள் உயிர் போகுநாள் உயர் பாடைமேல் காவுநாள்" எனக் கூறிப் பழிக்கிறார்.

முன்னோர்க்கு மதிப்புக் கொடுத்துப் பாடிய சிறப்பு சுந்தரர் செந்தமிழில் நிரம்பக் காணலாம். ஏயர் கோன் கலிக்காம நாயனார் பகைத்து நின்றபோதும் பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையோராய் விளங்கினார். விறன்மிண்டர் கூற்றுக்கு மதிப்புக் கொடுத்து அடியார் பெருமையைப் பாடியருளினார். சேரமான் பெருமாள் நாயனாரோடு என்பும் ஒன்றி உயிரும் ஒன்றி நட்புப் பூண்டார். "நேசமுடைய அடியவர்கள் வருந்தாமை யருந்த நிறைமறையோ ருறைவீழி மிழலை தனினித்தல் காசருளிச் செய்தீர்" என்று பாடி அடியார்கள் அற்புதங்களைப் போற்றினார். அடியார்கள் செயல் உலகுக்குக் குற்றம்போல் தோன்றினும் எம்பெருமான் குணமெனக் கருதும் கொள்கையுடையவன் என்பதைத் திருப்புன்கூர்ப் பதிகத்திலே எடுத்துப் பாடினார்.

"நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே."

இங்கே குறிக்கப்பட்ட மெய்யடியார்கள் எண்மரும் திருவருள் வயப்பட்டவர்கள். ஆணவமுனைப்பால் செய்யாது அருள் முனைப்பால் செய்த சில கருமங்கள் உலகோர் பார்வைக்குக் குற்றம்போலத் தோன்றுவன ஆனால் அவை சிவபெருமானாற் குணமெனக் கொள்ளப்பட்டு நற்புண்ணியப் பயனை அளிப்பனவாக அமைந்துவிட்டன. குணமுங் குற்றமும் செய்வோர் கருத்து முறையால் அலசி யாராயப்பட வேண்டியதேயன்றிச் செயல்முறையால் ஆராயப்பட வேண்டியதன்று. இதனை வள்ளுவப் பண்பாட்டுணர்வோடு எடுத்துக் காட்டுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழன் பண்பாட்டை எடுத்து விளக்கும் முறையில் "நீதியில் வழுவேன் நமர் பிறர் அறியேன்" எனவும் பாடியுள்ளார்.

அருமைப் பாடல் ஒன்றிலே நயத்திற்குச் சுந்தரனார் என்று போற்றியுள்ளார் ஒரு பெரியார். தோழமைத் தொடர்பின் மூலம் பேச்சுரிமை இருந்தமையால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை நயம், நகைச்சுவை யாவும் அங்கே மிளிர்கின்றன. தம்பிரான் தோழர் என்ற சிறப்புத் திருநாமம் பெற்ற இவர் தனக்கு அருள் செய்யாமல் இருந்த சிவபெருமானுடைய நிலையை நினைந்து வருந்துகிறார். குற்றம் செய்யினுங் குணமெனக் கருதும் கொள்கையாளர். இவ்வாறிருத்தல் தகுமா என வாதிடு கிறார். "பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்" எனக் கூறிக் கண்களை மறைப்பித்தமைக்கு மனமுடைகிறார்.

"வல்ல தெல்லாம். சொல்லி உம்மை
வாழ்த்தி னாலும் வாய்தி றந்தொன்
றில்லை யென்னீர் உண்டும் என்னீர்
எம்மை யாள்வான் இருப்ப தென்னீர்"

எனக் கேட்கிறார். இங்கே நயமான பேச்சுரிமை தொனிக்கிறது. திருமுருகன் பூண்டியிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் கள்வர்கள் பொருள்களை வழி மறித் துக் கவர்ந்து சென்றனர். கள்வர்கள் மேற் குறை காணாமற் சிவபெருமானிடத் திலேயே குறை காண்கிறார் சுந்தரர். "உமது எல்லையில் அடியார்க்குத் துன்பம் நேரிடலாமா? காக்குந் தெய்வம் நீயிருக்கக் கள்வர் தொல்லை நேரிட்டதேன்? எல்லை காப்ப தொன்றில்லையாகில் நீர் எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானிரே" என்று கூறி நியாயங் கேட்கிறார். தடுத்தாட்கொண்ட பெருமான் தன்னை என்னவாயினும் செய்ய உரிமையுடையவர்தான். ஆனால் அந்த உரிமையை வைத்துக்கொண்டு குருடாக்கித் துன்புறுத்தல் தகாது என்பதை நயம்படப் பாடுகிறார்.

"விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்த தில்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே."

இவ்வாறெல்லாம் நயம்படப் பாடிய அடிகள் உலகத்து உயிர்களின் வாழ்வு நிலை யற்றது என்பதை எடுத்துக் காட்டவும் மறக்கவில்லை. "நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார் நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில் சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியேன் தொடர்ந்தேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே" என வேண்டுகிறார். திரைத்து நரைத்து மூப்பு வரும் வரையும் காத்திராது இளமையிலேயே இறைவழிபாடாற்ற வேண்டும் இளைஞர்களுக்கு அறிவுறுத்து கிறார். இவ்வாறாகப் பல கோணங்களில் வைத்துச் சுந்தரர் செந்தமிழை ஆராய்ந்தால் அவர் ஒரு "திருநெறி இயக்கத் தலைவர்" என்பது புலப்படும்.

"மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல்தொண்ட னேன்இன்று கண்
(டொழிந்தேன்

விண்ணுலகத் தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தா னொடித்தான்மலை யுத்தமனே."

**நன்றி:** மலேசியா -சிங்கப்பூர் சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகள்
**வெளியீடு:** தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், 1971


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள்

### சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணா எங்கள் குருநாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்.

நமது ஈழ நாட்டிலே நமது கண்முன்னே சீவன்முத்தராக வாழ்ந்து 1964ஆம் ஆண்டு இறைபதமடைந்த யோகர் சுவாமிகளை நினைவுகூருவது பெருந் தவப்பேறாகும். சுவாமிகள் ஒரு நடமாடுந் தெய்வமாக நம்நாட்டிற் (ஈழத்தில்) காட்சியளித்தவர். வாழ்வின் முற்பகுதியை அரசாங்க உத்தியோகத்திற் கழித்த போதிலும் ஓய்வு நேரத்தைத் தியானத்திலும் மௌனத்திலும் செலவு செய்தார். இவருடைய குரு செல்லப்பா சுவாமிகள் என்பவர். நல்லூர்த் தேர் மண்டபத்தில் தம் குருவின் மேற்பார்வையில் சுவாமிகள் நாற்பது நாள் தவமிருந்தார். இதன் பின்னர் இருப்பை மரத்தடியில் நிட்டையிலிருந்தார். தம்மைத் தரிசிக்க வருவோருக்கு உபதேசம் செய்வதும் அவருடைய ஐயங்களைத் தாமாகவே உணர்ந்து தீர்த்து வைப்பதும் அவர் கடமையாக இருந்தது. அத்துடன் "சிவ தொண்டன்" என்னும் மாத இதழ் மூலம் மக்களுடைய கருத்துக்களுக்கு நல்விருந்தளித்தார். சுவாமிகள் அடிக்கடி கூறும் மந்திரங்களை நாம் சிந்தையில் இருத்தல் வேண்டும்: "சும்மா இரு", "எப்பவோ முடிந்த காரியம்", "நாம் அறியோம்", "முழுவதும் உண்மை," "ஒரு பொல்லாப்புமில்லை" இவற்றின் உண்மைகள் நினைந்து நினைந்து இன்புறுதற்குரியவை.

இவருக்கு இளம் பிராயத்தில் கிறீஸ்தவ பாடசாலையிலே கல்வி கற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால், நாவலர் பெருமானைப்போன்று அந்தச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலிலேதான் சமய விழிப்புணர்ச்சி பெறக்கூடிய மனப்பாங்கும் ஏற்பட்டது. பெற்றோரை இளவயதில் இழந்தவரானபடியால் வாழ்க்கையைப் பற்றிய அல்லல்களும் துன்ப அனுபவமும் சேர்ந்து இன்பவழிக்கு அவரை இழுத்துச் சென்றது. அவர் தமக்குமுன் வரும் துன்பம் மீதூரப் பெற்றவர்களை ஆதரித்து அறிவுகூறி இன்பவழியைக் காட்டிவைத்தார். அறியாதவனுக்கு அறிவைக் கொடுத்தும் இருட்டறையில் இருந்தவனுக்கு ஒளியைக் காட்டியும் நற்பணி புரிந்தார். இவரை நோக்கிப் பலதரப்பட்ட மக்கள் படையெடுத்தனர். பிரபுக்கள், மந்திரிகள், பட்டதாரிகள், பண்டிதர்கள், பாமரர்கள் எல்லோரும் இவரிடஞ் சென்று அருட்பார்வைக்கும் நல்வாக்குக்கும் தவம் கிடந்தனர். தவறு செய்தவர்கள் கூட அவர் முன்னிலையில் தம் தவறுகளைக் கூறி மனச்சாந்தி அடைந்தனர். வழிபடுவோர் கூட்டத்திற்கு அவர் காட்டிய வழிபாட்டு நெறி மிக இலகுவானதாகும். உங்கள் மனதில் ஆண்டவன் எப்படிக் காட்சியளிக்கிறானோ அந்த நிலையிலேயே வழிபடுங்கள் எனக் கூறினார்.

இவருடைய இளமைக்காலம் ஆத்மிகத்துறைக்குப் பல வழிகளையும் ஆக்கிக் கொடுத்தது. நீர்ப்பாசன இலாகாவில் கடமைபுரிந்த இவர் கடமையின் இடையிலே தோத்திரங்களையும் சாத்திரங்களையும் நன்றாகப் பயின்று வந்தார். அவர் உள்ளத்தை ஈர்த்த சிறந்த நூல் பெரியபுராணம். இதற்கு மேலாக, செல்லப்பா சுவாமிகளின் ஞானத் தொடர்பு வாழ்வை முழுமையடையச் செய்துவிட்டது. செல்லப்பா சுவாமிகள் தமது சீடரை நாடோறும் பரீட்சித்து அவர் பக்குவ நிலையைக் கண்டு ஞானத்தை உணர்த்தத் தொடங்கினார். ஆண்டி வேடத்தில் நல்லூர் வீதியில் காட்சியளித்த அவர், யோகர் சுவாமிகளுக்கு ஞானம் உணர்த்தும் குருவாக அமைந்தமை திருவருட்செயலே. இந்த நிலையை நற்சிந்தனையிலே சுவாமிகள் பாடியுள்ளார்.

நல்லூர் வெளியிலே பொதுநடம் புரிகிறான்
நங்கள் குருநாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரையுந்தன் னிடத்திலே காண்பவன்
இயமநிய மங்களில் எள்ளவு மோபிசகான்

"பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்
சிங்கார நடையொடு சிரிப்பினை யுடையான்."

"ஆரறிவாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்காரமாய்க் கிடப்பான்
பேரறிவாளனெனப் பிறரெவரு மோவறியார்
பித்தனென் றுலகோர் பேசுவா ரேசுவார்."

தனது குருவினிடமிருந்து தான் பெற்ற அனுபவத்தைத் தன்னை வந்து அடைபவர்களுக்கு வழங்க வேண்டும் என்று முன்வந்தார். அவரிடம் தரிசனத்துக்குச் சென்றவர்கள் அனலிலே காய்ச்சப்பெற்ற பொன்போலப் புத்தொளி பெற்றே வீட்டுக்குத் திரும்புவார்கள். இறைவனையும் இறைவனை வழிபடும் அடியவர்களையும் வழிபட வேண்டும் என்பதையே திரும்பத் திரும்பக் கூறுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் எம்மை விட்டு அகலாமல் இருக்கிறான் என்றும் அதே நேரத்தில் நாம் ஆண்டவனைப் புறக்கணித்து அகலச் செல்ல உலக பாசம் எம்மை இழுக்கிறது என்றும் சொல்வார்.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரிய பேறிழந் தாரே.

என்பது திருமந்திரம். எனவே, மானிடப் பிறவி மகத்துவம் அடைய வேண்டு மானால் சிவத்தியானமும் சிவத்தொண்டும் முக்கியமாகும். மாணிக்கவாசக சுவாமிகள் குருந்தமர நிழலில் குரு உபதேசம் பெற்று ஞானநெறியை உலகுக்குக் காட்டியது போல் யோகர் சுவாமிகளும் தான் பெற்ற அனுபவ இன்பத்தை உலகுக்கு வழங்கினார். சிவபுராணம் பாடிப் பரவுதலும் தன்னடியவர்களைப் பாட வைப்பதும் அவருடைய தினாந்தர கடமையாக இருந்தது. நேரங் கிடைக்கும் போதெல்லாம் வேதாகம உண்மைகளை உணரக் கூடியவர்களுக்கு விளக்குவார். ஒருமுறை மகாத்மா காந்தியடிகளை இரு ஐரோப்பியர்கள் தரிசித்துவிட்டு யோகர் சுவாமிகளையும் தரிசிக்க வந்தார்கள். அவர்களுடைய நல்வாக்குக்காகக் காத்திருந்தார்கள். "காந்தியடிகள் என்ன சொன்னார்" என்று கேட்டார் சுவாமிகள். "ஒன்றே குலம் ஒன்றே கடவுள்" என்றார் எனச் சொன்னார்கள். "ஆம், இதனைவிட நான் வேறு எதனைக் கூறுவது" என்றார் யோகர் சுவாமிகள். இவர்களின் ஞான பக்குவத்தை நோக்கியே இலங்கைத் தேசாதிபதி சோல்பரிப் பிரபுவின் மகன் பிரதம சிஷ்யராகி இவர்வழி நின்று மட்டக்களப்பைச் சேர்ந்த செங்கல்லடியில் கடமையாற்றி வருகிறார். "வேலையே வணக்கம்." என்று அடிக்கடி அவர் கூறுவார்.

மதம், இனம், மொழி என்ற பேதம் நோக்காது தன்னிடம் யார் யார் வருகை தந்த நேரத்திலும் அவ்வவர் மனக் கருத்தை அறிந்து ஆவன கூறிவிடுவார். ஒருசமயம் ஸ்ரீ ரிக்கிரிபண்டா திசநாயக்கா என்ற பேருடைய புத்தசமயப் பிரமுகர் ஒருவர் முதல்முறை இவரைச் சந்திக்கச் சென்றார். சுவாமிகள் கையில் தும்புத்தடி கொண்டு கூட்டிக்கொண்டு நின்றார். வந்தவரைக் கண்டவுடன் திசநாயக்கா வாருங்கள் என்று அழைத்தார். ஆண்டவனின் அடுத்து "நீ உன்னை நினைத்துக் கொள் இராச்சியம் உனக்குள்ளேயே இருக்கு. சும்மா இரு" என்றார். மனிதனின் எண்ணங்களை ஊடுருவி அறிவதில் இவர் பேராற்றல் படைத்தவர். அவருடைய உபதேசங்கள் கேட்டாரது உள்ளங்களைப் பிணித்துவிடும். எத்தனையோ சித்துக்கள் கைவரப் பெற்றவராக இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் வெளிக்காட்டவில்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சுவாமிகள் பின்னிப் பிணைந்து விட்டார். நோய் நொடிகளுக்கு எல்லாம் அவர் ஏற்ற மருந்து சொல்லிக் கொடுப்பார். வைத்தியர்களால் மாற்ற முடியாத கொடிய உடல்நோய், வியாதிகளை யெல்லாம் இவர் மாற்றியுள்ளார். உளநோய், உயிர்நோய் யாவையும் மாற்றிவிடும் பெரு வைத்தியர் இவர்.

சுவாமிகளின் தெய்வத் தோற்றம் பார்த்தாரைப் பரவசப்படுத்தும். வால்நரை முடியும், அருளொழுகும் கண்களும் சிரித்த முகச் செவ்வியும் கண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சைக் கவரக் கூடியன. எத்தனையோ முனிவர்கள், இருடிகள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நாம் கண்கண்ட ஒரு பெரும் முனிவர்தான் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள். கல்லைப் பிசைந்து கனியாக்கி என்று பாடினார் மாணிக்கவாசக சுவாமிகள். அதே போன்று இரும்பு தரும் நெஞ் சங்களை, உள்ளங்களை, பணம்படைத்த பதவி மோகம் பிடித்த இறுமாப்புடன் வாழ்ந்தோர் இதயங்களை ஈர்த்து உருக வைத்தவர் இந்த முனிவர். மக்கள் எல்லோரும் சிந்தையிற் கடவுளும் செயலிற் தூய்மையும் கொண்டு ஒழுக வழிகாட்டினார். இன்று அவர்களின் சிஷ்யர்கள் பலர் நம் நாட்டில் சமயம் வளர்க்கும் பெரும்பணியைப் புரிந்து வருகிறார்கள்.

சுவாமிகள் அருளிச் செய்த நற்சிந்தனைச் செய்யுள்கள் அற்புதமானவை. படிப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்துபவை.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகமென்னும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ இன்புற்றிட நாமெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே".

என்றார் தாயுமான சுவாமிகள். எங்கள் யோகர் சுவாமிகளும் நற்சிந்தனைப் பாடல்களின் மூலம் எம்மை ஆண்டவன் திருவருள் பெற அழைக்கிறார்.

"வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே."

நல்லூர்ப் பதியில் குரு தரிசனம் பெற்றவராகையால் அப்பதியைக் குறித்து அதிகமான நற்சிந்தனைப் பாடல்கள் பாடியுள்ளார். பாடல்கள் முழுவதிலும் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்து மிளிர்கின்றன. சுவாமிகளின் உள்ளம் திருவாசகத்தில் திளைத்திருந்தமையை அவர் பாடல்கள் சிறப்பாகக் காட்டுகின்றன.

"பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநா னென்று உரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில் சூழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே."

இது கண்டபத்து என்ற பகுதி குரு தரிசனங் குறித்துப் பாடியதாகும். மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையிலே பாடிய கண்டபத்தை இது ஞாபகமூட்டுகிறது.

நாயன்மார்கள் எல்லோரும் நிலையிலாப் பொருமை காட்டி அவ்வழி நாட்டம் செலுத்தாது நிலையான பொருளாகிய பரம்பொருளை நாடவேண்டுமென்றே வழிகாட்டினர். "நீ நாளும் நல்நெஞ்சே நினை கண்டாய்" என்றும் "புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்" என்றும் பாடிப்பாடி அறிவுறுத்தினார்கள். அந்த வழியிலே சுவாமிகளின் அறிவுறுத்தலைப் பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உஞற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான் ஆதலின்
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்

இலகுவான முறையில் எம்மை உணரவைக்கும் திறனை இங்கு காணலாம். குருவாசகங்களாக அவரருளிய ஞான மொழிகளை எமது சிந்தையில் இருத்தல் வேண்டும். "எதை நீ பாவனை செய்கின்றாயோ அது நீ யாவாய்." என்பதும் எப்பவோ முடிந்த காரியம் என்பதும் "ஒரு பொல்லாப்புமில்லை" என்பதும் என்றும் சிந்திக்கச் சிந்திக்கத் தெவிட்டாத பொன்மொழிகளாகும்.

யாழ்ப்பாணமும் ஈழநாடும் செய்த தவப்பயனாகத் தோன்றிய அவரது எண்ணங்களும் அருள் வாக்குகளும் என்றும் எம் இதயத்தை விட்டு நீங்கா. அவர்களின் ஞாபகமாக விளங்குகின்ற சிவ தொண்டன் சஞ்சிகையைப் போற்றி ஆதரிப்பது சைவ மக்களாகிய எமது பெருங்கடனாகும்.

வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாத வமனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம்சி வாய நமவென வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லா லுணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே!

**நன்றி:** சிவத்தமிழ்ச் செல்வியின் திருநெறிய செந்தமிழ்
**வெளியீடு:** சைவ சித்தாந்த மன்றம் கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி தி. செல்வமனோகரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் வழிகாட்டலில், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையில் "இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்" என்ற ஆய்வினை மேற்கொண்டிருந்தார்.

கலாநிதி செல்வமனோகரன் அவர்கள் அம்மையாரது பணிகளை சமயம், சமூகம், தத்துவம், மொழியியல், அம்மையார் ஆற்றிய பணிகளின் சமகால செல்நெறிகள் ஆகிய தளங்களில் விரிவாக ஆய்வு செய்து, 20ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஒரு இந்துப் பெண் தனது குடும்ப வாழ்வைத் துறந்து சமூகத்தில் ஏற்படுத்திய மறுமலர்ச்சியை, பல தலைமுறைகளுக்கு நினைவுகூரும் வகையில் சொற்களாற் செதுக்கி இந்நூலை வரலாற்று ஆவணமாக உருவாக்கியுள்ளார்.

'தெய்வத்திருமகள்' கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரை கலாநிதி தி. செல்வமனோகரன் அவர்கள் தனது ஆய்வுநூலில் "அறிமுகம்" செய்திருந்த முறைமை சிறப்பானது. அவ்வறிமுகப்பகுதி சிவத்தமிழ்ச்செல்வியின் நூற்றாண்டு விழா மலரிலும் சிவத்தமிழ்ச்செல்வி ஆற்றியபணியை வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தும் முகமாக இங்கு மீளவும் மலர்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அறிமுகம்

**கலாநிதி தி. செல்வமனோகரன்**

**1.1 இலங்கையிற் சைவம்**

இலங்கையில் நிலவும் சமய நெறிகளில் சைவம் மிகப் புராதனமானதாகும். இந்நாட்டின் பல பாகங்களிலும் சைவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மிகப் பழைய பிராமிக் கல்வெட்டுக்கள், சாசனங்கள் தொட்டு நாணயங்கள் ஈறாக இதற்கான ஆதாரங்களைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையின் வரலாற்றுக்கு முற் பட்ட கால அரசர்கள் சைவ சமயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் களாக இருந்துள்ளனர். பண்டுகாபய மன்னன் அமைத்த சிவிகசாலை. சொத்திச் சாலை என்பவற்றுள் "சிவிகசாலை" என்பது சிவலிங்கத்தை தோற்றுவித்து வழிபடும் இடம் எனவும் "சொத்திச்சாலை" பிராமணர்கள் வேதம் ஓதும் இடம் எனவும் "வம்ஸ்த்தப்ப காஸினி" எனும் மகாவம்ச உரை நூல் கூறி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையரசர்கள் தொன்மைக் காலந்தொட்டே சைவசமயத்தின் உருவ வழி பாட்டோடு இயைந்த உருவங்களைத் தமது நாணயங்களிலும் முத்திரைகளிலும் பொறித்துள்ளனர். இலங்கையின் பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் தொன்மைக்கால நாணயங்களிலும் இவற்றைக் காணமுடிகின்றது. திரிசூலம், வேல், இடபம், மயில், கருடன், சிவலிங்கம், உருத்திரன், சுவஸ்திகவம் போன்ற உருவங்கள் அவற்றுள் சிலவாகும். அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கோமுகிகள் முதலானவையும் இலங்கையின் தொன்மைவாய்ந்த சமயமாக சைவத்தை நிலைநாட்ட உதவுகின்றன. இலங்கையில் பௌத்தம் பரவுவதற்கு முன்பே சுதேசிகளின் சமயமாகச்சைவம் சிறப்புற்றிருந்துள்ளது. "சிவ" எனும் சொல் அரசு நிலை சார்ந்தவர்களின் பெயர்களில் பின்னொட்டாக உள்ளமையை இதற்குச் சான்றாகச் சுட்டலாம். தீபவம்சம் பண்டுவாசுதேவனின் மகன் ஒருவன் "சிவ" எனும் பெயரை உடையவன் என்கிறது (10:45). மகாவம்சம், தேவநம்பிய தீசனின் தந்தையின் பெயர் முட்டசிவ என்கிறது. அசேலனின் சகோதரருள் ஒருவன் "மகாசிவ" என்று செ. குணசிங்கம் குறிப்பிடுகிறார். அறுபதிற்கும் மேலான பிராமிய சாசனங்களில் "சிவ" எனும் சொல் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சொன்னவற்றின் ஊடாகக் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னரே இலங்கையில் சைவம் நிலவியதென்பது தெளிவாகின்றது. பௌத்தத்தின் இலங்கைக்கான வருகை கி.பி 3ஆம் நூற்றாண்டிலேயே நிகழ்ந்தது. மகாவம்சத்தில் விஜயன் சிங்கள வம்சத்தவனாகச் சுட்டப்படுகின்றானே தவிர, அவனின் சமயம் சிறப்பித்துக் கூறப்படவில்லை. விஜயனதும் 700 தோழர்களினதும் மனைவியர் பாண்டிய நாட்டவர் என மகாவம்சம் கூறுகின்றது. பாண்டியநாடு சைவ பூமி என்பதிலும் அக்காலப் பகுதியில் பௌத்தம் தமிழகத்தில் செல்வாக்கு பெற்றிருக்கவில்லை என்பதிலும் கி.பி 3ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே செல்வாக்குப் பெற்றது என்பதிலும் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆகவே விஜயன் உள்ளிட்டவர்களின் மனைவியர் சைவ சமயத்தவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. பண்டு - பாண்டு - பாண்டிய முதலிய சொல்லாராய்ச்சிகளும் பண்டுகா பயனுடைய உறவினர்களின் பெயர்களில் வரும் “சிவ” என்ற சொல்லொட்டும் இதனை ஆதாரப்படுத்துகின்றன. அநுராதபுர கால மன்னர்கள், சைவ சமய மரபுகளையும் கலாசார வழிபாட்டு மரபுகளையும் ஆதரித்து வந்துள்ளனர். ஆலயங்களையும் நிர்மாணித்தனர். பிராமணர்களை ஆதரித்ததோடு அவர்களை புரோகிதர்களாகவும் அரச அதிகாரிகளாகவும் நியமித்தனர். விஜயன் காலம் தொட்டு தேவநம்பியதீசன் காலமீறாக பிராமணர்கள் பெருஞ் செல்வாக்கோடு இருந்துள்ளனர்.

இலங்கையில் சைவத்தின் தொன்மையைக்கூறத் தக்க சான்றுகளாக இன்றும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம். நகுலேஸ்வரம், முதலான ஈஸ்வரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் பெரும் புகழ்பெற்று விளங்கின என்பது தமிழக சைவ நாயன்மார்களின் பதிகங்களின் ஊடாகத் தெளிவாகின்றது. திருக்கேதீஸ்வரம் மாதோட்ட நன்னகரில் எல்லா வளங்களுடனும் அழகுற அமைந்திருந்தமையை சம்பந்தரின் “திருக்கேதீஸ்வர பதிகம்” புலப்படுத்துகின்றது. அதேபோல திருக்கோணேஸ்வரம் அழகிய கடல் சூழ, நிறைந்த வளங்களுடன் சோலைகளும் சந்தனமும் அகிலும் சாந்தும் திகழ அழகுறக் காட்சி தந்ததை திருக்கோணேஸ்வர பதிகத்தினூடாக சம்பந்தர் பதிவு செய்கின்றார்.

திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட சில சிவாலயங்கள் பற்றிய குறிப்புக்கள் மகா வம்சத்தில் காணப்படுகின்றன. இலங்கை மன்னர்களில் ஒருவனான மகாசேனன் சைவ ஆலயங்களை அழித்து பௌத்த ஆலயங்களை ஸ்தாபித்தான். கோண மலை பற்றிப் பல இதிகாச புராணக் கதைகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் உள்ளன. இராமாயணம். இராவணனை சிவபக்தனாக வர்ணிக்கின்றது. இராவணன் திருக்கோணேஸ்வரத்தோடு இணைத்துப் பேசப்படுகின்றான். வாயு புராணம் “மலயதீவு” எனும் சிவாலயத்தைக் குறிப்பிடுகின்றது. சிலாபத்தில் அமைந்துள்ள முன்னேஸ்வரம் சைவ கலாசார மையமாகத் திகழ்கின்றது. யாழ்ப் பாணத்து நகுலேஸ்வரம் மாருதப்புரவீகவல்லியின் கதையுடன் தொடர்பு பட்டுக் காணப்படுகின்றது. இந்த வகையில் இத்தலங்கள் இலங்கையில் சைவத்தின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கின்றன.

காலங்காலமாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்ட பண் பாட்டுறவுகள் இங்கு சைவப்பண்பாடு தளைக்கப் பெரிதும் உதவிற்றெனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுர காலத்தில் பல்லவர்களின் தமிழ்ச் சைவப்பண்பாட்டுக் கோலங்கள், கலைப்பாணிகள் இலங்கையில் செல்வாக்குச் செலுத்தின. சோழர்களின் வருகையினால் பல கற்றளிகள் உருவாகின. சதுர்வேதி மங்கலம் உருவாயிற்று. ஆலயங்களுக்கும் ஆலயம் சார்ந்தவர்களுக்கும் சோழமன்னர்களால் நிவந்தங்களும், மானியங்களும் வழங்கப்பட்டன. சமஸ்கிருதக் கல்வியின் வளர்ச்சியால் வேதாகமச் செல்வாக்கும் மேம்பட்டது. விக்கிரகம், சிற்பம். கட்டிடம் உள்ளிட்ட கலைகள் பெருவளர்ச்சி பெற்றன. இதன் நீட்சி யாழ்ப்பாண இராச்சிய காலத்திலும் காணப்பட்டது. சோதிட, வைத்திய மரபுகளும் சமஸ்கிருத கல்வியும் மேம்பட்டன. அரசகேசரி மன்னன், சம்ஸ்கிருதத்தில் புகழ் பெற்றிருந்த இரகுவம்ச காவியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தான். ஸ்ரீதட்சணகைலாய புராணத்தை சிங்கை செகராசசேகரனும் கோகேணஸ்வரர். கல்வெட்டை கவிராசவரோதயனும் இயற்றியதாக வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். யாழ்ப்பாண ராச்சியத்திலும் அந்நியராட்சியிலும் உருவாக்கம் பெற்ற சரசோதி மாலை உள்ளிட்ட சோதிட வைத்திய நூல்கள் "விநாயகர், சிவன், முருகன்" முதலான தெய்வங்களுக்கு கடவுள் வாழ்த்துப்பாடுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணராச்சிய ஆரியச்சக்கரவர்த்திகளுள் ஒருவரான செகராசசேகரன் எனும் பெயருடையவரின் சைவப் பணிகளை,

தும்பையஞ் சடையான் சைவந்
தோன்றிடத் தோன்றினால்

எனவும்

தோன்றிய காலை வேதம் தொனிந்தன
சிவநூற்சைவம்
மாற்றமர் வெண்ணீறள்ளி யணிந்தனர்...."

எனவும் ஸ்ரீதட்சிணகைலாய புராணத்தில் உரைக்கப்பட்டுள்ளது. ஆரியச் சக்கரவர்த்திகளின் விருதுப் பெயர்களும் சைவச் சார்புடையனவாகக் காணப்பட்டன என அறிய முடிகின்றது. யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் பல தலங்கள் புதிப்பிக்கப்பட்டன. இன்னும் சில தலங்கள் புதிதாக அமைக்கப் பட்டன.

நாயன்மார்களின் பாடல் பெற்ற தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலியன சிறப்புற்றுக் காணப்பட்டன. மாவிட்டபுரம், கீரிமலை, செல்வச் சந்நிதி, கதிர்காமம், வல்லிபுரம், கொக்கட்டிச்சோலை. ஒட்டிசுட்டான் முதலான இடங்களில் ஆலயங்கள் சிறப்புற அமைந்திருந்தன. நல்லூர் கந்தசுவாமி கோவில் 15 ஆம் நூற்றாண்டில் உருவாக்கம் பெற்றதாக அறிய முடிகின்றது. இக்கோவில்களில் நித்திய, நைமித்திய பூசைகள் வேதாகம விதிப்படி நடைபெற்றன. மக்களிடம் இறுக்கமான வைதீக சைவசமயப் போக்குகள் காணப்பட்டதாக எடுத்தாளப்படுகின்றது. முதலாம் சிங்கையாரியன் பல்திசைக் கோவில்களையும் கட்டுவித்தான். ஆரியச் சக்கரவர்த்திகள் பலராலும் திருக்கோணேஸ்வரம் போற்றிப் பூஜிக்கப்பட்டது.

ஐரோப்பியர்களின் வருகையால் சைவம் வலிகுன்றி கிறிஸ்தவம் மேலோங்கியது. ஒல்லாந்தர் ஆட்சியில் சைவ ஆலயங்கள் அழித்தொழிக்கப்பட்டன. சைவ கலாசாரத்தைப் பின்பற்றுதல் தண்டனைக்குரிய ஒன்றாக கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் ஒல்லாந்தரின் பசுவதைக்கு அஞ்சிப் பரதேசம் போன பேரறிஞரே திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் ஆவார். இவர் சிதம்பரத்தில் மடமும் குளமும், அமைத்தார். திருவண்ணாமலை ஆதீனத்தில் இணைந்து சைவப்பணி பல புரிந்தார். சித்தாந்த சாஸ்திரங்களுள் முக்கியமான நூலாகத் திகழும் சிவஞான சித்தியாரிற்கு எழுதப்பட்ட உரைகளுள், சிறந்த அறுவர் உரையுள் ஒன்றாக இவரின் உரையும் சைவ அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது. அத்தோடு மிகுந்த வடமொழிப் புலமையாளராகவும் இவர் விளங்கினார். வடமொழியில் இவர் எழுதிய எட்டு நூல்களும் இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன.

ஆங்கிலேயர்கள் ஆங்கில மொழிக் கல்வி, அரச உத்தியோகம் உள்ளிட்ட பல சலுகைகளைக் காட்டி சைவர்களை கிறிஸ்தவத்திற்கு மதம் மாற்ற முற்பட்டனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் பாமரராய் விலங்குகளாய் பாழ்பட்டு நின்ற தமிழ்ச் சைவ சமூகத்தை விடுவிக்க வந்த மகாத்மாவாக ஆறுமுகநாவலர் திகழ்ந்தார். சைவத்தையும் தமிழையும் பேணுவதாக அவரின் பணிகள் அமைந்தன. அவருடைய பிரசங்கம். துண்டுப் பிரசுரம். அச்சியந்திரசாலை நிறுவுதல், பதிப்பு முயற்சி, நூலாக்க முயற்சி, கல்லூரிகளை நிறுவுதல், கண்டனங்கள், உரைகள், தலங்களைப் புதிப்பித்தல், மூடச்சிந்தனைகளை நீக்கும் சீர்திருத்தங்கள் என்பன இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. இவரோடு இணைந்து சிவசங்கர பண்டிதர், சி.வை. தாமோதரம்பிள்ளை போன்றோரும் சைவப் பணி புரிந்தனர். நாவலரின் மாணாக்கர் பரம்பரையின் ஊடாக இன்று வரை அச்சைவப் பணியின் செல்வாக்கு தொடர்ந்து வருகின்றது. சேர்.பொன் இராமநாதன். சேர்.பொன். அருணாசலம், காசிவாசி செந்திநாதையர், த. கைலாசபிள்ளை வித்துவசிரோண்மணி பொன்னம்பலப்பிள்ளை, நா. கதிரவேற்பிள்ளை, ம. க.வேற்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப் புலவர், அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள். சபாரத்தின முதலியார், முத்துத்தம்பிப்பிள்ளை, விபுலானந்தர் என இருபதாம் நூற்றாண்டின் சைவ வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர் அநேகர்.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்பு ஏற்பட்ட அரசியல் மாற்றம், தமிழர் சிங்களவர்களுக்கிடையிலான முரண்பாடுகள் என்பவற்றின் விளைவாக எண்பதுகளில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் சைவசமய வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் இலங்கையின் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த பல ஆலயங்கள் அழிந்தன. சில ஆலயங்கள் பூசைகள் நடாத்தவோ வழிபாடியற்றவோ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன. சைவ மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கினர், யுத்தம் முடிவடைந்த இக்காலத்திலும் இந்நிலை முற்றாக நீங்கிவிட வில்லை.

### 1.2 செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி - ஓர் அறிமுகம்

#### 1.2.1 யாழ்ப்பாணத்துப் பின்புலம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நல்லை நகர் ஆறுமுகநாவலர் மறைந்து விட்டார். ஆனால் அவரின் முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் கனவுகளை நனவாக்கவும் பல சபைகள் இலங்கையில் தோற்றம் பெற்றன. சைவ பரிபாலன சபை தோற்றம் பெற்று ஆங்கிலமும் தமிழும் சைவமும் கற்பிக்கும் பாடசாலைகளை உற்பவித்தது. அத்தோடு இந்து சாதனம், ***Hindu Organ*** ஆகிய பத்திரிகைகளை நடாத்தி சைவசமயப் பிரசாரமும் சைவசமயக் கண்டனத்துக்குக் கண்டனமும் இதர அம்சங்களையும் வெளியிட்டு வந்தது. சுவாமி விவேகானந்தரின் வருகை ***1897*** இல் நடைபெற்றது. அது சார்ந்த இந்து சமய அலை உலகெங்கும் பரவியது. இலங்கையும் இதற்கு விதிவிலக்காகவில்லை. அதேவேளை கிறிஸ்தவ மிஷனரிகள் கல்லூரிகளை அமைத்தல், கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்தல், சைவத்தைத் தூஷித்தல், விவேகானந்தரின் வருகையை விமர்சித்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தன.

சைவ மக்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ***1923***இல் சேர்.பொன் இராமநாதன் தலைமையில் கீரிமலையில் நடைபெற்ற கூட்டத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு அதன் மனேஜராக திரு. சு. இராசரத்தினம் நியமிக்கப்பட்டார். பல்வேறு பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன. பிறரால் நடாத்தப்பட்டு கைவிடப்படும் நிலையில் இருந்த சைவப் பாடசாலைகள் பரிபாலிக்கப்பட்டன. இவ்வாறு சைவத்திற்கும் ஆங்கிலேய ஏதேச்சாதிகாரம் மிக்க கிறிஸ்தவத்திற்கும் இடையில் கடும் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் - ஈழத்து சைவப் பாரம்பரியம் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள பல்வேறு தளங்களில் போராடிக் கொண்டிருந்தது.

**1.2.2 பெண்களின் நிலை**

கிறிஸ்தவ மிஷனரிகளின் வருகை யாழ்ப்பாணச் சமூகத்தில் பாரிய மாற்றத்தைத் தந்திருந்தது. சாதிய, ஆணாதிக்க சமூகத்தில் புதிய கருத்தியற்றளங்களை உருவாக்கியது. யாழ்ப்பாண சைவ ஒழுக்கவியல் மரபில் கற்பு, அடக்கம், பருவமடைந்த பின் பிறருடன் பழகாமை, தந்தைக்கு, கணவனுக்கு ஆணுக்கு அடங்கி நடத்தல், போன்றன பெண்ணுக்குரிய முக்கிய விடயங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டன. ஒரு ஆண் பல திருமணங்களைச் செய்யும் மரபு இருந்தது. ஆனால் பெண் கற்போடு, கணவனே கண்கண்ட தெய்வமாகக் கொண்டு ஆணின் அதிகாரத்திற்கு உட்பட்டு வாழும் சூழல் காணப்பட்டது. இச்சூழலில் கிறிஸ்தவ மதப் பரம்பலின் அடிப்படையில் மேலைத்தேய வாழ்வியல் கொள்கைகள், கல்வி என்பன மிஷனரிகளால் அறிமுகம் செய்யப்பட்டன. நாவலர் போன்றவர்கள் திண்ணைப் பள்ளிகளுக்கும் சைவத்தமிழ், ஆங்கில பாடசாலைகளுக்கும் முதன்மை கொடுத்தனர். யாழ்ப்பாண சைவத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலை மறுசீரமைப்புச் செய்தனர். மூடத்தனங்களை நிராகரித்தனர்.

மிஷனரிகள் ஆண்கள் பாடசாலைகள், கலவன் பாடசாலைகள் என்பவற்றையும் பின் பெண்கள் பாடசாலைகளையும் அறிமுகம் செய்தனர். கிறிஸ்தவத்திற்கு மதம் மாறிய குடும்பங்களில் மெல்ல மெல்ல ஏற்பட்ட கருத்தியல் மாற்றம் பெண்கள் பாடசலைக்குச் சென்று கல்வி கற்க வழிசமைத்தது. ஆரம்பத்தில் பருவமடையும் வரை பாடசாலை செல்ல விடும் இயல்பே காணப்பட்டது. பின்பு அதிலும் மாற்றம் ஏற்பட்டு பெண்கள் மேற்கல்வி, வேலைக்குச் செல்லுதல் என ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மாற்றம் யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கள் தொடர்பாக இருந்த கருத்தியலில் ஓரளவு மாற்றத்தை ஏற்படுத்தியது. அதிலும் உயர் சாதிப் பெண் களுக்கே இவ்வாறான கல்வி வாய்ப்பு சுதந்திரம் கிடைத்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்லாப் பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்ற கருத்தியல் முனைப்புக் கொள்ளத்தொடங்கியது. ஆயினும் சில கிராமப் பகுதி களில் பெண்கல்வி தொடர்பான மூடநம்பிக்கைகள். பயம், வறுமை போன்றன பெருந்தடங்கல்களாக இருந்தன. சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆண் களுக்குச் சமமாகப் பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும். இதனால் சைவத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழல் ஆரோக்கியம் பெறும் எனக் கருதினார். இதனால் மருதனார்மடத்தில் முதற் சைவத்தமிழ்ப் பெண்கள் பாடசாலை உருவாயிற்று. கலவன் பாடசாலைகள் பலவற்றை சைவ வித்தியா விருத்திச் சங்கம் உருவாக் கிற்று. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த விந்தை மனிதர் மாய்ந்து மறைந்தார். சைவப் பெண்கள் கல்வி கற்கத் தொடங்கினர். பாரம்பரியக் கல்வியோடு ஆங்கிலக் கல்வியும் பெற்றுக்கொள்ளத் தலைப்பட்டனர். சேர். பொன். இராமநாதன் பெண்கள் கல்வி கற்பதோடு வேலை வாய்ப்புப் பெற்று தொழில் புரிய வேண்டும் எனவும் விரும்பினார். அதன் விளைவாக "சைவப் பெண்கள் ஆசிரியர் கலாசாலையை" 1926 இல் நிறுவினர். அதற்குரிய பயிற்சிப் பாடசாலையும் நிறுவப்பட்டது. சைவப் பெண்கள் சைவச் சூழலில் ஆசிரியராக உருவாக்கப்பட்டு தேசிய பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் சமுதாயப் பங்களிப்பை ஆற்ற வேண்டும் என்பதே அவரது வேணவா ஆகும். அதே போன்று சைவர்களுக்கு என சைவ வித்தியா விருத்தி சங்கத்தால் திருநெல்வேலி யில் 1928ல் "சைவாசிரியர் கலாசாலை" நிறுவப்பட்டது.

### 1.2.3 அம்மையாரின் சிறுபராயம்

இவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்த போதும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பெண்கள் பெண்களுக்குரிய விழிப்புணர்ச்சியை, தனிமனித சுதந்திரத்தைப் பெற்றிருக்கவில்லை என்றே கூற வேண்டும். இளவயதுத் திருமணம், குடும்பம், சீதனம், ஒழுக்கம் சார்ந்த எண்ணங்கள் மற்றும் மூட நம்பிக்கைகள் பெண்களைச் சமூகத்தில் இரண்டாம் மக்களாகச் சுருக்கியே வைத்திருந்தது. உயர் சாதிப் பெண் களுக்கு கிடைத்த சிறு வாய்ப்புக்களும் சுதந்திரமும் கீழ் சாதிப் பெண்களுக்குக் கிடைக்கவில்லை. இத்தகைய சூழலில் தான் தங்கம்மா அப்பாக்குட்டியின் வருகை நிகழ்கின்றது. 1925இல் ஜனவரி 7ஆம் திகதி செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பிறந்தார். சுந்தர் அப்பாக்குட்டி தையற்பிள்ளை அவர்களது அன்பு மகளான அவர் மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை மல்லாகம் விசாலட்சி வித்தியாசாலையிலும் அளவெட்டி சதானந்த வித்தியாலயத்திலும் பெற்றார்.

"ஸ்ரீ துர்க்காம்பாளை பூரண சரணாகதி அடைந்த சிறுமி தங்கம்மா கல்வியில் படிப்படியாக மேதையானார், தங்கம் பொன்னிறம் தங்கம்மாவும் பொன்னிறம் தோல் மட்டுமல்ல குணம் போன்ற பண்புகளும் பொன்னேயாகும்."
எனச் சிறுமி தங்கம்மாவின் சிறப்புக்களை எடுத்துரைப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலேயே பேச்சு, நாடகம், பாவோதல் முதலானவற்றில் ஈடுபாடும் போட்டிகளில் வெற்றிகளை ஈட்டுபவராகவும் விளங்கினார். நான்கு வயதிலேயே திருப்புகழ் பாடும் திறமும் பெற்றிருந்தார். 1939 இல் கனிஷ்ட தராதரப்பத்திர அரசாங்கப் பரீட்சையில் முதற் சித்தியும். 1940இல் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியும் அடைந்தார். அதே வேளை இக்காலத்தில் (1940) சமய தீட்சையும் பெற்றார். 1941இல் பிரவேச பண்டித பரீட்சையில் சித்தி அடைந்த தோடு இராமநாதன் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து கொள் கிறார். அங்கே திருமுறை ஓதல், புராணபடனம், சொற்பொழிவு முதலான தனக்கு உகந்த விடயங்களைப் பொறுப்பெடுத்து சிறப்புற நடாத்தி வந்தார். கலா சாலைப் பயிற்சி முடிவடைந்த பின்பு 1945இல் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகத் தற்காலிக நியமனம் பெறுகிறார். வீட்டுக் குள்ளே பெண்கள் முடங்கிக் கிடந்த காலகட்டத்தில் தற்றுணிவோடு கல்வி கற்று சிறப்புச் சித்தியெய்தி தான் முன் பின் அறிந்திராத மலையகம், கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களுக்குச் சென்று பணிபுரியும் புதுமைப் பெண்ணாக அவர் விளங்கினார்.

### 1.2.4 ஆசிரிய வாண்மை

1946இல் மட்டக்களப்பு சென்ற் சிசீலியா ஆங்கிலப் பாடசாலையில் தமிழாசிரி யராக நியமனம் பெறுகிறார். மட்டக்களப்பில் சைவ சமயப் போட்டிகளை நடாத்தும் குழுவில் உபசெயலாளராகவும் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் திருமுறை வகுப்பு நடாத்துபவராகவும் பணி பல புரிந்தார்.

1949இல் கொழும்பு பாத்திமா தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கொண்டார். இக்காலத்தில் இவரின் தோற்றப் பொலிவை.

"எனது ஆசிரியர் என்று இங்கு கூறும் போது தங்கம்மா அப்பாக்குட்டி அவர் களின் அழகிய இளமைத் தோற்றந் தான் இப்போது என் கண்ணெதிரே நிழலாடுகின்றது. அழகிய சிவந்த முகம், கடல் அலை போன்ற நெளிநெளியான கூந்தலும் உடலுக்கேற்ற அளவான உயரமும் கொண்ட ஒரு இளவயது ஆசிரி யர்.... வாள் போன்ற கூரிய மூக்கு. அதிலே நட்சத்திரம் போல் பளபளக்கும் வெள்ளைக் கற்கள் பதித்த அழகிய மூக்குத்தி, நெற்றியிலே பளிச்சிடும் திலகம்... மற்றவர்கள் கண்களைக் கவரக்கூடிய கருமையான நிறங்களில் ஆடையணிவதை நாம் ஒரு நாளும் கண்டதில்லை."

எனப்பலவாறு திருமதி. எஸ். என். எம். பதூர்பீன் அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

அம்மையாரின் ஆசிரியத்துவம், ஆளுமை என்பன விதந்துரைக்கத்தக்கன. கடமையுணர்வுடனும் சமுதாய உணர்வுடனும் கடமையாற்றியதால் தான் அம்மையாரிடம் படித்த எத்தனையோ மாணவர்கள் இலங்கையின் நாலா பாகங்களிலும் கடமை புரிகின்றார்கள். அன்னாரிடம் இவர்கள் படித்த எல்லாப் பாடங்களிலுமே இலகுவான எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு படிப் பினையைப் பெற்றனர். அத்தோடு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், வாழ்க்கைமுறை. அன்பு, பண்பு, பாசம், நேசம் என எல்லாவற்றையுமே மாணவர்கள் இவரிடம் பெற்றுக் கொண்டனர். இதே கல்லூரியில் கல்வி கற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பாரி முலாபர், அம்மையாரைப் பற்றி.

"கசடறக் கல்வி கற்க வைத்து
கணமே வெல்லும் நிலைக் குயர்த்தி
திடமே எமக்குத் திறனை ஈத்த
புடமே இட்ட தங்கம் போன்று
இருள் சேர் உலகின் ஒளியைக் காணா
இன்னல் தன்னில் இடறிவிழும் போது
இன்முக மாய்என் னெதிரில் தோன்றி
இனிதாய்த் துணையென எழுந்துரைத்தார்."

எனக் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதே காலத்தில் கொழும்பு விவேகானந்த சபையில் சமய வகுப்புக்களும் கொழும்பு தட்டாதெரு சிவசுப்பிரமணிய கோவிலில் திருமுறை வகுப்பும் நடாத்தினார். ஆசிரியர் பயிற்சிக்கென்று தொழிலில் நிரந்தரமாகி திருமண பந்தத்துள் அடைந்து தம் ஆளுமைகளை இழந்து அல்லது மறந்து குடும்பம் - குழந்தை எனும் அன்பு சாகரத்துள் மூழ்கிப் போதலே அக்கால படித்த பெண்களின் இயல்பாக இருந்தது. அம்மையாரின் இளமை வாழ்வில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் திருமணம் செய்வதைத் தடுத்தன. குடும்பப் பொறுப்பும் சேர்ந்து கொண்டது. வறுமையால் பள்ளிக் கல்விக்கு மேல் கற்றலில் ஈடுபட முடியாது ஆசிரியத் தொழிலுக்கு வந்தார். இங்கு ஆசிரியராக இருந்த காலகட்டத்தில் **(1952-1953)** பாலபண்டித பரீட்சையிலும் பண்டித பரீட்சையிலும் சித்தியடைந்தார். இக்காலகட்டத்தில் ஈழத்துப் பிரபந்தங்கள் பற்றிய இவரின் ஆராய்ச்சி ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

முஸ்லீம் சமூகத்தில் அமைந்துள்ள பாத்திமா பெண்கள் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தபடி கொழும்பு மாநகரின் பலபகுதிகளிலும் சைவப் பணி புரிந்த அவரின் திறன் இரண்டையும் ஒன்றாக சமாந்தரமாக அணுகும்திறன் அம்மையாருக்கு மட்டும் உரித்தானது. சாதி மத பேதமின்றி சேவை மனப்பான்மையுடனும் கடமையுணர்வுடனும் கற்பிக்கும் கல்வி என்றும் பலன் தரக் கூடியது. என்பதனை ஆதாரப்படுத்தி வாழ்ந்தவர் அம்மையார் எனில் மிகையில்லை. இக்காலகட்டங்களில் ஏற்பட்ட அனுபவம் தான் அம்மையாரைப் பொது வாழ்விற்கு உந்தித்தள்ளிற்று. கிறிஸ்தவ அருட்சகோதரிகளின் தியாகம், நேரம் தவறா இயல்பு, அருட்பணி என்பனவும் இஸ்லாமியப் பெண்களின் கலாசார உணர்வு என்பவை அம்மையாரைக் கவர்ந்தன. அதே வேளை சமூகத்தின் பெண்களின் நிலை பற்றிய தெளிவும் ஏற்பட்டது. இனம், மொழி, சமயம், ஜாதி, என்பவற்றிக்கு அப்பால் பெண்கள் கல்வி, அரசியல் பொருளாதாரம், கலை என யாவற்றிலும் வளர வேண்டும். அதேவேளை தத்தம் இனம் மொழி, சமயப் பாரம்பரியங்களை, பண்பாடுகளைப் பேணவேண்டும் என்றுங் கருதினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளுக்கிணங்க வானொலியில் பல்வேறு தலைப்புக்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரையாற்றினார். இது தேசிய ரீதியில் அம்மையாரைச் சைவ மக்கள் அறிவதற்கும் அவரின் சீரிய சிந்தனை, தொண்டு என்பவற்றை புரிந்து கொள்வதற்கும் உதவிற்று. 1958இல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை சைவ சித்தாந்த சமாஜம் நடாத்திய சைவப்புலவர் பரீட்சையில் சித்தி அடைந்தார். 1959இல் தன் சொந்த மாவட்டமான யாழ்ப்பாணத்தில் அளவெட்டி சதானந்த வித்தியாலயத்திற்கு மாற்றலாகி வருகை தந்தார். இக்கால கட்டத்தில் இருந்து சைவத் தமிழ்ப்பணி முழு வீச்சுடன் நடைபெறத் தொடங்கியது. சைவப்புலவர் சங்கப் பொருளாளர் பதவி அவரைத் தேடி வந்தது. அதனை ஏற்றுத் திறம்பட இயங்கினார்.

### 1.2.5 பணிகளும் பாராட்டுகளும்

1961 இல் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் திருப்பணிச்சபை அங்கத்தவராக இணைந்தமை அவரது வாழ்வின் முக்கிய நிகழ்வாகும். பிற்காலத்தில் துர்க்கா துரந்தரியாக அவர் போற்றப்படக் காரணமான நாளாக இந்நாளைக் குறிப்பிடலாம். இக் காலத்திலிருந்து ஆலயத் திருப்பணி மற்றும் மல்லாகத்தில் பாலபண்டித, பண்டித வகுப்புக்கள், தமிழிலக்கிய வகுப்புக்கள் என்பவற்றை நடாத்தத் தொடங்கினார். 1964இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார்.

தெல்லிப்பழை துர்க்காதேவியின் மகா கும்பாபிஷேகம் 1965 இல் நடை பெற்றது. அதற்கு அடுத்த வருடம் தேவஸ்தான தனாதிகாரியாக நியமனம் பெற்று செயற்படத் தொடங்கினார். இலங்கையின் பலபாகங்களிலும் உள்ள சைவாலயங்களிலும் பொது இடங்களிலும் சைவத்தமிழ் வளர்ச்சியின் பொருட்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். குறிப்பாக தேவாரத் திருப்பதிகம் பாடப் பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வர ஆலயங்களில் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தி சைவசமய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார்.

1965இல் தமிழ் நாட்டிற்குச் சென்ற அம்மையார், சிதம்பரத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் சொற்பொழிவாற்றினார். 1966இல் மதுரை ஆதீனம் "செஞ்சொற் செம்மணி" என்னும் பட்டத்தை அம்மையாருக்கு வழங்கிக் கௌரவித்தது. 1969ஆம் ஆண்டு தருமபுர ஆதீன முதல்வர் தலைமையில் அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடாத்திய பெரியபுராண விழாவில் இவர் சிறப்புச் சொற்பொழிவாற்றியமை இவரின் புலமைத்துவத்திற்கும் சிறந்த சொற்பெருக்குக்கும் சிறந்த கௌரவமெனலாம். சிவபூமியாம் இலங்கையின் வடபால் அமைந்த ஈழத்துச் சிதம்பரம் என வர்ணிக்கப்படுகின்ற காரைநகர் சிவன் கோவிலின் நிர்வாகத்தினர் அம்மையாரின் புலமைத்துவத்தையும் பணியையும் பாராட்டித் தங்கப் பதக்கம் சூட்டி, பொன்னாடை போர்த்தி, "சிவத்தமிழ்ச் செல்வி" என்னும் பட்டமும் அளித்து கௌரவித்தனர். இதற்கு முன்னும் பின்னும் பல பட்டங்கள் பெற்றிருப்பினும் இது அவரின் பெயரோடு இணைந்ததாய் இன்றுவரை நின்றுநிலவுவதாய் அமைந்தது. நாவலர் எனின் ஆறுமுகநாவலர், பண்டிதமணி எனின் சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி எனின் பெரியதம்பிப்பிள்ளை என்பது போல் சிவத்தமிழ்ச் செல்வி எனின் தங்கம்மா அப்பாக்குட்டி என்பதாயிற்று.

1971ஆம் ஆண்டில் தமிழ் பேசும் நல்லுள்ளங்கள் வாழ்பதிகளான சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கான ஆன்மீகப் பயணத்தை அவர் மேற்கொண்டார். குறிப்பாக மலேசிய நாட்டில் "27" இடங்களில் சொற்பொழிவாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாட்டு மக்கள் இவரின் புலமைத்துவத்தைப் பாராட்டித் "திருவாசகக் கொண்டல்" என்ற பட்டமும் வழங்கிப் பொன்னாடை அணிவித்து கௌர வித்தனர். மீளவும் 1972ஆம் ஆண்டில் மலேசியாவிற்குப் பயணம் செய்து தன் ஆன்மீகப் பணியைப் புரிந்தார்.

சைவத்தின் தாய்த்திரு நாடாம் இந்தியாவின் திருவிடைமருதூரில் 1973ஆம் ஆண்டில் நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கினார். 1974ஆம் ஆண்டில் மீளவும் மலேசியா, சிங்கப்பூர்ப் பயணம் இடம்பெற்றது. அம்மையார் முன்பு அங்காற்றிய பத்துச் சொற்பொழிவுகளை நூலாக்கி "பத்துச் சொற்பொழிவுகள்" எனும் தலைப்பில் கோலாலம்பூர் கலாமண்டபத்தில் வெளியிடப்பட்டது. அந்நூல் இன்று மீள்பதிப்பும் கண்டுள்ளது. இதே காலப் பகுதியில் அகில இலங்கை இந்து மாமன்றம் இவரிற்கு "சிவஞான வித்தகர்" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் காலத்தால் அழியாததும் துர்க்கையின் அருட்கடாட்சத்திற்கும் உரித்தான "துர்க்கா துரந்தரி" எனும் பட்டத்தைச் சூட்டி பெருமிதம் அடைந் தது. இவ்வாறான கௌரவங்களை காலங்காலமாக பல நிறுவனங்கள். மன்றங் கள், ஆலயங்கள் என்பன அம்மையாருக்கு வழங்கி வந்துள்ளன.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் 1976ஆம் ஆண்டு கொழும்பு இராமகிருஷ்ண மிசனில் "கந்தபுராணச் சொற்பொழிவு" எனும் நூல் வெளியிடப் பட்டது. "யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம்" எனப் பண்டிதமணி போற்றி நின்றார். யாழ்ப்பாணத்தில் கற்றவரும் மற்றவரும் உள்ளம் கசிந்துருகிப் பாடிப்பரவும் நூல் கந்தபுராணம். அப்புராண காவியத்தை தன் சொற்பெருக்கால் அம்மையார் மக்களுக்கு அழகுற எடுத்துரைத்தார். அந்நன் மணிகளின் கோவையாக இது அமைந்தது. இந்நூலிற்கு சாகித்திய மண்டலப் பரிசும் கிடைத்தது. இதே ஆண்டில் ஆசிரியர் சேவையிலிருந்து இவர் இளைப் பாறுகின்றார். சமூக சேவையிலும் தேவியைப் பணிவதிலும் தன்னை முழுமை யாக ஈடுபடுத்துகின்றார். 1977 இல் இலங்கை இந்து சமய பாட ஆலோசனைச் சபையிலும் அங்கத்துவம் பெறுகின்றார். இதே ஆண்டில் தமிழக சிவகங்கை சைவசித்தாந்த மாநாட்டிலும் திருச்சி சாரதா மகளிர் மன்றத்திலும் உரையாற்றி னார். மலேசியாவிற்கு நான்காவது தடவையாகப் பயணம் செய்து கோலாலம் பூர் மாதர் மன்றம், தமிழ்ச் சங்கம் என்பவற்றில் உரையாற்றி தமிழ் நாட்டிற்குச் சென்று கும்பகோணம் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட இரண்டாம் நாள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். ஆரணியில் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டில் பங்கு பற்றியதோடு அங்கு நடைபெற்ற மங்கையர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அம்மையாரின் சைவ சித்தாந்த அறிவிற்கும் மங்கையருள் மாணிக்கமாய்த் திகழ்ந்ததற்கும் சிறந்த எடுத்துக் காட்டாக இந்நிகழ்வு அமைந்தது. திருக்கோவிலூரில் ஞானாந்த ஆராதனையில் உரையாற்றிய அம்மையாருக்கு "ஸ்ரீஹரி தாஸ் கிரி" அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு சென்னை இராச இராஜேஸ்வரி மண்டபத்தில் துர்க்கா மந்திர உபாசனைக்கு உரிய வாசக தீட்சையையும் வழங்கினார்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் 1977.01.20 ஆம் திகதியிலிருந்து இவரைத் தலைவராகக் கொண்டு இயங்கத் தொடங்கியது. ஆலயத் தேர்த்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருப்பணியும் ஆரம்பமாயிற்று. 1978 ஆம் ஆண்டில் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. 1980 இல் அம்மையார் துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணியைத் தொடங்கி அதற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தையும் சிறப்புறச் செய்து 1981ஆம் ஆண்டு கும்பாபிஷேகமும் செய்தார். துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மகா சண்டி ஹோமம் நிகழ்த்தினார். இதுவே யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற முதலாவது மகாசண்டி ஹோமம் ஆகும். தொட்ட காரியத்தைத் துலங்கச் செய்யும் திருவருட் செல்வியாக அவர் திகழ்ந்தார். இவ்வாண்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் முன்றலில் சைவ சித்தாந்த மாநாடு மூன்று நாட்கள் நடைபெற்றன. சர்வதேச ரீதியில் பல சைவ அறிஞர்களும் உள்ளூர் அறிஞர்களும் பங்குபற்றிய இம்மாநாடு சைவ மக்களிடையே சமயம் சார்ந்த பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அத்தோடு இம்மாநாடு அன்றைய பத்திரிகைகளின் முக்கிய செய்தியாயிற்று.

1982.02.03 அன்று சைவப் பெண் சிறார்களுக்கு இல்லமமைக்கும் பணியைத் தொடங்கினார். இவ்வாண்டில் துர்க்காதேவி ஆலயத்திற்கான "துர்க்கா புஷ்கரணி" எனும் தீர்த்தக் குளம் அமைக்கும் திருப்பணியையும் நிறை வேற்றினார். சமாதான நீதிவானாகவும் சத்தியப்பிரமாணம் செய்து மக்களுக்கு அல்லன களைந்து, நல்லன புரிந்தார். பெரியபுராண வசன நூல் வெளியீடும் இவ்வாண்டே நடைபெற்றது. பண்டிதர் மு. கந்தையாவின் "அரியவும் பெரிய வும்," சைவபோதம் - முதலாம் புத்தகம் போன்ற நூல்கள் ஆலயத்தால் பதிப் பிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

சமூகத்தின் பல்வேறு தளங்களில் சமய, சமூகப் பணிகளைப் புரிந்த அம்மை யாரின் தலைமைத்துவத்தாலும் பேச்சாலும், எழுத்தாலும் யாழ்ப்பாணம் தொட்டு மலேசியா, சிங்கப்பூர், இந்தியா வரை இவரின் புகழ் பரவியிருந்தது. இவரை மதித்தும் நம்பியும் பலர் யாழ்ப்பாணத்துச் சமூக அசைவியக்கத்தில் பல்வேறு பணிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான, நிறுவனங்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பணத்தையும், பொருட்களையும் இவரிடம் வழங்கினர். இவர் அதனை சரிவரப் பயன்படுத்துவார் என நம்பினர். நம்பினோர் கைவிடப்படார் என்பதை அம்மையாரின் செயற்பாடுகள் நிரூபணம் செய்தன. கணக்கறிக்கைகள் அதற்குச் சான்றாகின.

"அன்னை துர்க்கைதன் ஆலயத் தேற்றிய
　　அரிய தூண்டா மணிவிளக் காயினை
நின்னு ழைப்பினால் தொண்டினால் நேர்மையால்
　　நிமிர்ந்த திந்தத் தமிழினம். தாயென
உன்னை ஏற்றுத் தலைமையைத் தந்தது
　　உச்சிமேல் வைத்துப் போற்றி உவந்து
பொன் மனத்தினாய் போயினை என்பது
　　பொய் எம்நெஞ்சினில் என்றும் இருக்கிறாய்"

என்னும் சோ. பத்மநாதனின் கவிதை வரிகள் தமிழ்ச் சமூகத்தின் தலைவியாய் அம்மையார் விளங்கியமையை தமிழ்ச் சமூகத்தவரால் தலைவியாக மனதார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணப்பட்டமையைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. இவரிடம் ஒப்படைக் கப்பட்ட செயல்களும் இவரால் ஆரம்பிக்கப்பட்ட விடயங்களும் சிறப்புற நடைபெற்றன.

இவ்வாறான பல்வேறு பணிகளை ஆற்றி வந்த அம்மையாருக்கு **1985. 01. 07** ஆம் திகதி அன்று அகவை அறுபது ஆயிற்று. இவரின் பணிகளைப் பாராட்டி மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன. இவருடைய வரலாற்றை இலகு மொழிநடையில் கூறுகின்றதும் திரு.த. சண்முகசுந்தரம் அவர்களால் எழுதப்பட்டதுமான நூலே "சிவத் தமிழ்ச் செல்வம்" ஆகும். அம்மையாருக்கு பலதரப்பட்டோரால் வழங்கப் பட்ட ஆசிகள் வாழ்த்துக்கள் என்பவற்றோடு அவரின் ஆக்கங்களையும் இணைத்து "சிவத்தமிழ் இன்பம்" எனும் நூலை மணிவிழாச் சபை வெளி யிட்டது. இம்மணிவிழாச் சபையால் ஈழத்து, தமிழக அறிஞர்களின் ஆக்கங் களைத் தொகுத்து வெளியிடப்பட்ட ஆராய்ச்சி நூலே "சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்" எனும் நூலாகும். **1987**ஆம் ஆண்டு பிரித்தானியரின் தலை நகரான லண்டனுக்குப் பயணமாகி, அங்கு சைவமும் தமிழும் தழைக்கப் பல சொற் பொழிவுகள் ஆற்றினார். "இலண்டனில் ஏழு வாரம்" எனும் நூலும் வெளி யிடப்பட்டது.

அம்மையாரின் "பிறந்த நாள் அறநிதியம்" **1990**ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு அறப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஏழை எளியவர்களுக்கும் கற்கும் திறன் மிகுந்த மாணவர்களுக்கும், நற்பணிபுரியும் நிறுவனங்களுக்கும் இந்நிதியம் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. நாட்டின் சிறந்த கலைஞர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். இப்பணி இன்று வரை தொடர்கின்றது.

**1991**ஆம் ஆண்டில் இலங்கை அரசு இவருக்கு "கலாசூரி" பட்டத்தை வழங்கி கௌரவித்தது. ஈழத்தினைச் சூழ்ந்த போர் மேகம் தமிழ் பேசும் மக்களின் வாழ்வை, பொருளை, தொல்வரலாற்றுச் சின்னங்களை, ஆலயங்களை என யாவற்றையும் காவு கொண்டது. **1992**இல் அம்மையாரின் பிறந்த நாளன்று "வாழும் வழி" எனும் அவரெழுதிய நூல் வெளியிடப்பட்டது. இந்நூலின் சிறப்பினை.

"வாழும் வழியெனும் நூலை இயற்றினார்
மானுடப் பிறப்பின் மேதகவ தனையும்
புனிதப் பொருளாம் தருமம் தன்னையும்
உழைப்பின் உயர்வையும் ஈகையின் பயனையும்
அன்பின் பெருக்கையும் பண்பின் நலனையும்
நன்றியின் சிறப்பையும் நற்றமிழ் உயர்வையும்
விளக்கிக் காட்டும் விளக்காம் நூலையும்
வையம் செழிக்க வழங்கினார் இனிதே"

என ம. பார்வதிநாதசிவம் அவர்கள் உரைத்து நிற்கின்றார். இந்நூல் யுத்த சூழல் பொருளாதாரத் தடை. பணத்திற்கும் பொருளுக்கும் ஏங்கும் நிலை என்ற அபத்தச் சூழலில் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுகின்றது. தீயதின் வழிபோகவிடாது தடுக்கும் கருத்தியல்களோடு இந்நூல் காலத்தின் தேவை யுணர்ந்து வெளியிடப்பட்டதாகவே கருத வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் அம்மையார் மகளிர் இல்லச் சிறார்களோடு 1992ஆம் ஆண்டு தெல்லிப்பழையிலிருந்து இடம்பெயர்ந்து. இராமநாதன் கல்லூரியில் தங்கினார். 1995ஆம் ஆண்டு சர்வதேசமே அதிர்ச்சியடையும் வகையில் ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வு யாவரும் அறிந்தது. "வடக்கை குண்டு மழைகளும் கொடும் யுத்தமும் உலுக்கிக் கலக்கிய போதும் தான்வளர்த்து வரும் பிள்ளைகளை உயிரிலும் மேலாக நினைத்துத் தன் உயிரை துச்சமென மதித்துக் காப்பாற்றினார். பல இடங்களுக்கும் இடம் பெயர்ந்து அவர்களை வாழ வைக்க நேரிட்டபோதும் மனத்துணிவுடன் செயலாற்றிய துணிவு மிக்க பெருமாட்டி அவர் எனத் திரு. கந்தையா நீலகண்டன் கூறியுள்ளமை அம்மையாரின் நெஞ்சுறுதிக்கும் நேர்மைத் திறமைக்கும் தக்கசான்றாகும். அச்சூழலில் கூட அம்மையாரின் அறப்பணிகள் சோர்ந்து விடவில்லை. இடம்பெயர்ந்து அல்லற்பட்ட மக்களுக்கு பணமும் உணவும் கொடுத்து தம்மாலான உதவிகளைச் செய்தார். அம்மையார் செய்தவையோ காலத்தாற் செய்த பேருதவி என்பதை யாவரும் அறிவர்.

தொண்ணூற்றாறுகளில் மீளவும் யாழ்ப்பாணம் வந்து இராமநாதன் கல்லூரியில் மகளிர் இல்லச் சிறார்களுடன் தங்கி அறப்பணிகளையும் சமயப் பணிகளையும் தொடர்ந்தார். 1997ஆம் மீண்டும் தெல்லிப்பழை செல்லக் கூடிய நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளைச் செய்து மகா கும்பாபிஷேகம் 07.09.1997 அன்று இவரது தலைமையில் நடைபெற்றது. அம்மையாரின் பவளவிழாவை முன்னிட்டு "சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்" புதிதாகக் கட்டித் திறந்து வைக்கப்பட்டது. இவரது பணிகளைக் கௌரவிக்கும் வகையிலும் வாசிப்பினை ஊக்கப்படுத்தும் வகையிலும் 2002ஆம் ஆண்டு "சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம்" ஆலயச் சூழலில் திறந்து வைக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள ஹவாய் சைவ ஆதீனம் "உலக ஆன்மீக மறுமலர்ச்சியாளர்" என்னும் சர்வதேச விருதினை அம்மையாருக்கு வழங்கிக் கௌரவித்தது. நல்லூரில் கலையும், இலக்கியமும் வளர்க்கவும் அன்னதானப் பணி புரியவும் என்று ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தை 1998ஆம் ஆண்டு தோற்றுவித்தார்.

இவ்வாறு பல சமய சமூகப் பணிகளைப் புரிந்து வரும் ஈழத்துத் தமிழ் பெண் களின் ஆதர்சனமாகத் திகழ்கின்றவரான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பணிகளை மனதிற் கொண்டு யாழ் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியதனூடாகத் தன்னைப் பெருமைப் படுத்திக் கொண்டது. இந்நிகழ்வை,

"எங்கள் சமூகத்திலே ஒரு சாதாரண ஆசிரியராய் பணியாற்றத் தொடங்கிய ஒருவர் கல்வி கேள்விகளிலே வல்லவராகவும் ஆலயப் பணியும் சமூகப் பணியும் இணைத்து உலகளாவிய ரீதியில் புகழ் பெற்றவராகவும் தனக்குப் பின்னே இப்பணியைச் செய்ய ஒரு பரம்பரையையே உருவாக்கியவராகவும் சமயத் தொண்டுக்கும் சமூகத் தொண்டுக்கும் சைவ இலக்கிய சாஸ்திர சொற்பொழிவுத் தொண்டுக்கும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவராகவும் விளங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது."

என அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளரான (2010ம் ஆண்டு) திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் கூறியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

இவ்வாறான பல சைவத் தமிழ்ப் பணிகளைப் புரிந்து வருகின்ற பேரது 2008.06.15ஆம் திகதியன்று இவ்வுலக வாழ்வினைத் துறந்து இறைகதி அடைந்தார். அம்மையாரின் மரணம் உலக சைவத் தமிழர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத, வெறுமையைத் தருகின்ற ஒன்றாகவே இருந்தது. அவரின் இடம், நிரப்ப முடியாத வெற்றிடமாகவே இன்றும் உள்ளது.

இவரது அஸ்தி ஹவாய் ஆதீன தவத்திரு தொண்டுநாதன் சுவாமிகளால் காசியில் கரைக்கப்பட்டது. ஒன்பது கலசங்களில் பெறப்பட்ட மீதி அஸ்தியை சிவத் தமிழ்ச் செல்வி நவகோண நிலையத்தில் வைத்துள்ளனர்.

அம்மையாரின் வாழ்வு தனக்கானதல்ல; பிறருக்கானது; தமிழுக்கும் சைவத் திற்குமானது. அவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். அம்மையார் சிவத்தமிழ்ச் செல்வியாகவும், துர்க்கா துரந்தரியாகவும் தெய்வத் திருமகளாகவும் எம்மத்தியில் வாழ்ந்து மறைந்தார். அவரின் வாழ்வு ஈழத்து சைவத் தமிழ்ப் பெண்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

**நன்றி:** இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் ஓர் ஆய்வு, வெளியீடு: அகில இலங்கை இந்து மாமன்றம், வைரவிழா 07.03.2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ் ஆராய்ச்சிக்
கட்டுரைகளிலிருந்து சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரப் பண்ணிசை

**இசையரசு**
**எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்**
*பேராசிரியர்,*
*அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.*

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகியவை பண்டைத் தமிழ்நாட்டின் பாகுபாடுகளாகும். குறவர், ஆயர், எயினர், உழவர், பரதவர் எனப்படும் அவ்வந் நில மக்கள் நிலத்திற்கேற்றவாறு தொழிலையும் பழக்கவழக்கங்களையும் மேற் கொண்டு வாழ்ந்தனர். உணவு வகைகளும் நிலத்திற்கேற்றவாறு வேறுபட் டிருந்தன. மனவுணர்ச்சியை இனியமுறையில் வெளிப்படுத்தும் இசையும் தோன்றலாயிற்று. இதற்குத் துணைக் கருவிகளும் பல தோன்றத் தொடங்கின. குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் குறிஞ்சிப்பண்ணைப் பாடி மகிழ்ந்தனர். முல்லை நிலத்து வாழ்ந்த ஆயர் தாம் பாடிய இசைக்கு முல்லைப்பண் அல்லது சாதாரிப்பண் எனப் பெயரிட்டனர். மருத நிலத்துப் பாடி மகிழ்ந்தோர் பண் மருதப்பண்ணே. செவ்வழிப்பண் அல்லது நெய்தற்பண்ணைப் பாடி இன்புறு கின்றார்கள், நெய்தல் நிலத்தார். பாலை நிலத்தோர்க்குரியதாக அமைந்தது பாலைப்பண். இவ்வாறு ஐவகை நிலத்தாரும், தம் மனவுணர்ச்சியைத் தாம் வாழ்ந்த நிலத்திற்கேற்றவாறு வெளிப்படுத்தி ஐவகைப் பண்களைக் கண்டார்கள்.

மனிதன் மலையையும், கடலையும், மற்றவற்றையும் சார்ந்து வாழ்ந்த காலம் மிகப் பழைய காலமென்பதை நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தமிழ்மக்கள் வாழ்ந்த காலத்திற் கண்ட பண்கள் தாம் குறிஞ்சிப்பண், பாலைப் பண், மருதப்பண், முல்லைப்பண், நெய்தல்பண் எனப்படுவன. இவ்வைந்துமே ஆதிப்பண்களாகும். இவற்றினின்றும் கிளைத்தவையே இன்று நாங்காணுந் தமிழ்ப் பண்களனைத்தும். இந்தப் பண்ணினின்றுந் தோன்றியவை இவை இவையென்று இன்று நம்மால் அறியக்கூடவில்லை. அந்தப் பாகுபாடு நமக்குத் தெரியுமாயின் பண்ணறிந்து பாடுதல் எளிதாக முடியும். பத்துப்பாட்டு முதலிய சங்கநூல்களிலே பேசப்படும் பண்களைப் பெயரளவிலேதான் அறிகின்றோம். அவற்றைப் பாடும் முறைமையும் அவற்றிற்குரிய பாட்டுக்களையும் நம்மால் அறியமுடியவில்லை. வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி முதலியன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிப்பண்ணின் வகையோ வென்று கருதவேண்டியிருக்கிறது. இவ்வகையில் இசைவாணர்களின் ஆராய்ச்சியும் உழைப்பும் மிகுதியும் தேவைப்படுகின்றது.

பண்களைத் தோற்றுவித்தது போலவே ஐவகை நிலத்து வாழ்ந்தோரும் இசைக்கருவிகளையும் தோற்றுவித்தார்கள். குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் (யாம) யாழினையும், தொண்டகப் பறையினையும் கண்டார்கள். முல்லை நிலத்தோர் முல்லையாழினையும், ஏறுகோட் பறையினையும் மேற்கொண்டார்கள். மருதயாழும், மணமுழவும் மருத நிலத்திற்குரியவாயின. விளரியாழினையும், மீன்கோட்பறையினையும் நெய்தல் நிலத்தோர் கொண்டார்கள், பாலை நிலத்தோர் பாலையாழினையும், நிறைகோட்பறையினையும் பெற்றார்கள். இவையே ஆதிகால யாழ்வகைகளும் பறைவகைகளுமாகும். இவற்றினின்றுங் கிளைத்தெழுந்து வளர்ந்தனவே இன்று நாம் காணும் இசைக்கருவிகளனைத்தும். இவை கண்டதுமின்றிப் பண்கள் பாடப்படுதற்குரிய காலத்தையும் அவர்கள் கண்டறிந்தார்கள். பண்பாடுவதற்குரிய காலத்தையும் அவர்கள் கண்டறிந்தார் கள். குறிஞ்சிப்பண்பாடுவதற்குரிய நேரம் யாமம் என்பதும், பாலைப்பண் பாடுவதற்குரிய நேரம் நண்பகல் என்பதும், சாதாரிப் பண்பாடுவதற்குரிய காலம் மாலை என்பதும், விளரிப்பண் பாடுவதற்குரிய காலம் ஏற்பாடு என்பதும், மருதப்பண் பாடுவதற்குரிய நேரம் விடியல் என்பதும் அவர்கள் கண்டனவே.

இவ்வாறு பண்களைக் கண்டு அவற்றிற்குரிய இசைக் கருவிகளுடன் உரிய காலங்களில் அவற்றைப் பாடி இசையின்பம் பெற்று மகிழ்ந்தார்கள் நம் முன்னோர்கள். இவற்றிற் பிறழ்தலின்றிப் பாடுதலையும், அவர்கள் கடனாகக் கொண்டார்கள். பத்துப் பாட்டுக்களுள் ஒன்றாகிய மலைபடு கடாத்தில் பெருங்கௌசிகனார், கூத்தன் ஒருவனை ஆற்றுப்படுத்தும் பொழுது கூறுங்கால், "அடுக்கத்துக் குறிஞ்சி பாடி" யெனவும், "மருதம் பண்ணிசையினர் கழிமின்" எனவும் குறிஞ்சி நிலத்திற் குறிஞ்சிப் பண்ணையும், மருத நிலத்தில் மருதப்பண்ணையும் பாடிக்கொண்டு போகுமாறு அறிவுறுத்துவதும் இங்கு நினைவு கூர்தற்குரியதொன்றாகும். இங்ஙனம் பாடுதல் தொழிலையே தம்தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள், பாணன் பாடினியெனப்பட்டார்கள். அவர்கள் அரசர்களையும் வள்ளல்களையுமடைந்து திறல்காட்டிப் பரிசில் பெற்றனர். அரசர்களும், வள்ளல்களும் பாணர்களைப் பெரிதும் ஆதரித்தார்கள். அரசர்களுக்கும், பாணர்களுக்கும் நல்லுறவு ஏற்பட்டிருந்தது. இயற்புலவர்கள் தாம் அரசர்களைப் பற்றியோ வள்ளல்களைப் பற்றியோ பாடுவதாகவிருந்தால் பாணன் கூற்றாகவோ, பாடினி கூற்றாகவோ, பாணனை ஆற்றுப்படுத்து வதாகவோ, விறலியை ஆற்றுப்படுத்துவதாகவோ பாடும் முறையை மேற் கொண்டிருந்தார்கள். தம்மைப் பாணனாகவும், பாடினியாகவும் படைத்துக் கொண்டு பாடியதற்குரிய காரணங்கள் பண்டைப் புலவர்க்கும், பாணர்க்கும் ஏற்பட்டிருந்த நல்லுறவும் பெருமதிப்புமேயாகும். ஆகவேதான் இயற் புலவர்கள் இவ்வாறு தம்மைப் பாணராகவும், பாடினியராகவும் படைத்துக் கொண்டு செய்யுள் இயற்றினார்கள்.

இயற்றமிழின் பொற்காலம் சங்ககாலம் எனப்படும். இசைத்தமிழுக்கும் பொற்காலம் அதுவேயாதலை நாம் அறிதல் வேண்டும். முதல், இடை, கடைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்கள் முத்தமிழையும் வளர்த்தன. அகத்தியர், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க்கும் இலக்கணம் வகுத்தாரெனக் கேட்கின்றோம். இசை நூல்கள் எண்ணற்றவை தோன்றின. சங்கப்புலவர் ஔவையார் விநாயகரைப் "பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்; நீ எனக்குச் சங்கத்தமிழ் மூன்றுந் தா" வெனக் கேட்கின்றார். இசையினையும் சங்கத்தார் வளர்த்தார்கள், என்பதனை இதினின்றும் நாம் அறியலாமல்லவா? இயற்றமிழை வளர்ப்பதற்குச் சங்கம் இருந்தது போன்றே இசைத்தமிழை வளர்க்கச் சங்கம் வேறு இருந்தது என்று கூறுவாருமுண்டு. திருக்கோவையாருள் வரும் ஒரு பாட்டினை அவர்கள் மேற்கோளாகக் காட்டுவர். நினது உடல் இங்ஙனம் இளைத்துப்போகக் காரணம் என்னவெனத் தோழன் தலைவனைக் கேட்பதாக வரும், துறைப்பாட்டு அது.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தனையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி
னாய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தலை யோவன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்
கொலாம்புகுந் தெய்தியதே"

தமிழின் அகத்துறை, புறத்துறைகளை ஆய்ந்து கற்கப் புகுந்தாயோ, ஏழிசைச் சூழலையெய்தினாயோ நினது உடல் இங்ஙனம் இளைத்திருக்கக் காரணமென்ன வென்று பாங்கன் தலைவனைக் கேட்பதாக மணிவாசகனார் பாடியிருக்கின்றார். இதனுள் ஏழிசையெனக் குறிக்கப்படுவது இசையேயாகும். சூழல் எனப்படுவது சங்கமேயாகும். இயலை வளர்த்தது போன்றே இசைக்கும் தனிச் சங்கம் வைத்து வளர்த்தார்கள் பாண்டியர்கள் எனக் கூறுவார்கள்.

இக்கருத்தினை வலியுறுத்துவது போன்று காணப்படுகின்றது நளவெண்பாவிற் காணப்படும் நல்லதொரு செய்யுள். சுயம்வரம் நடைபெறுகின்றது. தமயந்திக்கு அருகிலிருந்த தோழி, அரசர்கள் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்திக் கொண்டு வருகின்றாள். பாண்டியனை அவள் அறிமுகப்படுத்தும் பொழுது: -

"ஆழிவடிவம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும் - நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய்..."

என அறிமுகப்படுத்துகின்றாள். ஏழிசை நூற் சங்கத்திருந்தான் பாண்டியன் என அறிமுகப்படுத்தும் வகையை நாம் ஆராய்தல் வேண்டும். இசைத் தமிழ் வளர்ச்சிக்குச் சங்கம் இருந்ததென்பதும், அதனையும் பாண்டியர்களே ஆதரித்தார்களென்பதும், இதிலிருந்து நாம் அறியக்கூடிய செய்திகளாகும். சிகண்டியார் என்பவர், தொல்காப்பியர் காலத்து வாழ்ந்தவர். அவரால் இயற்றப் பட்டது இசை நுணுக்கம் என்பதாகும். இந்திர காவியம், பஞ்சமரபு, செயிற்றியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இசை நூல்களும் சங்க காலத்தேதான் தோன்றின. ஏரணம் முதலிய நூல்களின் பெயரைக் கூறி அவையனைத்தும் "வாரணம் கொண்டது அந்தோ வழி வழிப் பெயருமாள்" வென்று வருந்துகின்றார் ஒரு புலவர். அவர் கூறும் நூல்களுட் பல இசை நூல்களாக இருக்கலாமெனத் தோன்றுகிறது. இயலிலும் இசையிலும் வல்ல புலவர்கள் பலர் சங்கத்திருந்தார்களென அறிகின்றோம். அவர்களால் விடப்பட்ட அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடக்கின்ற செய்யுட்களே அதற்குச் சான்றாகவிருக்கின்றன. எனவே முதல், இடை, கடைச்சங்கங்களில் முத்தமிழிலும் வல்ல புலவர்கள் ஒருங்கிருந்து முத்தமிழையும் வளர்த்தார்களென்பதும், இசைத்தமிழில் நூல்கள் எண்ணற்று எழுந்தன வென்பதும், சங்க காலம் இசைக்குப் பொற்காலம் ஆக இலங்கிற்றென்பதும் அறியப்படும்.

கடைச்சங்க காலத்தையடுத்து எழுந்தது எனக் கருதப்படும் சிலப்பதிகாரமும், முத்தமிழ்க் காப்பியமாகவே காணப்படுகின்றது. இசையாசிரியரின் அமைதி, அரங்கின் அமைதி முதலியன கூறும் அரங்கேற்று காதை இசைக்கு இலக்கணக் காதையாக அமைந்திருக்கின்றது. கானல் வரியும் ஆராய்ச்சியர் குரவையும், வாழ்த்துக் காதையும் அவ்விலக்கணங்கட்கேற்ற இலக்கியங்களாகக் காட்சியளிக்கின்றன. சிறப்பாக வரிப்பாடல்கள் நிரம்ப மேற்கொள்ளப்பட்டிருந்தன. அடிகளால் வரிப்பாட்டுக்கள் திணைநிலைவரி, கிணைநிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரியெனப் பலவகைப்படும் என்பர். அவையனைத்தும் இந்நூலுட் சிறப்பாகக் காணப்படுகின்றன.

கானல்வரி முதலியன திணைநிலைவரியின் பாற்படும். ஆற்றுவரி, ஊர்வரி முதலியன கானல்வரியின் பிரிவுகளே, இவையனைத்தையும் அடிகளார் சிறப்புறக் கையாண்டிருக்கிறார். தம் கருத்தினைக் கூறுவதை முகமுடைவரியென்பர். காவிரியை முன்னிலைப் படுத்தித் தன் கருத்தைக் கோவலன் கூறியதாக இளங்கோவடிகள் கூறுந் திறம் மகிழ்தற்குரிய தொன்றாகும்.

"திங்கள் மாலை வெண்குடையான்
        சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னை புணர்ந்தாலும்
        புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
        புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
        றறிந்தேன் வாழி காவேரி"

என்பது முகமுடைவரிக்கு எடுத்துக்காட்டாகும். சிலம்பினையடுத்தும் அதே காலத்தும் தோன்றிய நூல்களுள்ளும் இசையின் பெருமையை ஆசிரியர்கள் விளங்கியிருக்கிறார்கள்.

உதயணனுடைய வரலாற்றைக் கூறுவதாகிய பெருங்கதையென்னும் பெருநூலில் உதயணனை இசையின் வடிவமாகக் கட்டியிருக்குந்திறம் அறிந்து மகிழ்தற்குரியதாம். அஃறிணைப் பொருளாகிய யானையையும், தனது இசைத் திறத்தால் தன்வயப்படுத்தித் தனது ஏவல் செய்யுமாறு ஆக்கிக் கொண்டான் உதயணன் என்பது பெருங்கதையுள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தக்கதேவர் இயற்றிய சிந்தாமணியுள்ளும் இசைத் திறம் சிறப்பாகப் பாடப் பட்டிருக்கின்றது. காந்தருவ தத்தையார் பாடிய முறை பின்வருவோர் அனை வருக்கும் வழிகாட்டியாக இருக்குமாறு அதனுள் ஆசிரியராற் காட்டப் பட்டிருக்கின்றது.

இவ்வாறு காப்பியம் பாடிய புலவர்களனைவரும் இசைத்தமிழை வளர்த்தலும் தம் கடனெனக் கருதிப் போற்றினார்கள். இவையனைத்தும் கி. பி. மூன்றாம் அல்லது நான்காம் நூற்றாண்டுவரை இசைத்தமிழ் வளர்ந்த வரலாற்று விளக்கங்களே.

தமிழக வரலாற்றுள் (கி. பி.) நான்காம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள இடைப்பட்ட காலத்தை இருண்ட காலம் என்பர். அக்காலத்து ஆண்ட அரசர்களைப் பற்றியோ, வள்ளல்களைப் பற்றியோ, வாழ்ந்த மக்களைப் பற்றியோ யாதொன்றும் அறியப்பட்டிலது. ஆகவே அக்காலத்திய இசை வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ளவும் இயலவில்லை.

கி. பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை தெய்வீக இசை, தமிழகத்தில் தோன்றிச் செழிப்புற்றிருந்தது. இக்காலத்தின் முற்பகுதியைத் தெய்வீக இசைத் தோற்றத்தின் காலமாகவும் பிற்பகுதியை அதன் வளர்ச்சிக்குரிய காலமாகவும் கொள்ள வேண்டும். ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுவரை நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி நாளும் இன்னிசை யால் நற்றமிழ் பரப்பினார்கள். பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டுவரை சோழவரசர்கள் சிவநெறிச் செல்வரா யிருந்து தேவாரங்களை நாடுமுழுவதும் பரப்பினார்கள். இடைக்காலத்தில் தோன்றிய அடியவர்கள் அனைவரும் இன்னிசையால், இனிய தமிழைப் பரப்பி னார்கள். இன்னிசையோடு பாடல்களைப் பாடவேண்டிய சூழ்நிலை அன்றிருந்த தென அறியக்கிடக்கின்றது. இசையில் மக்கள் பெருவிருப்பமுடையவர்களாக அன்றிருந்தமையால் அதனையே கருவியாகக் கொண்டார்கள் அடியார்கள் என்று கொள்ளுதல் தகும். அவ்வாறாயின் இருண்ட காலமெனப்படும் காலத்தி லும் இசை தடையேதுமின்றி வளர்ந்து வந்தது என்று கொள்ளல் வேண்டும். மக்கள் இசையே இன்னதென்றறியாதிருந்த காரணத்தினால்தான் அதனையே கருவியாகக் கொண்டு அடியார்கள் தம் கருத்தைப் பரப்பினார்கள் என்றுங் கொள்ளல் தகும். எது எவ்வாறாயினும் மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்வது இசையென்பதையுணர்ந்து அதனைக் கருவியாகக் கொண்டார்கள் அடியவர்கள் அனைவரும் என்பது மட்டும் உறுதியாக அறியக் கிடக்கின்றது. சமணம் போன்ற பிற சமயங்களினின்றும் மக்களை விடுவிக்க அடியவர்கள் முயன்றார்களாதலின் அனைவருள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் இசையே அம்முயற்சி முற்றுப் பெறுதற்கேற்ற கருவியென்றும் அடியவர்கள் கருதியிருக்கலாம். எனவே, இயற் றமிழும் இசைத்தமிழும் அடியார்களாற் பரப்பப்பட்ட காலம் இதுவாகும் எனலாம்.

மக்களின் உள்ளத்துறும் உணர்ச்சிகளை மட்டும் வெளியிட்டு வந்த இசை, அகப்பாட்டாக மட்டும் இருந்த இசை தெய்வத்தைப் பற்றிய கருத்துக்களையும் வெளியிடுவதற்குரியதாக ஆயிற்று. அடியவர்கள் தெய்வீக இசையாக அதனை மாற்றியமைத்தார்கள். இசை வளர்ச்சியில் இக்காலம் சிறந்ததொரு காலமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தது. பாடப்படுகின்ற பொருளில், மாற்றங்கண்டார்கள் அடியவர்கள்.

காதலுணர்வைப் பற்றி மட்டும் விளங்கிய இசை, கடவுள் உணர்வையும் விளக்கும் இசையாக மாறிற்று. முன்னோர் தழுவிய முறையும் விடாது, சில விடயங்களில் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு அடியவர்கள் இன்னிசை பாடி மகிழ்ந்துமிருக்கின்றார்கள். வண்டு, கிளி முதலியவற்றைத் தாம் இறைவன்பால் தூது விடுவதாக அடியவர்கள் பாடியிருக்கும் பாடல்கள் அதற்கு எடுத்துக்காட்டாக அமையும்.

அடியவர்களனைவரும் ஓரிடத்திலிருத்தலன்றி நாடு முழுவதுமிருந்த தலங்களனைத்திற்குஞ் சென்று இறைவனை இன்னிசை பாடித் துதித்து மகிழ்ந்தனர். அடியார்கள் கூட்டம் தம்மைச் சூழ்ந்துவர ஊர்தோறுஞ் சென்று இறைவனை இன்னிசையாற் பாடி மகிழ்ந்தார்களாதலால் மக்களனைவரும் அவர்கள் நெறியிற் சேர்ந்ததன்றியும் இசையுணர்ச்சியுடையவர்களாகவும் ஆயினர். இம்முறையில் அடியவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் அனைவர்க்கும் இசையறிவு உண்டாகும் வகையிலும் பெருந்தொண்டு செய்திருக்கின்றார்கள். தேவாரப் பாடல்கள் இடைக்காலத்தில் தோன்றிய இன்னிசை மலர்களாம். "நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" எனச் சிறப்பிக்கப்பட்ட ஆசிரியர் தேவார மூவர்களில் தலைசிறந்தவராவர். சூலைநோயால் துடிப்புற்றபொழுது நாவுக்கரசர் தாம் செய்து வந்த தொண்டினைச் சொல்லுகின்றார்.

"தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"

என்று. இவர் தேவார ஆசிரியர்களிலே இரண்டாவதாக வைத்து எண்ணத் தக்கவர். தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தியும் தேவார ஆசிரியரேயாவர். இம்மூவரும் இடைக்காலத்தில் - இசைவளர்ச்சி குன்றிய காலத்தில் - இன்னிசை பாடி இசைத்தமிழை வளர்த்தார்கள். இவர்களுடைய பாடல்களிலே வரும் பண்கள் பலவாம். நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்மூரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், செவ்வழி, காந்தார பஞ்சமம், கொல்லி, சாதாரி முதலியன இவர்களுடைய பாடல்களில் பயின்று வந்திருக்கின்றன. இவையேயன்றித் திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் முதலியனவும் இருக்கின்றன. இவையனைத்தும் இன்றைய வழக்கிலுள்ள இசையுள் எப்பண்கள் ஒத்திருக்கின்றனவென்பதனையறிந்தால் அவற்றை அம்முறையோடு பாட முடியும். பண்டைத்தமிழ்ப்பண்கள் இன்று வழக்கில் இல்லாமையால் அவற்றை இன்று வழங்கும் பண்களோடே ஒப்பிட்டு அறிய வேண்டியிருக்கின்றது.

வள்ளல், இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களாலும், அவர்களின் திருமகனாராகிய உயர்திரு. இராஜா சர் முத்தையாச் செட்டியார் அவர்களாலும் தோற்றுவிக்கப் பெற்று வளர்ந்து வருகின்ற சென்னைத் தமிழ் இசைச் சங்கத்திலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இப்பெருந்தொண்டு நடைபெற்று வருகிறது. இது பாராட்டிற்குரியது. அத்தொண்டு மேலும் மேலும் வளரத் தேவாரப் பண்களின் இயல்பையுள்ள படியறிந்து அனைவரும் ஓதி மகிழும் நாள் விரைவில் வந்தெய்துமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரேயன்றி மணிவாசகனாரும் இசைக்குப் பெருந்தொண்டு, புரிந்தாரென்பதை நாம் இங்கு உணரவேண்டும். திருவெம்பாவைப் பாட்டு, அம்மானைப் பாட்டு, ஊசற்பாட்டு, குயிற் பாட்டு முதலியனவும் இசைக்கு உரிய பாட்டுக்களேயாகும். இவற்றையும் அவற்றைப் பாடுமியல்பறிந்து பாடிமகிழ்தல் நம் கடனாகும்.

சைவ அடியவர்களேயன்றி வைணவ ஆழ்வார்களும் இம்முறையை மேற் கொண்டு இறைவனைத் துதித்தனர். நம்மாழ்வார் பத்தியிலேயன்றிப் பண்களையமைத்துப் பாடுதலிலும் சிறந்தவராய் விளங்கினார்.

பழந்தமிழ்ப்பண்களும் பழைய இலக்கணத்திற்கேற்ற தாளமும் அவருடைய பாசுரங்களில் அமைந்திருப்பதை அறியலாம். வைணவப் பெரியார்கள் அதனைத் தேவகானம் எனப் பாராட்டுவர். தேவாரத்திற் காணப்படும் தக்கராகம், காந்தாரம், நட்டபாடை, இந்தளம் முதலிய பண்கள் திருவாய்மொழியிலுங் காணப்படுகின்றன. தேவாரத்திற் காணப்படாத பண்கள் சிலவும் இதனுட் காணப்படுகின்றன. அவை செருத்தி, முதிர்ந்த விந்தளம், வியந்தம், நாட்டம் முதலியனவாம்.

பாணர் குலத்திற் பிறந்து பரந்தாமனுடைய அழகைப் பாதாதி கேசமாக வருணித்து இசையின் பெருமையை எல்லோருமறியச் செய்த திருப்பாணாழ் வாரின் வரலாற்றையறியாதார் யார்?

இங்ஙனம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இடைக்காலத்தில் தோன்றிச் சைவ, வைணவ சமயங்களை வளர்த்ததோடன்றி இசையையும் வளர்த்தார்கள் என்பது இதுகாறுங் கூறியவற்றால் அறியப்படும்.

தோன்றிய இன்னிசைப் பாடல்களை நாடுமுழுதும் பரவச் செய்த பெருமை சோழர்களையே சாரும். சோழர்கள் ஆட்சியினால் தமிழகம் அடைந்த நன்மை சொல்லுந்தரத்தன்று. அது அரசியல் அமைப்பிலே பிறநாட்டாரோடு செய்த வணிகத்திலே, வீரத்திலே, கலைவளர்ச்சியிலே பிறவற்றிலே தன்னிகரற்று விளங்கிய காலம் சோழர் காலமேயாகும். மண்ணாலும் செங்கற்களாலும் அமைந்திருந்த கோவில்களைக் கருங்கற்கோவில்களாகச் செய்த பெருமை சோழர்களையே சாரும். இறைவன் உறையும் கோவிலைக் கலைகள் உறையுங் கோவிலாகச் சிற்பம், சித்திரம் ஆகியவையைச் செய்த பெருமையுஞ் சோழர்களையே சாரும். தோன்றிய சைவ வைணவ சமயங்களை எஞ்ஞான்றும் நிலைநிறுத்துவார் போன்று சிவன் கோயில்களும் திருமால் கோயில்களும் அவர்களால் நாடுமுழுவதும் கட்டுவிக்கப்பட்டன. நாள்விழாவும், ஆண்டுவிழாவுஞ் சிறப்பாக நடைபெற அவர்கள் கோவில்களுக்கு பூமிதானமுஞ் செய்தனர். சுருங்கச் சொல்வதனால், சைவ வைணவ சமயங்கள் இந்நாட்டில் நிலைபெற வழிகோலியவர்கள் சோழர்களே என்று கூறலாம்.

சிவனுக்கும், திருமாலுக்குங் கோவில்கள் எடுத்தோடு மட்டுமன்றிச் சைவ, வைணவ சமயங்களின் நூல்களையும் அவர்கள் போற்றி ஆதரித்தார்கள். மறைந்து அழிந்துபட்ட தேவார ஏடுகளைக் கண்டெடுத்தவர் யார்? திருமுறை கண்ட சோழதேவரிலிருந்து குலோத்துங்க சோழன் வரையில் வாழ்ந்த சோழ மன்னர்கள் சமயங்கட்குச் செய்த தொண்டுகளை எடுத்துரைப்பின் பெருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னோடு வேய்ந்து - சிற்றம்பலத்தைப் பொன்னம்பலமாக்கிய பெருமை யாரைச் சாரும்? முன்னும் பின்னும் இல்லாதவகையில் தஞ்சையிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும் இறைவனுக்குக் கோவில்களெடுத்த பெருமை இராசராசனையும், அவன் மகன் இராசேந்திரனையுமன்றோ சாரும்! அரசர்கள் மட்டுமல்லர்; அரசிகளும் இப்பணியிற் சிறந்திருந்தார்களென்பது அறிந்து மகிழ்தற்குரியதொன்றாம். குந்தவை போன்றவர்கள் கோவிலுக்கு அளித்த நந்தா விளக்குகள் எத்தனை? அளித்த அணிவகைகளின் மதிப்பு என்ன? எனவே சோழர்கள் குடும்பமே சமயங்களை வளர்த்த குடும்பமாகக் காட்சியளிப்பதை யறியலாம். தேவாரங்களைப் பரப்புவதற்குச் சோழர்கள் செய்த தொண்டு சொல்லுந்தரமன்று. தேவாரப்பண்களிலே சிலவற்றைப் பற்றியாவது நாம் இன்று அறிந்து கொள்கின்றோமென்றால் ஓதுவார்கள் சிலராவது இங்குமங்குமாகக் காணப்படுகின்றார்களென்றால் அவையனைத்திற்கும் காரணமாகவிருந்தவர்கள் சோழர்களே என்பதை நாமுணர வேண்டும்.

தஞ்சைப் பெரியகோவிலைக் கட்டிய சோழப் பேரரசன் இராசராசனேயாவன். அவன் சைவத்திடத்தும், தமிழிடத்தும் நிறைந்த அன்புடையவன். அவன் தஞ்சைக் கோவிலுக்கேயன்றி மற்றைய கோவில்களுக்கும் அளித்த நிலதானங்கள் அளவில. தஞ்சைப் பெரியகோவிலிலே நாள்தோறும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்ய நாற்பத்தொன்பதின்மரை நியமித்திருந்தான். அதன் பொருட்டு அவர்களுக்கு நிலதானமும் வழங்கியிருந்தான். இச்செய்தி இராசராசனுடைய கல்வெட்டுக்களிலிருந்து நாமறியக் கிடக்கின்றது.

இராசராசன் மட்டுமன்றி அவன் மகன் இராசேந்திர சோழனும் இம்முறையையே மேற்கொண்டு தேவாரப்பண்களை வளர்த்தான். அவனால் கட்டப்பட்ட கோவில் தஞ்சைப் பெரியகோவிலையொத்த கங்கை கொண்ட சோழீச்சர மாகும். அதன்கண் நாள்தோறுந் தேவாரம் ஓதப்பட்டு வந்தது. தேவாரம் ஓதுவார் இருந்து பாட மண்டபம் ஒன்று கோவிலினுள் அமைந்திருந்தான். அது தேவார மண்டபம் என வழங்கப்பட்டது.

இராசேந்திரனுடைய கல்வெட்டு ஒன்றால் இச்செய்தி அறியப்படுகின்றது. இவர்களின் பின்வந்த சோழர்களும் இம்முறையிலேயே கோவில்களிலே தேவாரம் ஓதப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

குலோத்துங்க சோழன் பெரிய புராணம் பாடக் காரணமாகவிருந்த பேரரசன். அவனுடைய தேவியர்களில் ஒருவர் ஏழிசை வல்லபியென்னும் பட்டப் பெயரையுடையவர். குலோத்துங்க சோழன் இசையிடத்துக்கொண்டிருந்த பேரன்பால் ஏழிசை வல்லபி என்னும் இசைவிருது பெற்ற மங்கையை மணந்து வாழ்ந்தான் என்று கூறுவர்.
இங்ஙனம் சோழர்கள் இன்னிசை பரவச் செய்த தொண்டுகள் எண்ணில. எனவே சோழர்களையும், சமயங்களையும் இசையையும் வளர்த்த பேரரசர்கள் எனலாம்.

ஆகவே, இடைக்காலத்தில் தோன்றியது தெய்வீக இசையே என்பதும், அதனை நாட்டில் நிலைபெறச் செய்தவர்கள் சோழர்களே என்பதும் இதுகாறும் கூறியவற்றாற் பெறப்படும். அத்தகைய தெய்வீக இன்னிசையை, தேவாரப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்களை, திருமுறைகளை வளர்க்க அனைவரும் தங்களால் ஆன தொண்டு களைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். "வாழ்க தெய்வீக இசை".

**நன்றி:** *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்*

**வெளியீடு:** *சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணி விழாச் சபை துர்க்காபுரம், தெல்லிப்பழை. 06.03.1985.*

*(மூலம்: திருவானைக் காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக மலர் 1970)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்தமும் சிவாலயங்களும்

**க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல். டி.**
*திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,*
*காஞ்சிபுரம்.*

உலகத்தில் உயர்ந்த பிறப்பு எடுத்த மக்களுக்கு விருப்பமும் துன்பக் கலப்பில் லாத, நீடும் இன்பமும் பயப்பது நல்லொழுக்கம் ஒன்றே ஆகும். ஆதலினால் மக்கள் தம் மன அமைதிக்கும் இன ஒருமைக்கும் **(Individual contentment and social harmony)** வழிவகுக்கும் சமயம் எல்லாம் நல்லொழுக்கத்தையே அடிநிலையாகக் கொண்டு அமைந்துள்ளன. தாம் அடிப்படையாகக் கொள்ளும் ஒழுக்க நெறியை உணர்த்தினவன், தம் சமயத்தை நிறுவிய மெய்யுணர்ந்த ஆசிரியனே எனக்கொள்ளும் சமயங்களும் பல. அதனை, மெய்யுணரவல்ல ஆசிரியர்க்கு முதற்கண் உணர்த்தினவன், உலக முதற்பொருளாக என்றும் உள்ள இறைவனே எனக்கொள்ளும் சமயங்களுஞ் சில. இவ்விருவகையுள், பின்னைய வகையைச் சேர்ந்ததே சைவசித்தாந்தம் என்பது. இஃது உலகு, உயிர், இறைவன் என்னும் முப்பொருள் உண்மையாகிய அறிவடிப்படையோடு கூடிய ஒழுக்கநெறி.

முதல்வகையைச் சேர்ந்த சமயங்களின் தலைவர்கள் உலக முதல்வனைப்பற்றி விவரித்துக் கூறாமையின், அவை கூறும் சாதனங்கள் தனி மகனுக்குப் பிறமக்க ளோடு உள்ள தொடர்புபற்றிய விதியும் விலக்குமாகவே அமையும். உலக முதல்வனைப் பற்றியோ, ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் உயிரைப் பற்றியோ அவை திட்டமாக ஒன்றும் கூறுவதில்லை.

இனி, இரண்டாவது வகையைச் சேர்ந்த சமயங்களை விளக்கிய தலைவர்கள் உலக முதல்வனைத் தாம் கண்டவாறும், அவன் பொருள்சேர் புகழும், உயிரின் பிறப்பிறப்புக்களும், உயிர் தனக்குப் பகையாக உள்ள பாசப்பற்றறுத்து முதற் பொருளைக் கூடுமாறும் விவரித்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. இங்ஙனம், உண்மையின் எம்மருங்கும் பற்றிய பெற்றிகளைப் பின்முன் மலையின்றித் தெளிவிக்கும் திருநெறி சைவ சித்தாந்தமே என்பது தலையாய அறிவினால் துணிவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்,
மூவர் தமிழும் முனிமொழியுங் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்னும் ஔவையார் உறுதிமொழியைக் கடைப்பிடிக்க வல்லார்க்கு மேற்கூறியவற்றின் உண்மை தெளிவாகும்.

உலகத்தைப் படைத்து நடத்தும் முதல்வன் ஒருவன் உளன்; அவன் தன் அருட்குணங்கள் பற்றிப் பல பெயர்களாலும் குறித்தற்கு உரியவன்; ஆயினும் அவனைச் சிவன் எனக் குறித்து உணர்தல் சிறப்புடையது என்பது இந்நெறியின் முதன்மையான கொள்கை. இதனால் இது சைவம் எனப்படுகிறது. இதன் அறிவியல் அடிப்படை **(The rational of the religion)** சித்தாந்தம் எனப்படும்.

சிவன் என்னும் சொல் மங்கல குணத்தினன் (பிறப்பில்லாதவன்) தூய தன்மையன், முற்றுணர்வினன், பேரின்பத்துக்குக் காரணன் என்னும் பொருள்களை ஒருங்கே குறிப்பது; தன்னை மெய்யுணர்வால் தலைப்பட்டோர்க்குப் பிற பற்றுக்களை நீக்கித் தன்வண்ணமாக்கித் தூய பேரின்பத்தில் அழுத்துவன் என்னும் கருத்தைத் தோற்றுவிப்பதாக இருத்தலின், சிவன் என்னும் பெயர் இந்நெறிக்கண் முதன்மையான மறைமொழியாக வைத்து உணர்த்தப்படுகின்றது.

நமச்சம்பவேச மயோபவேச
நமச்சங்கராயச மயஸ்கராயச
நமச்சிவாயச சிவதராயச

(உலகவின்ப காரணருக்கு வணக்கம்; துறக்க இன்ப காரணருக்கு வணக்கம்; - இம்மை இன்பத்தை அளிப்போர்க்கு வணக்கம்; மறுமை இன்பத்தை அளிப்பவருக்கு வணக்கம்:- இறவாத இன்ப வடிவினர்க்கு வணக்கம்; தன்னை அணைந்தாரை இறவாத இன்ப வடிவமாக்கும் அதிமங்கள வடிவினர்க்கு வணக்கம்) என்ற பகுதி வேதத்தின் இதய பாகமாக உள்ள யசுர் வேத ருத்ர சூக்தத்தின் உயிர்ப்பகுதி.

இந்நெறி, இறைவனது உண்மையினை அடிப்படையாக வைத்து ஒழுக்க நெறியை உணர்த்தும்; உயிரின் இயல்பை அடிப்படையாக வைத்துத் தத்துவக் கொள்கையை உணர்த்தும். "எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு" என்பது இந்நெறிக் கண் ஒழுக்கநெறி பற்றிய அடிப்படை முதல்விதி. "தம்மை உணர்ந்து தமையுடையதன் உணர்வார் எம்மை உடைமை எமை இகழார் - தம்மை உணரார் உணரார்" என்பது சிவஞானபோத நூற்பாயிர அவையடக்கம்.

இந்நெறிக்கண் கூறப்படும் ஒழுக்கம் இருவகைப்படும்; ஒன்று பொது ஒழுக்கம்; "ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம் - வழுக்கிலாத் தவம் தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத் துறவு, அடக்கம், அறவொடு அர்ச்சித்தல் ஆதி - இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணி அறங்கள்" என்றபடி, இறைவன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் **(obedience to god)**. மற்றையது சிறப்பொழுக்கம்; இறைவனது அருளாற்றலை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிய மனம்வைத்து உணர்ந்து தலைப்பட்டு, அவன் அருட்குணங்களில் தோய்ந்து, முடிவில் அவன் வண்ணமாய் ஒன்றுதற்கு முயலுதல் **(To be in touch with infinite or inner presene)** இச்சிறப்பொழுக்கமே சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காக வைத்து உணர்த்தப்படுவது.

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" *(5)*

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" *(9)*

"சார்புணர்ந்து சார் கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" *(359)*

என்னும் குறட்பாக்கள் இச்சிறப்பொழுக்கத்தைக் குறிப்பனவாதல் ஓர்ந்து உணர்ந்து கொள்,

இத்தகைய திருநெறியின் உருவக விளக்கமாக, ஆய்வுப் பயிற்சிக் கூடமாக, சிவனைத் தெளியக்கண்டு உறவுகொள்ளும் அருள் நிலைத்தானமாக அமைந்ததே சிவாலயம்.

"குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே"

பன்பது பார்பரவும் திருநாவுக்கரசர் திருமொழி.

இதில் குறிகள் என்றது சிவலிங்கம் முதலிய திருமேனிகளை. அடையாளம் என்றது அத்திருமேனிகளில் உள்ள முக்கண், சடைமுடி, கறைக் கண்டம், ஊர்தி, கொடி, பிறைமதி, மூவிலைவேல் முதலியவும், திருக்கூத்துப்போன்ற முதல்வன் செயல்களும் ஆகியன. நெறிகள் சரியை முதலியவையும் அவற்றின் கூறுபாடு களும்; நேர்மை கருதுவோர் கருதும் உருவாய் நின்று, அவர் செய்யும் வழி பாட்டை ஏற்றுக்கொண்டு எளிதின் அருள் புரிதல். ஊன்கணார்க்குப் படிம மாகவும், அந்தணர்க்கு வேள்வித்தீயினும், கிரியா யோக நெறியினர்க்குப் பஞ்சமந்திரம் சாத்திய மந்திரங்களினும், ஞானத்தால் தொழுவார்க்கு எவ் விடத்தும் எதிர்ப்பட்டு அருளுவன் முதல்வன் என்பது முன்னோர் துணிவு. இவை அனைத்தும் பற்பல வேதங்களின் உள்ளுறையாக அமைந்திருப்பினும், திருக்கோயிலுட் செல்லாமல் தடுப்பதும், சென்றும் முதல்வனை நினையாது வேறு பலவற்றை நினைப்பதும் தீவினைப் பயன் என்பது அப்பர் அடிகள் திருவுள்ளக்கிடை.

கண்டபெருமந்திரம் எனப்படும் மூவர் தமிழ் உணர்த்தும் சாதனங்கள் எட்டு. அவை குருவருள், திருநீறு, திருவெழுத்தைதந்து, திருக்கோயில், முதல்வன் திருவுரு, திருவடி, அர்ச்சனை, தொண்டு என்பன. இவற்றுள் திருக்கோயிலும், திருவுருவும் நடுவண் அமையும் முதன்மையுடையவாதல் காண்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மறை முடிவாகிய பெரியபுராணம் திருக்கோயில் முதல்வன் உறையும் அருள் நிலைத்தானம் என்பதைச் சுவைபட முதற்சருக்கத்திலே உணர்த்துகிறது;

நம்பியாரூரர் உலகியல் முறையில், மணம் வந்த புத்தூரில், மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொங்க, திருமணஞ் செய்துகொள்ள முற்படுகின்றார். அவரைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டிவந்த முதல்வன் விருத்த வேதியராய், திருவெண்ணெய் நல்லூர் அந்தணர் பேரவையில் பழஆவணங் காட்டித் தம் பக்கத்தை மெய்ப்பிக்கின்றார்.

“அருமறை நாவல் ஆதி
சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்;
இதற்கிவை என்எழுத்து”

என்பது ஆவணத்தில் உள்ள வாசகம்.

எழுதிக்கொடுத்தவர் கையெழுத்து, மேல் எழுத்து இட்டவர்கள் (சாக்ஷிகள்) எழுத்து, இவை அங்கு தேடிக் கொண்டு வரப்பெற்ற பிற ஓலைகளில் உள்ள கையெழுத்துக்களோடு ஒப்பு நோக்கி - இவை ஒக்கும்; சரியானவையே என்று அவையினர் துணிந்தனர்.

“நான்மறை முனிவ னார்க்கு, நம்பியாரூரர் தோற்றீர்”

எனத் தீர்ப்புக் கொடுத்தாகிவிட்டது. நம்பியாரூரர் விரும்பாத முடிவு ஆயினும் சட்டத்திற்குக் கட்டுப்படுகிறார். ஆவணம் முனிவர் கைக்குத் திருப்பப்பட்டது.

தீர்ப்பை நிறைவேற்றும் கட்டம்: முதன்மையான தடை வருகின்றது. ஆவணம் அங்கு வந்துள்ள விருத்த வேதியர்க்குத்தான் எழுதிக் கொடுபட்டதா என்பதில் ஐயம் ஏற்படுகிறது.

“அவர்தாமா வெண்ணெய் நல்லூர்ப்பித்தன்?”

“அருமுனி! நீமுன் காட்டும்
ஆவண மதனில் எங்கள்
பெருமைசேர் பதியே யாகப்
பேசியது; உமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு
வாழ்க்கையும் காட்டுக”

என்று அவையினர் விதிக்கின்றனர்.

ஆவணத்திற் குறிக்கப்பெற்ற பித்தன் தாமே என வேதியர் மெய்ப்பிக்க வேண்டும். **(has to establish his identity)** ஆவணம் எழுதப்பட்ட நாளிலிருந்து அன்றுவரை தாம் வாழ்ந்துவந்த, தமக்கே சொந்தமான வீட்டைக் காட்டினால்தான், நம்பி ஆரூரரைத் தடுத்து அடிமை கொள்ள முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச் சட்ட நுணுக்கத்திற்கு இடங்கொடுக்கும் சுவையான சூழ்நிலையை உண்டுபண்ணி எல்லா மக்களையும் திரட்டிய பெருமுனிவர் (விச் வாதிகோ ருத்ரோ மகர்ஷி: என்பது வேதமொழி) மேல் என்ன செய்கிறார்?

"என்னை ஒருவரும் அறியீர் ஆயின், போதும்"
என்றுரைத்து, "திருவருட்டுறையே" புக்கார்.

சிவபிரானது நீடுவாழ்க்கைக்கு உரிய மனையாவது திருக்கோயில் அன்றோ! அங்கு நியதியாகச் சென்று இறைவனை வழிபடுவது இன்றியமையாதது என்பது இறைவன் ஆணை.

நம் உடம்பில் உள்ள அறிவுப்பொறிகள் தாமே (மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை) வெளியிலிருந்து வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பவற்றைப் புத்தி, அகங்காரம் என்னும் அகக்கருவிகள் மூலம் (இப்பொறிகளை) அறியும்படி செய்ததாற்றான் அறியும்; அதுபோல, உயிர்களும், உயிர்க்குயிராய் உள்ள சிவனால் அறிவிக்கப் பெற்றபோதுதான் அறியும், காணப்படும் பேருலகமே இறைவனுக்கு உடம்பு. இறைவனை இக்காரணம்பற்றி விசுவரூபி என்கின்றன வேதங்கள்; உலகில் உள்ள சரஅசரங்களாகிய உடம்புகளெல்லாம் உறுப்புக்கள்; அவற்றில் உள்ள உயிர்களே ஞானேந்திரியங்கள் எனப்படும் அறிவுப் பொறிகள். இறைவனே உயிர்; அவனுடைய ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்திகளே அந்தக் கரணங்கள்; இப்படி இருந்து, உயிர்களுக்கு உணர்வை விளக்கி வருதலினால் அவன் உணர்வின் தமி; வாழ்முதல் எனக் குறிக்கப் பெறுகின்றான்.

"உலகமே வருவமாக யோனிகள் உறுப்பதாக
இலகுபேர் இச்சா ஞானக் கிரியைஉட கரணமாக
அலகிலா உயிர்ப்புலன்கட் கறிவினை ஆக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்."

என்பது சிவஞான சித்தித் திருவிருத்தம்.

இந்த ஆழ்ந்த உண்மையை உணர்த்தவே பஞ்சபூதலிங்கத் தலங்கள் உள்ளன. மண், புனல், அனல், வாயு, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களும் ஞாயிறு, மதி, உயிர் என்னும் மூன்றும் ஆகிய எட்டுஞ் சிவனுக்கு வடிவமே. இதனாற் சிவனுக்கு அட்டமூர்த்தி என்னும் பெயர் வழங்குகின்றது. திருப்பெருந்துறையில் சிவன் ஆன்மரூபமாக உளன்.

"சத்தாகிய ஒருவனையே இந்திரன், வருணன், மித்திரன், அழகிய மேலான கருடன் எனப் பலவகையாக அந்தணர் கூறுகின்றனர்" என்பது இருக்கு (மண்டலம் **1.164.46**) வேதமந்திரம்.

இப்பொருளையே சுவேதாச்வதரம், மூன்றாம் அத்தியாயம் இரண்டாம் மந்திரம்: ஒருவனே உருத்திரன், இரண்டாமவனாக நிற்பான் அல்லன்; மக்களே! எவன் தன் ஆளுஞ் சத்திகளால் இவ்வுலகங்களைத் தன்வயப் படக்கொண்டு ஆளுகின்றானோ அவன் உள்ளே மறைந்து உளன்; எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து முடியவேண்டிய காலத்தில் தன்கண் ஒடுக்கிக் கொள்கிறான்" என விவரிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயங்களில் வாயிற் காவலராகக் கருவறையின் முன்னே இரு பக்கங்களிலும் நிற்போர் ஒரு கையில் சுட்டு விரலைமட்டும் நிமிர்த்திப் பிறவிரல்களை மடக்கிக் காட்டுவது "ஏகோ ஹிருத்ரோ" - ஒருவனே உருத்திரன் என்பதைக் குறிக்கின்றது; மற்றொரு கை "இரண்டாமவனாக இல்லை" "உள்ளே" என்னும் பொருள்பட; நீட்டி விரல்களை உட்பக்கம் மடக்கிக் காட்டுவது; "நத்வீதியாயதஸ்து:" (உலகந்தன் வியாபகத்தில் அடங்கிது தன்வழியினல்லது சுதந்தரமன்றி நிற்றலின்) தானே எல்லாம் ஆதல்பற்றி இரண்டாமவனாக நிற்பான் அல்லன் எனவும் "பிரத்யங்ஜநாஸ்திஷ்டதி" மக்களே! உள்ளே உளன் எனவும் வந்த உபநிடத அபிநயமாக உள்ளது. இப்படி வேதமொழிகள் உருவகப்படுத்தி அமைக்கப் பெற்றிருத்தமை உணர்ந்து பயனும் இன்பமும் பெறுதற்கு உரியது.

இறைவன் ஒருவனே என்பதை "ஏகனாக அமைந்து நிற்கும் நாதரூப லிங்கம்" உணர்த்துகின்றது. அவன் ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லான் ஆயினுங், கருதுவார் கருத்தின்படி, கணேசனாக, தென்முக கடவுளாக. சோதிப்பிழம்பாக, திருமாலாக, பிரமனாக, துர்க்கையாக இங்ஙனம் நானாவித உருவாய் நமை ஆள்வான் என்பதைக் கருவறையின் வெளிச்சுற்றில் உள்ள கோட்டங்களிலும் விமானத்திலும் அமைக்கப்பெறும் திருவுருவங்கள் குறிக்கும்.

இங்ஙனமே சிவாலயங்கள் அம்பலக்கூத்தர் விநாயகர், தென்முகக் கடவுள் முதலிய குறிகளாலும் அடையாளங்களாலும் சைவசித்தாந்தத்தும் கூறப்படும் பேருண்மைகளை உணர்த்துவனவாகவும் அருள் வடிவுகளாகவும் அமைந்துள்ளமை ஆய்ந்து உணரத்தக்கது.

**நன்றி:** சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
**வெளியீடு:** சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை துர்க்காபுரம், தெல்லிப்பழை. *06.03.1985.*
**மூலம்:** திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலய மகா கும்பாபி ஷேக மலர் *1970*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் கல்வெட்டுப் பற்றிய நுண்ணாய்வு

**பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை**
*தமிழ்த்துறைத் தலைவர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

கல்லில் வெட்டப்படுவது கல்வெட்டு என்று நேர்ப்பொருள் கொள்ளலாம். கல்லில் செதுக்கப்படுவது சிற்பம் எனவும் வரையப்படுவது ஓவியமெனவும் பெயர் பெறுவதால், வெட்டப்படுவது என்பதற்குப் பரந்த பொருள் உண்டா யினும் அது எழுதப்படுவது என்று குறுகிய பொருளிலே கல்லில் எழுத்தைக் குறிக்க வழங்கிவருகிறது. வீரமரணம் எய்தியவர்களின் பெயரும் பீடும் எழுதிய நடுகற்கள் சங்க காலத்திலே வணங்கப்பட்டு வந்திருக்கின்றன. சங்க காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய நடுகற்கள் பல தமிழ்நாட்டிலே அண்மையிற் கண்டறியப் பட்டுள்ளன. வரலாற்றாசிரியர்கள் சிலர் இந்நடுகற் களுக்கு வீரக்கற்களென்ற புதுப்பெயரும் இட்டுள்ளனர். கல்வெட்டு என்ற பெயரில் தோற்றுவாய் இந்த நடுகற் காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். இந்த மரபில் வந்ததாகவே, இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக, அவர்களின் குடும்ப அமைதி, பெருமைகள், இன்றியமையாமை என்பனவற்றைக் குறிப்பதாக, முதன் மாத இறுதியிலே அந்தியேட்டிக் கிரியைகளின்போது, இலங்கைத் தமிழர் வெளியிடுங் கல்வெட்டு என்ற இலக்கியவகை தோன்றியிருக்க வேண்டும். இந்த இலக்கிய வகை கல்லிலே பொறிக்கப்படுவதில்லை.

கல்லிலே பொறிக்கப்படுவது எதுவும் கல்வெட்டு என்று காரணப்பெயர் பெறலாம். தமிழ்மொழியிலே கல்வெட்டு என்ற தொடர் பரந்த பொருளில் ஆங்கிலத்தில் inscription என்பதன் மொழிபெயர்ப்பாக வழங்குவதுண்டு. Inscription என்பது பெரும்பாலும் கல்வெட்டாக இடம்பெறுகிறது. ஆனால் செம்பு, பொன், மரப்பட்டை, செங்கல், பட்டு முதலிய பிறபொருள்களில் இடம் பெறும் எழுத்துக்களும் inscription எனப்படுவதுண்டு. அதனால் கல்வெட்டு என்ற தமிழ்ச்சொல், தமிழிலேயே வழங்கும் போது முழுமையான பொருளைத் தராமற் குறுகிய பொருளைத் தரக்கூடுமாதலால், சாசனம் என்ற சங்கத மொழிச் சொல் inscription என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான சொல்லாக, இன்றைய அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரால் வழங்கப்பட்டு வருகிறது. சாசனம் என்ற சங்கத மொழிச் சொல்லும் அரசரின் கொடையைச் சுட்டுவதான குறுகிய பொருளிலேயே வடமொழியில் வழங்கிவந்த போதிலும் பிறமொழிகளாகிய தமிழில் இன்று பரந்த பொருளுடையதாகக் காணப்படுகிறது.

கோணேசர் கல்வெட்டு, கல்லிலே பொறிக்கப்பட்டதாகத் தெரியவரவில்லை. உலகிலேயே பெருந்தொகையான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட மொழிகளுள் தமிழும் ஒன்று. கல்லில் வெட்டப்படும் எழுத்துக்கள் அளவிலே பெரியவையாக அமைவது தவிர்க்க முடியாததலால், கல்வெட்டுச் சாசனம் மிகநீண்டதாக அமைய முடியாது. தமிழ்நாட்டிலே கி.பி. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக முதலாம் இராசேந்திர சோழனால் வெளியிடப்பட்டதாகக் கொள்ளப்படும் கரந்தைச் செப்பேடுகளே உலகத்திலேயே பெரிய சாசனங்களாகக் கருதப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டு, கல்லிலே பொறிக்கப்பட்டிருந்தால், இலங்கையில் இதுவரையிலே கிடைத்துள்ள சாசனங்களுள்ளே இதுவே மிகவும் நீண்டதாக அமைந்திருக்கும். தமிழ்ச் சாசனங்கள் சில, கல்லிலுஞ் செம்பிலும் வரையப்பட்டு வந்தமைக்குச் சில சாசனங்களுள்ளே அகச்சான்றுகள் உள. கல்வெட்டு என்ற பெயரிலே தனி இலக்கிய வகை தமிழ் நாட்டிலே தோன்றவில்லை. இலங்கையிலும் திருக்கோணமலையில் மட்டும் தோன்றியிருக்கிறது.

கோணேசர் கல்வெட்டு, திருக்கோணமலைப் பிரதேசத்தின் பாரிய கல்வெட்டு மரபுப் பின்னணியிலேயே தோன்றியிருக்கிறது. இலங்கையிலே இதுவரையிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டுகளுள் ஒரு கணிசமான தொகை திருகேணாமலை மாவட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சோழப் பெருமன்னர் ஆட்சி இலங்கையில் ஏற்படத் தொடங்கிய கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்க் கல்வெட்டுகள் திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொறிக்கப்பட்டு வந்துள்ளன. கல்வெட்டின் அமைப்புப் பற்றியும் கல்வெட்டின் பயன்பாடு பற்றியும் விளக்கமுள்ள அறிஞர்களே இக்கோணேசர் கல்வெட்டுத் தோன்றுவதற்குக் காரண கர்த்தர்களாக இருந்திருக்க வேண்டும்.

செய்யுளும் உரையுமாக அமைந்துள்ள இக்கல்வெட்டை ஒத்த கலப்புநடைச் சாசனங்கள் தமிழ்மரபிற் பல உள. சங்கதமொழிச் செய்யுள்களும், தமிழ் உரைநடையுமாக அமைந்த சாசனங்கள் ஒருவகை; மெய்க்கீர்த்திச் செய்யுளை முதலிலே கொண்டு தொடர்ந்து உரைநடையாக அமையும் சாசனங்கள் இன்னொருவகை. கோணேசர் கல்வெட்டு முழுவதும் தூய தமிழ்நடையில் அமைந்துள்ளது. இந்நூலின் பதிப்புகள், செய்யுட் பகுதியிலே, தொகை வேறுபாட்டுடன் வெளிவந்திருக்கின்றன. வைத்திலிங்க தேசிகர் பதிப்பிலே, மொத்தமாக ஐம்பத்தாறு செய்யுள்கள் ஒரு நீண்ட ஆசிரியப்பாவை உள்ளடக்கியனவாகக் காணப்படுகின்றன. அளகைக்கோன் பதிப்பிலே, அறுபது விருத்தங்கள் காணப்படுகின்றன. இந்நூல் காலப்போக்கிலே வளர்ந்து சென்றிருக்கிறது. காலங்கடந்து செல்லச் செல்ல, பிற்கால ஆசிரியர்கள் பிற்கால நிகழ்ச்சிகளை மூலநூலாசிரியர் எதிர்காலத்தை உணர்ந்து கூறிச் செல்வது போன்ற முறையிலே இணைத்து எழுதிவந்துள்ளனர். மூலநூலின் உண்மையான வடிவம் இனித்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து காணப்படவேண்டும். கல்லிலே பொறிக்கப்படாத கல்வெட்டான இந்நூலுக்குக் கோணேசர் சாசனம் என்ற பழம்பெயரும் இருந்திருக்க வேண்டும். "கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசர் சாசனம்" என்பது வைத்திலிங்க தேசிகரின் பதிப்பிற் காணப்படும் நூற்பெயர்.

திருக்கோணமலைக் கோயில் வரலாற்றைக் கூறஎழுந்த இலக்கியங்கள் திருக் கோணாசல புராணம், தட்சிணகைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு என்பனவாம். இவற்றுட் பின்னவை இரண்டும் காலத்தால் முந்தியனவாயினும், அக்காலம் எதுவென்பதிலே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. கணேசையர் தம்முடைய ஈழநாட்டுப் புலவர் சரித்திரம் என்னும் நூலிலே இந்நூல்கள் இரண் டும் பதினேழாம் நூற்றாண்டில் எழுந்தவையெனக் கூறியுள்ளார். இந்த இரு நூல்களினதும் சிறப்புப் பாயிரங்களை ஆராய்ந்தவர்கள் சிலர் இந்த நூல்கள் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிலே தோன்றியன என்பர். தட்சிணகைலாச புராணத்தின் சிறப்புப் பாயிரம், அந்நூல் செகராசசேகரன் காலத்தில் ஆக்கப் பட்டதாகக் கூறுகிறது. கோணேசர் கல்வெட்டின் சிறப்புப் பாயிரம் "ஓர் கல்வெட்டாக் கழறுவாமே....... சொல்லரிய திரிகயிலைப் பெருமையெல்லாந் தூய புராணக் கதையிற் சொன்னதுண்டு....... குளக்கோட்டுமன் சொற்படி..... கல் வெட்டுப் பாடினன்...... கவிராசவரோதய விற்பனன்" என்று கூறியிருப்பது, இரு நூல் ஆசிரியர்களான பண்டிதராசரும் கவிராசரும் சமகாலத்தவ ரெனக்கொள்ள இடந்தருகிறது. கூறும் பொருளிலும் ஒன்றன் துணை நூல்போல மற்றது அமைந்திருக்கிறது. இவையிரண்டு நூல்களுக்குமிடையிலான தொடர்பு சிலப்பதிகாரத்துக்கும் மணிமேகலைக்குமிடையிலான தொடர்பை ஞாபக மூட்டுகிறது. பின்னவையிரண்டும் இரட்டைக் காப்பியங்களென்று சிலராற் கொள்ளப்பட்டதுபோல, முன்னவையிரண்டும் ஒரே நூலின் இரண்டு பாகங்க ளெனச் சிலராற் கொள்ளப்படுகின்றன.

தட்சிணகைலாச புராணம் செகராசசேகரன் காலத்திலே தோன்றியதாகக் கூறப் படுகிறது. செகராசசேகரன் என்பது யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கள் பலரின் விருதுப்பெயர். பதினேழாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரையில் இவ்விருதுப் பெயருள்ள மன்னர் யாழ்ப்பாணத்தில் அரசாட்சி செய்து வந்துள்ளனர். **1963** இல் வெளியான திருக்கோணேஸ்வரம் என்னும் நூலின் பதினாறாவது பக்கத்தில் இற்றைக்கு இருநூற்றுப்பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சுவிராஜர் என்பார் இயற்றிய கோணேசர் கல்வெட்டு என்ற குறிப்பு வருகிறது. அச்சாகி யிருந்த இருநூற்றுப் பதினேழு என்ற எண் பின்பு பேனையால் ஐந்நூற்றறுபது எனத் திருத்தப்பட்டுக் காணப்படுகிறது. இந்த மாற்றம் நூலுக்குத் தொண்மைச் சிறப்பு வழங்க விரும்பியவரின் நடவடிக்கை என்பது தெளிவு.

கோணேசர் கல்வெட்டு, பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென்பதே வலுவுள்ள கருத்தாகத் தென்படுகிறது. இந்நூல் பௌராணிக நடையிலே திருக்கோணமலை வரலாற்றைக் கூறிச் செல்ல முயல்கிறது. தட்சிணகைலாச புராணம் தலபுராண மரபிலே ஆக்கப்பட்டதனால், அதற்குள் அடக்கப்பட முடியாமற்போன கோவில் நிர்வாகம், நடைமுறை என்பன சம்பந்தப்பட்ட பல விடயங்களை எடுத்துக் கூறுவதற்காக, கோணேசர் கல்வெட்டு ஆக்கப் பட்டுள்ளது. இந்தியப் பௌராணிக ஆசிரியர்கள் பலர் தாங்கள் எழுதிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் மிகப் பழையவையென்று கூறித் தம் காலத்திலும் இடைப்பட்ட காலத்திலும் நடந்த பல நிகழ்ச்சிகளைச் சுட்டும்போது தாம் எதிர்காலத்தில் நடக்க இருப்பவைகளை உணர்ந்து கூறுவதுபோல எதிர்கால வாய்பாட்டு வினைகளாய்க் கூறுவது வழக்கம். அதே மரபைப் பின்பற்றுங் கவிராசர் தம்மு டைய சிறப்புப் பாயிரத்திலே,

"வல்லதொரு வன்னிமையுந் தானத்தாரும்
வரிப்பத்து மாமிவர்கள் வந்தவாறும்
நல்லதொரு பூசைவிதி நடக்குமாறும்
நடந்ததன்மே லினிநடக்கும். நடத்தையாவும்,
சொல்லெனவே சோதிடத்தின் நிலையே கண்ட
கவிராசன் வருங்காலஞ் சொல்லுஞ்சீரே."

எனக் கூறியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. பௌராணிக நூலாசிரியர் சிலர் போல, கவிராசர் தாம் திரிகாலஞானி. அதாவது முக்காலமும் உணர்ந்தவ ரெனக் கூறவில்லை சோதிட விற்பன்னர் என்ற முறையிலே எதிர்காலத்தை உணர்ந்து கூறுவதாக மட்டும் இயம்பியுள்ளார்.

வெளிவந்த கோணேசர் கல்வெட்டுப் பதிப்புகளிலே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கோணேசர் கோவில் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வந்தமை வரையிலான குறிப்புக்கள் காணப்படுகின்றன. எனவே, பதிப்பு வெளிவந்த காலம் வரையில், வெவ்வேறு ஆசிரியர்கள் நூலை விரிவாக்கி வந்திருக் கிறார்க ளென்பது தெளிவு. கவிராசர் நூல் கலியுகம் தொடங்கி ஐந்நூற்றுப் பன்னி ரண்டாம் ஆண்டு குளக்கோட்டனின் வேண்டுகோளின் படி இயற்றப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது. இந்த நூலிலே வரலாற்றுண்மைகள் பல, தலை தடுமாறிய நிலையிலே காணப்படுகின்றன. இத்தகைய நூலொன்று எத்தகைய சூழ்நிலையிலே எழுந்திருக்க வேண்டுமென்பது நோக்கற்பாலது. பதினேழாம் நூற்றாண்டு முற்பகுதியிலே திருக்கோணமலைக் கோவில் அடைந்திருந்த சிறப் புப்பற்றி, போர்த்துக்கேய கத்தோலிக்க வரலாற்றாசிரியரான "டி குவெறொஸ்" கூறியுள்ளது வருமாறு:

"ஈழத்தேசத்திலுள்ள கிறிஸ்தவரல்லாத மக்களின் உரோமாபுரி. அதிகமான பக்தர்களின் கவனத்தை ஈர்த்த இந்தியக் கோவில்களான இராமேஸ்வரம், காஞ்சிபுரம், திருப்பதி, திருமலை, ஜகந்நாதர், விஜயந்தி ஆகியவற்றுக்குச் சென்ற யாத்திரியகர்களைக் காட்டிலுங் கூடுதலானோர் கோணேஸ்வரக் கோவிலுக்கு வந்து வழிபட்டுச் சென்றனர்"

இவ்வளவு சிறந்த நிலையிலிருந்த கோவில் போர்த்துக்கேயரால் தரைமட்ட மாக்கப்படுகிறது. திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமத்திற் புதிய கோணேசர் கோவில் தோன்றுகிறது. திருக்கோணமலைக் கோவிலுக்குத் தொண்டு செய்து வந்தவர்களும் அவர்கள் பரம்பரையினரும் தம்பலகாமம் கோணேசர் கோவிலுக்குத் தொடர்ந்து அத்தகைய ஆதரவை அளித்துவர வேண்டுமென்று கருதியவர்களே கோணேசர் கல்வெட்டுக்குத் தோற்றுவாய் செய்திருக்கின்றனர். அதனாலே, குளக்கோட்ட மன்னனும் பிறரும் திருக்கோணமலைக் கோவிலுக்குச் செய்த பணிகளை விரிவாக எடுத்துக் கூறி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலைக் கோவிலுக்குப் பறங்கியரால் அழிவு ஏற்படுவதும் தம்பல காமத்திற் புதிய கோணேசர் கோவில் தோற்றம் பெறுவதும் மிக முற்காலத் திலேயே உணரப்பட்ட செய்திகள் என்பனபோலக் கோணேசர் கல்வெட்டிலே அமைக்கப்பட்டுள்ளன. கழனிமலையென்ற தம்பலகாமத்திலே புதிய கோணே சர் கோவில் தோன்றியபோது திருக்கோணமலைக் கோவிலிலே பணியாற்றி யவர்கள் தொடர்ந்து புதிய இடத்திலும் "பணியாற்றுவதை உறுதிப்படுத்து வதற்காகப் பதினேழாம் நூற்றாண்டிலே கோணேசர் கல்வெட்டுத் தோன்றிய தென்ற கருத்து ஏற்புடையது.

இந்நூலாசிரியரான கவிராசர் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தவரல்லர் ஆரியச் சக்கரவர்த்திகளைப்பற்றித் தெளிவான அறிவுகூட இல்லாதவரென்பது நூலிலிருந்தே புலனாகிறது. செகராசசேகரன், பரராச சேகரன் என்ற விருதுப் பெயர்கள் யாழ்ப்பாண மன்னர்கள் ஒருவர்பின் ஒருவர் மாறிமாறிச் சூடிக்கொண்ட பெயர்களென்பதை அறிந்திராத நூலாசிரியர் வடக்கில் ஆட்சி செய்த பரராசசேகரன், செகராச சேகரனென்றிருவர் என அவர்கள் சமகாலத்திலிருந்து கூட்டாட்சி செய்தவர்கள்போலக் கூறிச் செல்கிறார். இவ்விருவர் ஆண்ட நாட்டைப் பின்பு ஆரியச் சக்கரவர்த்தி ஆளும் போது பறங்கிக்கலாபம் வருமென்பது நூலாசிரியர் கூற்று. ஆரியச் சக்கரவர்த்தி யென்பது யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர் குலத்தின் பெயரெனவும் கடைசி யாழ்ப்பாண மன்னன் பெயரல்லவெனவும் கவிராசர் அறிந்திருக்கவில்லை. எனவே கோணேசர் கல்வெட்டு எழுந்த காலம் கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டு என்பது ஏற்புடையதல்ல. யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைந்து "பொய்யாய்ப் பழங்கனவாய்ப்" போன ஒரு நிலையிலேயே கவிராசர் இந்தக் கல்வெட்டைப் பாடத் தொடங்கியிருக்கின்றார். எனவே, கோணேசர் கல்வெட்டின் காலம் பதினேழாம் நூற்றாண்டுக்குச் சிறிது பிந்தியதாகக்கூட இருக்கலாம்.

திருக்கோணமலைக் கோவிலைக் கட்டியெழுப்பிய குளக்கோட்டனைக் கலி யுகத் தொடக்க காலத்தவனாகக் கவிராசர் குறிப்பிட்டுள்ளார். பதினெட்டாம் நூற்றாண்டுக்குரிய யாழ்ப்பாண வைபவமாலை குளக்கோட்டன் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குச் சமமான காலமாகக் குறிப்பிடுகிறது. குளக்கோட்டன் என்ற மன்னன் யார், அவன் எக்காலத்தவன் என்பன பற்றித் தீர்மானமாகக் கூறமுடியவில்லை. இலங்கை வரலாற்றிலோ தென்னிந்திய வரலாற்றிலோ குளக்கோட்டன் என்ற பெருமன்னன் இருந்ததற்குச் சான்று கிடைக்கவில்லை. குளக்கோட்டன் திருக்கோணமலைப் பகுதியை ஆட்சிசெய்ய வன்னியரைக் கொண்டுவந்து குடியேற்றிய வனாகவுங் கூறப்பட்டுள்ளது. இலங்கை வரலாற் றிலே கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே வன்னியரைப்பற்றிய பிரஸ் தாபங் காணப்படுகிறது. மேலும், தட்சிணகைலாச புராணம் குளக்கோட் டனைச் சோழகங்கனெனக் குறிப்பிடுகிறது. தென்னிந்தியாவிலே சோழகங்க ரெனப்படும் அரசகுலங்கள் பல இருந்தன. திருக்கோணமலைக் கோட்டையிலே கண்டெடுக்கப்பட்ட சங்கத மொழிச் சாசனமொன்று சோழகங்கனென்பான் கி.பி. 1223 இல் இலங்கை வந்ததைக் குறிப்பிடுகிறது. அக்காலத்திலே இலங்கையை ஆண்டவன் கலிங்கநாட்டு மாகனாவான். கலிங்கத்திலும் சோழகங்கர் என்ற அரசகுலம் இருந்திருக்கிறது. சங்கத மொழிச் சாசனத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் மட்டுமே கிடைத்துள்ளதால், அவனுடைய பணிகளைப்பற்றி எதுவும் அறிந்துகொள்ள முடியவில்லை. கோணேசர் கல்வெட்டு முதலியன வியந்து கூறும் குளக்கோட்டன் பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கைவந்த கலிங்க நாட்டுச் சோழகங்கனாக இருக்கக்கூடும்.

சோழகங்கரென்பவர்கள் சோழர், கங்கர் என்ற இரண்டு அரச குலங்களின் கலப்பினால் உருவாகிய அரசகுலத்தினராவர். திருக்கோணமலை பிரதேசத் தமிழ் மக்களிடையே குளக்கோட்டன் தன்னுடைய சோழபரம்பரை உரிமையை வற்புறுத்திக் கூறியிருக்கக்கூடும். அதனால் மனுநீதிகண்ட சோழன் மரபில் வந்தவனாக இவன் போற்றப்படுகிறான். இவனுடைய தந்தை வரராமதேவனும் திருக்கோணமலைக்கு வந்து கோவிலுக்குத் தானஞ் செய்தவர்களில் ஒருவனாகக் குறிக்கப்பட்டுள்ளான். திருக்கோணமலைக் கோவில் தொடர்பான குடியேற் றங்கள் யாவுஞ் சோழநாட்டிலிருந்து நடைபெற்றனவாகவுங் கோணேசர் கல் வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளன. குளக்கோட்டனது காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு என்று கொண்டால் குளக்கோட்டனுக்கு முன்பு ஏற்பட்ட சோழரு டைய தொடர்புகள் யாவும் குளக்கோட்டனுடைய பெயரிலே அடக்கிக் கூறப்பட்டுள்ளன என்றே விளக்கங் கூறவேண்டும். கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் - திருக்கோணமலை மேல் ஒரு பதிகம் பாடியவர் - சோழ நாட்டவர். திருக்கோணமலை நகர், "குடிகளை நெருங்கிப் பெருக்கமாய்", இன்றுபோல் அன்றும் தோன்றியதை அவர் பாடியுள்ளார். கோணேஸ்வரரைப் "பெரும்புகழாளர்" என்று அவர் வர்ணித்துள்ளார். முத்துக்களும் மாணிக்க வகைகளும் நிறைந்து வளங்கொழிக்குந் திருக்கோணமலையை அவர் பக்கத்திலே சித்தரித்துக் காட்டியுள்ளார். இலங்கையிற் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றான திருக்கேதீஸ்வரம் பாண்டிய நாட்டார் இலங்கைக்கு வந்திறங்கிய மாதோட்டத்தில் அமைந்திருந்தது மற்றதான திருக்கோணமலை சோழநாட்டார் இலங்கைக்கு வந்திறங்கிய அதே பெயருடைய துறைமுகத்தில் அமைந்திருக்கக்கூடும்.

சோழப் பேரரசு காலத்திலேயே திருக்கோணமலையிலே சோழநாட்டார் குடியேற்றம் பெருமளவில் நடைபெற்றிருக்க வேண்டும். பதினோராம் நூற்றாண் டின் பெரும்பகுதி இலங்கை சோழப் பேரரசின் ஒரு மாகாணமாக ஆளப்பட்டு வந்தது. சோழர் பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்டுவந்தபோதிலும் அவர்களின் நடவடிக்கைகளின் மையமாகத் திருக் கோணமலைப் பிரதேசமே விளங்கியது. சோழப் பெருமன்னர் சாசனங்களுள் மிகப் பெரும்பாலானவை திருக்கோணமலை மாவட்டத்திலேயே கண்டெடுக் கப்பட்டுள்ளன. சைவசமய வளர்ச்சியிலே பெருக்கங் காட்டிய சோழப் பெருமன்னர் தமிழ் நாட்டிலே பாடல்பெற்ற தலங்கள் பலவற்றைக் கற்றளிகளாக மாற்றினர். சிலவற்றைப் பிரமாண்டமான கோவில்களாகக் கட்டி எழுப்பினர். சோழஇளவரசர் சோழ - இலங்கேஸ்வரர் என்ற பெயரிலே இலங்கையில் ஆட்சி செய்ததற்குச் சாசனச் சான்றுகள் திருக்கோணமலை மாவட்டத்திலேயே கிடைத் துள்ளன. கடலின் விளிம்பில் அமைந்திருந்த திருக்கோணமலைக் கோவிலின் மற்றொரு பெயரான மச்சகேஸ்வரம் என்பது இரண்டு சாசனங்களிலே குறிப்பிடப்படுகிறது. திருக்கோணமலைக் கோவில் தொண்டுக்கு வேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குகள் பல சோழப் பெருமன்னர் ஆட்சியிலே செய்யப்பட்டிருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறாகாது. ஆனால், முழுக்கோவிலும் தரைமட்டமாக்கப்பட்டு விட்ட நிலையில், கல்வெட்டுகளின் சிறுசிறு பகுதிகள் மட்டும் கடலிலுங் கோட்டையிலும் பிற பிற்காலக் கோவிற் கட்டிடங்களிலுங் கிடைக்கின்ற நிலையில், முழுவரலாறும் துலக்கம்பெற வழியில்லை. சோழப் பெருமன்னர் காலத்திலே திருக்கோணமலைக் கோவில் சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஒழுங்குகள் யாவும் குளக்கோட்டன் பெயருள் அடக்கமாகிவிட்டன என்றே கொள்ளவேண்டும். கோணேசர் கல்வெட்டு ஓரிடத்திலே இராசராசனான குளக்கோட்டுராசன்; என்று கூறியுள்ளது, சோழப் பேரரசன் முதலாம் இராசராசசோழனை நினைவுகூர உதவுகிறது. முதலாம் இராசராச சோழனு டைய சாசனங்கள் பல திருக்கோணமலை மாவட்டத்திலே கண்டெடுக்கப் பட்டுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

குளக்கோட்டனுக்குப் பின் திருக்கோணமலைக் கோவில் வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்புடையவனாகக் குறிக்கப்படுபவன் கயவாகு வேந்தனாவான். இலங்கை வரலாற்றிலே, கயவாகு என்ற பெயருடைய வேந்தர்கள் இருவர் முறையே கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலும், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் ஆட்சிபுரிந்துள்ளனர். முதலாங் கயவாகு இலங்கைக்குக் கண்ணகி வழிபாட்டை அறிமுகஞ் செய்தவனாகச் சிலப்பதிகாரத்தின்மூலம் அறியப்படுகிறான். கோணேசர் கல்வெட்டும் திருக்கோணாசல புராணமும் வியந்துகூறுங் கயவாகு இரண்டாவது கயவாகு வாகவே இருக்கவேண்டும். திருக்கோணமலைப் பிரதேசத்தோடும் சைவ சமயத்தோடும் நெருங்கிய தொடர்புடையவனாகத் தெரியவருங் கயவாகு இரண்டாங் கயவாகுவே ஆவான். இவனுடைய சாசனங்கள் சில திருக்கோணமலை மாவட்டத்திலே கண்டெடுக்கப்பட்டுள்ளன. கந்தளாயிலிருந்த பிராமணர் குடியிருப்பான சதுர் வேதி மங்கலத்துத் தமிழ்ச் சாசனம் இவனுடையது. கந்தளாயிலிருந்து இவனு டைய காலத்துக்குரிய கற்சாசனமான தமிழ்ச்சாசன மொன்றுங் கிடைத்துள்ளது. திருக்கோணமலை மாவட்டத்திலே கயவாகுவின் படைகளுக்கும் பராக்கிரம பாகுவின் படைகளுக்குமிடையே போர் நடைபெற்ற பின்னர், முன்னவனின் வேண்டுகோளுக்கிணங்கப் பின்னவன் தனது படைகளுடன் திரும்பிச் சென்ற போது, முன்னவன் கந்தளாயில் தனது வசிப்பிடத்தை அமைத்துத் தன் வாழ்க்கை யின் பிற்பகுதியை அங்கே கழித்துக் கொண்டான். சிங்களவருடைய கால முறை ஏடான சூளவம்சம் கயவாகுபற்றிக் குறிப்பிடுகையில், “அவன் வெளிநாட்டி லிருந்து மதநம்பிக்கையற்றவர்களை அழைத்து வந்து குடியேற்றி அதன்மூலம் இராசரட்டைப் பிரதேசத்தை மதநம்பிக்கையற்றவர்களினால் நிரப்பினான்” எனக் குறிப்பிட்டுள்ளது. மதநம்பிக்கையற்றவர்கள் என்பது பௌத்தமத நம்பிக் கையற்றவர்களான சைவர்களைக் குறிக்க வழங்கியிருக்கிறது. திருக்கோணாசல புராணத்திலே சுமார் ஒன்பது பக்கங்களில் கயவாகுப் படலம் என்று ஒரு படலம் முழுமையாக அமைக்கப்பட்டுள்ளமை இங்கே நோக்கத்தக்கது.

கோணேசர் கல்வெட்டில் இடம்பெறும் புவனேககயவாகு, நளச்சக்கரவர்த்தி என்னும் பெயர்களுடைய இரண்டு மன்னர்களைப்பற்றி எதுவும் அறிந்து கொள்ள முடிவில்லை. புவனேகபாகு என்னும் பெயருடைய சிங்கள மன்னர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் இலங்கை வரலாற்றில் இடம்பெற்றுள்ள போதிலும் புவனேககயவாகு என்றொருவன் இருந்ததாகத் தெரியவரவில்லை. இரண்டாங் கயவாகு ஆற்றிய பெரும்பணிகள் இரண்டு வேறு கயவாகுகள் திருக்கோணமலைக் கோவிலுக்கு அத்தகைய பெரும்பணிகளை இயற்றியதாகப் பிற்காலத்தவர்களை நினைக்கச் செய்துவிட்டன என்றே இன்று நாம் கொள்ளவேண்டும். நளச் சக்கரவர்த்தி பாரதக் கதையில் இடம்பெற்று நளோபாக்கியானத்திலும், நளவெண்பாவும், நைடதமும் ஆகத் தமிழில் வழங்கும் இலக்கியங்களிலும் இடம்பெறும் வடஇந்திய மன்னன் அவனுக்கும் திருக்கோணமலைக்கும் எந்தத் தொடர்பும் இருந்ததாகத் தெரிய வரவில்லை. நளச்சக்கரவர்த்தி என்ற பெயர் தாங்கிய மன்னர் அல்லது வள்ளல் தென்னிந்தியாவிலோ இலங்கையிலோ இருந்ததாகவுந் தெரியவரவில்லை. விபரம் அறியமுடியாத பெயர்களைக் குறிப்பிடுங் கோணேசர் கல்வெட்டு இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத்திலும் தமிழ் மன்னர் கணேசர் கோவிலுக்கு ஆற்றியிருக்கக்கூடிய பணியை எடுத்துக் கூறுவதிலே தவறிவிட்டதுபோலக் காணப்படுகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலே, தமிழ்நாடு முழுவதும் பாண்டியர் ஆட்சி ஏற்பட்டபோது, சடாவர்மன் வீரபாண்டியன் கோணமாமலையிலுந் திரிகூட கிரியிலுந் தனது வம்சத்து இலச்சினையான கயல்மீனைப் பொறித்துச் சென்றானென்று குடுமியாமலைச் சாசனங்கூறுகிறது. திருக்கோணமலைக் கோட்டையில், பாண்டியருடைய இரட்டை மீன்சின்னம் பொறித்த கல் இன்றும் காணப்படுகிறது. சைவசமயிகளான பாண்டியர் திருக்கோணமலைக் கோவிலுக்கும் பணிகள் செய்திருந்திருப்பார்களென எதிர்பார்க்கலாம்.

கோணேசர் கல்வெட்டால் திருக்கோணமலை ஆலயத்தில் நிகழ்ந்த வழிபாட்டு முறைகளையும் கோவிலுக்குரிய தொண்டுகள் நடைபெற்றவற்றையும், கோவிலுக்குரிய தொண்டு செய்வாரையும், அவர்களுக்குரிய கடமைகளையும், அக்காலச் சமூக அமைப்பையும் அறியலாம். தானத்தார், வரிப்பத்தார். இருபாகமுதன்மை, வன்னிபம் முதலானவை பற்றிய குறிப்புக்கள் இக்கல்வெட்டிலே வருகின்றன. திருக்கோணமலைக் கோவிலுக்குரிய பணிகள் செய்வதற்குக் குளக்கோட்டன் சோழநாட்டில் இருந்து மக்களைக் கொண்டுவந்து குடியேற்றினான் எனப்படுகிறது. குளக்கோட்டன் பற்றிய தகவல்கள் எவ்வாறாயினும், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் வந்து திருக்கோணமலையிற் குடியேறினர். என்பதில் உண்மை இருக்கலாம். சோழநாடு என்று கோணேசர் கல்வெட்டுப் பொதுவாகக் கூறினும், பாண்டியர் தலைநகராகிய மதுரை, தொண்டைமண்டலத்துக் காஞ்சிபுரம் என்பனவும் குடியேற்றத்திற் சம்பந்தப்படுவதைப் பார்க்கும் போது, தமிழ்நாடு முழுவதுஞ் சோழராட்சியில் அடங்கியிருந்த சோழப் பேரரசர் காலத்திலேயே, இக்குடியேற்றங்கள் நடந்திருக்கவேண்டும் போலத் தோன்றுகின்றது.

குளக்கோட்டன் கோணேசர் ஆலயத்திலே தொழும்பு செய்வதற்கு மருங்கூரிலிருந்து முப்பது குடிகளைக் கொண்டுவந்து திருக்கோணமலையிற் குடியேற்றினானெனப்படுகிறது. மருங்கூர் எவ்விடமிருந்ததென்பது தெரியவரவில்லை. இம்முப்பது குடியினரின் பரம்பரையினர் இறைவன் முன்னர் ஆரத்தி எடுத்தல், நடனமாடல், பன்றிகுற்றல் முதலியன செய்து தானத்தார் என்ற பெயருடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்திருக்கின்றனர். திருக்கோணமலைக் கோவிலுக்குரிய உற்சவங்களிற் பன்றிகுற்றலாகிய வேட்டைத்திருவிழாவே கோணேசர் கல்வெட்டில் மிக விரிவாகப் பேசப்படுவதன் காரணம் விளங்கவில்லை. இம்முப்பது குடியினருள் ஏழு குடியினருக்குக் குளக்கோட்டன் இராயர்ப்பட்டங் கொடுத்தானெனப் படுகிறது. தட்சிணகைலாச புராணத்தை இயற்றிய பண்டிதராசரும், கோணேசர் கல்வெட்டை இயற்றிய கவிராசரும் இந்த இராயர்கள் பரம்பரையினராக இருக்கவேண்டும். கவிராசரைக் கவிராசவரோதைய விற்பன்னர் என்று கோணே சர் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. தற்போது திருக்கோணமலைப் பகுதியில் வழங்கிவரும் இராசவரோதயம் என்ற பெயரின் தோற்றுவாய் இதுவாக இருக்கக் கூடும். கயவாகு மன்னன் தானத்தார்களுக்கு மேலும் பல கடமைகளை விதித்துள்ளான். முதன்மையார்க்குள் நன்மைதீமை வந்தால், தானத்தார் செய்ய வேண்டிய கடமைகளும் பலவாக அமைந்துள்ளன. அவைகளைக் கோணேசர் கல்வெட்டிலே விரிவாகக் காணலாம். தானத்தாரை "மருங்கூரில் வளவரில் நல்லோர்" என்று கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிட்டுள்ளது. வளவர் என்பது சோழ குலத்தவர்களைக் குறிக்கும். திருக்கோணமலைக்கு வந்தவர்கள் வளவர்களுக்குள்ளுந் தெரிந்தெடுத்த நல்லோர் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

வரிப்பத்தார் எனப்படுபவர்கள் குளக்கோட்டனால் காரை வாய்ந்த வள நாட்டைச் சேர்ந்த வரிபிடித்தான மூவேழு குடிவாழ்வாராகக் கொண்டு வந்து குடியேற்றப்பட்டவராவர். வளநாடு என்பது சோழப் பேரரசு காலத்தில் மாகாணம் என்பது போன்ற நிர்வாகப் பிரிவைக் குறிக்க வழங்கியது. ஆனால் காரை வாய்ந்த வளநாடு என்பது எப்பகுதியைச் சுட்டியது என்பது புலப்பட வில்லை. வரிப்பத்தார் என்ற பெயர் எப்படியேற்பட்டதென்பதும் தெரியவர வில்லை. "வரிப்பிடித்தான" என்ற தொடர் வரிப்பத்தார் என்பதை விளக்குவதற் காகப் புகுத்தப்பட்டிருக்கலாம். பட்டாடை கொய்தல், கட்டல், புட்பபத்திரங் கள் எடுத்தல், தூர்த்தல், விளக்கேற்றல், தளிசை தட்டுமுட்டு இவைகளை விளக்குதல், தீர்த்தம் எடுத்தல், நெல்லுக்குத்தல், சாணம் மெழுகல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல் முதலியன வரிப்பத்தார் செய்யவேண்டிய தொழும்பு களாகும்.

கோவிலுக்குப் பூசகர்களாகப் பாசுபதர்களைக் குளக்கோட்டன் நியமித்தா னென்று கூறப்பட்டுள்ளது. திருக்கோணமலைக் கோவிலின் ஆதிபூசகர்கள் பிராமணரல்லாதாராக இருந்த நிலையை இது சுட்டுவதாகக் கொள்ளவேண்டும். சோழநாட்டுக் குடிகளைக் கொண்டுவந்து குடியேற்றிச் சைவக்கோவிற் பணிகளுக்கு ஒழுங்கு செய்தவனாகக் கூறப்படுங் குளக்கோட்டன் சோழியப் பிராமணரைக் கொண்டுவந்து குடியேற்றிப் பூசகர்களாக்காமை கவனித்தற் குரியது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையிலே பிராமணர் சிலராவது இருந்துவந்தமைக்குச் சான்றுகள் உண்டு. ஆனால் இலங்கைச் சைவ சமூகத்திற் பிராமணரின் செல்வாக்கு எப்பொழுதும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. அதிலும் சிறப்பாகக் கிழக்கு மாகாணக் கோவில்களில், அண்மைக் காலம் வரையிற் பிராமணரல்லாதாரே பூசகர்களாக இருந்துள்ளனர். பாசுபதர் என்பார் ஒரு வகைத் தீவிரவாத சைவராவர். பிற்காலத்திலே இலங்கைச் சைவக் கோவில்களிலே பூசகர்களாக இருந்த, பிராமணர் அல்லாதோர் வீரசைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படுகின்றனர். கயவாகு மன்னன் திருக்கோணமலைக் கோவிலை நோக்கி வருவதையறிந்த பாசுபதர் கடலில் வீழ்ந்திறந்தனரெனக் கோணேசர் கல்வெட்டுக் கூறியுள்ளதாயினும் அதற்குரிய காரணம் புலப்படவில்லை. கயவாகுவின் காலத்திலே பிராமணர் சைவநாயக முதன்மை, வேதநாயக முதன்மை என்ற பட்டங்களையுடைய இருபாக முதன்மையினராகக் கோவில் அர்ச்சகர் களாயினர்.

தனியுண்ணாப்பூபாலன் என்பவன் திருக்கோணமலைப் பிரதேசத்தை அரசு செய்ய நியமிக்கப்பட்ட வன்னியமையாவன். குளக்கோட்டு மன்னன் மதுரைக்குச் சென்று மதிக்குலத்துதித்த தனியுண்ணாப் பூபாலனை அழைத்து வந்து திருக்கோணமலை நகரிற் குடியேற்றினானெனப்படுகிறது. பாண்டியருடைய மதுரையையும் சந்திரகுலத்தையும் கோணேசர் கல்வெட்டின் செய்யுட் பகுதி குறிப்பிட, உரைநடைப்பகுதி சோழவளநாட்டின் தனியுண்ணாப்பூபால வன்னிபம் பற்றிப் பேசுகிறது. தானத்தார், வரிப்பத்தார் இவர்களுக்கு நடுநின்று நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி நகரை அரசு செய்வது தனியுண்ணாப் பூபாலன் கடமையாகும். போர்த்துக்கேயராலே திருக்கோணமலைக் கோவில் அழிவெய்தும் வரையில் வன்னியராட்சி நடைபெற்று வந்ததாகக் கோணேசர் கல்வெட்டுக் கூறியுள்ளது.

கோணேசர் கல்வெட்டிலிருந்து வேறுபல செய்திகளுந் தெரியவருகின்றன. திருக்கோணமலைச் சிவனுக்கு மானபரன் என்ற சிறப்புப் பெயர் இருந்திருக்க வேண்டும். மூன்று செய்யுள்கள் மானபரன் என்ற பெயரைக் குறித்துள்ளன. ஒரு செய்யுள் மானிருக்குங் கரத்தான் என்று கூறுகிறது. திருக்கோணமலை மாவட்டத்து வெவ்வேறு ஊரார் - கட்டுக்குளத்து ஊரார், கொட்டியாபுரப் பதியார் முதலியோர் - கோவிலுக்குச் செய்துவர வேண்டிய தொண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கயவாகு மன்னன் தம்பை மாநகரில் முப்பது அவணம் நெல் விளையத்தக்க வயல்நிலந் தானஞ்செய்தான் என்று கோணேசர் கல்வெட்டில் உள்ள அகவல் கூறுகிறது. கோணேசர் கல்வெட்டில் கருகுலக் கணக்கன் பத்ததி, புலவன் பத்ததி, கனகசுந்தரப் பெருமாள் பெரியவளமைப் பத்ததி என்று மூன்று பிரிவாக இருந்த கோவில் நிதி வரவு செலவு பற்றிய கணக்கு விபரங்கள் கூறப்பட்டுள்ளன. திறைச்சேரி என்னுங் கருவூலம், கருகுலம் எனத் திரிந்துள்ளது. புலவன் காஞ்சிபுரத்தில் இருந்து வருவித்துக் குடியேற்றப்பட்டவனெனக் கூறப்பட்டுள்ளது. கனகசுந்தரப் பெருமாள் காராளர் வம்சமெனவும் திருநெல்வேலிக் கதிபதி யெனவுங் கூறப்பட்டுள்ளார். இவர் வம்சம் தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலி வேளாளகுலமென்பதை இது சுட்டுகிறது.

கயவாகு மன்னன் காலத்து நடைபெற்ற குடியேற்றமுஞ் சோழ நாட்டவரின் குடியேற்றமென்றே இக்கல்வெட்டுக் கூறுகிறது.

"இரவிகுலமதினில் வருகயவாகு மஹாராசன் சோழவளநாட்டாவலைப் பித்தது கொல்லன், குயவன், நாவிதன், ஏகாலி, வள்ளுவன் இவர்களில் ஐந்தைந்துகுடி, இவர்களுக்குக் குடிநிலம் விளைபுலம் முதலான சர்வகாரியங்களுங் கொடுத்துக் கோணேசர் கோயிற்குடிமையென்று திட்டம் பண்ணி அவரவர்க்கடுத்த வஸ்திரபூக்ஷணங்களுங் கொடுத்து அரசனுரைத்த கட்டளை:- வன்னிபம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாகமுதன்மை, தானம். வரிப்பத்து இவர்கள் சொன்ன கட்டளைப்படி நீங்கள் நடக்கவேண்டியது. இந்தக் குடிமைகள் சோழநாட்டிற்காராளர் குடிமையானதினால் நீங்கள் சகலரும் மானமாய் வைத்து நடத்த வேண்டியது.

சோழர்கள் சூரியகுல மன்னர்கள். இங்கு கயவாகுவும் சூரியகுல மன்னன் எனப் படுகின்றான். காராளர் என்பார் கார்காத்த வேளாளர். திருக்கோணமலைக்கு வரு விக்கப்பட்ட குடிமைகள் உயர்சாதி வேளாளர்களின் குடிமைகளாக இருந்தவர் களானதினால், அவர்களின் புதிய எசமானர்கள் அவர்களைக் கௌரவமாக நடத்தவேண்டுமெனப்படுகிறது. தமிழ் நாட்டிலிருந்து பெரிய கோவில்களின் அமைப்பினைப் பின்பற்றிப் போனாலும், கோவிலை மையமாக வைத்துக் கோவிலுக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்துவர, பல்வேறு சாதிப்பிரிவு மக்கள் வாழ்க்கை கோவிலுடன் பின்னிப் பிணைக்கப்படுகிறது.

சாசனங்கள் பலவற்றின் இறுதியிலே ஓம்படைக்கிளவிகள் இடம் பெறுவதுண்டு. குறிப்பிட்ட சாசனத்திலே இடம்பெற்றுள்ள தருமம் அல்லது தானம் அது செய்தவர் காலத்திலும் அதற்குப் பின்னரும் பாதுகாக்கப்பட வேண்டுமென்று விரும்பும் உபயகாரர் அந்தத் தருமத்தைப் பாதுகாப்பவருக்குக் கிடைக்கும் நன்மைகள், அந்தத் தருமத்தை அழிப்பவருக்குக் கிடைக்குந் தீமைகள் என்பனவற்றை ஓம்படைக்கிளவியாகக் கூறுவது மரபு. கோணேசர் கல்வெட்டிலே வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே வெவ்வேறு ஓம்படைக்கிளவிகள் இடம்பெறுகின்றன. குளக்கோட்டன் செய்த தருமத்திற்குத் தீங்கு செய்பவர்களுக்குக் குகூஷ்டநோய், பொருட் கொள்ளை, நீசர் ஆட்சியென்பன ஏற்படும் என்று கூறுஞ் செய்யுட்பகுதி:-

"..................அழிவு பண்ணும் பேர்கள்
கூறியதோர் குட்ட முதல்வியாதிக் காளாய்க்
கூட்டுபெரு நாட்டவர்க ளீட்டுஞ் செம்பொன்
நேரிகலிற் கொள்ளை கொண்டு சூறையாடி
நீசருமிப் பதியாள்வர் நியமந் தானே"

தானத்தார், முதன்மையார், வரிப்பத்தார் சம்பந்தப்பட்ட ஓம்படைக் கிளவி வருமாறு:-

"தானம் வரிப்பத்தாருமப்படியே யொருவருக்கொருவர் கொண்டு கொடுத்து ஒருவம்ஸமாகப்படாது, எந்தக் காலமும் முதன்மைக்கு முதன்மை எதிரிக்குடி யாகவும் தானம் வரிப்பத்தும் அப்படியே எதிரிக் குடியாகவும் இருக்கவேண்டி யது. இந்தத் தேவவாக்குத் தவறி ஒன்றுபட்டு நடப்பவர்கள் இராசநிந்தனை யாலும் நோயாலும் வறுமையாலும் வருந்திச் சந்ததியற்று நரகத்திற்குமே துவாவார்கள். மேற்சொன்ன கட்டளைக்கு மாறாய் நடப்பதையறிந்தும் திருத்தம்பண்ணாத ராசாக்களும் இதுகாரிய மிராசாக்களறியவுரையாத காரியகாரர்களும் மேலே சொல்லியபடி நரகத்துக் கேதுவாவார்கள்"

கோணேசர் கோவிலுக்குத் தொழும்பு செய்தவர்களிடையே சமூகக் கலப்பு ஏற்படுவதை முற்றாகத் தடைசெய்யும் போக்கிலே, இந்த ஓம்படைக்கிளவி எழுந்திருக்கிறது. போர்த்துக்கேயராற் கோவிலுக்குப் பேரழிவு ஏற்பட்டதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இயன்றவரையிலே கோவில் ஒழுங்குகளைப் பேண எழுந்த இக்கல் வெட்டு, சமூகக்கலப்பு பழைய ஒழுங்குகள் சீர்குலைவதற்கு வழிவகுக்கக்கூடும் என்று அஞ்சியதனாற்போலும், அக்கலப்பிற்கெதிராக முட்டுக்கட்டைபோட முயல்கிறது. முதலிலே சமூகக் கலப்பு நடைபெறக் கூடாதென்பது தேவவாக்கு என்று கூறிப் பயமுறுத்தல் நடைபெறுகிறது. சமூகக் கலப்பு இடம்பெற்றால் இம்மையிலும் மறுமையிலுந் துன்பம், அதாவது துன்பத்திலிருந்து தப்பிப் பிழைக்க வழியே இல்லையென்று அச்சுறுத்தல் இடம்பெறுகிறது. சமூகக் கலப்பிலே சம்பந்தப்படுவோர் சிலர், பொதுவான சாபமொழிகளின் விளைவு களில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கக்கூடும். அவர்களுக்கும் அரசதண்ட னைக்குப் பயம் இருக்கவே செய்யும். சமூகக் கலப்பை அரசனுடைய கவனத்திற்குக் கொண்டுவரத் தவறுங் காரியகாரர்களுக்கும், தண்டனை வழங்கத்தவறும் அரசர்களுக்கும் நரகந்தான் கிடைக்குமாம். விசயநகர நாயக்கர் ஆட்சிக் காலத்திலே, முஸ்லிம்கள் படையெடுப்பால் தென்னிந்தியத் தமிழகத்திலே இந்துக் கோவில்கள் சிதைந்தபோது, அங்கேயும் சமூகக் கலப்பிற்கு எதிரான போக்கு வலுப்பெற்றுச் சாதிப்பிரிவினைகள் பெருகியமை இவ்விடத்து ஒப்புநோக்கத்தக்கது.

கோணேசர் கல்வெட்டில் வரும் செய்யுட் பகுதி பழையமரபு தழுவியது; உரைநடைப் பகுதியிலே விதந்து கூறத்தக்க சில தனிப்பண்புகள் உள. மேற்படி கல்வெட்டிலே, "திருக்குளங் கட்டினது", என்ற பகுதியிலே இடம்பெறும் உரைநடைப் பகுதி வருமாறு:-

முதல்மந்திரிக்கு ராசகுமாரத்தி சொன்ன வசனம். வடகரையிலிருந்தொரு சைவன் ஓடத்திலேறி வந்து கிழக்குக் கரையிலொரு மலையின் மேலே ஆலயங்கட்டுகிறானென்ற செய்தி கேட்டேன். நீ போய் அந்த ஆலயத்தையு மிடித்துக் கடலிலே தள்ளிவிட்டு அவர்களையுமோடத்தி லேற்றி அனுப்பிப் போட்டு வாவென்று சொல்ல, மந்திரியும் அரசர்கட்கரசியே அந்தப்படியே செய்துவருகிறேனென்று...... வாயில் காப்பவர்கள்...... அரசனுக்குரை செய்ய அவன் அவர்களை அழையுமென்ன. அரசனும் தன்னுடைய மந்திரியைப் பார்த்து மந்திரீயென்னத் தம்பிரானே முடிந்திருக்கு தென்றான்..... அதன்பின்.... குளக்கோட்டு ராசனும் அம்மந்திரியைப் பார்த்து, முகமன் பேசிவந்த காரியமென்ன வென்று கேட்க அவன் அரசனை நமஸ்காரம் பண்ணிச் சொல்லும் வசனம்."

மேனாட்டு மொழிகளின் செல்வாக்கால் இன்றைய தமிழை அணிசெய்யும் நிறுத்தக்குறிகள் இல்லாத காலத்திலே, சம்பாக்ஷணையைத் தொடர்ந்து கூறும் பகுதி எவ்வாறு எழுதப்பட்டு வந்ததென்பதற்கு மேற்காட்டிய பகுதி ஒரு காரணமாகும். நேர்கூற்று, நேரல்கூற்று என்பனவற்றுக் கிடையே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வேறுபாடு எதுவும் பேணப்பட்டதாகத் தெரியவரவில்லை. வசனம் என்பது வாக்கியம் என்ற பொருளில் அல்லாது கூற்று என்ற பொருளில் வழங்கியிருக்கிறது. ராசகுமாரத்தி, ராசன் என்ற வடசொற்கள் இகார முதலெழுத்துப் பெறாமல் வழங்குவது சாசன வழக்காறுகளிற் காணக்கூடியதே. "என்று சொல்ல, உரை செய்ய" என்பன உரையாடலைத் தொடக்கிவைக்க உதவுகின்றன. "என்ன" என்பது உரையாடலை நடத்திச் செல்ல உதவுகிறது. "என்று", "என்றான்" என்பன உரையாடலை முடித்துவைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் கல்வெட்டில் உரைநடைப் பகுதிக்கு இன்னோருதாரணம் கயவாகு சம்பந்தப்பட்ட பகுதியிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். திருக்கோணமலை மகாத்மியத்தைச் சைவக்குருக்கள் கயவாகுவுக்குச் சொல்லியதைக் குறிக்கும் பகுதி சுவைமிகுந்து காணப்படுகிறது: -

"கயவாகு மஹாராசாவுக்குச் சைவநாயகக்குருக்கள் இத்திருமலையின், கீழேயுள்ள புதினங்கள் சிலவற்றைச் சொன்னார்."

"திருக்கோணவரையில் எண்பத்துநான்கு சதுரத்தானமுண்டு. அத்தானங்களில் இருடிகளிருந்து அநவரதகாலமுஞ் சிவபூசை செய்வார்கள். இவையன்றி ஏழுகுகைகளுமுண்டு. அவற்றிற் சத்தரிக்ஷிகள் பூசை பண்ணுவார்கள். திருமலையின் கீழே மிக விலாசமான வெளியும் பொன் மயமான பூமியுமுண்டு. அவ்வெளியினடுவே ஒரு நாற்கான் மண்டப முண்டு. அந்நாலு காலிலும் நாலு கதவும் நாலு வழியுமுண்டு"

"(கயவாகு மஹாராசன்) மிகுந்த சந்தோக்ஷமுற்று நாம் அந்தத் தரிசனை காணப் போகக்கூடாதோவென்று கேட்கக் குருக்கள் சொன்ன வசனம்."

"இப்பொழுது அவ்விடத்திற் பங்குனி உத்தரத் திருநாள் நடக்கின்றது. அன்றியும் அரனருளில்லாமற்போதல் கூடாது. ஏனென்றால் முதலாம் வாயிலில் ஓரிலக்கம் வைரவர் காவல். இரண்டாம் வாயிலிலே பத்திர காளியுங் கன்னிமாரும் ஐயனாருங் காவல்......"

சைவநாயகக் குருக்களின் கூற்றுச் சிறுசிறு வாக்கியங்களாக அமைந்து எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாக விபரிப்பதற்குப் பொருத்தமான நடையாக அமைகிறது. ஆனால், மேற்படி பகுதியிலுள்ளன போன்ற விடயங்கள் சாசனங்களிற் பொதுவாக இடம்பெறுவதில்லை.

கோணேசர் கல்வெட்டுப் பூரணமான வரலாற்றுண்மைகளின் தொகுதியென்று கூறமுடியாவிடினும், பிறவரலாற்றாதாரங்களோடு இணைத்துப்பார்க்கும் போது திருக்கோணமலைப் பிரதேச வரலாற்றுக்கு ஒரு சிறந்த வரலாற்று மூலமாகப் பயன்படக்கூடியது. கோணேசர் கல்வெட்டுக்கு ஓர் ஆராய்ச்சிப் பதிப்பு வெளிவரவேண்டும். இலங்கைத் தமிழர்களது வரலாறு துலக்கம்பெற இது உதவும்.

**நன்றி:** சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
**வெளியீடு:** சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை துர்க்காபுரம், தெல்லிப்பழை. **06.03.1985.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை வெல்லல்

**இலக்கண வித்தகர்,**
**பண்டிதர் இ. நமசிவாயம்,**
*சமாதான நீதவான்,*
*மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.*

தமிழ்ப் பெரியார்களிற் பலர், விதியை எதனாலும் வெல்லல் ஆகாது என்பர். அவர்களுட் சிலர், அதனை வெல்லல் ஆகும் என்பர். சிலர், தாம் செய்த நூல்களில் ஓரிடத்து, வெல்லல் ஆகாது என்றும், மற்றோரிடத்து, வெல்லல் ஆகும் என்றுங் கூறுவர். இங்ஙனம் மாறுபடக் கூறுவது பொருந்துமா? பொருந்தாதா? என்று ஆராய்வது இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

திருக்குறளில் துறவறவியல் கூறி முடிந்தபின் அதனை அடுத்து இறுதியாகப் பரிமேலழகர், "இவ்வாற்றான் இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றினையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறங் கூறினார் இனி, பொருளும் இன்பமுங் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின் வலி கூறுகின்றார்" என்று கூறுதலின் ஊழென்னும் அதிகாரத்து ஊழின் வலி கூறப்பட்டது என்றும், ஊழென்று வள்ளுவனார் இங்கு எடுத்துக்கொண்டது பொருளுக்கும் இன்பத்துக்குங் காரணமாகிய ஊழையே என்றும் அவர் கொண்டார் என்பது பெறப்படும். மேலும் அவர் ஊழென்னும் அதிகாரத்தின் பொருளும் அதிகார இயைபுங் கூறுமிடத்து, "அஃதாவது, இருவினைப் பயன் செய்தவனையே சென்றடை தற்கேதுவாகிய நியதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி யென்பன ஒரு பொருட்கிளவி. இது பொருளின்பங்கள் இரண்டிற்கும் பொது வாய், ஒன்றனுள் வைக்கப்படாமையாலும், மேற்கூறிய அறத்தோடியை புடை மையாலும், அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது" என்று கூறுதலின், ஊழ் அறம், பொருள், இன்பமாகிய மூன்றோடும் தொடர்புடையதென்று அவர் கொண்டார் என்பது பெறப்படும். இக்கருத்துக்கள், பின்வரும் விடயங்களுட் சிலவற்றை அங்கங்கே விளங்கிக்கொள்வதற்குத் தேவைப்படலால், முதற்கண் எடுத்துக் காட்டப்பட்டன. குமரகுருபர சுவாமிகள், கல்விக்கும் ஊழ் வேண்டும் என்ற பொருளில் "கற்பனவூழற்றார்" என்றதும், வீட்டுநெறி நிற்பாரையும் ஊழ் தாக்கும் என்ற கருத்துப் புலப்பட, மாணிக்கவாசக சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழங்குகின் றாய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையே னென் விதியின்மையால்"

என்றும்,

அருணகிரிநாத சுவாமிகள்,

"மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ"
என்றுங் கூறியதும்,

இவையெல்லாம் அடங்க, பெருந்திரட்டு என்னும் நூல்,

"வாழ்வுக ளாலென் மறைநெறி ஞானம் அதனாலென்
கேள்விக ளாலென் கிளர்மனு வாலென் கிளையாலென்
வேள்விக ளாலென் விண்ணவ ராலென் விளைவெல்லாம்
ஊழ்வினை தானே தருதலின் ஊழே இறையென்றான்"
என்று கூறியதும் இவ்விடத்துக் கருதத்தக்கன.

தமிழ் நூல்களில், ஊழின் வலி கூறாத நூலில்லை. விசேடமாக, நீதி நூல்களெல்லாம் ஊழின் வலியை மிகுத்துக் கூறியிருக்கின்றன. ஞானச் செல்வியாகிய ஔவையார், தாம் செய்த நீதிநூல்களில், குறிப்பாகவும், வெளிப்படையாகவும் அடிக்கடி ஊழின் வலி கூறியிருக்கின்றார். அவர் வெளிப்படையாக ஊழின் வலி கூறிய சில இடங்களை இங்கே காண்போம்.

"நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்
விதியின் பயனே பயன்" (வாக்குண்டாம்)

"எழுதியவா றேகாண் இரங்கும் மடநெஞ்சே
கருதியவா றாமோ கருமம்" (வாக்குண்டாம்)

"ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த வாயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்" (நல்வழி)

"ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி" (நல்வழி)
"வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை" (நல்வழி)

இந்த இடங்களில், அவர், முயற்சி முதலிய எந்த உபாயத்தாலும் ஊழை வெல்லல் ஆகாது; என்பதை வலியுறுத்திக் கூறியிருப்பதைக் காண்கின்றோம்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார், ஊழ் என்றே ஒரு அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, அதுபற்றிப் பலபட விரித்துச் சொல்லி, இறுதியில், அது எதனாலும் வெல்ல முடியாத பெருவலி உடையதென வலியுறுத்திக் கூறினார். அவர் கூறியவற்றைச் சிறிது விரிவாகக் காண்போம். பரிமேலழகரது கருத்துப்படி, வள்ளுவப் பெருந்தகை, ஊழென்னும் அதிகாரத்து முதலாறு குறள்களாலும், பொருட்குக் காரணமாய ஊழின் வலி கூறி, அடுத்த மூன்று குறள்களாலும், இன்ப துன்பங்கட்குக் காரணமாய ஊழின் வலி கூறி, இறுதிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறளால், அவ்விருவகை ஊழின் வலியும் பொதுவாகக் கூறினார். முதற் குறளால், கைப்பொருள் ஆதற்குக் காரணமாகிய ஊழலால், முயற்சி உண்டாகுமென்றும், அப் பொருள் அழிதற்குக் காரணமாகிய ஊழலால், மடி உண்டாமென்றும், இரண்டாங் குறளால் இழவூழ், அறிவை அறியாமையாக்கும் என்றும், ஆகலூழ் அறிவை விரிக்கும் என்றும், மூன்றாம் குறளால், பேதைப்படுத்தும் ஊழ், செயற்கையானாய கல்வியறிவையும் தடுத்துப் பேதைமையை மிகுவிக்கும் என்றும், நான்காங் குறளால், அறிவுடையராதற்குக் காரணமாகும் ஊழ் வேறு, செல்வமுடையராதற்குக் காரணமாகும் ஊழ் வேறு என்றும். ஐந்தாங் குறளால் ஊழ்வசத்தால், நல்லவை தீயவையாயும், தீயவை நல்லவையாயும் மாறும் என்றும், ஆறாங் குறளால், ஊழ் பாதகமாகிய காலத்தில், வருந்திக் காப்பினும், பொருள் நில்லாமல் ஒழியுமென்றும். சாதகமாகிய காலத்தில், தூர எறிந்தாலும், பொருள், ஒழியாமல் நிற்கும் என்றும், பொருட்குக் காரணமாகிய ஊழின் வலி கூறினார். ஏழாங் குறளால் அனுபவித்ததற்கு வேண்டிய பொருள்கள் பலவற்றைத் தொகுத்து வைத்திருந்தாலும், அனுபவிப்பதற்குரிய ஊழில்லாதுவிடின், அனுபவித்தல் கூடாது, என்றும், எட்டாங் குறளால் தரித்திரர்கள், துறவறத்தை மேற்கொள்ள நினைத்தாலும் அத்தரித்திரத்துக்குக் காரணமாகிய ஊழ், அவர்களை அங்ஙனம் செய்யவிடாது தடுத்து, இல்லறத்திலேயே வைத்து வருத்தும் என்றும், ஒன்பதாங் குறளால், நல்லூழ், இன்பத்தையும், தீயூழ், துன்பத்தையுந் தந்தல்லது நீங்கமாட்டா, என்றும், இன்ப துன்பங்கட்குக் காரணமாகிய ஊழின் வலி கூறினார். பத்தாங் குறளால் ஊழானது. தன்னை விலக்குவதன் பொருட்டுத் தனக்கெதிரானதோர் உபாயத்தைப் பலருடனுங் குற்றமற ஆராய்வதற்கும் விடாமல், தான் அவ்வுபாயத்தை யாவது, வேறு ஒன்றனையாவது வழியாகக் கொண்டுவந்து, அவ்வாராய்ச்சியின் முற்பட்டு நிற்கும் அதனால் அந்த ஊழ் போல, மிக்க வலியுடையனவாக எவையுமில்லை; என்று, பொருட்குக் காரணமாய ஊழ், இன்ப துன்பங்களுக்குக் காரணமாய ஊழ் என்னும் இருவகை ஊழின் பெருவலியும், பொதுவாகக் கூறினார். பரிமேலழகர், இக்குறளின் விளக்கவுரையில், எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம் என்று, அறுதியிட்டுரைத்தார்.

இங்ஙனம், ஊழின் வலியை வலியுறுத்திக் கூறிய அவர்தாமே, ஆள் வினையுடைமை என்னும் அதிகாரத்து இறுதியில்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்னும் குறளால், குற்றமற மெய்ம்முயற்சியை விடாது பலமுறை செய்வார், ஊழையும் வெல்வர் என்று கூறினார். இங்ஙனம், அவர் மாறுபட்டு உரைத்தது, சிந்திக்கப்பட வேண்டியது. இவ்விரண்டு கருத்துக்களில், ஒன்று பொருந்தும், ஒன்று பொருந்தாது, என்று கொண்டால், பொருந்தாததால், அவருக்குக் குற்றம் ஏற்படும். இரண்டும் பொருந்துமென்றால், மாறுபட்ட இரண்டு பொருந்துமாறில்லை. ஆதலால், ஒன்று பொருந்த, ஒன்று பொருந்தாது; என்று கொண்டு, பொருந்தாக் கூற்றினால், வேறு ஒரு கருத்துத்தோன்ற அங்ஙனங் கூறினார் என்று கொள்வதே தக்கதாகத் தெரிகிறது. ஊழே வலிதென்பது, எல்லாராலும் கொள்ளப்பட்டதாகலின், அதனைப் பொருந்தும் என்று கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாராலுங் கொள்ளப்படாத ஊழை மெய்ம்முயற்சி வெல்லும் என்ற கருத்துப் பற்றிச் சிந்திப்போம்.

முயற்சி என்பது உள்ளக் கிளர்ச்சியாகிய ஊக்கத்தையும், மெய்ம் முயற்சியையும் உணர்த்துமென்றும், உள்ளக் கிளர்ச்சி, ஊக்கமுடைமை என்ற அதிகாரத்திலும், மெய்ம்முயற்சி, ஆள்வினையுடைமை என்ற அதிகாரத்திலும் வைத்து வள்ளுவ ரால் கூறப்பட்டன என்றும் நாம் முதலில் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஊக்கமுடைமை என்ற அதிகார முகப்பில் பரிமேலழகர் "அஃதாவது மனம் மெலிதலின்றி வினை செய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல், ஒற்றரால் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற்கேற்ற வினை செய்வானுக்கு இஃது இன்றியமையாமையின் ஒற்றாடலின்பின் வைக்கப்பட்டது" எனக் கூறுதலின் மெய்ம்முயற்சிக்கு ஊக்கம் இன்றியமையாது வேண்டப்படுவதென்பது பெறப்படும். மெய்ம்முயற்சிக்கு இன்றியமையாத ஊக்கத்தைத் தரும் விதியை, அம்மெய்ம் முயற்சி வெல்லும் என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும். இங்ஙனமாக, வள்ளுவர் அங்ஙனம் கூறியதற்கான காரணத்தை, ஆள்வினையுடைமை என்ற அதிகாரத்தில் வைத்து நோக்குவோம்.

திருவள்ளுவனார் ஆள்வினையுடைமை என்ற அதிகாரத்தில் முதல் மூன்று குறள்களாலும் மெய்ம்முயற்சியது சிறப்புக் கூறினார். நாலாவது குறளால் அம் முயற்சியில்லாதானது குற்றங் கூறினார். ஐந்தாவது குறளால், அஃதுடையானது நன்மை கூறினார். ஆறாவது, ஏழாவது குறள்களால் செல்வம் வறுமைகளுக்கு முறையே முயற்சியும், அஃதின்மையுங் காரணமாம், என்று கூறினார். இறுதி மூன்று குறள்களாலும் ஊழால் துன்பம் வரினும் முயற்சி விடற்பாலதன்று என்று கூறினார். இது பரிமேலழகர் கருத்து. இக்கருத்தின்படி இவ்வதிகாரத்தும் இறுதி மூன்று குறளிலும் வைத்து ஊழின் வலியே கூறப்பட்டிருப்பதைப் பொது வகை யில் அறிகின்றோம். மெய்ம்முயற்சி ஊழை வெல்லும், என்று சாதாரணமாகக் கருத்துக் கொள்ள இடந்தருங் குறளும், இறுதி மூன்று குறள்களிலும் ஒன்றென் பதை நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும். அம்மூன்று குறள்களும் முயற்சி விடற்பாலதன்று என்றும், முயலுங்கால் ஊழ் தாக்குமென்றும், தாக்கினும் அம்முயற்சி விடற்பாலதன்று என்றும் முயற்சியின் இன்றியமையாமை கூறின வன்றி, ஊழை முயற்சி வெல்லும் என்று கூறினவல்ல. இறுதிக் குறள், ஊழை முயற்சி வெல்லும் என்று கூற வந்ததாயின், பரிமேலழகர், அதனை வேறுபிரித்து "இதனால் ஊழை முயற்சி வெல்லும் என்பது கூறப்பட்டது" என்று கூறி யிருப்பார். அங்ஙனங் கூறாமையால், பரிமேலழகருக்கு, ஊழை முயற்சி வெல்லு மென்ற கருத்து இல்லை என்பது தெளிவாகின்றது. மேலும் அம்மூன்று குறள்களையும் பற்றிச் சிந்திப்போம்.

"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்.
தாள்வினை யின்மை பழி"

என்பது எட்டாவது குறள். இது நல்விதியில்லாமை, ஒருவர்க்குப் பழியாகாது, அதுநோக்கி வினை செய்யாதிருத்தலே பழியாவது என்று வினை செய்தலின் இன்றியமையாமையைக் கூறிற்று. இது விதியின் வலியை ஒத்துக்கொண்டதன்றி மறுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்பது ஒன்பதாவது குறள். இது முயற்சி ஊழ்வகையால், கருதிய பயனைத் தராதாயினும், தனக்கிடமான உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும் பாழாகாது. என்று, முயற்சியும் பயன்தருதல் கூறிற்று. எனினும் என்ற உம்மை, ஊழ் சாதகமாக நின்றவிடத்து முயற்சி மிக்க பயன் தரும் என்பதுபட நின்றது. இதுவும் விதியின் வலியை ஒத்துக் கொண்டதன்றி மறுக்கவில்லை.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்பது பத்தாவது குறள். இதற்குப் பரிமேலழகர், பயனை விலக்குவதாகிய ஊழையும் வெல்வர் அவ்விலக்கிற் கிளையாது வினையைத் தாழ்வற முயல்வார். என்று பொருள்கூறி, விளக்கவுரையில் ஊழை வெல்லமுடியாது என்ற கருத்துப்பட "ஊழ் ஒருகாலாக இருகாலாக அல்லது விலக்கலாகாமையின் பலகால் முயல்வார், பயனெய்துவாரென்பார", "உப்பக்கம் காண்பர்" என்றார் என்று கூறினார். உப்பக்கங் காண்பர் என்பது வெல்லுவர் என்ற பொருளுடைய தாயினும் இந்த இடத்து, அப்பொருளில் வரவில்லை என்பது அவர் கருத்து. வள்ளுவ நாயனாரதும் கருத்து அதுவே.

மேலும், பரிமேலழகர் "ஊழ் ஒரு காலாக, இருகாலாக அல்லது விலக்கலாகா மையின்" என்று கூறியதனால், ஊழ் விலக்கும் என்பதும், அது விலக்காத காலத்திலேயே முயற்சி பயன்தரும் என்பதும் பெறவைத்தார். பலகால் என்று அவர் கூறியதன் கருத்தைப் பின் ஓரிடத்துக் காண்போம். ஆகூழ் காலத்தி லாயினும், போகூழ் காலத்திலாயினும், அரசருக்கு முயற்சி அவசியம் வேண்டப் படுவதற்குக் காரணம் எட்டாவது, ஒன்பதாவது குறள்களாற் பெற வைத்த வள்ளுவனார், போகூழ் காலத்தில், முயற்சியால், சிறிது பயனாவது கிடைப்பத னாலும், ஆகூழ் காலத்தில் கருதியதனிலும் பெரும்பயன் கிடைப்பதனாலும், அவ்விருவகை ஊழும் ஒன்றன்பின் ஒன்று மாறிமாறி வருவதாலும், அவ்விதம் அவை மாறுங்காலம், முன் தெரிந்துகொள்ளுதற்கு அரிதாகலானும், விடாது முயலின், எக்காலத்தினாதல், பெரும்பயன் பெறுதல் நிச்சயமாதலானும், அவ்விடாமுயற்சியை ஊக்கும் பொருட்டு, விடாமுயற்சி ஊழை வெல்லும் என்றார். இங்கு வெல்லுதல் என்றது போகூழ் கழிந்து, ஆகூழ் ஆகுங்காற் பெரும்பயன் கிடைத்தலை. ஊழ் ஒரு காலாக, இருகாலாக அல்லது விலக் காமைக்குப் பிரமாணங்காட்டலரிதாகலானும், மேலைத்தேசத்து அரசனொ ருவன், ஆறுமுறை போர்முயன்று தோற்று, ஏழாம் முறை பெருவெற்றி பெற்றா னென்று, கேட்கப்படுதலானும், பரிமேலழகர் இருகாலாக அல்லது விலக்கா தென்றது நிச்சயப் பொருள் ஒருகாலாக, தாராதாயினும் அவர் அங்ஙனங் கூறியதும், விடாமுயற்சியை ஊக்கும் பொருட்டேயாம். அவர் அதை நிச்சய மாகக் கொண்டாராயின், பலகால் முயல்வார் என்னாது, முக்கால் முயல்வார் என்றிருப்பர் என அறிக. இனி ஊழை முயற்சி வெல்லும் என்று கொள்பவர்க்கு உதாரணங் காட்டலாகாமையுங் காண்க. சிலர் இதற்கு, மார்க்கண்டேயரை உதாரணமாகக் காட்டுவர். பொருள் வழிப்படும் மெய்ம்முயற்சி கூறிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்துக்கு, அருள் வழிப்படும் தவம் முயன்ற மார்க்கண்டேயரை உதாரணங் காட்ட வாகாமை காண்க. இதுபற்றிப் பின்னும் நோக்குவோம்.

இங்ஙனம் பொருந்தாக் கூற்றினால் வேறொரு கருத்துத் தோன்றச் செய்தல், ஆசிரியர்க்கு வழக்கமோ எனில், வழக்கம் என்க. திருவள்ளுவ நாயனார் இங்ஙனம் கூறிய மற்றுமோரிடத்தை இங்கு நோக்குவோம்.

"தவமும் தவமுடையார்க் காகும் அவம்அதனை,
அஃதிலார் மேற்கொள் வது"

என்பது தவம் என்னும் அதிகாரத்து இரண்டாவது குறள். "தவமும் முற்பிறப்பில் தவமுடையார்க்கே உண்டாகும். ஆகலான், முற்றவம் இல்லாதவர். அத்தவத்தைச் செய்ய முயல்வது வீண் முயற்சியாம்" என்பது அதன் கருத்து. முற்பிறப்பில் தவம் செய்யாதார், இப்பிறப்பில் தவம் செய்ய முடியாது என்றால் இப்பிறப்பில் தவம் செய்யாமையின், அவர் அடுத்த பிறப்பிலும் தவம் செய்ய முடியாது, அடுத்தடுத்த பிறப்புக்களிலும் தவம் செய்ய முடியாது, எக்காலத்துந் தவஞ்செய்ய முடியாது என்றாகும். இக்கருத்துப் பொருந்துவதா? தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் பொருந்தாக் கருத்துக் கூறுவாரா? ஆதலால், அவர் இப்பொருந்தாக் கூற்றினால், வேறொரு கருத்துத் தோன்றச்செய்தார், என்று கொள்வதே பொருத்தமாகும். இதனால் பரிமேலழகர் "பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவு போக்கலின், "தவமுடையார்க்காகும்" என்றார் என்று விளக்கம் தந்தார். தவம் செய்யத் தொடங்கிய அப்பிறப்பிலேயே பயன் தராது. அது பயன்தரப் பல பிறப்புக்கள் செல்லும் என்பதே திருவள்ளு வனார் தோன்றவைத்த கருத்தாகும். தவம் என்பதற்குத் தவத்தை முடிவுபோகச் செய்தல் என்று கருத்துக் கொள்ளல் வேண்டும்.

இங்ஙனமாகலின், முற்றவம் இல்லாதார், அத்தவத்தைச் செய்ய முயல்வது, வீண் முயற்சியாம் என்று அவர் கூறியதும், பொருந்தாக் கூற்றாகும். ஐந்தாவது குறளால் "செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்றவர், இங்ஙனம் கூறுவாரா? அன்றியும் "அவம்" என்ற சொல்தந்து கூறுவாரா, இதனால் பரிமேலழகர் "அத்தவமில்லார்க்கு அதனாலாகும் அறிவும், ஆற்றலும் இன்மையின், அத்தவம் முடிவுபோகாமையின், "அவமாம்" என்று கூறினார் என்று விளக்கந் தந்தார். தவத்தை முடிவுபோகச் செய்தற்குக் காரணமாகிய முற்றவம் இல்லாதவர், தாம் தவத்தைச் செய்யத் தொடங்கிய அப்ளபிறப்பில்தானே அதன் பயனைப் பெற லாம் என்று கருதிச் செய்வாராயின், அக்கருத்து அவமாம் என்பதே தோன்றிய பொருளாகும். அங்ஙனம் கருதித் தவம் செய்யத் தொடங்குவார் கருத்தில் வைத்து "அவமாம்" என்றாரன்றி தவம் செய்யத் தொடங்குதல் அவமாம், என்ற கருத்திற் கூறினார் அல்லர் என்று கொள்வதே பொருத்தமாகும். இன்னும் இக்குறள் தவத்தின் சிறப்புக்கூற வந்ததாகப் பரிமேலழகர் கூறியிருப் பதும் இங்கு நோக்கத் தக்கது. ஐந்தாவது குறளின் விளக்க உரையில், இரண்டாவது குறளாகிய இக்குறளும் அகப்பட, "இவை நான்கு பாட்டாலுந் தவத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது" என்று அவர் கூறியிருத்தல் காண்க.

மேலும் இங்ஙனம் கருத்துத் தோன்றச்செய்தல் பிற ஆசிரியர்களுக்கும் வழக்கம் என்பது தோன்ற இரண்டு இடங்களை எடுத்து நோக்குவோம். மெய்கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரங்கள் பதினான்கில் எட்டினைச் செய்தருளிய உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன் என்ற நூலின் ஆரம்பத்தில்,

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து"

என்றார். இதன் முதலடியில் இறைவனுக்கு அகரத்தை உவமையாகக் காட்டியவர், இரண்டாம் அடியில், உவமை இல்லாத இறைவன் என்றார். இது எங்ஙனம் பொருந்தும். சந்தான குரவராகிய அவர் பொருந்தாதது கூறினார் என்று கொள்ளலாமா? ஆகையால் அவர், அதனால் வேறுபொருள் தோன்றவைத்தார் என்று கொள்வதே பொருத்தமாகும். இறைவனுக்கு உவமை காட்டல் ஆகாது என்பதை எவரும் அறிவர். ஆனால் இறைவனை உணரவும், உணர்த்தவும் வேண்டியிருத்தலின், அறியாத பொருளை ஓரளவில் அறிவித்தலிற் சிறந்த உவமை கூறவேண்டியுமிருக்கிறது. அதனால் இறைவனுக்கு அகரத்தை உவமை கூறி, இறைவனுக்கு உவமை கூறின் அகரத்தை அல்லது பிறவற்றைக் கூறல் சிறப்பன்று என்று அகரத்துக்கே, இறைவனுக்கு உவமையாதற் சிறப்புண்மை தோன்றவைத்தார் என்று கொள்ளலாம். திருவள்ளுவ நாயனாரும் அகரத்தை இறைவனுக்கு உவமை கூறியதும் இங்கு நோக்கத்தக்கது. இனி, கடைச்சங்கப் புலவர் ஒருவரின் ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பு" என்ற கூற்றை நோக்குவோம். இதற்குச் சமைத்தலை மிகவும் மறந்த, பக்கம் உயர்ந்த அடுப்பு என்பது பொருள். இதில் உயர்தல் தொழில் இல்லாத அடுப்பின் பக்கத்தை உயர்ந்ததாகக் கூறியது பொருந்தாக் கூற்று. காலம் செல்லச்செல்லத் தேய்ந்திருக்கவேண்டிய அடுப்பின் பக்கம், தேயாதிருந்தமைபற்றி, அதனை உயர்ந்தது எனக் கூறி, அத்தேய்தலின்மைக்கு, சமைத்தலின்மை காரணமாதலின், அதனைப் பெறவைத்து, ஆடுநனி மறந்து என்பதனை வலியுறுத்தினார், அப்புலவர், என்று கொள்ளவைக்கின்றது அப்பொருந்தாக் கூற்று.

இத்துணையும் கூறியவாற்றால் உலகநெறி நிற்போர், ஊழை வெல்லல் ஆகாது என்பது கண்டோம். இனி வீட்டுநெறி நிற்போர், அதனை வெல்லல் ஆகுமா? என்பதுபற்றிச் சிந்திப்போம். இக்கட்டுரை ஆரம்பத்தில் ஊழ், அறத்தோடும் தொடர்புடையதென்றும், வீட்டு நெறி நின்றோரும், தம்மை ஊழ் தாக்கியதாகக் கூறியதுண்டு என்றுங் கண்டோம். இவ்விடத்தில், ஞானச் செல்வராகிய குமரகுருபரசுவாமிகளின் கருத்தைக் காண்போம். அவர்;

"உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே - உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே சாலும் கரி" என்றார்.

"சலியாத முயற்சியை மேற்கொண்டு, அதனால், ஊழின் வலியை அழிக்கும் வன்மையும் உளதே; இதற்கு உலகத்தார் எல்லாரும் அறியும்படி ஊழின் முளையைத் தின்று, இயமனின் உயிரைப் பருகிய, இளைஞராகிய மார்க் கண்டரே, பொருந்திய சாட்சியாம்" என்பது இதன் கருத்து. இதில் முயற்சி என்றது பொருள்பற்றிய சரீர முயற்சியன்று, அருள்பற்றிய தவ முயற்சியாகும். தவம் முயல்வார்க்கு ஊழையும் வெல்லல் ஆகும் என்கின்றார் சுவாமிகள். இதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பால்தின்று என்னாது," பான் முளைத்தின்று என்றதனால், ஊழை அழித்தல் ஆகாது; அது பயன் தருதலை அழிக்கலாம். என்ற கருத்துந் தோன்ற வைத்தலுங் காண்க. வன்மையும் என்ற உம்மையினால் வெல்லல் அரிது என்பதுந்தோன்ற வைத்து, உண்டே என்ற ஏகாரத்தால் வெல்லல் நிச்சயம் என்பதும் தோன்ற வைத்து, தவம் முயல்வார்க் கெல்லாம் ஊழை வெல்லல் ஆகாது என்பது காட்டியவாறும், தாமே மார்க்கண்டேயரைச் சான்று காட்டியதனால் அவர் போல்வார், வெல்லல் ஆகும் என்பது காட்டியவாறுங் காண்க. இங்ஙனமே, திருவள்ளுவ நாயனாருங் கூறுதல் கவனிக்கத்தக்கது.

"கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"

என்பது அவர் கூற்று. இதில் தவஞ் செய்வார்க்கு, இயமனையும் வெல்லுதல் ஆகும் என்பதுங் கூறி, குதித்தலும் என்ற உம்மையால் வெல்லலின் அருமையுங் காட்டி, நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு என்றதனால், தவமுயல்வார்க் கெல்லாம் வெல்லல் ஆகாது ஆற்றல் பெற்றவருக்கே ஆகும் என்பதுங் காட்டி, மார்க்கண்டேயரை உதாரணமாகக் கொள்ள வைத்தமை காண்க. ஒளவையார்,

"வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லால் கவலைபடேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி"

என்ற வெண்பாவால், விதியை யார் வெல்லல் ஆகாது, யார் வெல்லல் ஆகும் என்பதைத் தெட்டத்தெளியக் கூறியிருப்பது கற்றோர்க்குக் கழிபேருவகை தருவதாகும். ஒரே வெண்பாவில் முதல் மூன்று அடிகளால், உலகநெறியில் நிற்பார் வெல்லல் ஆகாது என்பதை வலியுறுத்தி, இறுதி ஓர் அடியால் சீவன் முத்தருக்கு விதி இல்லை என்று கூறி, விதியை வெல்லலாகுமோ? வெல்லல் ஆகாதோ? என்பதற்கு விடை தந்த அவரது சாமர்த்தியம் பாராட்டத்தக்கது. சீவன்முத்தி என்ற நிலை எய்தும்வரை, முத்தி நெறி நிற்பாரையும், ஊழ் தாக்கும் என்ற கருத்தும் தோன்ற அவர் கூறிய முறையும் இங்கு காணத்தக்கது.

இனி, விதியை, மதியால் வெல்லலாம், என்று கருதுவாரும் உண்டு. அக்கருத்துப் பொருந்துவதோ? பொருந்தாததோ? என்பதையும், அத்தவ மூதாட்டி ஒரே வெண்பாவில் வைத்து விளக்கியிருக்கின்ற அருமைப் பாட்டை நோக்குவோம்.

"சிவாய நம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்"

என்பது அவர் வாக்கு. இதில் அவர் சிவாயநம என்று தியானித்துக் கொண்டிருப் பவர்களுக்கு, ஒருபோதும் துன்பமில்லையென்றும், அங்ஙனம் இருத்தலாகிய இதுவே, விதியை வெல்லுவதற்கு உபாயமாகிய மதியென்றும், மற்றைய இடங்களிலெல்லாம், விதியே மதியைத் தன்வயமாக்கி முற்பட்டு நின்று, தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனைத் தரும் என்றுங்கூறினார். விதியே மதியாய் விடும் என்பதனை,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

என்னும் திருவள்ளுவர் வாக்கினுங் காண்க.

இங்ஙனம் கூறியவற்றால், உலகநெறி நிற்போர், சரீர முயற்சி, மதி முதலிய எவ்வாற்றானும் விதியை வெல்லல் ஆகாது என்றும், முத்திநெறி நிற்போரையும் விதி தாக்குதல் உண்டென்றும், சீவன்முத்திநிலை எய்தினோரை அது தாக்காது என்றுங் கண்டோம். அறிஞர்கள், இக்கட்டுரையில் தவறு காணில் இகழாது, திருத்தி, நிறைவு செய்து, வேண்டில் மேலும் ஆராய்ந்து முடிவு கண்டு அமைவர்; அவர்க்கு அது இயல்பாகலான்.

**நன்றி:** *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்*
**வெளியீடு:** *சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை - துர்க்காபுரம், தெல்லிப்பழை. 06.03.1985.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அம்மையார் அவர்களது
வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்கு 1974ஆம் ஆண்டு அகில இலங்கை இந்ததுமாமன்றம் நடத்திய பாராட்டு விழாவில் வெளியிடப்பெற்ற நூலில் பிரசுரமான கட்டுரை மேலதிக தகவல்களுடன்

# சைவத்தமிழ் உலகின் தனிச் சொத்து சொல்லின் செல்வி தங்கம்மா

### தொண்டர் தொண்டன்

1927ஆம் ஆண்டு மகாத்மாகாந்தி அடிகள் இலங்கைக்கு வருகை தந்தார்கள். நாடு முழுவதும் சென்றார்கள். சென்ற இடமெல்லாஞ் செழுமையான சொற்பொழிவுகள் செய்தார்கள். யாழ்ப்பாணமும் சென்றார்கள். அங்கும் பல பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் உரை நிகழ்த்தினார்கள். அவற்றுள் சைவத்தமிழ் மகளிர் பண்பாட்டு நிலையமாக விளங்கும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி இங்கு நினைவு கொள்ளக் கூடிய ஒன்றாகும். அப்பகுதியின் சுருக்கம் பின்வருமாறு.

"பள்ளிப் பருவம் முடிந்ததும், பெரும்பாலான பெண்கள் பொதுநலத் தொண்டு வாழ்விலிருந்தும் மறைந்து விடுகின்றனர். 'சைவசமயிகள்' எனக் கூறிக் கொள்ளும் (இந்துக்கள் என்று அவர் கூறவில்லை 'சைவசமயிகள்' என்றே கூறினார். "You Claim to be Saivites" என்பதே அவரது ஆங்கில வாக்கியமாகும்) இக்கல்லூரியில் பயிலும் மாணவிகளாகிய நீங்கள் அப்படியாக மறைந்து விடாது, தொண்டு வாழ்வில் பெருமை பெற்றுயர்ந்த உங்கள் குலத்துதித்த உத்தமப் பெண்மணிகள் போல் உலகூட்டும் நல்ல பொதுப்பணிகளாற்றிச் சமூகத்தில் மகளிர் திலகங்களாக ஒளிபரப்ப முன்வரவேண்டும்" என்பதே அப்பகுதியாகும்.

ஆம்! மகாத்மாக்களின் வாக்குகள் - எண்ணங்கள் - ஆசீர்வாதங்கள் என்றும் பொய்ப்பதில்லை; நிலைகொள்ளாது போவதுமில்லை. வலிமைபெற்ற கடவுட் தன்மை அவற்றிற்குண்டு. அதனாலன்றோ கடவுளோடொப்ப அவர்கள் மதித்துப் பேசப்படுகின்றனர்; வைக்கவும் படுகின்றனர். இப்படியான கடவுட் தன்மைமிக்க காந்தியடிகள் இராமநாதன் கல்லூரியில் அன்று விடுத்த வேண்டுகோள் அவம் போகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அக்கல்லூரியில் மகாத்மாவின் பேச்சைக்கேட்ட மாணவிகளில் எத்தனைபேர் பொதுவாழ்வில் ஈடுபட்டுழைத்துப் பெருமைபெற்று வாழ்ந் தனரோ அன்றி இன்றும் வாழ்கின்றனரோ யாமமறியோம். ஆயின், அம்மகான் இராமநாதன் கல்லூரியில் உரை நிகழ்த்தியபோது, பெற்றோர் மனம்மகிழத் துர்க்கை அம்மன் கோவில் திருவீதியில் தன் மெல்லடி வைத்துச் சின்னநடை பயின்று கொண்டிருந்த செங்கீரைப் பருவத்துச் சிறுமி ஒருத்தியின் செவிகளில் அப்பேச்சின் தெய்வ அலை பாய்ந்து சென்று பதியப்பெற்று அத்தெய்வ அலை யின் செறிவால் அக்கல்லூரியில் பின்னாளில் தனது உயர்கல்வியைப்பெற்று வெளியேறியதுடன், சைவசமயிகள் என மகாத்மா சொல்லிய பொருளை நுண்ணிதின் உணர்ந்து, அவர் வேண்டி நின்ற பெண்கள் சமூக வாழ்வு இலட்சியக் கனவை முழுமையாக நனவாக்கிவரும் மகளிர் திலகத்தைச் சைவத்தமிழ் உலகம் இன்று நன்கு அறியும். அவர்தான் பம்பரம்போற் சுழன்று தீந்தமிழ்த் தென்றல் சொற்பொழிவால் நாளும் சைவமும் தமிழும் பரப்பி நல்லறம் புரிந்துவரும் மேல்வரிச்சட்டச் சொற்பொழிவாளர்களுக்குத் தான் வரம்பாகி நிற்கும் இயல்புடையச் சிவக்கனி, சொல்லின் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக் குட்டி ஆவார். இன்று சைவத்தமிழ் உலகின் தனிச் சொத்தாகிவிட்ட இவரின் வாழ்க்கையோடொட்டிய குறிப்புக்கள் சிலவற்றை இம்மலரில் முகிழ்க் கின்றனம்.

**பிறப்பு:**

இரத்தாச்சி ஆண்டு மார்கழிப் பூரணையோடு கூடிய மிருகசீரிடம், திருவெம்பாவை 09ஆம் பூசை நாள் (07.01.1925). கடந்த மார்கழிப் பூரணை மிருகசீரிடத்தோடு கூடிய திருவெம்பாவை ஒன்பதாம் பூசைநாள், ஆங்கில நாட்குறிப்புப்படி 07.01.1974இல் வந்தமை, பாராட்டுவிழா எடுக்கும் இஞ்ஞான்று கருத்திற் கொள்ளத்தக்க ஒன்றாகும்.

**ஊர்:**

யாழ்ப்பாணத்துப் பழைய பதினெண் ஊர்களில் ஒன்றான தெல்லிப்பழை. குறிச்சிப்பெயர் குளமண்கால். மருதநிலச் செறிவுடையதாகப் பண்டைநாளில் இருந்தபடியால் வந்தபெயர் இதுவாகும். தெல்லிப்பழையின் பழைய பெயர் தல்லிப்பள்ளி. தல்லிப்பள்ளி மருவியே தெல்லிப்பழை ஆயது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டிய மாருதப்புரவிகவல்லி தன் குன்மநோய் நீங்கி இளமையும் அழகுமுடையவளாய் விளங்கிய காலத்தில் தங்கிய இடம் இதுவாதலின், தல்லிப்பள்ளி எனப்பட்டதாம்.(தல்லி - இளமையுடையவள், பள்ளி - சிற்றூர்)

**தந்தையார்:**

அப்பாக்குட்டி, தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் தேர்ச்சியுடையவர். மலைநாட்டில் ஆசிரியராக விளங்கியவர். நித்திய உடல் நலக்குறை காரணமாக அத்தொழிலினின்றும் தாமாகவே விலகிக் கொண்டவர். பின்னாளில் ஊரிலும் அயல் ஊர்களிலும் உள்ள மாணவர்களுக்குப் பாடம் கற்பித்து வந்தவர். சிறப்பாக இவர் விரும்பிப் பழகியவர்கள் அந்தணர் குலத்தவராவர். 1960இல் இயற்கை எய்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாயார்:**

தையற்பிள்ளை, நல்ல கல்வி கேள்வி ஞானமுடையவர். வாக்குண்டாம் முதலிய நீதி நெறி வரம்பு தெரிந்தவர். நோக்கும் எப்பொருட்கும் பேர் நுவன்றிடு தேக்குசீர் நிகண்டு செம்மையாகத் தெளிந்தவர். தியாகப் பிறவி. ஐந்தெழுத்தை தஞ்சமாகக் கொண்டவர். குடும்பம் வறுமையின் கொடுமுடியில் சிக்கித் தவித்த பொழுதும், தளரா மனத்துடன் குடும்பச் சுமையைத் தாங்கி மனையறம் பேணி நடாத்திய சோர்விலாப் பெண். 1957இல் இவ்வுலகை நீத்தவர்.

**சகோதரர்கள்:**

நாலு பெண்களும் ஒரு ஆணுமாக ஐவர் கொண்ட குடும்பம். இரண்டாம் புதல்வி அம்மையார். தமக்கையாரும் தம்பியாரும் பல ஆண்டு களுக்கு முன்னர் இயற்கை எய்திவிட்டனர். இன்று இரு சகோதரிகள் உளர்.

**குலதெய்வம்:**

அசைவிலாச் சிவனடியே சிந்திக்கும் குடும்பம். ஆயின் துர்க்கை அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள்.

**கல்வி:**

துர்க்கை அம்மன் கோவிலில் ஏடு தொடக்கப்பட்டது. ஆரம்பப்பள்ளி மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள அமெரிக்க மிஷன் தமிழ்ப் பாடசாலை. பாலர் வகுப்பு முதல் 5ஆம் வகுப்புவரை இங்கு கற்றார். காலம் 1930 - 1935. 6ஆம் வகுப்பு முதல் 7ஆம் வகுப்புவரை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை. காலம் 1936 - 1937. இங்கு 7ஆம் வகுப்பிற் கல்வி கற்கும்பொழுது நடந்த பேச்சுப்போட்டியொன்றில் முதலிடம்பெற்று ஞானப்பனுவலாகிய திருவாசக நூலைப் பரிசாகப்பெற்றார். இன்று "பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசை யேன்" என்ற பெருநோக்கோடு, சைவம் ஓங்கவும், தமிழ் தலையெடுக்கவும், சிவமயம் எங்கும் தேங்கவும், மெய்யறிவு நிலைகொள்ளும் நிலைபெருகவும், பல்லாயிரவர் கேட்டின்புற்றுக் குதூகலிக்கும் தெய்வமணங்கமழுந் தெவிட்டாத இன்சுவைத் தேன்மாரிச் சொற்பொழிவுகளை அம்மையார் ஊர் ஊராக நாள்தோறும் சென்று சென்று உதிர்ப்பதற்கும், பட்டங்கள், பதக்கங்கள், பட்டாடைகள் பரிசிலாக நல்லோர் வழங்கவும், பாராட்டு விழாக்கள் எடுக்கவும் அடிதளங்கோலிவிட்ட இடம் விசாலாட்சி வித்தியாசாலையும், அன்று அங்கு நடைபெற்ற பேச்சுப்போட்டியும், அதில் அவர் பெற்ற பரிசில் நூலாகிய திருவாசகமுமேயாகும்.

நன்னாவால் ஆற்றும் ஞானப்பனுவல் உரைகேட்க நாமகளும் நயந்து நாடி வருமளவு புகழ் பூத்த நன்மணி ஒன்று நம் மத்தியில் தோன்ற, அன்று கால் கோளிட்டு வைத்த அவ்விசாலாட்சி வித்தியாசாலையும், அதற்குக் காரணமாக விருந்த ஆசிரியரும் மானசீகமான எமது வாழ்த்திற்கும் வணக்கத்திற்கு முரியவராவர்.

நடுநிலைக் கல்வி அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் தொடர்ந்தது. காலம் 1938 - 1940. இங்கு இவருக்குத் தகைசான்ற ஆசிரியர் ஆதரவு கிடைத்தது. தமிழ், சமயம், இலக்கணம், இலக்கியம் ஆகிய பாடங்களை ஆர்வத்துடன் விரும்பிக்கற்க வைத்தவர்கள், இங்கு அக்காலத்தில் சிறந்த ஆசிரியர்களாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பட்ட பண்டிதர் சின்னத்தம்பி, பண்டிதர் முருகேசு ஆகியோராவர். இங்கு இவர் கற்ற காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மரபுப்படி சைவத்தை ஈழத்தில் வளர்க்கும் நோக்கோடு கொழும்பு விவேகானந்த சபையால் நடாத்தப்பட்டு வரும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைகளில் 1938, 1939ஆம் ஆண்டுகளில் முதன்மைச் சித்திபெற்றுச் சபையார் பரிசில்கள் பெற்றிருக் கின்றார். 1937ஆம் ஆண்டிலும் இப்பரிசில் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தந்தையாரை உழைக்க முடியா நோயாளியாக விதி செய்துவிட்டபடியினால், குடும்பம் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நேரம் கல்வியிற் சிறந்து விளங்கிய செல்வி தங்கம்மாவிக்கு சதானந்த வித்தியாசாலை முகாமையாளராக விளங்கிய அளவெட்டியூர் வள்ளல் நாகலிங்கம் அவர்களது பேராதரவு கிடைத்தது. பிள்ளாய்! படிக்க விரும்புமளவிற்கும் நீர் படிக்கலாம், வேண்டிய உதவிகளை இயன்றமட்டும் யான் செய்கின்றேன், என அவர் கூறி உதவி வந்தார். ஆயின் பொல்லாக்காலன் அவரை நீண்டகாலம் வாழவிடவில்லை. உயர் கல்விக்காக ஆசிரியப் பயிற்சிப்பெற இவர் செல்வதற்குச் சில மாதங்கட்கு முன்னர் காலன் வள்ளல் உயிரை வௌவிவிட்டான். இதனால் தங்கள் சொத்துக்களை ஈடு வைத்துப்பெற்ற பணத்தைக் கொண்டே உயர்கல்விச் செலவுகளைச் செய்ய நேரிட்டது. வள்ளல் நாகலிங்கம் காலத்தினாற் செய்த உதவியை நெஞ்சில் நீக்கமற நினைந்து கொண்டிருப்பவர் எமது அம்மையார்.

1940இல் சதானந்த வித்தியாசாலை மூலம் தோற்றிய சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியவர், ஆசிரியர் பயிற்சிப் புகுமுகத் தேர்விற்கு அடுத்த ஆண்டு தோற்றி அதிலுஞ் சித்தியெய்தினார்.

**உயர்நிலைக்கல்வி:**
சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் உயர்நிலைக் கல்வி கற்றார். இங்கு 1941 செப்டெம்பர் தொடக்கம் 1944 ஆகஸ்ட்வரை ஆசிரியர் பயிற்சிபெற்று பயிற்றப்பட்ட ஆசிரியர் தகைமையுடன் வெளியேறினார். இங்கு இவருக்குத் தமிழாசானாக வாய்த்தவர் இலக்கிய வித்தகர் பிரம்மஸ்ரீ ஏ.எஸ். சுந்தரராஜ ஐயங்கார் ஆவர். இலக்கிய நூலாகிய இராமாயணத்தில் அம்மையாருக்கு ஈறிலா ஈடுபாடுவரக் காரணமாக இருந்தவர் இவ்வாசிரியரே.

**ஆசிரியர் நியமனம்:**
பயிற்றப்பட்ட ஆசிரியத் தகைமை பெற்ற அம்மையார் கல்வி கற்பித்த - கற்பிக்கும் பாடசாலை விவரங்கள்:

1944 - இல் பதில் ஆசிரியர் நியமனம் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியா சாலை

1945 - 1948 : மட்டக்களப்பு சென் யோசேப் கன்னியர்மடம்
1949 - 1959 : கொழும்பு பாத்திமா பாடசாலை
1960 - 1963 : அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை
1964 : தொடக்கம் ஓய்வுபெறும் வரை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**பட்டப்படிப்புக்கள்:** செல்வி தங்கம்மா யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கப் பண்டிதர் பட்டமும், சைவசித்தாந்தச் சைவப்புலவர் பட்டமும் பெற்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இத்தேர்வுத் தேர்ச்சிப்படி விவரங்கள்:**

**1941**இல் பிரவேசபண்டிதர்
**1953**இல் பாலபண்டிதர்
**1954**இல் பண்டிதர்
**1958**இல் சைவப்புலவர்

பண்டிதர் தேர்வுக்குரிய தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை இலக்கண இலக்கிய ஆராச்சி ஏறாக விளங்கிய மகாவித்துவான் சி.கணேசையரது தலைமாணவ ராகிய கட்டுவன் சைவமடத்தடிப் பண்டிதர் இ. நமசிவாயதேசிகரிடம் முறையாகப் பாடங்கேட்டுத் தெளிந்தவர். இப்பட்டப் பரீட்சைகளுக்குத் தேவையான பாடநூல்களைக் கொழும்பு விவேகானந்த சபை நூல்நிலையத்திலிருந்தே பெற்றுப் படித்துவந்துள்ளார். இதனால் தனது வாழ்க்கைப்படிகளில் தன்னை முன்னேற்றி வைத்த மேற்குறித்த பெரியார்க்கும், சபைக்கும் தான் என்றும் நன்றிக் கடனுடையவர் எனக் கூறிக்கொள்வார் அம்மையார்.

**சொற்பொழிவு:**
**1941**இல் **16**வது அகவையில், இராமநாதன் கல்லூரியில் அப்பூதியடிகள் பற்றிப் பேசியபேச்சே, முதன் முதலாகப் பிள்ளையார் சுழியிட்ட அம்மையார் சொற்பொழிவாகும். அன்று தொடங்கிய சொற்பொழிவு இன்று அம்மையாரை வானத்திற்கு கொண்டு செல்கின்றது. இற்றைவரை ஆயிரத்துக் கதிகமான சொற்பொழிவுகளை ஈழத்திலும் வெளிநாட்டிலும் நிகழ்த்தியுள்ளார். **1960**ஆம் ஆண்டிற்குப்பிற்பட்ட காலத்தில், இந்நாட்டில் செல்வி தங்கம்மாவின் சொற்கேளாத நகரமொன்று இருக்கமாட்டாதென எண்ணுகின்றோம். சிறப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள கோவிலோ, ஊரோ ஒன்றேனும் தப்பியிருக்க மாட்டாது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேச வருகின்றார் என்றால், அதற்குத் தனியான ஒரு மதிப்பும் ஆட்களும் வருவார்கள். இவர் மட்டக்களப்பில் ஆசிரியராக இருந்த காலத்தில், **1946 - 1948** வரை ஞாயிற்றுக்கிழமைகளில் சமயச் சொற்பொழிவுகள் அந்நாள் மாவட்ட நீதிபதியாக விளங்கிய பொன் ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நிகழ்த்தியுள்ளார்கள். இராமகிருஷ்ண சபையிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதுண்டு.

கொழும்பில் முதன்முதலாக ஆற்றிய சொற்பொழிவு, **1953**ஆம் ஆண்டு விஜய தசமி நாளன்று விவேகானந்தா சபையில் நிகழ்த்திய "நோன்பின் மகத்துவம்" பற்றிய உரையாகும். **1956** இலும் மேற்படி சபை மண்டபத்தில் நாவலர் விழாவின்போது, மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னைநாள் தலைவ ராகிய பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் தலைமையில் உரையாற்றியுள்ளார். தொடர்ந்து **1957** இல் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் நடைபெற்ற "பத்துப்பாட்டு" மாநாட்டில் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் விரிவுரை செய்துள்ளார்.

மேலே கூறப்பட்டவை சில குறிப்பிடத்தக்க சிறப்புச் சொற்பொழிவுகளே தவிர, இக்கால எல்லைக்குள் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் வேறும் பலவுள. விரிவஞ்சி அவற்றை விடுத்துள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான உயர்வுபெற்ற சொல்லின்செல்வி, கட்டளைப்படி ஆண்டுதோறும் சொற்பொழிவாற்ற வேண்டிய சில இடங்கள் உண்டு. அவை திருக்கேதீச்சரம், திருவாசக மடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் மார்கழித் திருவெம்பாவை நாட்களில் எடுக்கப்படும் திருவாசகவிழா, காரைநகர் மணிவாசகர் சபை எடுக்கும் மணிவாசகர் விழா, அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் சேக்கிழார் விழா, குரும்பசிட்டி அம்மன் கோயில் உற்சவகால விழா ஆகியனவாகும். இவ்வாறு புகழ்பூத்த செஞ்சொற்செல்வியின் பெருமையும், திறமையும் கடல்கடந்த தமிழ் பேசும் நல்லுலகிற்கும் எட்டிவிட்டது. அங்கிருந்து அழைப்புக்கள் வந்தன. அம்மையார் அங்கெல்லாம் சென்று ஈழத்தின் சைவத் தமிழ்க்கல்வி சிறப்பினை நிலைகொள்ளச் செய்து வந்துள்ளார்கள்.

வெளிநாட்டுச் சொற்பொழிவுகள் - **1965** டிசெம்பரில் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த வைரவிழாவிலே உரையாற்றியுள்ளார்கள். இவ்வரங்கிலாற்றிய உரைச்சிறப்பைக் கேட்ட அண்ணாமலை பல்கலைக்கழகத்தினர் அழைப்பிற்கிணங்க அங்கும் சென்று "சிலம்பு" பற்றி உரையாற்றிச் சிறப்பு செய்யப்பட்டார்.

**1971** ஏப்ரலில் மலேசியா சென்று பல இடங்களில் சொற்பொழிவாற்றி மதிப்புச் செய்யப்பட்டார். இங்கு இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் வடிவே "மலேசியச் சொற்பொழிவுகள்" என்ற இவரது நூல். இங்கு இவர் சென்ற கதை தனிக்கதையாகும். மலாயாவிலுள்ளோர் விருப்பத்திற்கு இணங்க, அங்குள்ள திரு. வ. செல்வநாயகம் அவர்களது வேண்டுகோள்படி இப்பிரயாணத்திற்கு ஆக வேண்டிய ஒழுங்குகளை இங்கு செய்தவர்கள் காரைநகரைச் சேர்ந்த திருவாளவர்கள் தில்லையம்பலம், பொன்னம்பலம் ஆகியோர் ஆவார். பிரயாணத்திற்குச் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி ஏப்ரல் **8**ஆம் நாள் அங்கு நிற்க வேண்டும். அன்று அங்கு நிகழ்ச்சியும் கூட இருந்தது. ஆனால் இங்கு அந்நாளிற்றான் சேகுவராக் குழப்பம். நாட்டில் ஊரடங்குச்சட்டம். எவரும் எங்கும் பிரயாணம் செய்ய முடியாத சங்கட நிலை. மலேசியா பிரயாணம் குறித்தப்படி இனியில்லையென்ற நிலை வந்துவிட்டது. ஆயின் துர்க்கைதன் அடியாளை விட்டுவிடவில்லை. ஏதோவொரு வடிவத்தில் தன்பேரருளால் பல இடர்களையும் நீக்கி, ஊரடங்குச்சட்ட நேரத்தில் **6**ஆம் நாள் வானூர்தி வழியாக தனியே கொழும்பு சென்று, அங்கிருந்து மறுவூர்தி பெற்றுக் குறித்தநாளன்று மலாயா போய்ச்சேர வைத்துவிட்டார். வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லான் மற்று நானறியேன் மறுமாற்றம் என்ற உறுதிப்பாடான - இறுக்கமான அடியவள் பிடி துர்க்கையை இரங்கி உதவ முன்வைத்துவிட்டது. இவ்வளவு தூர இடர்பாடான பயணத்திற்கு வழித்துணையாக இவருக்கு இருந்தது, துர்க்கையம்பாளின் படம் ஒன்றே ஒன்றாகும்.

மேலும் **1972** ஏப்ரலில் சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கத்தார் மேற்கொண்ட ஒழுங்குகளின்படி மலாயா சென்று, சொற்பொழிவுகள் நிகழ்த்தி பெருமதிப்பெல்லாஞ் செய்யப்பெற்று நாடு திரும்பினார்.

மலேசியா பிரயாண காலங்களில் சிங்கப்பூர் சென்று சொற்பொழிவுகள் ஆற்றி மதிப்புச் செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அருள்நெறியும், அறநெறியும் தழைத்தோங்க சைவசமயத்தையும், தமிழையும் வளர்த்து வருபவர்களும், ஈழத்து பெரும் புலவர்கட்கெல்லாம் காலத் திற்குக் காலம் பட்டங்களும் பரிசில்களும் வழங்கி ஆதரித்து வந்தவர்களுமான அபிடேக பரம்பரை சார்ந்த ஆதீனங்களுள் ஒன்றான திருவாவடுதுறை ஆதீனத் தார் செவிக்கும் அம்மையார் நாவன்மையும் புலமையும் எட்டவே, ஆதீனத்தார் சார்பில் **1973** ஒக்டோபரில் திருவிடைமருதூரில் நடைபெற்ற திருமுறை விழாவிற்கு அழைப்புச் செய்து, உரை நிகழ்த்துவித்து உள்ளம் பூரித்ததுடன் திருமுறைக் கருத்தரங்கில் மாதர் பகுதித்தலைமையும் தாங்கச் செய்து ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரியர் சுவாமிகள் அம்மை யாருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவமும் செய்தார்கள். ஈழம்திரும்பி வருகையில் பலாலி வானூர்தி நிலையத்தில் பெருந்தொகை சைவ அன்பர் களாலும், பள்ளி மாணவர்களாலும் வரவேற்று உபசாரம் செய்யப்பட்டார். அதனைத்தொடர்ந்து பல இடங்களிலும் இவருக்கு வரவேற்று உபசார வாழ்துக் கூட்டங்கள் நடந்தன.

**சேவைநலம் பாராட்டு:** செல்வி தங்கம்மா சைவத்திற்குந் தமிழிற்குஞ் செய்துவரும் சேவை நலத்தைப் பாராட்டி, **1973** ஆகஸ்டில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர் முதன்முதலாக விழா எடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட்டங்கள்:** பயிற்றப்பட்ட முதலாம் தர ஆசிரியர், பண்டிதர், சைவப்புலவர் ஆகியவை இவர் பெற்ற கல்வித் தகமை சான்றுப்பட்டங்கள் சொல் வித்தகத் திற்காக பெற்ற பட்டங்கள் விவரங்கள்:

| ஆண்டு | பட்டம் | வழங்கியோர் |
|---|---|---|
| 1. 1966 திசம்பர் | செஞ்சொற் செம்மணி | மதுரை ஆதீனம் |
| 2. 1970 ஆகஸ்ட் | சிவத்தமிழ்ச் செல்வி | காரைநகர் மணிவாசகர் சபை |
| 3. 1971 திசம்பர் | சித்தாந்த ஞானசாகரம் | காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் |
| 4. 1972 பெப்பிரவரி | சைவதரிசனி | இராஜேஸ்வரி பீடாதிபதி (தமிழ்நாடு) |
| 5. 1972 ஏப்பிரல் | திருவாசகக் கொண்டல் | மலேசியா சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கம் |
| 6. 1973 பெப்பிரவரி | திருமுறைச் செல்வி | வண்ணை - வைத்தீசுவரன் தேவஸ்தானம் |
| | சிவஞான வித்தகர் | அகில இலங்கை இந்துமாமன்றம் |
| | துர்க்கா துரந்தரி | தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் |
| 7. 1974 ஜனவரி | சிவமயச் செல்வி | ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் |
| 8. 1991 | கலாசூரி | இலங்கை அரசு |
| 9. 1998 | கலாநிதி | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| 10. 1999 | துவிஜோத்தமி | கனடா சைவ சித்தாந்த மன்றம் |
| 11. 2003 | ஆளுநர் விருது | வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு, திருக்கோணமலை. |
| 11. 2007 | உலக ஆன்மீக மறுமலர்ச்சியாளர் | ஹவாய் சைவ ஆதீனம் |

***2008.06.15*** *அன்று சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்கள் ஸ்ரீ துர்க்காதேவியின் பாதாரவிந்தங்களை அடைந்தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அம்மையார் அவர்களைப்பற்றி
வெளிவந்த சிறப்பு மலர்களும்
அன்னை எழுதிய நூல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரது பொன் மொழிகளிலிருந்து...**

“தாய் ஒருத்தி ஒரு பொருளைத் தான் பெறும் போது அடையும் மகிழ்ச்சியை விடத் தனது பிள்ளை பெறும்போது அடையும் மகிழ்ச்சி அளப்பரியது. அதைப் போல் நாம் இறைவனுக்குக் கொடுக்க நினைப்பதையெல்லாம் இறைவன் உறையும் இதயங்களைக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு வழங்கினால் அது இறைவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று ஆவணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காதேவி தேவஸ்தான வரலாற்றில் ஒரு நாள்...

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 21 புதன்கிழமை (03-06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 188

வவுனியாவில் சமாதானம் பற்றிப் பேச்சு;
தெல்லிப்பழையில் கோவில் மீது குண்டு வீச்சு!

# துர்க்கை ஆலயத் தாக்குதல் குறித்து கிறிஸ்தவ மதகுருமார் கண்டனம்

## பக்தர்கள், அகதிகளைத் தாக்கும் பயங்கரத்தை நிறுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியதை கிறிஸ்தவ மத குருமார் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அனுப்பிய மகஜரிலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டு இடங்களில் கூடும் பக்தர்கள், அகதிகள் மீது தாக்குதல் நடத்துவதை தவிர்க்குமாறு கோரும் பிரஸ்தாப மகஜரில் யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளையும் ஒப்பமிட்டுள்ளார்.

## மட்டக்களப்புத் தாக்குதலில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம் ஜூன் 3

மட்டக்களப்பு பிரதான வீதியில் செங்கலடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலீஸ் ஜீப் மீது நேற்று முன்தினம் நண்பகல் 12.15 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது போராளி ஒருவர் வீர மரணமடைந்தார். ஜீப் பலத்த சேதமடைந்தது.

இந்தத் தாக்குதலில் மூன்று பொலீஸார் உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டது தெரிந்ததே.

இந்தத் தாக்குதலின் போது கப்டன் யசோதரன் அல்லது கிறிஸ்ரி (இன்னாசி இருடையராஜா — கரடியனாறு) என்ற போராளியே வீரமரணம் அடைந்தார். (உ-3

## மல்லைக்கீவப் பகுதி

01 - 07 - 1992 HOT SPRING

## TELLIPALAI TEMPLE ATTACK:

# Unprovoked, Intentional & Destructive

## Management Authority Releases Report

of the temple staff - those of the Chief Priest and one of his assistants.

The temple authorities have every reason to believe, that the Government itself is aware of the work of the temple, through the Red Cross Organisations and the state net - work.

A religious centre of such eminence should not be subjected to purposive attacks.

The temple authorities are

15 - 03 - 1992 HOT SPRING Page 5

# War Against People in Protected Areas

## Devastation of Valikamam North - Mallakam R D S Protests

to make the Tellippalai District Hospital OPD and Clinics functioning here adequately to serve patients has been successful to a great extent, having been able to obtain gifts of medicines from aid organizations and missions.

All these efforts have been nullified. Today the Mallakam Rural Development



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசொலி

விலை ரூபா: 5-00

# தெல்லிப்பழை அம்மன் கோயிலில் விமானக் குண்டு வீச்சு; 5 பேர் பலி

# HOT SPRING

VOL: 2 MONDAY 15th June 1992 ISSUE: 35-36

## Attack on Turkai Amman Temple

The news of the aerial bombardment of the Turkai Amman Temple at Tellippalai following almost on the heels of artillery shell attack on festival day at the Vattrapalai Amman temple is not only distressing but should be an eye-opener to all.

Temples are places of refuge for people in distress during war. In fact even Government's announce on certain occasions that people should go to the temples to avoid being victims of war activities.

Strangely enough, however, since the current war started Temples and churches in Tamil Eelam have been selective targets for attack.

Every time the Government of Sri Lanka launches an offensive in Tamil Eelam some Hindu temple or Christian church is bombed or shelled.

Now in regard to the Turkai Amman temple it is a very famous and popular temple in the north. Its prestige is known even outside Sri Lanka where Hindus live.

Apart from the large number of devotees who regularly attend this temple for worship there is also situated within the Temple complex an Orphanage for small children run by the Board of Trustees of the temple. The Board of Trustees have also set up some refugee camps to house war victims in the area. The temple premises is large enough to be easily identifiable. Also the Tellippalai Co-operative Hospital is just opposite the temple with its Red Cross emblems and so forth that there can be no question of misidentifying the temple even from the air. But not only was the temple and hospital bombed on May 31 but even after public protests made under the leadership heads of all religions in the north against the dastardly and desecrative acts of bombing Turkai Amman temple, the vicinity of the same temple was bombed again a couple of days later - and another famous temple, the Kalvalai Pillayar temple at Sandilipai was also bombed.

A reading of the war activities of the Government would reveal that under pretext of carrying out a *'war against Tigers and not against the Tamils'* the government is carrying on a genocide.

This again leads one to recount the acts of violence against the Tamils. In 1958 when violence was let loose against the Tamils a Hindu temple at Panadura was burnt down and its officiating priest burnt alive. How many temples and churches have been destroyed in Tamil Eelam after the current war? At the same time it is revealing a lot to know the efforts made by the Government to reconstruct and build new Buddhist shrines - especially in the areas of the Northeast under army control.

One wonders whether the Government is carrying out its constitutional duties to "*foster Buddhism*". The destruction of Hindu temples and Christian churches and the efforts to construct Buddhist temples and settle Sinhalese in Tamil areas, perhaps is a modus operandi to "foster Buddhism" cast as a duty of the state under the constitution of Sri Lanka.

Sri Lanka is multi-linguistic multi-racial and multi-religious as acknowledged by the government. But it is a theocratic state even under its own constitution which fact however, is sought to be hidden under words such as democracy and unity. But government's own actions positively prove that there is no democracy or unity in the island.

Sinhala-Buddhist chauvinism has carried out its 'war' campaigns against Christians, Indians, Muslims and Tamils at various intervals during this century. This is a fact that has to be taken into serious consideration by all. Every right thinking person and state should cry halt to Government's hypocrisy and prevent oppression of peoples and religions by Baudha-Sinhala chauvinism.

Independent Fortnightly

# HOT SPRING

Rs. 5-00

Vol. 2 15th June 1992 No. 35-36

# ATTACK ON TEMPLES— CAN NEVER HELP UNITY

## ALL RELIGIOUS LEADERS TELL GOVT. MASS PROTEST RALLY AT JAFFNA

## Hindu Temple With Refugees Bombed

The Hindu Temple, Sri Durga Devi Devasthanam at Tellipalai in the Jaffna peninsula, where over a hundred refugee families had sought shelter, was the object of aerial bombardment of the Sri Lankan Air Force on 31 May.

The head of the temple, Thangammah Appakuddi has in a letter to the London-based Standing Committee of the Tamil Speaking People (SCOT), a charitable organisation which has been providing relief assistance, informed that six persons were killed, 25 more were seriously injured and 100 more received minor injuries, and the temple was badly damaged in four successive bomb attacks.

In her report, Thangammah Appakuddi states that the attacks on the temple consisted of a grenade thrown from the helicopter on a parked Hospital Ambulance donated by the UNHCR, for bombings by bomber aircraft, and one barrel bomb from an Avro aircraft.

The temple runs a Childrens' Home consisting of 67 children, cares for six elderly persons and the home has a resident staff of six persons. The temple has been providing shelter for an additional 116 displaced families since June 1990. In addition to these persons, on the day of the attack as many as about 2500 persons had gone to the temple premises for safety, and most of these persons were displaced from their homes as a result of bombing operations.

On the instructions of the ICRC and SLRC, the temple had been flying on the top of the temple tower and at three other prominent places the flag internationally specified to be flown on top of religious buildings.

The people were completely taken unawares by the bombing – three died on the spot and three more died on admission to the hospital; 25 were seriously injured; over a hundred received minor injuries. Many parts of the temple building were destroyed. The attack had been unprovoked and intentionally destructive.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ATROCITIES COMMITED

## AT

## DURGA TEMPLE — TELLIPPALAI

## ON

## 31 - 05 - 1992

# Report on the Incident in Durga Devi Devastanam, Tellippalai - 31-5-1992

The Devasthanam ( the Managing Authority ), of the Sri Durga Devi Temple wishes to notify that the Temple premises had been subjected to aerial attacks on 31 - 05 - 92 between 12 - 15 p. m. and 12 - 45 p. m. causing death and destruction.

The attack consisted of:-

1. a granade throw from a helicopter on a parked Government Hospital Ambulance vehicle gifted by U. N. H: C. R.

2. Four bombings by the regular bomber aircraft and

3. One barrel bomb from an Avro aircraft

This temple runs a Children's Home consisting of 67 children. This home has a staff of six persons. Six elderly persons also come under its care. It has a regular temple staff residing within the temple complex.

Besides these permanent residents, the temple has been providing accomodation for 116 displaced refuge families since June, 1990. To add to these, there were persons who had come into the temple premises for safty, persons displaced by the security operations of 30th and 31st May, 1992. In all there were about 2500 persons at the time the incident took place.

( 1 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Such a vast number was gathered there because this temple has been considered a haven from these types of attacks. On S. L. R. C. and I. C. R. C. instructions, the temple had been flying on the top of the temple tower and at 3 other prominent places the flag internationally specified to be flown on the top of religious buildings.

The people were taken completely unawares by the bombing. Three died on the spot and three on admission at the Teaching Hospital, Jaffna. About twenty five had been badly injured and about 100 suffered minor injuries.

These bombings have caused destruction to the

(1) Vasantha Mandapam (the Assembly Hall inside the Temple).

(2) The Hall situated on the south eastern side - The Thirumurai Mandapam ( the Hall for chanting of Hymns ) which houses the office of the President of the Board of Management, Siva Thamil Selvi Thangammah Appacuddy.

There had been also damages caused to the residences of the temple staff - those of the Chief Priest and one of his assistants.

We are right now, unable to quantify in money terms the damage caused.

The worst shock has been that this temple which has been known throughout the North and in the entire Island for its exemplary and pioneer community services had been singled out for such a devastating aerial attack. This has disrupted the community life of the village and has created a great sense of dismay in the hearts of its devotees living in all parts of the country and wherever Sri Lankan Hindu Tamils have migrated.

( 2 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The attack had been unprovoked and intentionally destructive.

The temple authorities have every reason to believe, that the Government itself is aware of the work of the temple, through the Red Cross Organisations and the state net - work.

It was the confidence that the people had in this temple, the unshakable belief they had that such a prominent temple will never be attacked, as it had been the case for so long, that prompted the people to seek safety and shelter within the temple premises.

The destruction caused has disrupted life in the temple. We are unable to keep the children there and to continue the various community and social services the temple has been running.

A religious centre of such eminence should not be subjected to purposive attacks.

The temple authorities are grieved over the incident It wishes to urge that suitable action is taken to inquire how such wanton damage can be caused to unsuspecting believers.

We request the I. C. R. C to take immediate action to declare this as a "safety area" in view of its sacredness and sanctity.

We wish to appeal to the devotees to remain calm and continue to place faith in Durga Ambal, the great upholder of Dharma and Justice.

**Siva Thamil Selvi**
**Thangammah Appacuddy**
***President***

( 3 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறுக்கிழமை, ஏப்ரல், 29, 1971

# சைவசித்தாந்தம் கனிச்சாறு!

# குழந்தைகள் கூடப் பருக முடியும்

## சிரம்பானில் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா சொற்பொழிவு

### திருமுறைகளைப் பயின்று மயக்கம் தெளிவீர்: சித்தாந்த வித்தகர்

சிரம்பான், ஏப், 28—

இலக்கிய செல்வி தங்கம்மா அழகான ஓர் உவமானக் கதையைச் சொன்னார்.

ஒரு சமயப் பிரசாரகர் கப்பல் ஒன்றில் கடுக்கடலில் பிரயாணம் செய்துகொண்டிருக்...

சைவசமயம் கம்மைக் காட்டிற்குச் செல்லும் படி கூறவில்லை. கடலில் தோணி செல்லலாம். ஆனால் தோணிக்குள் கடல்நீர் புகக்கூடாது. அப்படி உலகில் நாம் வாழ வேண்டுமேயன்றி உலகத்திற்குள் வாழக்கூடாது. இது சைவ நெறியாகும்.

### வேற்றுமைகள்

அவன், நான் என்ற...



Tamil Nesan Press, 37, Jalan Ampang, Kuala Lumpur. Phone:

# கோவிலில் பண்டிதை தங்கம்மாவின் பக்தி முழக்கம் — முருகப் பெருமானை வழிபட்டு உய்யும்படி வலியுறுத்தினர்

கோலாலம்பூர், ஏப் 1.

இறைவன் ஒருவனே. அவனுடைய பெயர்கள்தான் பல. முருகனே இறைவன். ஆயிரம் நாமங்களில் வழிபட்டு வரும் தெய்வங்கள் எல்லாம் அவனே! பல கடவுள்கள் மரபிலே சென்று ஒரே கடவுள் வழிக்கு வருவதுவே சைவ சமயம்.

இந்த உண்மையை திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு கோலாலம்பூர் ஸ்காட் ரோடு கந்தசுவாமி கோவிலில் 'முருகக் கடவுளின் வழிபாடு'



# மலேஷியா, சிங்கப்பூர் தமிழர்கள் சமயத்தின் மீது காட்டும் ஆர்வம்!



அண்மையில் மலேசியா, சிங்கப்பூர் சென்று அரிய சமயச் சொற்பொழிவுகளை ஆற்றி தாயகம் திரும்பியுள்ளார் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. இவர் அங்கு 24 நாட்கள் தங்கியிருந்து 27 கூட்டங்களில் பங்குபற்றி உரையாற்றியுள்ளார். மலேசியா, சிங்கப்பூர் மக்கள் பற்றிய தமது கருத்துக்களை இங்கு தருகிறார்.

40 கோவில்களை தரிசித்தேன்

# சிரம்பானில் தங்கம்மா சொற்பொழிவு

சிவத்தமிழ்ச் செல்வி சைவப் புலவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 26-4-71 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் சிரம்பான் விவேகானந்த மண்டபத்தில் "வேதாந்தத் தெளிவு சைவ சித்தாந்தம்" என்னும் தலைப்பின் அரிய சொற்பொழிவாற்றுவார்கள்.

மூவார், சித்தாந்த வித்தகர் திரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

அன்பர்கள் அனைவரும் வந்து கேட்டு இன்புறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச் செல்வி, செஞ்சொற் செம்மணி, சித்தாந்த ஞானகரம், சைவப் புலவர் பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி யின்

## மலாயாவில் சொற்பொழிவுகளின் அட்டவணை

| தேதி | வாரம் | நேரம் | இடம் | ஊர் | விடயம் | ஏற்பாடு செய்வோர் | பெயர் (தொடர்பு கொள்ள வேண்டியவரின் விபரம்) | விலாசம் | ஊர் | | தொலைபேசி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்ரில் 7 | பு | 7.00 மணி | விவேகானந்த ஆசிரமம் | கோலாலம்பூர் | வரவேற்புரை — [illegible] கூட்டம் | [illegible] அபிமானிகள் விவேகானந்தா ஆசிரமம் | வ. [illegible] | 41 Jln: Thamby Abdullah Seks | K. LUMPUR | 03 | 27578 | கொ. [illegible] விமானத்தில் வரவு 3.50 மாலை ஏப்ரில் 7ம் தேதி புதன்கிழமை |
| | | | | | | | கு. [illegible] | 37 " | " | 03 | 80004 | |
| 8 | வி | 8.00 " | ஸ்ரீ மாரத்தாண்டவ கோவில் | மாறன் | இறைக் கடவுளின் வழிபாடு | | நவரத்தினம் | 66 M.P. Maran/Jerantut Road | MARAN | | 269 | [illegible] → மாறன் [illegible] |
| 9 | வெ | 7.00 " | கோவில் மண்டபம் | குவாந்தன் | திருநாவுக்கரசரின் திருவுள்ளம் | குவாந்தன் [illegible] | { M. [illegible] C. [illegible] | D. 334 Jln. Corry | KUANTAN | | 21216 | மாறன் → குவாந்தன் [illegible] |
| 10 | ச | 5.00 " | | குவாலா திரெங்கானு | கோவிலின் பயன் இல்லையே | இந்து சங்கம் | Dr. [illegible] நாயகம் | 29 Jln: Tok Lam | K.T'ganu | | 485 | [illegible] → [illegible] Dr. [illegible] |
| 11 | ஞா | 6.00 " | | கோட்டா பாரு | மக்கள் பிறப்பின் மாண்பு | இந்து சபை | Dato (Dr.) [illegible] | Vijaya Clinic | K. BAHRU | | 289 | [illegible] → [illegible] Dato [illegible] |
| 12 | தி | 2.00 " | "[illegible]" தொலைக்காட்சி நிலையம் | கோலாலம்பூர் | பேட்டி ? | — | MISS HYACINTH LEO | Television "Angkasapuri" | K. LUMPUR | 03 | 29037/ x 362 | [illegible] → [illegible] |
| " | " | 6.30 " | கந்தசாமி கோவில் | " | திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி | இலங்கை இலங்கைச் சைவர் சங்கம் | | 3 Lrg: Scott | " | 03 | 26577 | |
| 13 | செ | 10.00 மணி | ஆகாய வாணி | " | புத்தாண்டு வாழ்வு? (நல்வினைச் செல்வம் [illegible]) | — | Enche Hanif | Radio Malaysia | " | 03 | 23551 | |
| " | " | 5.00 மணி | கலா மண்டபம் | " | ஆறுமுக நாவலர் சிந்தனை [illegible] | இலங்கை இலங்கைச் சைவர் சங்கம் | | 3 Lrg: Scott | " | 03 | 26377 | |
| " | " | ~~7.30 " விவேகானந்த ஆசிரமம்~~ | | " | ஆலயம் அமைவது | ~~மலேசிய இந்து தர்மம்~~ | ~~[illegible]~~ | ~~9 Lrg Ang Seng Dua KL~~ | | ~~03~~ | ~~21806~~ | |
| 14 | பு | 6.00 " | ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் | " | கம்பர் கவிதை | மகா மாரியம்மன் கோவில் | S. [illegible] | Indian Bank | — | 03 03 | 83986 83467 | |
| 15 | வி | 6.45 " | தண்டாயுதபாணி கோவில் | ஈப்போ | மங்கையர்க்கரசியாரும் [illegible] அவையும் | தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (ஈப்போ கிளை) | M.S. கந்தையா | 8, Silibin Drive | IPOH | 05 | 5906 | [illegible] → ஈப்போ [illegible] M.S. கந்தையா |
| 16 | வெ | 7.00 " | Y.M.H.A மண்டபம் | தைப்பிங் | வள்ளுவர் காட்டிய வழி | இந்து [illegible] சங்கம் | Dr. T. மாணிக்கம் | 11, Jln: Thompson | TAIPING | | 2335 | ஈப்போ → தைப்பிங் [illegible] Dr. T. மாணிக்கம் |
| 17 | ச | | | குலிம் | சம்பந்தர் செந்தமிழ் | ஸ்ரீ ராம கிருஷ்ண ஆச்சிரமம் — [illegible] | G. ராஜகோபால் | 68, Jln. Padang | SUNGEI PATANI | | 2560 | தைப்பிங் → குலிம் ? |
| 18 | ஞா | 6.30 " | ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் | சுங்கை பட்டாணி | ஒரு வாசகத்தில் திருவாசகம் | " " | " | " | " | | " | குலிம் → சுங்கை பட்டாணி [illegible] C. ராஜகோபால் |
| 19 | தி | 6.30 " | ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தானம் | அலோர் ஸ்டார் | பெண்மையும் சேக்கிழாரின் ஒப்புமையும் | தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (கெடா உப கிளை) | Dr. K. [illegible] | 1/2 Jln Mesjid, Jitra | | | | சுங்கை பட்டாணி → அலோர் ஸ்டார் [illegible] Dr. K. [illegible] அலோர் ஸ்டார் → [illegible] |
| 20 | செ | | —— விடு | நாள் — பிரயாணம் | —— | —— | | | | | | |
| 21 | பு | 6.30 மணி | ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் | பெற்றாலிங் ஜெயா | பட்டினத்தார் பாடல் | பெற்றாலிங் ஜெயா இந்து சபை | S. [illegible] | 13, Lrg. Sentosa 'C' P. Jaya | | 03 | 54147 | [illegible] → [illegible] [illegible] |
| 22 | வி | 6.00 " | | [illegible] | திருக்கோவையாரும் சமயத்தத்துவமும் | | | | | | | |
| 23 | வெ | 6.30 " | நகரத்தார் மண்டபம் | செந்தூல் | காரைக்காலம்மையார் சிவானுபவம் | நகரத்தார் | | | | | | |
| 24 | ச | 3.30 " | கலா மண்டபம் | கோலாலம்பூர் | வேதாகமங்களும் நாவலர் நெறியும் | அருள் நெறிக் கூட்டம் | [illegible] [illegible] கந்தையா | 4, Lrg Sentosa 'A' P. Jaya | | 03 | 562677 | |
| " | " | 7.00 | சங்கீத அபிவிருத்திச் சபா | ? — | பண்ணும் பரதமும் | சங்கீத அபிவிருத்திச் சபா | [illegible] | 32, Jln Rozario KL | | 03 | 28196 | |
| 25 | ஞா | 10.00 காலை | கலா மண்டபம் | " | (குரு பூசை) யோகர் சுவாமிகள் | யோகர் சுவாமிகள் குருபூசைக் குழு [illegible] | K. [illegible] | 14 Jln Senangin off Jln Bunus K.L | | | | |
| " | " | 4.00 மணி | " | " | பிரியா விடைக் கூட்டம் | [illegible] | { வ. [illegible] ; தொ. [illegible] | c/o 41 Jln Thamby Abdullah Sel | K. LUMPUR | 03 | 27578 | |
| " | " | 6.30 " | " | " | சேக்கிழாரின் செந்தமிழ்ப்புலமை | இலங்கை இலங்கைச் சைவர் சங்கம் | | 3 Lrg: Scott | " | 03 | 26377 | |
| 26 | தி | 7.00 " | விவேகானந்த மண்டபம் | சிரம்பான் | வேதாந்தத் தெளிவு சைவ சித்தாந்தம் | நெகிரி செம்பிலான் இலங்கையர் சங்கம் | { S.S. [illegible] ; S. [illegible] | 2, Kiernan Crescent | SEREMBAN | | 4485 | [illegible] → சிரம்பான் [illegible] S.S. [illegible] |
| 27 | செ | 6.00 " | | மலாக்கா | சுந்தரர் தேவாரம் | | E. குலசேகரம் | '[illegible]' 405, Ujong Pasir | MALACCA | | 4644 | சிரம்பான் → மலாக்கா E. குலசேகரம் |
| 28 | பு | 6.00 " | ஸ்ரீ ராசமகா மாரியம்மன் கோவில் மண்டபம் | ஜொகூர் பாரு | சிவபணியின் சிறப்பு | ஸ்ரீ ராஜமாரியம்மன் கோவில் [illegible] | T. [illegible] | 16 Jln Dapat | JOHORE BAHRU | | 4787 | மலாக்கா → ஜொகூர் ? |
| 29 | வி | | ஸ்ரீ [illegible] ஆலயம் | சிங்கப்பூர் | | | S. M. [illegible] | | S'pore | | | ஜொகூர் → சிங்கப்பூர் [illegible] |
| 30 | வெ | | ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயம் | சிங்கப்பூர் | | | | | | | | |
| மே 1 | ச | | ஸ்ரீ [illegible] ஆலயம் | சிங்கப்பூர் | | | | | | | | |
| 2 | ஞா | | கொழும்புக்கு | விமானத்தில் | பிரயாணம் | | | | | | | |

N.T.P. & SONS SDN. BHD., K.L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# ஸ்ரீ கந்த சுவாமி கோவில்

**ஸ்கொற் ரோட்டு, குவாலாலம்பூர்.**

## யோகர் சுவாமிகள் நினைவு நாள்

__அறிக்கை__

சைவப் பெருமக்களே,

சித்தாந்த ஞானகரம், செஞ்சொற் செம்மணி, சிவத்தமிழ்ச் செல்வி, சைவப் புலவர், பண்டிதை,

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

நிகழும் விரோதிகிருது வருஷம் சித்திரைத் திங்கள் 12ம் நாள் (25-4-1971) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில், மேற்படி கோவில் சந்நிதானத்தில்

**"யோகர் சுவாமிகள்"**

பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். சைவ சமய அன்பர்கள் அனைவரும் திரண்டு வந்து கேட்டு இன்புறுமாறு தயவுடன் அழைக்கின்றோம்.

19-4-1971

அ. ஆறுமுகம்

---

உ
சிவமயம்



**ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் தேவஸ்தானம்**
**163, ஜாலான் பண்டார், கோலாலம்பூர்.**

# "விரோதிகிருது"
# தமிழ்ப் புத்தாண்டு விழா

பேரன்புடையீர்,

எதிர்வரும் "விரோதிகிருது" ஆண்டு சித்திரைத்திங்கள் முதல் நாள் (14-4-71) புதன்கிழமையன்று நமது தேவாலயத்தில் மேற்கண்ட தமிழ்ப் புத்தாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கையிலிருந்து இங்கு வருகை தந்துள்ள சிவத்தமிழ்ச்செல்வி, செஞ்சொற் செம்மணி, சித்தாந்த ஞானகரம், பண்டிதையுமாகிய திருச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது சிறப்புச் சொற்பொழிவு கீழ்கண்டுள்ள நிகழ்ச்சி நிரலின்படி நிகழ்ப்பெறும்.

__நிகழ்ச்சி நிரல்__

| | | |
|---|---|---|
| புத்தாண்டு பிறப்பு நேரம் | ... | 14.4.71 புதன்கிழமை காலை மணி 3.43 |
| விசேஷ பூஜை | ... | காலை மணி 6.30 |
| பஞ்சாங்கம் வாசித்தல் | ... | காலை மணி 7.00 |
| சிறப்புச் சொற்பொழிவு | ... | மாலை மணி 6.30 |

அன்பர்கள் யாவரும் கலந்து இன்புற்று இறைவியின் திருவருட் பிரசாதம் பெற்றேகுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்

கோலாலம்பூர்,
12-4-71

---

உ
சிவமயம்



# ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
## பெற்றாலிங் ஜயா

சைவப் பெருமக்களே,

__அறிக்கை__

சித்தாந்த ஞானகரம், செஞ்சொற் செம்மணி,
சிவத்தமிழ்ச் செல்வி, சைவப் புலவர், பண்டிதை,

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

நிகழும் விரோதிகிருது வருஷம் சித்திரைத் திங்கள் 8ம் நாள் [21-4-1971] புதன்கிழமை மாலை 7.00 மணியளவில் மேற்படி கோவில் மண்டபத்தில்

**"பட்டினத்தார் பாடல்"**

என்னும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தமிழ் அன்பர்களையும், சைவசமய அபிமானிகளையும் வந்து கேட்டு இன்புறுமாறு தயவுடன் அழைக்கின்றோம்.

15-4-1971.

---

# சங்கீத அபிவிருத்தி சபா

**குவாலாலம்பூர்**

சித்தாந்த ஞானகரம், செஞ்சொற்செம்மணி,
சைவப் புலவர்

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
**அவர்களின்**

# தீந்தமிழ்ச் சொற்பொழிவு

| | |
|---|---|
| கருப்பொருள்: | பண்ணும் பாதமும் |
| தலைமை: | முத்தமிழ்க் கலா வாணி, நிர்த்திய கலா டாக்டர் திருமதி பிரேமிளா கணேஷன் அவர்கள் |
| இடம்: | சங்கீத அபிவிருத்தி சபா |
| காலம்: | 24-4-71 சனிக்கிழமை மாலை மணி 7-00 முதல் |

இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாது, சைவ அபிமானிகளும், அங்கத்தவர்களும், மற்றும் அனைவரும் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து, செஞ்சொற்பெருக்கைச் செவிமடுத்துப் பயனெய்துமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

நிர்வாக சபை உத்தரவுப்படி,

மு. நாகலிங்கம்

கௌரவ செயலாளர்,

12-4-1971

Fine A. P. W. 100. Jalan Brickfields. K. L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கா துரந்தரிக்குக் கிடைத்த கௌரவம்...

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.



வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.

செஞ்சொற் செம்மணி, சைவப் புலவர், பண்டிதை,

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

(ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டுமுகமாக

காரைநகர் மணிவாசகர் சபையினரால் நடாத்தவிருக்கும்


# பாராட்டுவிழா அழைப்பிதழ்

நிகழும் சாதாரண ஆண்டு ஆவணித் திங்கள் 3ஆம் நாள் (19-8-70) புதன்கிழமை மாலை 6-00 மணியளவில் ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் காரைநகர்ச் சிவன் கோவில் வசந்த மண்டபத்தில்,

வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர்
திரு. ஆ. தியாகராசா M. A. M. Litt அவர்கள்
தலைமையில் சிறப்புற நிகழும்,
அன்பர்களையும் அபிமானிகளையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

| | | |
|---|---|---|
| அ. ஆண்டிஐயா, | | வே. செல்வநாயகம், |
| து. முருகேசு, | | க. சாம்பமூர்த்தி, |
| கோவில் ஆதீனகர்த்தாக்கள் | | இணைச் செயலாளர்கள், |
| காரைநகர்ச் சிவன்கோவில், | 10-8-70. | மணிவாசகர் சபை. |




# தங்கம்மா அப்பாக் குட்டிக்கு "சிவத்தமிழ்ச்செல்வி" பட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 21

சைவமும், தமிழும் வளரப்பல்லாண்டு காலம் அருந்தொண்டாற்றிவரும் செஞ்சொற் செம்மணி, சைவப் புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி காரைநகர் மணிவாசகர் சபையினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். ''சிவத்தமிழ்ச்செல்வி'' என்ற சிறப்புப்பட்டம் அவருக்குச் சூட்டப்பட்டதுடன் பொன்னுடையும் போர்த்துக் கௌரவிக்கப்பட்டது. இந்தப் பாராட்டு விழா கடந்த புதன்கிழமை ஈழத்துச் சிதம்பரம் வசந்த மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அனேக சைவப்பெரியார்களும் பொதுமக்களும் அங்கு திரண்டிருந்தனர்.

[illegible] திரு. வே. நாகலிங்கம் விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசும்போது, சைவத்தமிழ்ப் பேச்சாளர் வரிசையில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் இடம் மிக உயர்ந்தது என்றார்.

சைவப்புலவர்மணி திரு. தா. குமாரசாமிப்பிள்ளை 'சிவத்தமிழ்ச்செல்வி' என்ற



[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்க்காதேவியும்
துர்க்காதுரந்தரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை துர்க்கையம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!

### பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

யாழ்ப்பாணத்தின் இந்துமதப் பண்பாட்டில் அண்மைக் காலத்தில் இரு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஒன்று இந்துக்களால் வழிபடப்பெறும் ஒரு பெண் தெய்வத்தின் வழிபாடு பற்றியது; மற்றது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கோயில் முகாமை பற்றியது.

இந்த இரு முக்கிய மாற்றங்களையும் விவரிப்பதன் முன்னர், இந்த இரு மாற்றங்களும் ஒரு தளத்தையே மையமாகக் கொண்டவையாகவும். ஒருவரையே உந்து சக்தியாகக் கொண்டவையாகவும். ஒருவரையே உந்து சக்தியாகக் கொண்டனவாகவுமுள்ளன என்பதைச் சொல்ல வேண்டும். தளம், யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் கோயில், உந்துசக்தி, தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்ற ஒரு தமிழாசிரியையின் ஆன்ம யாத்திரையினூடாக, அவரது புலமை முதிர்ச்சியின் வழியாக, அவரை வழி நடத்தும் சமூக - மத தரிசனத்தினூடாக இந்த இரு மாற்றங்களும் நிறைவேறியுள்ளன.

இந்துமதப் பாரம்பரியத்தில் துர்க்கை, நல்லவை அல்லாதவற்றைத் தாட்சண்யமன்றி அழிப்பவளாகப் போற்றப்படுபவள். சைவமரபில் அழித்தற் தொழிலை இயற்றும் சிவனுக்கு அவள் சக்தி இந்தக் கொள்கை காரணமாக இத்தெய்வம் உருவாக்கப்பட்டுச் சித்தரிக்கப்படும் பொழுது பயத்தை ஊட்டுபவளாக, நிஷ்டூரமான "ஆளுமை" யுடையவளாக எடுத்துக் கூறப்படுதுண்டு. சக்தியின் அருட்பொலிவையும், தாய்மை நிறைவையும் ஆராதிப்பதற்கு இந்தத் துர்க்கை வடிவம் உபாசிக்கப்படுவதில்லை. அதற்கு அம்மையை உமையாக வழிபடுவர். அந்த மூர்த்தத்திலே தான் அவளது அருட்பொலிவும் அழகின் சௌந்தர்யங்களும் முனைப்புறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்கிருத மயப்படுத்தப்பட்ட பாரம்பரியத்தின் துர்க்கை வழிபாட்டுக்கும், நம்மிடையே நடைமுறை வழக்கிலிருக்கும் காளி வணக்கத்துக்கும் தொடர்ச்சிகள் உண்டு.

இந்தக் கன்னங்கறுப்பிதான் தெல்லிப்பழையில் கனிந்த மனத்துக் காமாட்சியாக, சூலத்தால் சுட்டுப் பொசுக்குபவளாக அல்லாது, சுகபோகங்களை வழங்கும் சுந்தரவல்லித் தாயாக வீற்றிருந்து தாலியைத் தருபவளாக, தந்த தாலியைப் பேணுபவளாக, அந்தத் தாலியின் மஞ்சட்பொலிவை தன, சுத சௌபாக்கியங் களால் பூரணப்படுத்துபவளாக அருளாட்சி நடத்துகிறாள்.

இந்தத் தலத்துத் துர்க்கையின் இந்த அருட்பரிமாணம் யாழ்ப்பாணத்தின் மாறிவரும் குடும்ப அமைப்புக்கும், பெண்கள் நிலைமைக்கும் அத்தியாவசிய மான ஒன்றாகிற்று.

பாரம்பரிய சமூகக் கட்டமைப்புக்களைப் புறங்காண உதவும் நவ பொருளாதார வார்ப்புக்கள் ஏற்படுத்தும் சமூக மேனிலைப்பாட்டுச் சாத்தியப்பாடுகளின் உந்துதல்களாலும் பெருகும் பெண்கல்வி, உத்தியோகவாய்ப்பு ஆகியனவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் வாழ்க்கைத்தர மாற்றங்களாலும், யாழ்ப்பாணத் துக் குடும்பங்கள் ஒவ்வொன்றையும், பெண்பிள்ளைகளின் விவாகப் பிரச்சினை தாக்கத் தொடங்கிற்று.

தெல்லிப்பழையின் துர்க்கா வழிபாட்டுப் பரிமாண மாற்றமும் இந்தச் சமூகத் தேவையும் ஒன்றிணைந்தன. "ஒன்றிணைந்தன" என்று கூறுவதிலும் பார்க்க, தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் சமூக - மத தரிசனத்தில் ஒன்றிணைக் கப்பட்டன என்றே கூறல்வேண்டும். சமூகத் தாக்கங்களின் காரணமாக வெளியே எடுத்து மொழியப்படாதிருந்த ஆனால் அடிமட்டத்தின் ஆழ அகலங்களை உதைத்துக் குதறிக் கொண்டிருந்த ஒரு சமூகக் கேள்வியை **(Social demand)** இந்த அருள் "வழங்கல்" **(Supply)** பூர்த்தி செய்தது.

அந்தக் "கேள்வியும்" இந்த "வழங்க"லும் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மை யாரின் ஆளுமைத்திறனால், கல்விச் செம்மையால், முகாமை ஆற்றலால் ஒன்றிணைக்கப் பெற்றன.

"கோயில் மணியம்" என்றால் அது ஆண்பால் ஒருமையே என்று சமூக இலக் கணம் வகுக்கப்பட்டுள்ள ஒரு சமூகத்தில் ஒரு பெண்மணிய வேலையை மனிதாபிமான ஊழியமாக மாற்றிக்கொண்டுள்ளமை பெருத்த ஆச்சரியத்தை விளைவித்தது.

கோயிலின் பண்பும் பணியும் ஆழப்பட்டு அகலப்படுத்தப்பட்டன. இதுதான் அந்த இரண்டாவது சமூக - மத மாற்றமாகும்.

கோயில் மணியவேலை என்பது நமது யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் ஓர் அந்தஸ்துச் சின்னம். இதற்காக நடக்கும் சண்டைகளும், வழக்குகளும் கோயில் களின் புனிதத் தன்மையைப் பாழடித்துள்ளன. அதுவும் அரச பதவிகளிலிருந்து ஓய்வுபெறும் போக்கு அதிகப்பட, அதிகப்பட இந்தப் பிரச்சினை கிராம மட்டங்களை உலுப்பத் தொடங்கிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒருபுறமாக, இன்னொரு புறத்தில், இருக்கின்ற கோயில்களில் முதலிடம் இல்லை என்பதால், பழைய சிறு கோயில்கள் "பெரிய" ஆகமக் கோயில்களாக மாறுவதும். இந்த மாற்றத்தின் சின்னமாகக் கும்பாபிஷேகங்களும், மகா கும்பாபிஷேகங்களும் செய்யப் பெறுவதும், அந்தக் கும்பாபிஷேகங்களுக்கான அழியாத சான்றுகளாகக் கும்பாபிஷேக மலர்கள் வெளியிடப் பெறுவதும் தெரிந்தவையே.

இவற்றுக்கு மேலாகக் கோயில்களின் சிறப்பு உயர, உயர அவற்றின் முகாமைகள் காட்சிப் பொருள் நிலையிலிருந்து கருத்துப்பொருள் நிலையாக "மறைஞான"ப் பட்டு நிற்பதும் இன்னொரு பண்பு. இத்தகைய ஒரு சமூக, அதிகாரச் சூழலிலே, கோயில் முகாமையாளர் என்றவகையில் முதல் அடியாராகவும், முன் அடியாரா கவும் நின்று தொழிற்பட்டு, அதே வேளையில் நவீன உலகின் நிர்ப்பந்தங்களை மனம் கொண்டு, கோயிலை ஒரு காத்திரமான சமகால நிறுவனமாக ஆக்கும் பணியை அற்புதமாகச் செய்துள்ளார் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்.

இது அவர் ஒரு பெண்ணாக இருப்பதனாலேயே சாத்தியமாயிற்று என்றும் சொல்லலாம். யாழ்ப்பாணத்துச் சமூக அதிகாரத்தில் தோய்ந்து போகாது அதே வேளையில் பெண்மையின் தேவைகளைத் தாய்மையின் நோக்கிற் பார்த்துத் தமக்கையாக நின்று வழி நடத்தி இன்று "அம்மா"வாக கனிந்துள்ளார் இவர். இவருடைய மிகப் பெரிய சாதனை, துர்க்கையம்மன் கோயிலை ஒரு கோயிலாக மாத்திரமல்லாமல், சமூகமையமாக நடத்திவருவதாகும்.

பெண்குழந்தைகளுக்கான விடுதி (விடுதியா அது வீடு! வீட்டிலும் பார்க்க மேலானது), சைவ இலக்கியங்களை ஓர் அச்சகம், வாசித்துப்படிப்பதற்கான (அரட்டைக்கானது அல்ல) ஒரு நூல்நிலையம், மத்திய வயதுப் பெண்களுக்கான கூட்டுழைப்புச்சபை, பிரதேசத்து இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்கள் ஆற்றல்களை இறைபணிக்கு ஆற்றுப்படுத்தும் வாலிபமன்றம், இவையாவும் தங்கம்மா அப்பாக்குட்டி என்ற சைவப்பிரசாரகரால் இன்று நடைமுறைக்கு வந்துள்ளவை.

எத்தனை பெரிய சேவைகள்!
எத்துணைப் பெரிய மாற்றங்கள்!
சமூக அதிகாரவேட்கையாலும், அறிவின்மையாலும் இறுகிப்போய் கிடந்த யாழ்ப்பாணத்துச் சைவ ஒழுங்கமைப்பு இளகத் தொடங்கியுள்ளது.
அது ஒரு அம்மன் கோயிலிலும், ஒரு பெண்மணியின் முகாமையிலும் நடப்பது காலத்தின் போக்கை உணர்த்துகின்றது.

அந்த அம்மையாரின் அறுபத்தோராவது பிறந்தநாள்,
அவரை வாழ்த்துவதற்கும் நம்மைச் சிந்திக்கவைப்பதற்குமான நாள்.
அவர் நீண்டகாலம் வாழவேண்டும் என்பது இன்று சைவத்தின் தேவை.

நன்றி: முரசொலி, 07.1.1991, திங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூண்டா மணிவிளக்கு

**கவிஞர் சோ. பத்மநாதன்**

*கல்லில் செம்பில் கடவுளைக் காண்பவர்
காவி தண்டு கமண்டலம் பூண்பவர்
செல்வம் கொண்டு பரம்பொரு ளுக்குத்தாம்
செய்யும் பாவத்திற் பங்கு கொடுப்பவர்
சொல்லி னால்சமயப் பணி செய்வதால்
தூக்கி இந்தச் சமூகத்தை நிறுத்தநாம்
வல்லர் என்றுமார் தட்டுவோர் தம்மிடை
வந்தனை எங்கள் மாதவப் பேறென!*

*அன்னை துர்க்கைதன் ஆலயத் தேற்றிய
அரிய தூண்டா மணிவிளக் காயினை
நின்னு ழைப்பினால் தொண்டினால் நேர்மையால்
நிமிர்ந்த திந்தத் தமிழினம் தாயென
உன்னை ஏற்றுத் தலைமையைத் தந்தது
உச்சிமேல் வைத்துப் போற்றி உவந்து
பொன் மனத்தினாய் போயினை என்பது
பொய் எம் நெஞ்சினில் என்றும் இருக்கிறாய்*

*போர் சிதைத்த இப்பூமியை விட்டுநீ
போக எண்ணிலை பிறந்து வளர்ந்ததம்
ஊர் தொலைத்து இன்னுயிரொடு கைப்பிடித்து
ஓடி வந்தவர்க் காறுதல் தந்தனை
சோர்விலாய், உனை மூப்புவந் தெய்தவும்
சுடர்ந்தனை பசும் பொன்னென, தூயை நீ!
ஆருளர் தங்கம்மா எங்கள் அன்னைபோல்
ஆ, நம் நாடு வறுமை அடைந்ததே!*

**நன்றி** : *இந்து ஒளி தீபம் -12, சுடர் -3, 05.07.2008,
தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
நினைவு அஞ்சலி சிறப்பிதழ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Novel Northern Star of Religious Refulgence
## Thurkka Thuranthari Thangammah Appacuddy
### DIAMOND JUBILEE OF RARE DISTINCTION
### Written By: R. N. Sivaprakasam , Editor, Hindu Organ

"A woman is the center of life, the very pivot of existence; life revolves around her. She is the daughter, she is the wife, she is the mother. There is no home and no family without her." - Kishori Gopal Krishnan

The characteristic quality of the human species, according to various thinkers, consists either in self-sacrifice, godliness, moral force, or reason. It is commonly agreed that, by virtue of the quality of reason, human beings are considered higher than animals. This distinction was argued in detail by the extraordinary thinker Aristotle, who traced the essence of reason.

A person who inherently possesses most of these essential qualities must necessarily become remarkable in the eyes of society. Those who are reasonable, and at the same time godly, develop a moral strength that grants them authority in the social community in which they sustain their position.

'Chelvi Thangammah Appacuddy' is the notable name of a person who, because of her characteristic qualities—especially the strength of divine humility—has earned the spontaneous gratitude of a wide society that has been benefiting from her unstinting service for four decades. There is, therefore, a radiant light surrounding this captivating name, which continues to point the world's Tamil community to the bright side of human life.

The inherent nature of the illuminating qualities of this rare gem among women of religion need not be explicitly explained, except by reference to her gifted


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

parentage. There lived happily in the southern border of the well-known town of Tellippalai, just abutting the northern limits of the equally remarkable township of Mallakam, an orthodox couple whose inner illumination could easily be evidenced in their serene outer appearance. Shri Appacuddy was content to be a schoolmaster in the hilly regions that overtook the historic sylvan shrine of Lord Skanda at Kataragama, by the winding waters of the majestic Menik Ganga. His tutorial assignment could not be carried to its conclusion, as priority had to be given to his household, which comprised four dove-eyed darlings—daughters all—along with an ideal housewife who was the repository of religious practice.
Chelvi Thangammah, perhaps according to an unseen pattern of destiny suggestive of a definite mission in life, started her happy career as a student in a rural school characteristically called the Kaladdy School, Mallakam. From then onwards, this gifted student leaped from attainment to fresh attainment, culminating in the Senior School Certificate Examination in Tamil, in which she obtained, as expected, marks of merit. The natural brilliance of this talented student very appropriately induced her to seek admission to the noble profession that was well within her reach. As if providentially planned, it was at that time that the Ramanathan Saiva Training College was established to enable aspiring Saiva teachers to receive appropriate training in the science of teaching, imbibing Saiva ideals through the study of Saiva literature. Admission to this institution was on a competitive basis, which worked to the advantage of candidate Thangammah. Here was training and practice not merely in the study of Sangam classics but also in the learning of chosen Saiva literature, the Puranas, and the Ithihasas, under the able guidance of Shri T. Somasundaram and Shri Sundararaja Ayangar, who faithfully interpreted the lofty ideals of the founder philanthropist, the sage of Suhasthan.

Having thus obtained the certificate as a trained teacher and acquiring specialized instruction in 'Saiva literature', pedagogue Thangammah began her panoramic life, with the landscape of learning becoming more and more picturesque. Her tutorial activities commenced at the Shri Sundaramoorthy Ayar Tamil School. However, 'Batticaloa' was the starting point of this brilliant career as an accomplished teacher. This convent school was again conducive to the flowering of a disciplined feminist, encouraging the youthful.

Thangammah to eschew the traditional inclination to be involved in wedlock. Celibacy, though not a sine qua non for a religious life, is certainly a sure basis for higher spiritual service. To confirm this determination, her next assignment was at the Fatima Tamil School, a school of the Muslim denomination in the metropolis. Here, in an ideal setting, conveniently away from the calls of her kin and within reach of facilities for further studies, the studious Thangammah set her heart, most logically, on being graduated as a Tamil 'Pandit' and 'Saiva Pulavar'.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In rapid succession, she was successful with merit in the examinations for 'Bala Pandits', 'Pandits', and 'Saiva Pulavars', the first two conducted by the 'Jaffna Oriental Studies Society' and the third by the well-known 'Saiva Siddhantha Samajam'. The conferment of the 'Degree of Pandit' required the submission of special treatises. Pandit Thangammah had to work on the treatise – "'Oj;J gpuge;jq;fs;"' – a very exhaustive research project for a youthful graduate. That Pandit Thangammah had reached the required standard was evident from the fact that the panel of examiners was headed by no less a scholar than Shri S. Natesan, the author of 'Sakuntalai Venba', whose seal of appreciation was, in itself, an additional testimonial.

'Saiva Pulavar Thangammah' had by then become a necessary acquisition for various religious organizations and study circles in metropolitan Colombo, where there was ample scope for coordinated religious awakening in the form of discourses, debates, and dialogues. Teacher Thangammah soon turned into a preacher, having established a firm foothold in the religious and cultural forum. The time had come for the homeland to directly benefit from the rich scholarship of 'Senthamil Chelvi Thangammah'.

The 'Santhananda School' at Alaveddy, situated in the center of a spiritually inclined village studded with shrines, won the race in securing the invaluable service of Teacher Thangammah. However, the hunger of the collegiate students of the 'Kankesanturai Electorate' for the privilege of learning Tamil and Saivaism under the talented Thangammah had to be satisfied. 'Union College', Tellippalai, enjoyed the unique distinction of having Pandit Thangammah as its lecturer in Tamil for twelve long years, until departmental rules intervened at the concessionary age limit of fifty-five. Though she could have obtained an extension of service, the call of her duties as Treasurer of 'Thurkkai Temple' appeared to her to be more urgent and useful.

South Indian scholars of 'Saiva Siddhanta' philosophy were among the first to recognize the rare talent that has made 'Thangammah Appacuddy' a household name in Sri Lanka. The annual conference in 'Tamilaham' that marks the progress of activities in Saiva propaganda soon became the favorite platform for the rising star of 'Yalpanam' to have her lucid expositions heard far and wide. The learned lecture delivered at the High School in 'Chidambaram', which stands as a statue-like symbol of the Great Navalar's remarkable contribution in South India to the steady growth of the 'Saiva Renaissance', brought this Nightingale of Sweet 'Senthamil' into the limelight in 'Tamilaham'. The 'Annamalai University' of Chidambaram, which affectionately hosts leading literati, would not miss affording its undergraduates the rare opportunity of enjoying the privilege of listening to the rhetorical rendering of the highlights of traditional Tamil classics by this talented orator.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From then onwards, the 'Samajam' has been considering the feasibility of inviting 'Saiva scholars' from Sri Lanka for its annual deliberations. 'Pandit V. Nagalingam', President of the 'Jaffna Saiva Paripalana Sabhai', and 'Sir Kanthaiah Vaithianathan' of 'Thiruketheeswaram Renaissance' fame happened to catch the eye of the vigilant Sangam. Several years later, when the Sangam had grown in stature and widened its scope to include 'Mangayatkarasis' and 'Thilagavathys', the choice naturally fell on 'Thurkka Thuranthari', who by that time had become the roving ambassador of 'Saiva Siddhanta'. Fresh from a lecture tour of 'Malaysia' and 'Singapore', where she was accorded spectacular receptions after a series of scintillating speeches, 'Thurkka Thuranthari' appropriately appeared as the 'Saiva woman of the year' in the 'Samajam', with annual deliberations graced by her mellifluous voice and sparkling 'Senthamil'.

The conferment of honorary epithets indicative of distinction and merit in special branches of literary, cultural, and educational activities has been part of the routine of outstanding establishments such as 'Aatheenams', 'Mutts', 'Samajams', and 'Sangams'. As a frequent recipient of such conferments, 'Thangammah Appacuddy' stands at the forefront. There are too many to be recapitulated here, but the most significant of them are 'Senthamil Chelvi' and 'Thurkka Thuranthari'. The latter will serve as the introduction to the next chapter of this sketch.

And now we come to the nerve center of all activities of this remarkable lady of religion – the 'Thurkka Devasthanam'. As one of the few ancient temples of Sri Lanka, 'Thurkkai Temple', situated at 'Tellippalai' in the heart of the Northern Peninsula, has a long history of fluctuating conditions. This sacred shrine, according to the scripts preserved in the 'Mavai Kanthan Aatheenam', has been closely connected to the 'Skanda Temple'. Consecrated by the Indian princess 'Maruthapuravalli', in devotional gratitude to Providence for restoring her original facial features after recovering from a grim curse, the 'Thurkkai Temple', consecrated several centuries ago, was the only one of its kind in this island at that time. The installation of 'Thurkkai' at the outer northern 'Prakaram' of another ancient shrine - 'Naguleswaram', is of more recent origin. 'Tellippalai Thurkkai Temple' has been specially known for the 'Nine-night Poojas' to 'Sivasakthi' in the form of 'Thurkkai', 'Lakshmi', and 'Saraswathy', and the tenth-day festival called 'Manampoo', symbolic of the annihilation of the Asura 'Aanavam' by Thurkkai in a triumphant mood.

On that sacred occasion, Lord Muruga visits 'Thurkkai' in a colorful procession and receives the 'Vel' of atomic potential to disarm 'Soorapanman' and subjugate him, so that he may serve Him as a devotee. That such a significant shrine should have fallen into a period of dilapidation cannot be accounted for except as the logical outcome of the indifference and negligence of the devotees, as well as the change in attitude of the priests-in-charge, who discarded spiritual values for temporal


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tendencies. Unlike 'Thiruketheeswaram', where the Portuguese pirates turned proselytizers and laid it low in utter ruins, 'Thurkkai' underwent a natural degradation.

The ten principal devotees, who were scions of those who had performed the 'Navarathiri' Festivals, constructed a deed of trust and assumed trusteeship to restore the shrine to its pristine glory. However, it was felt that a Restoration Committee should herald the enterprise. This committee, having done good spade work, invited the trustees to form a managing committee, which first took shape in 1965 with Shri S. Thiagarajah, Retired Inspector of Schools, as President, Shri Sivavaakeesar B.A., the eldest son of one of the trustees, as Secretary, and 'Chelvi Thangammah Appacuddy' as Treasurer.

Circumstances were such that the Treasurer, in the course of finding funds for a limited restoration, was able to do substantial organizational work, with the result that what had seemed dim became brighter month by month. The Treasurer, with the fund of goodwill she had earned during her career as a teacher and preacher, was able to organize religious functions in the temple that wereAttended by devotees as well as persons spiritual achievement "Rome was not built in a day," they say. 'Thurkkai Temple', however, was restored in as few days as possible. This was due to a particular providential touch, a prophetic call by the Sage of 'Columbuturai', who, in one of his rambling utterances one day, stood in front of the temple on the highway, beckoning those who were in attendance, particularly a pious devotee - 'Thambu Ponnambalam'. He yelled out, "Down with the dilapidated structure!" This, then, was the spiritual signal that gave the green light to the helpless band of renovators.

As if by magic, the reconstruction work gathered swift momentum, with benefactions pouring in spontaneously. Chairman 'Thiagarajah', feeling the strain of the responsibility, gave way to a younger but capable administrator, Shri 'T. T. Jayaratnam B.A.', who had already earned a name as an ideal organizer as Principal of 'Mahajana College', which had by then risen sky-high in stature and content.

The main structure of 'Thurkkai Temple', having been reconstructed according to strict 'Agamic' principles, the managing committee turned its attention to the construction of an ornamental chariot, indicative of sculptural elegance. It was during this new venture that President 'Jayaratnam' passed away, as if he had been summoned for similar activities in the upper world.

The choice of a successor did not seem a serious problem. The officiating Vice President himself proposed the name 'Thangammah Appacuddy', stating that it was the inevitable selection. The entire committee, to a member, backed the proposal. And thus, the present period of activities of this prodigy of sacrifice and service commenced, with a chorus of popular approbation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Here Is the corrected version of your paragraph with improvements in spelling, grammar, and clarity:

The first consecration ceremony after the renovation was resplendent, in the highest spiritual conception, scrupulously set to the pristine pattern of the authoritatively established 'Agamic' code. The spectacular achievement of this splendor was the result of the resolute and dedicated service of a well-coordinated Committee of Management, of which 'Chelvi Thangammah' was Treasurer. It was not merely the restoration of this ancient shrine to good condition that had been visualized. What engaged the attention of the Committee of Management was an all-out effort to make the amplest use of this god-given opportunity, to make this temple full-fledged, but also to bring to bear, in the massive reconstruction, the stamp of spiritual significance, incorporating the inherent excellence of age-old architecture and sculptural representations of idols.

Thus, the invaluable services of a renowned South Indian scholar of the science of sculpture and exponent of that excellent art were solicited and secured. 'Professor Thevalingam', who had already achieved distinction in this direction in South India, the cradle of this cherished art, dedicated himself, heart and soul, to this divine duty and exceedingly embellished the 'Thurkkai Temple'.

In the matter of the execution of the prodigious 'Chitra Ther' - the Artistic Chariot - a Sri Lankan, 'Pandit Kalakesari Thambithurai', was intuitively chosen. The very first flash of spiritual thought of devotee 'Thangammah' as Treasurer was to establish, in her personal capacity, a 'Thirumurai Madam' on her own initiative, for the preliminary purpose of conducting classes in 'Thirumurais', 'Puranams', and 'Saiva Sastras'. This establishment soon blossomed into a convenient venue for all religious discourses and cultural conferences, where holy dignitaries often made their appearance and invoked the favor of Providence.

Appropriately enough, the 'Chennai Saiva Siddhanta Maha Samajam', having great capacity to comprehend the real evolution of religious tendencies, took great pleasure in soliciting the fruitful support of 'Thurkka Thuranthari', fittingly to celebrate the Samajam's 'Pavala Vila' in the land of the historical 'Yalpadi', and especially in the spiritually salubrious precincts of the 'Siva Sakthi Shrine' - the 'Thurkkai Devasthanam'. Here was the finest chance for the Saiva world to delightfully witness the capable hand of 'Thurkka Thuranthari' in the art of organization and the science of 'Saiva Hospitality'. The entire committee of the Samajam and the Chairman Select of the conference, 'Vidvasiromani Ratnam Chettiar', were overwhelmingly delighted to see their Pavala Conference reach the summit of success.

The highlight of hospitality In a full-fledged place of worship should naturally be the entertainment of the devotees at 'Maheswara Pooja'. This has been a primary


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

function of the 'Thurkka Devasthanam', so much so that the construction of a spacious hall for this specific purpose became necessary. And thus, the 'Annapoorani Hall' came into existence. But even that extensive accommodation would not suffice. The ever-expanding scope of the 'Devasthanam' soon enabled the construction of another huge hall for the exclusive use of 'Maheswara Pooja', releasing the 'Annapoorani Madam' for yet another innovation - the 'Kalyana Mandapam', designed to afford every facility needed for the auspicious ceremony of 'Thirumanam'. The suitably decorated dais and the majestic 'Manavarai' bear testimony to the precision of planning.

In keeping with the tradition of temporalities, the 'High Priest's residence', the 'Secretariat', the 'Pongal Peedam', store rooms, cow husbandry facilities, and such other necessities have been provided by the 'Devasthanam'. The shelter for the fair sex, the dormitory for destitute 'Saiva' children, the 'Gurukulam' for godly Brahmin youth, and the massive 'Mahalir Illam' - forming a string of stately structures along with the architectural arch at the gateway—demonstrate 'Thurkka Puram' in elegant effect.

Special mention must be made of the 'Theertha (Pond) Pushkarani', decently designed as a spacious square encircling the sacred waters of peaceful placidity. The altar is appropriately accommodated, and the one hundred steps all around present a picturesque sight that can hardly be forgotten once seen. The 'Theertha Ceremony', participated in and witnessed by several thousand devotees as an annual feature, affords a pleasing panoramic view of aesthetic excellence.

'Celebrate Thangammah', having no compelling need to bedeck herself with bright ornaments and embellish her inherent beauty, however, gives vent to the natural feminine passion for jewelry and costly costumes by making the image of 'Thurkka Thevi' resplendent in the richness of golden ornaments, the brilliance of brilliants, and above all, in the magnificence of garlands of sweet-smelling flowers, ranging from roses to lovely lotuses. 'President Thangammah's' passion for this picturesque beauty has been perennially satisfied by the ever-flowing gifts gladly endowed by enthusiastic devotees.

There is graciousness in her heart; it is akin to pure love, which indicates itself as the origin of the exceedingly natural graciousness of outward conduct. 'Thurkka Thuranthari' was very appropriately appointed a 'Justice of the Peace'. This was indeed doing justice to this well-deserved appointment; spiritual peace alone can lead to justice. The poet muses: "There is no outward token of graciousness that is not deeply rooted in the ethos." "True education should transmit both the outward token and the inner root."

Born with the natural talent for imbibing lofty ideas and ideals, 'Thurkka Thuranthari' has been cultivating these, not for her immediate temporal ends, but


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for a nobler, spiritual, and universal purpose. There was no pleasure purer than to sit and listen to a sweet succession of words and phrases elucidating the eternal truth-the sure means to sublime salvation. Hindus all over Sri Lanka, in Malaysia, Singapore, and South India have enjoyed this rare pleasure.

The path of duty has been the privileged way to spiritual enlightenment. "Ruminating on religious thoughts and dreaming high". Thurkka Thuranthari "has come closer to cultural heaven" leading to the highest reaches of holy aspirations.

**Here is a rich reward of virtue clothed as she is in changeless purity.**

Let this simple sketch have an enliven in epilogue
"Whose high endeavors are an inward light?
That makes the path before her Always bright;
Who, with natural instinct to discern
What knowledge and perform,
Is diligent to learn;
Abides by this resolve, and stops
not there But makes her moral being her
Prime care;
Who, if she rise to station of
Command,
Rises by open means; and there
will stand
On honorable terms........
Who comprehends her trust; and
to the same
Keeps faithful with a singleness
of aim;
And therefore does not stoop
nor lie in wait
For wealth or honors or for
Worldly State"

**Wordsworth**

Winding up this weak writing, I frankly feel that the pen I hold has not fully fed all the feelings of the holder on this admired theme - Thurkka Thuranthari - The subject is vast, the scope is varied.

*நன்றி : தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்,*
*வெளியீடு : அகில இலங்கை இந்து மாமன்றம். 2009.07.03*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது  பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே.

-அபிராமி  அந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு:
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
2025.01.07

Print@Evergreen, Jaffna. 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org